இன்றைய காலநிலை



கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை

உதயன் அங்காடி
விளம்பர சிறப்பிதழ்
உள்ளே...



திண்டாடுகின்றனர் வடக்கு மீனவர்கள் பக். 10



சைபர் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த கைகோர்த்துள்ள பக். 11



பாடும்மீன், ராணுவ அணிகள் கிண்ணங்களைத் தமதாக்கின பக். 28



மேற்கிந்திய தீவுகள் அபாரம் பக். 29


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 58

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 096 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 18, ஞாயிறு 02.03.2014


# ஜெனிவா மனித உரிமை அமர்வு நாளை ஆரம்பம்

## இலங்கை தொடர்பான விவாதம் 26 ஆம் திகதி

ஜெனிவா.மார்ச் 02
பெரும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ள ஐக்கிய நாடுகள்சபையின் 25 ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடர் நாளை திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.
இதில் இலங்கை தொடர்பிலான மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை எதிர்வரும் 26 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.
இந்த அமர்வில் நூற்றுக்கு மேற்பட்ட தீர்மான வரைவுகள் நிறைவேற்றப்படவுள்ளன.
ஆரம்ப நிகழ்வுகள் நான்கு நாள்கள் இடம்பெறவுள்ளன. இதன் போது 47 உறுப்பு நாடுகளினதும் நூற்றுக்கு மேற்பட்ட அமைச்சர்கள் மட்டத்திலானவர்கள் உரையாற்றவுள்ளனர்.
ஐக்கிய நாடுகள் சபையின் 25 ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரை ஐ.நா செயலாளர் பான் கி-மூன் ஆரம்பித்து வைக்கவுள்ளார். நாளை திங்கட்கிழமை சுவிஸ் நேரப்படி காலை 9 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகும்.
எதிர்வரும் 6 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.இதன் போது

27 ஆம் பக்கம் பார்க்க



கோப்புப் படம்

## சர்வதேச விசாரணைக்கு அமெரிக்கா முழு ஆதரவு

நியூயோர்க்.மார்ச்.02
ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை சர்வதேச விசாரணைக்காக விடுத்த அழைப்புக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.
மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் விடுத்துள்ள

27 ஆம் பக்கம் பார்க்க



சமந்தா பவர்

# மூத்த அதிகாரிகளை களமிறக்கியது அமெ.

## இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்ட

நியூயோர்க்.மார்ச்.02
இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ள காட்டமான பிரேரணைக்கு உறுப்பு நாடுகளின் ஆதரவைத் தேடி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகளே நேரடியாகக் களமிறங்கியுள்ளனர்.
ஜெனிவாவில் இலங்கை மீது கொண்டு வரும் பிரேரணைக்கு இந்தியாவின் ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் இந்த வாரம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

பிற்போடப்பட்ட பயணம்
எதிர்வரும் 4 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை பெங்களூர் மற்றும் டில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
முன்னதாகப் பிஸ்வால் கடந்த ஜனவரி மாதம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். எனினும் இந்தியத் தூதரக அதிகாரி தேவ்யானி அமெரிக்காவில் கைதுசெய்யப்பட்ட விவகாரத்தை அடுத்து, ஏற்பட்ட சுமுகமற்ற சூழலால் அவரது பயணம் பிற்போடப்பட்டது.

ஆலோசனை நடத்தப்படும்
கடந்த ஆண்டு தெற்கு, மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலராகப் பதவியேற்ற பின்னர் பிஸ்வால் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதற் பயணம் இதுவாகும். இந்தப் பயணத்தின் போது. அவர் இரு தரப்பு விவகாரங்கள் குறித்து இந்திய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவார்.
இதன்போது இலங்கை விவகாரமும் முக்கியமாக ஆலோசிக்கப்படவுள்ளது. இந்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வரவுள்ளது. இதற்கு இந்தியாவின் ஆதரவை உறு

27 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக் கடற்படைக்கு எதிராக தமிழகத்தில் மனு

### இராமேஸ்வரம் பொலிஸார் தாக்கல்

சென்னை.மார்ச் 02
தமிழக மீனவர்களைத் தாக்கியதாக இலங்கைக் கடற்படையினர் மீது இராமேஸ்வரம் பொலிஸாரால் முதல் முறையாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டும், சுட்டுக் கொல்லப்பட்டும், கைது செய்யப்பட்டும் வருகின்ற நிலையில் இராமேஸ்வரம் பொலிஸார் இந்த அதிரடி நடவடிக்

27 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் ஊடகங்கள் மீதான தடை குறித்து எதுவும் தெரியாது

### கைவிரிக்கிறார் பான் கீ - மூனின் பேச்சாளர்

நியூயோர்க்.மார்ச் 02
இலங்கையில் சில ஊடக நிறுவனங்கள் அல்லது இணையத் தளங்கள் தணிக்கை செய்யப்பட்டுள்ளமை மற்றும் தடை செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தமக்குத் தெரியாதென்று ஐ.நா செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெஸஸ்கி தெரிவித்துள்ளார்.
கொழும்பு ரெலிகிராப் இணையத்தளம் அண்மையில் தடை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் நியூயோர்க்கில் ஐ.நா. பேச்சாளரிடம் இன்னர் சிற்றி பிரஸ் செய்தியாளர்கள் கேட்டபோது, அந்தச் சம்பவம் பற்றித் தமது அமைப்புக்கு அறிவிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

27 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் டெங்கு அபாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 02
யாழ். குடாநாட்டில் குறைந்திருந்த டெங்கு நோய்த் தொற்று மீண்டும் அதிகரித்துள்ளது.
முன்னர் வாரத்தில் ஒரு சிலரே தொற்றுக்கு உள்ளாகி வந்த

27 ஆம் பக்கம் பார்க்க

## முகமது அலியுடன் பாடசாலை மாணவன் மோதுவதை போன்றதே அமெ. தீர்மானம்

### வெளிநாட்டு செய்தியாளர்களிடம் ஜனாதிபதி

கொழும்பு.மார்ச்.02
இலங்கை மீது அடுக்கடுக்காகத் தீர்மானங்களை அமெரிக்கா நிறைவேற்றுவதானது உலகப் புகழ்பெற்ற குத்துச் சண்டைச் சம்பியன் முகமது அலியுடன் பாடசாலை மாணவனொருவன் மோதுவதைப் போன்று உள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
மூன்று வருடங்களுக்குப் பின்னர் வெளிநாட்டு ஊடகங்களை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்தபோதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

27 ஆம் பக்கம் பார்க்க

# நம்பகமான விசாரணை நடத்தப்படாமல் இலங்கையில் சமாதானம் சாத்தியமாகா

## பிரிட்டன் அமைச்சர் ஹுகோ ஸுவைர் கூறுகிறார்

லண்டன்.மார்ச்.02
கடந்த காலத்தில் நடந்த பாரிய குற்றங்கள் தொடர்பில் நம்பகமான விசாரணை நடத்தப்படாமல்,
இலங்கையில் உண்மையான நல்லிணக்கம், நீடித்த சமாதானம் ஏற்படுவதற்கான



ஹுகோ ஸுவைர்

வாய்ப்பில்லை என்று பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹுகோ ஸுவைர் தெரிவித்துள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால், இலங்கை தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம். அவரது அறிக்கையில், இலங்கை மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக் கூறலில் முன்னேற்றம் காட்டாமை தொடர்பில் அவர் தனது கவலைகளைப்

27 ஆம் பக்கம் பார்க்க

## மஹிந்தவுக்கான அழைப்பை மீள் பரிசீலனை செய்யுங்கள்

### பிரிட்டன் நாடாளுமன்றில் கோரிக்கை

லண்டன்.மார்ச்.02
இலங்கை மனித உரிமை மீறல்களில் அப்பட்டமாக ஈடுபடுகின்ற நிலையில், அந்த நாட்டின் தலைவரைப் பிரிட்டனுக்கு ஏன் அழைக்கவேண்டும் என்று பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி மஹிந்தவுக்கான அழைப்பைப் பிரிட்டன் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் நிறைவில், முதலாம் உலகப் போர் நினைவாக லண்டன் கிளாஸ்கோ தேவாலயத்தில் ஏற்பாடு செய்

27 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை விமானப் படைத்தளபதியாக புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்ட எயார் மார்ஷல் கோலித குணதிலக நேற்று சனிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மரியாதை நிமிர்த்தம் சந்தித்தார். (த)

# உயிரிழந்த கைதியின் இறுதிச் சடங்கு இன்று

யாழ்ப்பாணம்.மார்ச்.02

மகஸின் சிறைச்சாலையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதியான கோபிதாஸின் இறுதிச் சடங்கு புலோலியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெறவுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். அத்துடன் கோபிதாஸின் உயிரிழப்புக்கு நீதி வேண்டிப் போராட்டம் ஒன்றும் அவரது வீட்டுக்கு அண்மையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரிட்டன் பிரஜையான விஸ்வலிங்கம் கோபிதாஸ், கடந்த மாதம் 24 ஆம் திகதி திங்கள் கிழமை, சிறைச்சாலையில் 'சி' தளத்தில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இவர் இதயத்துக்குச் செல்லும் நரம்பில் ஏற்பட்ட வெடிப்பினால் உயிரிழப்பு ஏற்பட்டதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளின் முடிவில் உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் கோபிதாஸின் உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அரசியல் கட்சிகள் தெரிவித்து வருவதுடன் இதற்கு நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரியும் வருகின்றன.

கோபிதாஸின் மனைவி மற்றும் அவரது இரு பிள்ளைகள், பிரிட்டனிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர். கோபிதாஸின் இறுதிச் சடங்குகள் புலோலியிலுள்ள அவரது வீட்டில் இன்று இடம்பெறவுள்ளன.

இதேவேளை, அவரது வீட்டுக்கு அருகிலுள்ள புலோலி மெதடிஷ்த தமிழ் கலவன் பாடசாலைக்கு முன்பாக இன்று காலை 9 மணியளவில், கோபிதாஸின் உயிரிழப்புக்கு நீதி வேண்டிக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் தொடர்பில் உள்ளக விசாரணைக்கு ஆதரவளிக்க வேண்டும்

### *அமெரிக்க செனட்டர்கள் சிலர் பிரேரணை*

வொசிங்டன்.மார்ச்.02

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் உள்ளக விசாரணைக்கு அமெரிக்காவும், சர்வதேச சமூகமும் ஆதரவளிக்க வேண்டும் என்ற பிரேரணை அமெரிக்க செனட்டர்களால் செனட் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

'போரின் போது இரு தரப்பினாலும் இழைக்கப்பட்டதாக எழும் குறைகளைக் களைய, இலங்கையின் இறைமை, உறுதிப்பாடு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு உள்நாட்டுப் பொறிமுறைக்கு ஆதரவு வழங்குவது குறித்து அமெரிக்காவும், அனைத்துலக சமூகமும் கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக, தென்னாபிரிக்கப் பாணியிலான உண்மை நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைத்துக் காயங்களை ஆற்றலாம் என்றும் செனட்டர்களால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சர்வதேச விசாரணை**

இலங்கையின் இறுதிக்கட்டப் போர் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துக் கடந்த மாதம் 6 ஆம் திகதி செனட்டர்களால் தீர்மான வரைவு ஒன்று செனட் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. குறித்த தீர்மான வரைவுக்கு றிச்சர்ட் புர், றொபேட் கசே, பட்றிக் லேஹி, ஷெரோட் பிறவுண், பார்பரா பொக்சர், ஜோன் கோர்னின் ஆகிய செனட் உறுப்பினர்கள் அனுசரணை வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில், இலங்கையில் இடம்பெற்ற போரின் போது ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்குத் தென்னாபிரிக்கப் பாணியிலான உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்க வலியுறுத்தி 11 செனட் உறுப்பினர்கள் புதியதொரு தீர்மான வரைவைக் கடந்த வியாழக்கிழமை சமர்ப்பித்துள்ளனர்.

ஒபாமா நிர்வாகக் கொள்கை ஜேம்ஸ் [illegible]ன்ஹோபி, ஜோன் கோர்னின், ஓரின் ஹட்ச், ஜோன் பராசோ, ரோய் புளுன்ற், ஜோன்மன்சின், ஜெப்செசென்ஸ், ஜோன்பூஸ்மன், மைக்கிறாப்போ, சுசன் கொலின்ஸ், மைக் என்சி ஆகிய செனட் உறுப்பினர்களே இதில் கையெழுத்திட்டுள்ளனர். இவர்களில் 10 பேர் குடியரசுக் கட்சியையும், ஒருவர் அதிபர் ஒபாமாவின் ஜனநாயக கட்சியையும் சேர்ந்தவர்க்ள்.

தீர்மான வரைவைச் சமர்ப்பித்துள்ள செனட் உறுப்பினர்கள், இலங்கை தொடர்பாக மனித உரிமைகள், ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, மற்றும் பொருளாதார, பாதுகாப்பு நலன்களுக்கு மதிப்பளிக்கும் வகையிலான கொள்கையை ஒபாமா நிர்வாகம் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

**இலங்கை முக்கிய பங்காளி**

மேலும் கடந்த வியாழக்கிழமை முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில், அமெரிக்காவுக்கும், ஏனைய முக்கியமான சக்திகளுக்கும் இலங்கை ஒரு மிகப் பெரிய மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த நாடு என்றும், தீவிரவாதம் மற்றும் கடற்கொள்ளைக்கு எதிரான போரில் அமெரிக்காவின் முக்கியமான பங்காளி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போரின்போது இரு தரப்பினாலும் இழைக்கப்பட்டதாக எழும் குறைகளைக் களைய இலங்கையின் இறைமை, உறுதிப்பாடு, ஆகிய வற்றைக் கவனத்தில் கொண்டு உள்நாட்டுப் பொறிமுறைக்கு ஆதரவு வழங்குவது குறித்து அமெரிக்காவும், அனைத்துலக சமூகமும் கவனம் செலுத்த வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

**நீதியின் முன் நிறுத்தவேண்டும்**

குறிப்பாக, தென்னாபிரிக்கப் பாணியிலான உண்மை நல்லிணக்கஆணைக்குழுஒன்றை அமைத்துக் காயங்களை ஆற்றலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கை அரசு, மத, ஊடக சுதந்திரத்தை முன்னேற்ற வேண்டும் என்றும், ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள், மத வழிபாட்டு இடங்கள் மீதான தாக்குதலுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (த-5)

## காணாமற்போன முஸ்லிம்களின் விபரம் திரட்ட நடவடிக்கை

வடக்கு மாகணத்தில் காணாமற்போன அல்லது கடத்தப்பட்ட முஸ்லிம்களின் விபரங்களைக் காணாமற்போனவர்களைக் கண்டறியும் குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளதால் அவர்கள் தொடர்பான விபரங்களை யாழ். மக்கள் பணிமனையில் தொடர்பு கொண்டு சமர்ப்பிக்குமாறு யாழ். மக்கள் பணிமனையின் தலைவர் எஸ். சுபியான் தெரிவித்துள்ளார்.

கடந்த 17 ஆம்திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற காணாமற் போனவர்களைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் 57 பேரின் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனினும் வடமாகாணத்தில் பல முஸ்லிம்கள் காணாமற்போயும் கடத்தப்பட்டும் உள்ளனர். இவர்களின் விவரங்களைத் திரட்ட முடியாமல் இருப்பதால் தொடர்புடையவர்கள் யாழ். மக்கள் பணிமனையில் தொடர்பு கொண்டு விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு சுபியான் தெரிவித்துள்ளார். (த-14)

# வலி.வடக்கு மீள்குடியமர்வு குறித்து செவ்வாய் முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்.02

வலி. வடக்கு மீள்குடியமர்வு தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் இராணுவத் தளபதி உள்ளிட்ட பலர் பங்கெடுக்கவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. வலி. வடக்கில் மக்களின் 6 ஆயிரத்து 300 ஏக்கர் பூர்வீக நிலங்களை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்கெனச் சுவீகரிப்பதற்கான அறிவித்தல் ஒட்டப்பட்டு, சுவீகரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதற்கு எதிராக அந்தப் பகுதி மக்களால் உயர்நீதிமன்றில் 3 ஆயிரம் வழக்குகள் வரை தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்களினால் தொடர் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறான தொரு நிலையில், நாளை திங்கட் கிழமை ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

மக்களின் காணிகள் இராணுவத் தேவைக்காக எடுக்கப்பட்டுள்ள விடயமும் இந்த மனித உரிமை அமர்வில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கும் பிரேரணையில் உள்ளடக்கப்படும் என்று தெரிகின்றது.

இந்தப் பின்னணியில், வலி. வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் கடந்த மாதம் முதல் வாரத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும் வலி. வடக்கு மீள் குடியேற்றக் குழுவுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம் பெற்றது. இதில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக யாழ். மாவட்ட செயலகத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. இதில் வலி. வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று அறிய முடிகின்றது. (த-5)

# ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை மார்ச் 20ஆம் திகதி கிழக்கில் ஆரம்பம்

மட்டக்களப்பு, மார்ச் 2

காணாமல் போனவர்கள் தொடர்பானஜனாதிபதிஆணைக் குழுவின் விசாரணையில் கிழக்கு மாகாணத்துக்கான முதலாம் அமர்வு இம்மாதம் 20ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளதாகக் காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1990-2009ஆம் ஆண்டுகால அசாதாரண சூழ்நிலையின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை ஜனாதிபதி ஆணைக்குழு முன்னெடுத்து வருகிறது.

வடக்குமாகாணத்தில் ஆணைக் குழுவின் விசாரணைகள் ஓரளவு பூர்த்தியடைந்துள்ள நிலையில் தற்போது கிழக்கு மாகாணத்திலும் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, செங்கலடி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் பொதுமக்களுடன் நேரடியாக உரையாடி முறைப்பாடுகள் பெறப்படவுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மார்ச் 3ஆம் திகதி திங்கட் கிழமை கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யும் ஆணைக்குழுவினர் ஆரம்பக் கட்டமாக மாவட்ட செயலாளர்களுடன் கலந்துரையாடுவார்கள் என ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் எச். டபிள்யூ. குணதாச தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பராக்கிரம பரணகமகே, பிரியந்தி சுரஞ்சனா வித்தியாரத்ன, மனோ ராமநாதன் ஆகியோரை உள்ளடக்கிய விசாரணைக் குழுவினரே விசாரணைகளை மேற்கொண்டு ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அனுமதி பெற்றுள்ளனர்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைக் காலக்கெடு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனத்தை நொருக்கிய விசமிகள்

வலி.வடக்கு, மார்ச் 02
கத்திகள். பொல்லுகள் சகிதம் வீதியில் அட்டகாசம் செய்த இளைஞர் குழு ஒன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வாகனத்தை அடித்துச் சேதமாக்கியதுடன் அதில் பயணித்த ஒரு. வரை தாக்கி காயப்படுத்தியது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஏழாலைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டில், மது போதையில் நின்ற குழுவினர் தமது வாகனத்தை மறித்துத் தாக்கியதாகவும் இதன் போது வாகனத்தின் கண்ணாடிகள் சேதமடைந்ததோடு ஊழியர் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஜ-86)



வரலாற்றுச் சிறப்பு மிக்க தெட்சண கைலாயம் எனப் போற்றப்படும் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் கோயில் வருடாந்த நகர்வல நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் ஆரம்பமானது. திருக்கோணேஸ்வரர் பெருமான் மாதுமை அம்பாள் சமேதராக எழுந்தருளி திருகோணமலை நகர மக்களுக்கு அருள் பாலிக்க புறப்பட்டார். இதன்போது பக்தர்கள் சிதறு தேங்காய் உடைத்து பெருமானை வழிபடுவதையும் நகரில் அமைக்கப்பட்ட சிவன் உமை அலங்காரம் ஒன்றினையும் படங்களில் காணலாம். (ஜ-10)

# பிரித்தானிய குடியுரிமையாளருக்கு ஏற்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

### *பிரித்தானிய தூதரக உயரதிகாரி ஜோன் நீல் கருத்து*

யாழ்ப்பாணம். மார்ச். 02
இலங்கையில் வாழும் பிரித்தானிய பிரஜைகள் மற்றும் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்று இலங்கையில் தற்காலிகமாக தங்கியிருப்போருக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுக்க நாம் தயாராக இருக்கிறோம். முறைப்பாடு கிடைத்து 24 மணி நேரத்துக்குள் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுகிறது. இவ்வாறு தெரிவித்தார் பிரித்தானிய தூதரக உயரதிகாரி ஜோன் நீல்.

யாழ்ப்பாணம் கண்டிவீதியில் அமைந்துள்ள பிட்ஸ் காட்சி அறையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு வரும் பிரஜைகள் மற்றும் பிரித்தானியப் பிரஜைகளுக்கு தூதரகத்தினூடாக வழங்கக்கூடிய மற்றும் வழங்க முடியாத விடயங்கள் பற்றி தெளிவுபடுத்தவேண்டிய தேவை எமக்கு உள்ளது.

இதில் எமக்குள்ள அதிகாரத்தின்படி எம்மால் முடிந்த சகல உதவிகளையும் நாம் குறித்த பிரஜைகளுக்கு வழங்கி வருகின்றோம்.

இருப்பினும் இலங்கைச் சட்ட விதிகளுக்கு முரணாக நாம் எதனையும் செய்ய முடியாது. இதனை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முறைப்பாடு தெரிவிப்பவர்களின் பாதுகாப்புக் கருதி அவர்களது விவரங்கள் இரகசியமாகப்பேணப்படும்.



ஜோன் நீல்.

பிரித்தானிய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பின், சிறையிலிருப்பின் அல்லது வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு. அது குறித்து எமக்கு தெரியப்படுத்தும் பட்சத்தில் நாம் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிடுவோம். அவர்களுக்கான முறையான வழிகாட்டல்களை வழங்குவோம்.

மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி விஸ்வலிங்கம் கோபிதாஸ் சடலமாக மீட்கப்பட்டார். இவர் இறக்க முதல் பிரித்தானியப் பிரஜை என்ற முறையில் நாம் அவரை சிறையில் சந்தித்தோம். பல விடயங்கள் குறித்துப் பேசியுமிருந்தோம். இருப்பினும் அவர் தற்போது உயிரிழந்துள்ள நிலையில் எம்மால் எந்தவொரு உதவியையும் வழங்கமுடியாது.

தூதரகத்தின் பணிகள் தொடர்பில் www.gov.uk/government/world/srilanka என்ற இணைய முகவரியில் பார்வையிடலாம்-என்றார். (ஜ-10)

## கிளிநொச்சி கல்வி வலயத்தின் 6 லட்சம் ரூபா நிதி கையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 02
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முன்னாள் கணக்காளரினால் ஆறு லட்சத்து 58 ஆயிரம் ரூபா வரையில் நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ள போதும் குறித்த கணக்காளருக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முன்னாள் கணக்காளர் கே.சந்திரகுமார் மீதே குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

யுனிசெவ் நிறுவனத்தினால் 50 பாடசாலைகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் உலகை கை கழுவுதல் செயற்திட்டத்துக்காக நிதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த நிதி 50 பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கத்தின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி, கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பெயருக்கு காசோலை வரையப்பட்டுள்ளது. இருப்பினும் குறித்த காசோலை பின்னர் இரத்துச் செய்யப்பட்டு மே மாதம் 22 ஆம் திகதி குறித்த பாடசாலை அதிபரின் பெயருக்கு வேறு ஒரு காசோலை வரையப்பட்டுள்ளது.

காசோலை இரத்துச் செய்யப்பட்டமைக்கான காரணங்களோ அல்லது அதிபர் என்று மீள காசோலை வரையப்பட்டமைக்கான காரணங்களோ தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் வலயக் கல்வி அலுவலகக் கணக்காளரின் அறிவுறுத்தலின் பேரில் தனி நபர் ஒருவரின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் குறித்த 5 லட்சம் ரூபா நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதை மாகாண உள்ளகக் கணக்காய்வு திணைக்களம் கண்டறிந்துள்ளது.

மேலும் யுனிசெவ் நிறுவனத்தால் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக 4 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட ஒரு லட்சத்து 58 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்ட போதும் அந்த நிதி குறித்த பாடசாலைகளுக்கு வழங்கப்படவில்லை. அந்த நிதி தங்களுக்கு கிடைக்கவில்லை என்று பாடசாலை அதிபர்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் குறித்த நிதிக்குரிய காசோலைகள் வரையப்பட்டு அவை கணக்காளரினால் பணமாக்கப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வுத் திணைக்களம் தனது கணக்காய்வு நடவடிக்கைகளின் போது கண்டறிந்துள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை குறித்த கணக்காளருக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று அறியமுடிகின்றது.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது. இதனை தாம் கையாளவில்லை கல்வி அமைச்சின் செயலாளரே கையாள்வதாகத் தெரிவித்தார். கல்வி அமைச்சின் செயலாளரைக் கேட்டபோது. இந்த விடயம் கல்விப் பணிப்பாளரே கையாள்வதாகத் தெரிவித் தார். (5)

# பரந்தன் ஊடாகப் புதுக்குடியிருப்புக்கு சேவையில் ஈடுபட 3 பஸ்களுக்கு அனுமதி

### *வவுனியாவில் இருந்து ஏனையவை மாங்குளம் ஊடாகப் பயணிக்கவேண்டும்*

யாழ்ப்பாணம்.மார்ச்.2
வவுனியாவிலிருந்து பரந்தன் ஊடாக புதுக்குடியிருப்பு செல்வதற்கு 3 தனியார் பஸ்களுக்கு மட்டும் நேற்று தொடக்கம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து புதுக்குடியிருப்புக்கான பணியில் ஈடுபடும் தனியார் பஸ்களில் 6 பஸ்கள் முறைகேடாக வேறு வழிப்பாதையூடாக சேவையில் ஈடுபடுவதால் குறித்த வழியூடாக சேவையில் ஈடுபடும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தனியார் பஸ்களின் சாரதிகளுக்கிடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்பட்டு வந்தது.

வவுனியாவில் இருந்து புதுக்குடியிருப்புக்கான பணியில் ஈடுபடும் தனியார் பஸ்களே தமது வழித்தடத்துக்கு முரணாக பரந்தன் ஊடாக புதுக்குடியிருப்புக்கான பணியில் ஈடுபட்டு வந்தன.



குறித்த 6 பஸ்களின் முறைகேடான பணியை கண் டித்து வவுனியா தனியார் பஸ் ஊழியர்கள் கடந்த மாதம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன் இது தொடர்பாக வட மாகாண போக்குவரத்து மற்றும் மீன்பிடி கிராமிய வர்த்தக வாணிப அமைச்சிடமும் முறையிட்டனர்.

இதனை அடுத்து வெளி மாவட்டங்களுக்கான பணியில் ஈடுபடும் தனியார் பஸ்களின் சாரதிகளுடன் கலந்துரையாடி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி வவுனியாவிலிருந்து பணியில் ஈடுபடும் தனியார் பஸ்களில் 3 பஸ்கள் பரந்தன் ஊடாக புதுக்குடியிருப்புக்கான பணியில் ஈடுபடலாம் எனவும், ஏனைய பஸ்கள் மாங்குளம் ஒட்டுசுட்டான் ஊடாக புதுக்குடியிருப்புக்கான பணியில் ஈடுபட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-12)

## ஸ்ரீ ராம கிருஷ்ணரின் அவதார தினம் நாளை

யாழ்ப்பாணம்,மார்ச் 2
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் அவதார தினம், பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நாளை திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட உள்ளது.

நாளை நண்பகல் 12 மணிக்கு பூசை, ஆராதனைகளுடன் விசேட சொற்பொழிவுகளும் இடம்பெறும் என்று சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். (அ)

# சாவகச்சேரி மருத்துவமனையில் பெண் நோயியலுக்கு தனி விடுதி

யாழ்ப்பாணம், மார்ச் 2
சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் பெண் நோயியல் பிரிவுக்கு தனியான விடுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெண் நோய் சிகிச்சைகள் இதுவரை காலமும் மருத்துவ மனை மகப்பேற்றுப் பிரிவில் இயங்கி வந்ததாகவும், தற்போது இப் பிரிவில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற இரண்டு பெண் மகப்பேற்று நிபுணர்கள் கடமையாற்றுவதால் பெருமளவு பிரசவத் தாய்மார்கள் பிரசவத்துக்காக வருகின்றனர். இதனால் விடுதியில் இடநெருக்கடி ஏற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் அந்தப் பிரிவில் இயங்கும் பெண் நோயியல் தொடர்பான சிகிச்சைகளை முன்னர் பெண்கள் விடுதி இயங்கிய கட்டடத்துக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அறியமுடிகிறது.

கடந்த வருடம் பெண் நோயியல் தொடர்பாக சாவகச்சேரி மருத்துவமனையின் மகப்பேற்றுப் பிரிவில் 521 பேர் சிகிச்சை பெற்றதாகவும் இவர்களில் 135 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் மருத்துவ மனை விளம்பரப் பலகையில் புள்ளி விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவருக்கு தூக்குத் தண்டனை குறைப்பு தீர்ப்பை எதிர்த்து மனுத்தாக்கல்

## உயர் நீதிமன்றில் தாக்கல் செய்தது மத்திய அரசு

சென்னை.மார்ச் 2
ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையைக் குறைத்து உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்பு சட்ட விரோதமானது எனவே இந்த உத்தரவை உச்சநீதிமன்றம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரி மத்திய அரசு உச்சநீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.
நேற்று இந்த புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது.
அதில், கருணை மனுவைபரிசீலிக்க ஏற்படும் தாமதத்தைக் காரணம் காட்டி ஒருவருடைய தூக்குத் தண்டனையைக் குறைக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது சட்டப்படி தவறானது.
சந்தனக் கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகள் சைமன், பிலவேந்திரன், ஞானப்பிரகாஷ், மீசை மாதையன் ஆகிய 4 பேருக்கு மைசூர் தடா நீதிமன்று ஆயுள் தண்டனை விதித்தது. அதை எதிர்த்து 4 பேரும் மேன்முறையீடு செய்தனர். அதை விசாரித்த உயர் நீதிமன்று, வீரப்பனின் கூட்டாளிகள் 4 பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்து உத்தரவிட்டது. இதையடுத்து வீரப்பனின் கூட்டாளிகள் 4 பேரும் குடியரசுத் தலைவரிடம் கருணை மனு கோரியிருந்தனர். ஆனால் குடியரசுத் தலைவர் உடனடியாக அந்த மனுக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீண்ட நாள்கள் கழித்தே அவர்களது மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இதை எதிர்த்து வீரப்பனின் கூட்டாளிகள் 4 பேரும் மீண்டும் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.
அதில் அவர்கள், கருணை மனு மீது முடிவு எடுக்க தாமதம் ஏற்பட்டதால் தண்டனையை குறைக்க வேண்டும் என்று கோரி இருந்தனர்.
வீரப்பனின் கூட்டாளிகள் மனு மீது கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அப்போது 4 பேரின் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து தலைமை நீதிபதி சதாசிவம், நீதிபதி ரஞ்சன் கோகோய் அறிவித்தனர்.
இதனால் வீரப்பன் கூட்டாளிகள் 4 பேரும் தூக்கில் இருந்து தப்பினார்கள். அவர்களை தொடர்ந்து மேலும் 11 பேரின் தூக்கு தண்டனை குறைக்கப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாக இந்த உத்தரவு கருதப்பட்டது.
இதை முன் உதாரணமாகக் கொண்டே சமீபத்தில் ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் தூக்குத் தண்டனையும், ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.
இதையடுத்து தமிழக அரசு இந்த மூன்று பேர் உள்பட 7 பேரை விடுதலை செய்ய முடிவெடுத்தது. ஆனால் அதற்கு மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்தது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தை அணுகியது. இதை விசாரித்த உச்சநீதிமன்றம், தமிழக அரசின் நடவடிக்கைக்கு இடைக்காலத் தடை விதித்தது.
இந்த வழக்கின் விசாரணை எதிர்வரும் 6 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் உச்சநீதி மன்றத்தில் நேற்று மத்திய அரசு ஒரு புதிய மனுவைத் தாக்கல் செய்தது. அதில், அதில் வீரப்பன் கூட்டாளிகள், ராஜீவ் கொலையாளிகள் உட்பட 15 பேரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க கூடாது. கருணை மனு மீது முடிவு எடுக்க தாமதமானதை காரணமாக சுட்டிக்காட்டி முடிவு எடுத்து இருப்பதை மாற்ற வேண்டும். இதைக் காரணம் காட்டி தூக்குத் தண்டனையைக் குறைக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு சட்டவிரோதமானது.
அதில் தவறுகள் உள்ளன. மேலும் இதுபோன்ற முக்கிய வழக்குகளை அரசியல் சாசன விதிப்படி நீதிபதிகள் அடங்கிய குழுவினரே விசாரிக்க வேண்டும். தவிர சாதாரண நீதிமன்றங்களில் இவ்வாறான வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்குவதை நிறுத்த வேண்டுமென கோரப்பட்டது.
இந்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது. ராஜீவ் காந்தி கொலையாளிகள் விடுதலையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு வரும் அதே நாளில் இந்த மனுவும் சேர்த்துக் கொள்ளப்படும் என உயர் நீதிமன்று அறிவித்துள்ளது. (ஐ-)

## தனித்து வாழ்ந்த மூதாட்டி கைதடி முதியோர் இல்லத்தில் இணைப்பு



முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்ட மூதாட்டி

தென்மராட்சி,மார்ச் 2
சுன்னாகம் ரயில் நிலையத்தில் தனித்து வாழ்ந்த மூதாட்டி கடந்த புதனன்று கைதடி முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.
கனகரத்தினம் ரூபராணி (வயது-66) என்னும் மூதாட்டி தனது கணவர், மகன் ஆகியோரை அடுத்தடுத்து இழந்ததாலும், அவருக்கு மகள் உள்ளபோதிலும்மகள்எங்கிருக்கிறார் என்பது தெரியாததாலும் உளநலம் பாதிக்கப்பட்ட நிலை யில் தனித்து வசித்து வந்தார்.
சுன்னாகத்தில் மூன்று வருடங்களுக்கு முன்னர் பழகிய ஒருவரின் துணையுடன் கைதடி முதியோர் இல்லத்துக்கு வருகை தந்து இணைந்துள்ளதாக இல்லப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
தெல்லிப்பழை மருத்துவமனையில் அந்த மூதாட்டி சிறிது காலம் சிகிச்சை பெற்று வந்ததாகவும், தனது பெற்றோர் விவரத்தை கூறியபோதும்
அம் மூதாட்டி தற்போது எந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறவில்லை என்கிறார் இல்லப் பொறுப்பதிகாரி.
தனது மகளுடன் இணைந்து வாழ விரும்புவதாகவும் மகள் எங்கிருந்தாலும் கைதடி முதியோர் இல்லத்துக்கு வருமாறும் மூதாட்டி தெரிவித்தார்.
(வ-9.51)

## நீரில் மூழ்கி நால்வர் சாவு

வெலிமடை மற்றும் பண்டாரவெல பிரதேசங்களில் நீரில் மூழ்கியதில் நேற்று நால்வர் உயிரிழந்தனர்.
திமுதுகம கல்வல கங்கையில் குளிக்கச் சென்ற சகோதரர்கள் இருவர் கங்கையில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.
இதேவேளை பண்டார வளை. பிட்டிய கெதற பனாங் கலவாவியில் குளிக்கச் சென்ற ஐவரில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தாக பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஐ)



தமிழ் அரசியல் கைதி விஸ்வலிங்கம் கோபிதாஸின் பூதவுடலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாணசபை உறுப்பினர் சிவயோகன் ஆகியோர் நேற்று அஞ்சலி செலுத்தினர். (ஐ-422)

# தனியார் தொலைக்காட்சிக்கு கண்டனம்

## இலங்கையில் இசை நிகழ்ச்சி நடத்துவதற்காக

சென்னை, மார்ச்.1
இலங்கையில் இசை நிகழ்ச்சி நடத்த உள்ள தனியார் தொலைக் காட்சிக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித் துள்ளார்.
இது தொடர்பாக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், '
'லட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் ஈவு இரக்கமின்றி இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்டனர். நடைபெற்ற இனக் கொலைக்கு நீதியை நாடி தமிழர்கள் எழுப்பும் ஆவேசக் குரலால் அனைத் துலகத்தின் மனசாட்சி விழித்துக் கொண்டுள்ளது.
ஜெனிவாவில் மனித உரிமை சபையில் நியாயம் கிடைக்க தாய்த் தமிழகத்திலும், தரணி யெங்கும் [illegible] முழக்கம் [illegible] கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இலங்கை அரசு வஞ்சகமான வேலையைச் செய்கிறது.
கோத்தபாய ராஜபக்ஷ கூட்டம் பின்னணியில் செய்திருக்கிற ஏற்பாட்டில் இலங்கையில் இசை நிகழ்ச்சி என்ற பெயரில் இன்றும் நாளையும் உலக நாடுகளை ஏமாற்றும் வேலைக்கு ஏற்பாடாகி உள்ளது. ஈழத்தில் நடைபெற்ற படுகொலை களை மறைப்பதற்காக நரித் தந்திரத்தோடு இந்த இசை விழாவை நடத்துகின்றனர்.
தமிழ்நாட்டிலுள்ள ஒரு தனியார் தொலைக்காட்சியில் பாடல் இசைக்கும் கலைஞர்கள் இந்த இருநாள் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ள இருக்கின்றனர். தனியார் தொலைக் காட்சி இசைக் குழுவினரும், இலங்கைக் கலைப்படைப்பினரும் இணைந்து இந்த இசை விழாவை நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று கொழும்பு மருதானை, புனித வளனார் கல்லூரியிலும், நாளை பம்பலப்பட்டி கதிரேசன் மண்டபத்திலும் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.
ஈழத்தில் ஏற்பட்ட தமிழினப் படுகொலையை நினைக்கும் போதே எமது மனம் வேதனையால் துடிக்கிறது. கொல்லப்பட்ட தமிழர்களின் எலும்புக் கூடுகள் மண்ணிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. நெஞ்சைப் பதை பதைக்கச் செய்யும் ஒரு காணொலி வெளிவர இருக் கிறது.
இந்தநிலையில் கொழும்பில் நடத்தும் கேளிக்கைக் கொண்டாட்டங்களில் தமிழ்நாட்டு இசைக் கலைஞர்களைப் பங்கேற்க வைப்பதன் மூலம் தாய்த் தமிழகத்தில் இலங்கை அரசுக்கு எந்த எதிர்ப்பும் இல்லை என்று வெளி உலகத்துக்குச் சொல்வதற்காகவே இந்த இசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது.
ரோமாபுரி பற்றி எரிந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்ததுபோல இந்த தனியார் தொலைக் காட்சி இசைக் கலைஞர்கள் அங்கு பாடப்போகிறார்களா? ஈழத் தமிழர்கள் எழுப்பிய மரண ஓலம் இன்னும் அங்கு காற்றில் கலந்து தான் இருக்கிறது. காயப்பட்டுப் போன தமிழர்கள் மனங்களில் நெருப்பைப் போடும் வேலையில் அந்த தனியார் தொலைக் காட்சி ஈடுபட வேண்டாம்.
இசைக்கலைஞர்கள் மீது நான் மிகுந்த மதிப்பு கொண்டிருக்கிறேன். அவர்கள் இந்த நிகழ்ச்சிகளில் கண்டிப்பாகப் பங்கேற்கக்கூடாது என்று வலியுறுத்துகிறேன். இந்த விபரீத வேலையில் தனியார் தொலைக் காட்சி ஈடுபட வேண்டாம்என்று தெரிவிப்பது எனது கடமையாகும்"- என்றுள்ளது. இதேவேளை குறித்த இசை நிகழ்ச்சி தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

**கார் விற்பனைக்கு**
யாழ்ப்பாணத்தில் டாக்டரின் பாவனையில் உள்ள TOYOTA COROLLA 64-52XX Orginal Diesel கார் விற்பனைக்குண்டு.
A/C FULL OPTION
வெளிநாடு செல்ல இருப்பதால்
விலை 12, 25 000/-
தொடர்பு: 0777 90 65 36

**தேவை**
கருங்காலி மரத்தினாலான தளபாட வகைகள் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு : 078 284 6660

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குளத்தில் கழிவு நீர்

கிளிநொச்சி, மார்ச் 2
கிளிநொச்சி நகரிலிருந்து வெளியேறும் கழிவு நீர் கிளிநொச்சிக் குளத்தில் கலக்கும் அபாயம் உருவாகியுள்ளது.
கிளிநொச்சி நகரின் பல்வேறு இடங்களிலிருந்தும் கழிவு நீர் வெளியேறி வருகின்றது.
ஆனால் கழிவு நீர் சொல்வதற்கான நீர்வாய்க்கால்கள் அமைக்கப்படாததால் இந்த நிலை தோன்றியுள்ளது. (க-18)

# காணாமற் போனோர் குறித்த விசாரணைகள்; சாட்சிக்காரருக்கு இராணுவம் அச்சுறுத்தலா?

## முறைப்பாடு செய்யுமாறு யாழ்.பிராந்திய ஏ.எஸ்.பி.தெரிவிப்பு

**காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் அண்மையில் சில இடங்களில் சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.**

யாழ்ப்பாணம், மார்ச் 2
காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளித்தவர்களுக்கு இராணுவத்தினர் அச்சுறுத்தல் விடுத்தால் அது தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.
யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் அண்மையில் சில இடங்களில் சாட்சியங்களைப் பதிவு செய்தனர். காணாமற்போனோரின் உறவுகள் பலர் அதில் கலந்து கொண்டு சாட்சியமளித்திருந்தனர்.
அங்கு சாட்சியமளித்தவர்களில் பலர் இராணு வத்தினருக்கு எதிராகவும் ஈ.பி.டி.பியினருக்கு எதிராகவும் கருணா குழுவினருக்கு எதிராகவும் சாட்சியமளித்திருந்தனர்.
அவ்வாறு சாட்சியமளித்தவர்களில் இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியமளித்தவர்களே தற்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலையை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கோப்பாய், கோண்டாவில் உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி யுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்ற போதும், அது தொடர்பில் இதுவரை எந்த முறைப்பாடும் கிடைக்க வில்லை.
அவ்வாறு அச்சுறுத் தலுக்கு உள்ளாகுவோர் அது குறித்து பொலிஸ் நிலையங் களில் முறைப்பாடு செய்யமுடி யும்.
அவ்வாறு முறைப்பாடு செய்தால்தாம்விசாரணைமேற்கொள்வோம் என்று யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா மேலும் தெரிவித்தார். (ஒ-4)

## புலமைப் பரீட்சை சித்திபெற்ற மாணவர் கௌரவிப்பு நாளை

ஊர்காவற்றுறை,மார்ச் 2
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தீவக வலய மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா, நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேசிய சேமிப்பு வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையில் நடைபெறும்.
வங்கிக் கிளையின் முகாமையாளர் வி.சுதாகர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் வி.வி.கிறைசனும், சிறப்புவிருந்தினராகதீவககல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸும் கலந்து கொள்வர். (ஒ)



வல்லிபுரம் மாணிக்கம் என்பவரால் 'வரணி' நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயத்துக்கு கணினி ஒன்று அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.கணினியை பாடசாலை அதிபர் பெற்றுக்கொள்கிறார். அருகில் பாடசாலை ஆசிரியைகள் காணப்படுகின்றனர். (த)

## தனித்து வாழ்ந்த மூதாட்டி கைதடி இல்லத்தில் இணைப்பு

தென்மராட்சி,மார்ச் 2
சுன்னாகம் ரயில் நிலையத்தில் தனித்து வாழ்ந்த மூதாட்டி கடந்த புதனன்று கைதடி முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.



*முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்ட மூதாட்டி*

கனகரத்தினம் ரூபராணி (வயது-66) என்னும் மூதாட்டி தனது கணவர், மகன் ஆகியோரை அடுத்தடுத்து இழந்ததாலும், அவருக்கு மகள் உள்ளபோதிலும் மகள் எங்கிருக்கிறார் என்பது தெரியாததாலும் உளநலம் பாதிக்கப்பட்ட நிலையில் தனித்து வசித்து வந்தார்.
சுன்னாகத்தில் மூன்று வருடங்களுக்கு முன்னர் பழகிய ஒருவரின் துணையுடன் அம் மூதாட்டி கைதடி முதியோர் இல்லத் துக்கு வருகை தந்து இணைந்துள்ளதாக இல்லப் பொறுப் பதிகாரி தெரிவித்தார்.
தெல்லிப்பழை மருத்துவமனையில் அந்த மூதாட்டி சிறிது காலம் சிகிச்சை பெற்று வந்ததாகவும், தனது பெற்றோர் விவரத்தை கூறியபோதும்
அம் மூதாட்டி தற்போது எந்த இடத்தைச் சேர்ந்தவர் என்று கூறவில்லை என்கிறார் இல்லப் பொறுப்பதிகாரி. தனது மகளுடன் இணைந்து வாழ விரும்புவதாகவும் மகள் எங்கிருந்தாலும் கைதடி முதியோர் இல்லத்துக்கு வருமாறும் மூதாட்டி தெரிவித்தார்.(வ-9,51)

## அறிவுப் பகிர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 2
யாழ்.பட்டப்படிப்புகளுக்கான ஆங்கில கற்கை அமைப்பின் ஏற்பாட்டில் கல்விமாணி ஆசிரியர்கள், மாணவர்களுக்கான அறிவுப் பகிர்வு செயலமர்வு இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு பல்கலைக்கழக கலைப்பீட மண்டபத்தில் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-14)

## காரைநகர் பிரதேச சபைக் கூட்டத்தில் எதிரணி உறுப்பினர்கள் வெளிநடப்பு

### ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படாததால்

காரைநகர்,மார்ச் .2
காரைநகர் பிரதேச சபையிலுள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படாமையைக் கண்டித்து பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர்கள் புதன்கிழமை வெளிநடப்புச் செய்தனர்.
காரைநகர் பிரதேச சபையின் 31 ஆவது மாதாந்தக் கூட்டத் தொடர் புதன்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. பிரதேச சபையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு அங்கீகரிக்குமாறு பிரதேச சபைச் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.
நியமனத்துக்கான அங்கீகாரம் வழங்குவது தொடர்பில் சபை உறுப்பினர்களிடையே இழுபறி நிலை காணப்பட்டதுடன், அதற்கான அங்கீகாரம் வழங்க முடியாது என்று சபைத் தவிசாளர் வாதிட்டார்.
இதன்போது பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர்களான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த க.பாலச்சந்திரனும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த வீரமுத்து கண்ணனும் நியமனத்துக்கான அங்கீகாரத்தை வழங்குமாறு வாதிட்டனர். அவர்களுடைய கோரிக்கையை ஏற்கப் பிரதேச சபைத் தலைவர் மறுத்ததோடு அங்கீகாரம் வழங்குவதற்கு கால அவகாசம் வேண்டும் என்றும் தெரிவித்தார்.
இதனை அடுத்து இது தொடர்பான தீர்மானம் உறுப்பினர்கள் மத்தியில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதில் நியமனம் வழங்குவதற்கான அங்கீகாரம் வழங்க கால அவகாசம் வேண்டும் என்பதற்கு ஆதரவாக மூன்று உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் இருவர் எதிராக வாக்களித்தனர்.
அதனை அடுத்து அங்கு கருத்துத் தெரிவித்த ஐ.தே.க. உறுப்பினர், சிரமங்களுக்கு மத்தியில் போராடிப் பெற்ற ஆளணிநியமனங்களை உடன் வழங்காதது கண்டிக்கத்தக்கது என்று கூறி சபைக் கூட்டத்திலிருந்து வெளியேற்றுவதாகத் தெரிவித்து வெளி நடப்புச் செய்தார். அவரைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப் பினரும் சபையில் இருந்து வெளியேறினார். (வ-400,250)

## பாடசாலை தோறும் நிறுவப்படும் பழைய மாணவர் சங்கங்கள்

### கல்வி அமைச்சின் அறிவுறுத்தலை அடுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 2
சகலபாடசாலைகளிலும்பழைய மாணவர் சங்கங்கள் செயற்பட வேண்டும் என்ற கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய பாடசாலைகள் தோறும் பழைய மாணவர் சங்கங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. பாடசாலை அதிபர்கள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.
கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கத்தை தாய்ச் சங்கமாகக் கொண்டு பாடசாலை அபிவிருத்திக் குழு, ஒழுங்கமைப்புக்குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்கள் நிறுவப்படவுள்ளன.
இதில் பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.
பாடசாலை மாணவர் எண்ணிக்கைக்கமைய உறுப்பினர் எண்ணிக்கை வரையறை செய்யப்பட்டிருப்பதோடு அதில் பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவில் இடம் பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் பழைய மாணவர் சங்கங்கள் நிறுவப்படாத பாடசாலைகளில் பழைய மாணவர் சங்கங்கள் உடனடியாக நிறுவப்பட வேண்டும். புதிய பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் அதனோடு இணைந்த பாடசாலை அபிவிருத்திக் குழு, ஒழுங்கமைப்புக் குழு உள்ளிட்ட குழுக்கள் சுற்றறிக்கைக்கு அமைய நிறுவப்பட்டு நிர்வாகிகளின் விவரம் அடங்கிய அறிக்கை மார்ச் மாதம் முடிவதற்கு முன்னர் கோட்டக் கல்வி அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-11-09)

## குறும்பட வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 2
சுதுமலை அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள தினேஸ் ஏகாம்பரத்தின் 'அணு குண்டுகள்...' என்ற தலைப்பிலான குறும்பட வெளியீடும் 6 குறும்படங்களின் அறிமுக நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமைபிற்பகல்3.30மணிக்கு சுதுமலை சின்மய பாரதி வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஆர்வலர்களை நிகழ்வில்கலந்துகொண்டுபயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஞ)

## மீளாய்வுக் கூட்டம்


தென்மராட்சி, மார்ச் 2
தென்மராட்சி பிரதேச மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## கிளாலி இறங்குதுறையை புனரமைக்க ரூபா 80 லட்சம் ஒதுக்கீடு

கிளாலிப் பகுதியில் வசிக்கும் மீனவர்களுக்கு உதவ முன்வந்துள்ள ஐ.ஓ.எம்.நிறுவனம் தொழில் செய்வதற்கு வசதியாக அங்குள்ள இறங்குதுறையை 80 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கவுள்ளது.
கிளாலிப் பகுதியில் மீள்குடியமர்ந்த மீனவர்கள் அங்கு இறங்குதுறை வசதியிருந்தும் பயன்படுத்த முடியாமல் பெரும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.
போர்க் காலச் சூழ்நிலை காரணமாக இறங்குதுறை பலவருடங் [illegible] குள்ளாகி இருப்பதால் வள்ளங்களை அணைக்க முடியாமல் திண்டாட வேண்டியுள்ளது. அத்துடன் பிடிக்கும் கடல் உணவுகளைச் சந்தைப்படுத்துவதற்கு மண்டப வசதியில்லாமல் தரையில் வைத்து விற்பனை செய்கிறார்கள்.
இந்த நிலை குறித்துக் கிளாலிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தது.
அதை அடுத்து செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால் மீனவர்களுக்கு உதவ முன்வந்துள்ள ஐ.ஓ.எம்.நிறுவனம் 400 மீற்றர் நீளமான இந்த இறங்குதுறையைப் புனரமைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதுடன் கூறு விலைமண்டபத்தையும்அமைத்துக் கொடுக்கவுள்ளது. (ஒ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



திருமதி

## மகேஸ்வரி தாமோதரம்பிள்ளை

பருத்தித்துறை, புலோலி தெற்கு பிலத்தம்யை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும், கொண்ட திருமதி மகேஸ்வரி தாமோதரம்பிள்ளை நேற்று (01.03.2014) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி-சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற தாமோதரம் பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராஜாவின் சகோதரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, பார்வதி ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் ( Modern Plastic Centre ), காலஞ்சென்ற பரமேஸ்வரி, பரமநாதன், சரஸ்வதி மங்கையர்க்கரசி, கிருஷ்ணாநந்தன் யோகேஸ்வரி, சிவபாலசுந்தரம், மலரேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி, சரோஜினிதேவி,யோகேஸ்வரி, கணேஷலிங்கம், அருள்மொழி, ஏரம்பநாதன் ஆகியோரின் மாமியாரும், காந்தரூபன், மதிவதனன், காலஞ்சென்ற டினேஷ், துவாரகா, அருண்குமார், ஐஸ்வர்யா, அஜித்குமார், சந்தியா, நிவேதிக்கா, அட்சயா,நிதர்சனன், ஆர்த்திகா, அபர்ணிகா, நிருத்திகா, ஆரணிகா, வதனா, தினேஷ் ஆகியோரின் பாட்டியும், ஹஸ்வினின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு 57/1, E.S. Fernando Mawatha, Wellawatte, Colombo-06 இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 3.30 மணியளவில் பொரளை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் T.Siva ( Modern Plastic Centre )
57/1, E.S. Fernando Mawatha, Wellawatte - 011 2360619

(C/11284)(10.6.3)

## மணியர்பதியில் இன்று கொடியேற்றம்

கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பைரதத் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், ஞாயிறு காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். உற்சவ காலங்களில் தினமும் திருமண மண்டபத்தில் நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். (ஓ)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 2

வேலணை பிரதேச செயலகப் பிரிவின் பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. சங்கத்தின் புதிய உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் -எஸ்.சண்முகலிங்கம், உப தலைவர் - பொ.நடராசா, செயலாளர் - எஸ்.சிவலோக நாதன், உப செயலாளர்-திருமதி வி.நாவேந் தன், பொருளாளர்-இ.சற்குருநாதன். நிர்வாக உறுப்பினர்களாக சு.திசைநாயகம்பிள்ளை, பொ.பத்மநாதன் ஆகியோரும் தெரிவாகினர். (ஓ-7)

* * *

கரவெட்டி தச்சை ஐங்கரன் சனசமூக நிலைய பொதுக் கூட்டம் அண்மையில் நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் போட்டிகளின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் -பாலா விஜயகுமாரன், உப தலைவர் -த.பாலச்சந்திரன், செயலாளர் -இ.குகதாஸன், உதவிச் செயலாளர் -க.மனோகரன், பொருளாளர் -ம.பாலசுப்பிரமணியம். இவர்களுடன் மேலும் ஒன்பது பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-9)

## எரிபொருள் விற்பனைக்கு தடை

தனியார் வர்த்தக நிலையங்களில் எரிபொருள்களை விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது:

நகரப் பகுதிகளிலுள்ள எரிபொருள் நிலையங்களில் இருந்து கொள்வனவு செய்யப்படும் பெற்றோல் ,டீசல், மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்கள் கிராமப்புறங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதைக் காண முடிகின்றது.


தற்போது இதற்குத் தடை விதிக்கப்பட்டு வருகின்றது. தனியார் விற்பனை நிலையங்களில் எரிபொருள்கள் விற்பனை செய்வ தால் விபரீதங்கள் இடம் பெறுவதுடன் சுகாதார ரீதியிலான பாதிப்புக்களும் ஏற்படுவதாகத் தெரிவித்து, விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (க-421)

## மாணவனை தீண்டியது புடையன் பாம்பு

பாடசாலைக்குச் செல்வதற்கு முன்னர் மாட்டை மேய்ச்சலுக்காக கொண்டு சென்ற மாணவனைப் புடையன் பாம்பு தீண்டியது. இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை காலை தாவளை இயற்றாலைப் பகுதியில் இடம்பெற்றது. அதேஇடத்தைச் சேர்ந்த மகேந்திரன் மயூரன் (வயது-15) என்னும் மாணவன் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-9)

# மரண அறிவித்தல்

## முருகேசு சுவாமிநாதன்



அம்மன் கோயிலடி, குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சுவாமிநாதன் நேற்று (01.03.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மட்டுவிலைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, அப்பாத்துரை, சிவக்கொழுந்து, சின்னத்தங்கம், பூரணம் ஆகியோரின் இளைய சகோதரனும், சகுந்தலாவின் அன்புக் கணவரும், சுமணா (மருந்தாளர்-யாழ். போதனா வைத்தியசாலை), சுகந்தி (நோர்வே), சுசிதரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சுகுணா மற்றும் வளர்மதி (ஜேர்மனி) வசிதரன், ரசிதரன், சுரேசனா, சுகர்னா, அஜிதரன் (ஆசிரியர்-யா/இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிரமலை (திலக்ஷன் ஸ்ரோர்ஸ்-யாழ்ப்பாணம்), யோகராசசிங்கம் (நோர்வே), விஜிதா (ஜேர்மனி), நாதன் (ஜேர்மனி), தாமரைச்செல்வி (மண்கும்பான்), புஸ்பராணி (ஏழாலை), ரதிகுமார் (ஏழாலை), சண்முகானந்தன் (காரைநகர்) ஆகியோரின் மாமனும், டிலக்ஷன்,டினோஷன், அனிதா, நவீனா, அபிஷன், மிதுலன், கனிலன், கார்த்திகா, திலக்ஷன் (மாணவன்-சென்ஜோன்ஸ் கல்லூரி), சதுஷன் (மாணவன்-சென்ஜோன்ஸ் கல்லூரி), தனுஷா (மாணவி-யா/இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை), சிந்துஷன் (மாணவன்-சென்ஜோன்ஸ் கல்லூரி), நிலக்ஷன், தேனுஷா, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் குரும்பசிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் குப்பிளான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் கோயிலடி,
குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழை.
077 628 2671

(45193)

தகவல்: குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையின் மருந்தாளர்
திருமதி சு.சுமணா அவர்களின்
பாசமிகு தந்தையார்

## முருகேசு சுவாமிநாதன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருந்தாளர்கள்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(455264) (7.6.3)

# மரண அறிவித்தல்கள்

## வேதநாயகம் கிருபைராஜ்

(பாஸ்ரர் கிருபைராஜ்)

இலங்கை பெந்தெகொஸ்தே சபையில் ஊழியம் செய்து கொண்டிருந்த பாஸ்ரர் வேதநாயகம் கிருபைராஜ் 27.02.2014 வியாழக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்தார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள அவரது பூதவுடல் ஞாயிறு மதியம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு, அவரது அடக்க ஆராதனை நாளை (03.03.2014) திங்கட்கிழமை பி.ப 1.30 மணிக்கு இல. 111, கண்டி வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபைச்சாலையில் நடைபெற்று, அடக்கம் கொட்டடியில் அமைந்துள்ள சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை ஊழியக்காரர், விசுவாசிகள் மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாஸ்ரர் ஆ. மகேந்திரன்
021 222 2339

(45191) (10.6.3)

## கந்தையா இராசலிங்கம் (கிளி)



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசலிங்கம் (கிளி) 26.02.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியரின் கனிஸ்ர புத்திரனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-இளையபிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராசமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சாந்தலிங்கத்தின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், விஸ்வலிங்கம் ஆகியோரின் சகோதரனும், மாதரசி (சுவிஸ்), மணிவண்ணன் (கனடா), வசீகரன் (தெல்லிப்பழை பிரதேச செயலகம்), விந்தகன் ஆகியோரின் தந்தையும், இராசரட்ணம் (சுவிஸ்), சுஜாத்தா (கனடா), துசியதர்சினி, உதயரஜனி ஆகியோரின் மாமனும், யதுஸ், அயன், பிருத்திஷ், அட்ஜயா, விதுசன் கோபிசன், லதுமிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.
077 6042101

(45183)

தகவல் : குடும்பத்தினர்.

## பிலிப்ஸ் கிறிஸ்டோபர்

(இளைப்பாறிய உதவிப்பணிப்பாளர் - சமுர்த்தி - வவுனியா, திருகோணமலை)



புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்ஸ் கிறிஸ்டோபர் (இளைப்பாறிய உதவிப்பணிப்பாளர் - சமுர்த்தி வவுனியா, திருகோணமலை) 25.02.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை பிலிப்ஸ் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற திரு. திருமதி யோசப் எட்வேட் தம்பதியரின் அன்பு மருமகனும் எலிசபெத் அன்னபூரணம் (பேபி) அவர்களின் பாசமிகு கணவரும் நிமல்ராஜ், நிரோஷன், நிஹாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரியா, டுனுஷா ஆகியோரின் மாமனும் கெவினின் பேரனும் காலஞ்சென்றவர்களான அந்தோனி பொன்ராஜா (இலங்கை) ஜார்ஜ் மரியதாஸ் (லண்டன்) மற்றும் மேரிமக்டலின் பூமணி (இலங்கை), அருட்திரு இம்மானுவேல் ஜேசுதாசன் (OMI மன்னார் - இலங்கை), செல்லம் சூசைதாசன் (கனடா), காலஞ்சென்ற மேரிகிரேஸ் தங்கமணி (இலங்கை) மற்றும் எல்சி ருக்கு (இலங்கை), ஜோன் மரியநேசன் (லண்டன்), யுகரிஸ்தா கண்மணி (லண்டன்), ஜோசப் தேவதாஸ் (லண்டன்), காலஞ்சென்ற பிலிப்ஸ் பெஞ்சமின் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொறளை ஜயரட்ண மலர்ச்சாலையில் வெள்ளிக்கிழமை 28.02.2014 முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நேற்று (01.03.2014) சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு இறை ஆராதனையின் பின்னர் பொறளை கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. அவரின் அஸ்தி நாளை (03.02.2014) திங்கட்கிழமை புலோலி தெற்கு புனித சூசையப்பர் தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/12335) (7.6.3)

தகவல் : மனைவி, குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடம் வாடகைக்குத் தேவை

யாழ்.நகரப்பகுதிக்குள் ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதிகளில் காட்சியறை ஒன்றுக்கு 40 அடி அகலமும் 2500 அடி விஸ்தீரணமும் உள்ள வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய கட்டடம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு:071 856 1320 (C/12545) (3.6.4)

## VACANCIES வேலைவாய்ப்பு

• **Hotel Asst Manager** உதவி முகாமையாளர்

தங்குமிட விடுதி சார்ந்த துறையில் ஆகக்குறைந்த ஒரு வருட அனுபவமும் கணக்கியலுடன் கணினி அறிவும் உடைய ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

• **Hotel Steward cum Room Boy** விடுதி பராமரிப்பாளர்

தங்குமிட விடுதி சார்ந்த துறையில் ஆகக்குறைந்த ஒரு வருட அனுபவம் வரவேற்கத்தக்கது.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி**

FitsAir friend in the skies...

DIRECTOR, Sales & Marketing
FITS AVIATION (PVT) LTD.
No40, Kandy Road, Chundikuli, Jaffna.

(C/12346)

## ஒரு தொகைப் பணம் கண்டெடுப்பு

ஏ-9 வீதியில் சாவகச்சேரிநவீனசந்தைக்கு முன்பாக பால்மா வெற்றுப்பை ஒன்றில் மடிக்கப்பட்ட நிலையில் ஒரு தொகைப் பணம் கடந்த புதன் கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளது. பணத்துக்குரியவர் தகுந்த ஆதாரம் காட்டி கைதடி மத்தி வளர்மதி சனசமூகநிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-288)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## வாடகைக்கு

யாழ் நகரில் வேம்படி மகளிர் பாடசாலைக்கு முன்பாக வீடு (2400sf) வாடகைக்கு உண்டு கல்வி நிறுவனங்களுக்கும் மருத்துவ சோதனை நிலையங்களுக்கும் அலுவலகங்களுக்கும் உகந்தது.

தொடர்பு (C/12275)
0777 738 339

## ஆன்மிக குரு அருள்திரு அடிகளார் அவர்களின் 74 ஆவது அவதாரத் திருநாள் பெருமங்கல விழா

ஓம் சக்தி
குருவடி சரணம்! திருவடி சரணம்



பேரன்புடையீர்! ஆன்மிக குரு. ஆச்சார்யபீட நாயகர் அருள்திரு அடிகளார் அவர்களின் 74வது அவதாரத் திருநாள் பெருமங்கல விழாவானது யாழ் மன்றம், லண்டன் ஈஸ்ட்காம் மன்றம் மற்றும் ஹறோ மன்றத்தின் அனுசரணையோடு சமூக நலப்பணி, மகேஸ்வர பூஜை நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற உள்ளது.

**காலம்: மாசித் திங்கள் 25 (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: காலை 9.00 மணி**
**இடம்: யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபம். நல்லூர்.**
(சட்டநாதர் சிவன் கோயில் அருகில்)

ஆன்மிக நலம் நாடும் அன்பர்கள் அனைவரும் விழாவில் பங்கேற்று அன்னையின் திருவருளையும், ஆன்மிக குரு அருள்திரு அடிகளார் அவர்களின் குருவருளையும் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**அன்னையின் ஆன்மிகப் பணியில்**
**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம்.**
**யாழ்ப்பாணம்.**

**தொடர்பு: 0718565662/0779225692** (C/12347)

## வாகனம் விற்பனைக்கு

மாருதி சுசிக்கி(OMINI) கார் (வான்மொடல்)விற்பனைக்குண்டு.
077 706 6487, யாழ்ப்பாணம். (45199) (3.6.4)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் சீரணி அம்மன் கோவிலருகில் 29.02 பேர்ச்சஸ் (2.9 பரப்பு) காணி முற்றாகக் கட்டி முடிக்கப்படாத 4 அறைகள் கொண்ட வீட்டுடன் விற்பனைக்குண்டு. களஞ்சியசாலையாகவும் பாவிக்கலாம்.
077 646 3843 (C/12274) (3.6.4)

## அசைவ உணவகம் வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் யாழ்ப்பாணம் என்ற முகவரியில், மருத்துவ மனையுடன் இணைந்த,

* சகல தளபாட குளிர்சாதன வசதியுடைய 700 சதுர அடிப் பரப்பளவுடைய "ரதி ஹொட்டல்" வாடகைக்கு விடப்படும். களஞ்சியமாகவும் (Stores) பாவிக்கலாம்.
* அதனுடன் இணைந்த இரு கடைகளும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : நேரடி
T.P.No:077 483 3303 (45196) (7.6.3)

## காணி / வயற்காணி விற்பனைக்கு

கரவெட்டி மத்தி சம்பந்தர் கடைக்கு அண்மையில், சோனப்பு வீதியில் 2 பரப்பு 16 3/4 குளி காணியும், அதில் 10 வருடங்கள் சென்ற 40 தேக்கு மரங்கள், 32 சமண்டலை மரங்கள் மற்றும் 10 பனை மரங்களுடன் உடன் விற்பனைக்குண்டு.

கரவெட்டி தில்லையம்பலப் பிள்ளையார் கோயிலுக்கு வடக்கு திசையாக அடிவாய்காலில் வயல் காணி 15 பரப்பு உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு : (C/12276)
0777 141 382

## டுபாய்

| | | |
|---|---|---|
| பொது வேலையாள்கள் | 200 | 34,200 (DHS 950) |

* மருத்துவம், தங்குமிட வசதி, போக்குவரத்து மற்றும் ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் திரும்பி வர இலவச டிக்கட் வழங்கப்படும்.
* 2 வருட காலம் ஒப்பந்தம். • வேலை நேரம் 8 மணித்தியாலம்
* தொழிலாளர்களின் ஏனைய விதிமுறைகளும் நிபந்தனைகளும் டுபாய் சட்டப் பிரகாரம் அமையும்.

## கட்டார்

நேர்முகப் பரீட்சை கிழமையில் 7 நாட்களும் நடக்கின்றன

| | | |
|---|---|---|
| உதவி குழாய் பொருத்துபவர் Assistant Duct Fitter | 30 | ரூ.43,000 QR 1000+200 F.A |
| உதவி பிளம்பர் Assistant Plumber | 30 | ரூ.43,000 QR 1000+200 F.A |
| உதவி இலத்திரனியலாளர் Assistant Electrician | 30 | ரூ.43,000 QR 1000+200 F.A |
| உதவி நீர்குழாய் பொருத்துபவர் Assistant Pipe Fitter | 30 | ரூ.43,000 QR 1000+200 F.A |
| கையுதவியாளர்கள் Helpers | 30 | ரூ.43,000 QR 1000+200 F.A |

* உணவுச் செலவு ஞசு 200 (சம்பளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது)
* மருத்துவம், தங்குமிட வசதி, போக்குவரத்து மற்றும் ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் திரும்பி வர இலவச டிக்கட் வழங்கப்படும்.
* 2 வருட காலம் ஒப்பந்தம்.
* வேலை நேரம் ஒரு நாளுக்கு 8 மணித்தியாலம்
* தொழிலாளர்களின் ஏனைய விதிமுறைகளும் நிபந்தனைகளும் கட்டார் சட்டப் பிரகாரம் அமையும்.

விண்ணப்பப்படிவம், பாஸ்போர்ட் மற்றும் புகைப்படத்துடன் சமுகமளிக்கவும்.
இப்பொழுது அழையுங்கள் உங்கள் பெயர் மற்றும் புனைப்பெயரை SMS செய்யவும் அரசாங்க ஒப்புதல் உடனம் மட்டும் அறவிடப்படும் QR 1 = Rs 36

**சந்தரு மேன்பவர்** 0777 765 911 / 072 700 700 5 / 0112 649 244
இல. 728/1/1, காலி வீதி, பொறடுவ. (இலங்கை வங்கிக்கு எதிரே)
தொலைபேசி: 0112-644720/0112-648111/ 0112-644110/ 0112-644544 பக்ஸ்: 0112-643644
L.I.NO 2475
Send CV: san.manpower@yahoo.com

## IDM Nation Campus யாழ்கிளையின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

IDM Nation Campus ல் 2011ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை கல்வி கற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. பொருத்தமான மாணவர்கள் இதற்கான பதிவினை இரண்டு வாரங்களுக்குள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**IDM Nations Campus**
**Jaffna Branch**
Managed by Aharam Solution (Pvt) Ltd
#216, Navalar Road, Jaffna
Tel:-021 2229901 Mobile:-0775632056
(C/12343)

## NEED AN INNOVATIVE LECTURER

**Requiring Qualifications**

* A bachelor degree from a recognized University/Institute
* Excellent practical & instructing ability in Java,C#.net, JSP, ASP, PHP and related programming subjects.
* At least two year of experience in the particular field.
* Should be able to lead in "Development Projects"

Forward your CV to info@idmjaffna.com within 15 days of this advertisement.

**IDM Nations Campus**
**Jaffna Branch**
Managed by Aharam Solution (Pvt) Ltd
(C/12344)

## அழகுக் கலைப் பயிற்சி

ORIFLAME SWEDEN



மகளிர் தினத்தை முன்னிட்டு...
துரித மூன்று மாத கால அழகுக் கலைப் பயிற்சி மற்றும் கேக் ஐசிங் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. Facial பலவகைகள் Pedicure, Manicure, Nail art, Thereading, Hair Style (பலவகை), Hair Straightening, Re-bonding, Perming, Hair Colouring, Hair Cut பலவகை Saree Style, Make up (பலவகை) எனப் பல பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சி முடிவில் சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்.
இணைய விரும்புவோர் அறிமுக வகுப்பில் கலந்து மேலதிக விவரங்களைப் பெற்றுப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**கிழமை நாள் பிரிவு - 05.03.2014 அன்று 10.00 மணி**
**சனி, ஞாயிறு பிரிவு - 08.03.2014 அன்று 10.00 மணி**

முக்கிய குறிப்பு:
மேற்படி பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் மகளிர் தினத்தை முன்னிட்டு 25% கட்டணக் கழிவு வழங்கப்படும். அதேவேளை HAIR IRONER, HAIR DRYER, FACIAL KIT என்பன இலவசமாக வழங்கப்படும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிலும் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்விடங்களில் இணைய விரும்புவோர் பெயர், அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை 077 228 8243 என்ற இலக்கத்திற்கு sms மூலம் அனுப்பி வைக்கவும்.

**ஓறிபிளேம்**
187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரச் சந்திக்கு அருகில்)

தொடர்புகளுக்கு:
077 228 8243/077 368 6038
(45757) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**மாணிக்கம் பஞ்சவர்ணம்**
(சுப்ரமணியம்)

தோற்றம் 01.08.1944 மறைவு 13.03.2013

குடும்பத்தின் கிழக்கின் ஆதவனாய்
தரணியின் சிறப்புமிகு தலைமகனாய்
ஊர் மெச்சும் பண்பாளனாய்
அனைவரது நெஞ்சத்திலும் வாழ்ந்து
மறைந்த குலச் சிகரமே!
உங்கள் நினைவுகள்
என்றும் எம் உள்ளத்தில் நிறைந்திருக்கும்

உடுப்பிட்டி வீதி,
தொண்டமானாறு. (33389)(2.6.3) குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 31.01.2014 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயார்
திருமதி **மகேஸ்வரி பாலசிங்கம்**
அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (02.03.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணியள வில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(45263)(12.6.3)

குடும்பத்தினர்.
நாவற் கட்டை, கோப்பாய் வடக்கு
கோப்பாய்.

## சிறந்த சேவைகள் பராமரிப்புக்கு சாவகச்சேரி மருத்துவமனை தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 2

கடந்த வருடம் சுகாதார அமைச்சினால் மருத் துவமனைகளில் பெறப்பட்ட சுட்டி விவர அடிப் படையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை சிறந்த சேவைகளை வழங்கும் மருத்துவ மனையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், மருத்துவமனை பராமரிப்பு கடமையாற்றுவோரின் அர்ப்பணிப் பான சேவை போன்றவற்றின் அடிப்படையில் இந்தத் தெரிவு இடம்பெற்றிருப்பதாக மருத்து வமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு சுகாதார அமைச்சில் நடைபெறவுள்ள தேசிய சுகாதார வார நிகழ்வில் சாவகச்சேரி மருத்து வமனையின் சிறந்த செயற்பாடுகள் குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஏனைய மருத்துவமனைப் பொறுப்பதிகாரி களுக்கு எடுத்துக் கூறுவார் என்று தெரிவிக் கப்பட்டது. (ஓ-9)

## மக்கள் நலன் பேணும் அமைப்பின் உதவித் திட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

மக்கள் நலன் பேணும் அமைப்பினால் வழங்கப்படுகின்ற கல்விக்கான மாதாந்த உதவித்திட்ட நிகழ்வு இன்று ஞாயிறு மாலை 4.30 மணிக்கு கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறும். மாதாந்தம் 20 மாணவர்களுக்கு ஆயிரம் ரூபா வீதம் இந்த உதவி நிதி வழங்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (ஓ)

## இதயம் மறவா 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**முத்தையா இராசரத்தினம்** (பத்தர்)

மலர்வு 10.08.1926 உதிர்வு 01.03.2006

திதி: பூர்வபட்ச பிரதமை
(02.03.2014 ஞாயிற்றுக்கிழமை)

அன்புடனும் பண்புடனும் எம்மை அரவணைத்துக்
காத்த எங்கள் அப்பா! உங்கள் நினைவு என்றும் எம் மனங்களில்
ஒளிர்ந்து கொண்டே இருக்கும் என்றுமே எங்கள் தெய்வம் நீங்கள் அப்பா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"மலர் வாசம்"
மகாஜனக் கல்லூரி வீதி,
தெல்லிப்பழை. (45137) (6.3.4)

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



திருமதி
**மகேஸ்வரி அம்மா கருணரட்னம்**

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி அம்மா கருணரட்னம் 25.02.2014 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கொழும்பார் கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கருணரட்னத்தின் அன்பு மனைவியும், சிறிஸ்கந்தராஜா (சிறி), பிருதிவிராஜா (ரவி), மோகனராஜா (மோகன்), றஜனி (பாமா), மதனராஜ் (மதன்), முகுந்தராஜ் (முகுந்தன்) மற்றும் சிவாஜினி (பெறாமகள் - தயா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி அம்மா, குமாரவேலு, விஸ்வலிங்கம், கனகாம்பிகை அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராகினி, ருக்மணிதேவி, வத்சலாதேவி, பாலச்சந்திரன் காமினி, சுபாஷினி ஆகியோரின் பாசமிகு மாமியும் கஜன், துஸ்யன், அகல்யா, அகிலன், சகானா, சோபிதா, அபிநந்த், மிதுநந்த், ஆதவன், ஆதிரை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று டென்மார்க்கில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி12278)(12.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 28.04.1946



உதிர்வு 11.03.2013

## ஆறுமுகம் செல்லையா

(வேதரடைப்பு - காரைநகர்)

உரிமையாளர்- குகன் ஸ்டோர்ஸ் (Pvt) Ltd - யாழ்ப்பாணம்
மீனாட்சி அரிசி ஆலை - கோண்டாவில்
முன்னாள் உரிமையாளர் -
குகன் எரிபொருள் நிரப்பு நிலையம் - திருநெல்வேலி

வருடம் ஒன்று சென்றது அப்பா ஆனாலும்
ஆறாது எம் துயரம் என்றென்றும்
அன்புடன் எமையணைத்து-அறிவுரைகள் பல கூறி
பண்புடன் எம்மை வளர்த்து-பாரினில் உயர வைத்தீர்
ஆயிரமாயிரம் உறவுகள் இருந்தாலும் என்னப்பா?
உங்கள் அன்பைப் போல் வருமா எமக்கு!
கண்ணீரில் நாம் தோய - எமைப் -பிரிந்து எங்கு சென்றீர்கள்?
எந்நாளும் உங்கள் நினைவலைகளை
இதயத்தில் சுமந்து நிற்கின்றோம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய -இறைவனை வேண்டி நிற்கும்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(சி12283)(12.3.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**கொண்டு சண்முகம்**

மண்ணில் 08.04.1939



விண்ணில் 31.01.2014

காலத்தை வென்ற காவிய நாயகனே
பேரோடும் புகழோடும் வாழ்ந்த உத்தமனே!
காத்திருந்து அரவணைத்த கைகள்
காலமெல்லாம் எம்மை விட்டுப் பிரிந்ததேனோ!
ஆண்டுகள் நூறு வாழ்வீர்களென நாமிருக்க
இடைவழியில் உங்களைக் காலன் அழைத்தானோ!
எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும்
கண்ணீருடன் காத்திருப்போம் நின் வரவைப்பார்த்து

கடந்த 31.01.2014 சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்டு ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதுடன், அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

தேவாலய ஒழுங்கை,
டச்சு வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
சீதா ஜுவல்லரி - சாவகச்சேரி.

(சி.7656) (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 157

# எத்தகைய தலைவலி ஆபத்தானது?

பெரும்பாலான தலைவலிகள் ஆபத்து அற்றவை. ஆயினும், சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற தலைவலி ஆபத்தானதாக அமைகின்றது. இவ்வாறான ஆபத்தான தலைவலிகளுக்குக் காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01. மண்டையோட்டுக் குழியினுள் அமுக்கம் அதிகரித்தல்
02. சில வகைத் தொற்றுக்கள் உதாரணம் : மூளை அழற்சி
03. இராட்சதக் கல நாடியழற்சி (Giant cell arteritis)
04. மண்டையோட்டுக் குழியினுள் ஏற்படும் குருதிப்பெருக்கு
05. மூளைய முண்ணான் பாய் பொருளின் கனவளவில் ஏற்படும் குறைவு.
06. தலையில் அடிபடுதலின் பின்னரான தலைவலி
07. திடீரென ஏற்படும் கண்ணின் அமுக்க அதிகரிப்பு
08. மூளையில் ஏற்படும் கட்டிகள், சீழ்க்கட்டிகள்

மேற்கூறிய காரணிகளால் ஏற்படும் தலைவலிக்கு விசேட சிகிச்சைகள் அவசியமாகின்றன.

ஏனெனில் மேற்கூறிய காரணங்கள் பாரதூரமான விளைவுகளைத் தரவல்லன. ஏன்? சில உயிராபத்தையே விளைவிக்கக்கூடியன !

* புதிதாக, திடீரென்று தீவிரமான தலைவலி ஏற்பட்டால்.
* முன் எப்போதும் எதிர்நோக்காத/ உணராத,
* முற்றிலும் வேறுபட்டதான தீவிரமான தலைவலி ஏற்பட்டால்.
* தன்னுணர்வில் மாற்றம் ஏற்பட்டால் (Altered consciousness)
* தீவிர காய்ச்சல், வாந்தி இருப்பின்.
* அண்மையில் தலையில் அடிபட்டிருப்பின்
* ஒருபக்கம் வாதம் ஏற்பட்டு/உணர்வற்றிருப்பின்,
* காலையில் எழும் போதே தலையிடி இருப்பதுடன் இருமும் போதோ அல்லது தும்மும் போதோ தலைவலி அதிகரிப்பின்
* பார்வையில் மாற்றம் ஏற்படின் (குனியும் போது/வளையும் போது/ இருமும் போது )

உடனடி வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறான நோய் அறிகுறிகள் தலைவலிக்கான அடிப்படைக் காரணி உயிராபத்தை விளைவிக்கவல்ல நோய் நிலைமைகளால் ஏற்பட்டதென்பதை எடுத்தியம்புகின்றன.

01. ஒற்றைத் தலைவலி (Migraine)
02. வேலைப்பளு காரணமாக ஏற்படும் தலைவலி (Tension Headache)

தலைவலி நீடிக்கும் நேரம் 30-90 நிமிடங்களாக இருப்பினும் ஒரே நாளில் பல தடவைகள் ஏற்படலாம். நித்திரையில் கூட ஏற்படலாம்.

03. கிளஸ்ரர் தலைவலி (Cluster Headache)

என்பன சில ஆபத்தற்ற தலைவலி வகைகளாகும்.

பொதுவாக நாற்பது வயதுக்குட்பட்டவர்களிலே ஏற்படுகின்ற தலைவலி மற்றொரு வகையாகும். இது தீவிரமான தலைவலியை ஏற்படுத்தும். இடிப்பது போன்றஉணர்வு ஏற்படுத்தும் தலைவலியாகும். இதனுடன் சேர்ந்து வயிற்றுப்பிரட்டல், வாந்தி என்பன காணப்படலாம். இவ்வகைத் தலைவலி உடையோர் வழமையான வேலைகளில் ஈடுபடமுடியாது அவதியுறுவர்.

மன அழுத்தம், காலநிலை மாற்றம், நித்திரை குழம்புதல், சொக்லேட், சீஸ், மதுபானம், அதிக வெளிச்சம், அதிகரித்த ஒலி, அதிகரித்த அசைவுகள் போன்றன இவ்வகைத் தலைவலியைத் தூண்ட வல்லன. ஒற்றைத் தலைவலியால் அவதியுறுவோர் மேற்சொன்ன காரணிகளைத் தவிர்த்தல் உசிதமானது. சிலருக்கு மருந்துகள் மூலம் குணப்படுத்த வேண்டிய தேவை ஏற்படலாம்.


இருபக்கத் தலையிலும் உணரப்படுகின்ற மந்தமான ஒரு தலைவலியாகக் காணப்படும். சிலரில் பட்டியை இறுக்கியது போன்ற உணர்வு காணப்படும். சிலரில் கண்களுக்குப் பின்னால் அமுக்குவது போன்று காணப்படும். சிலர் தலையுச்சியில் அமுக்குவது போன்று உணர்வர். இவ்வகைத் தலைவலி சிலரில் மாதக் கணக்காகக் கூடக் காணப்படுவதுண்டு. இவ்வகைத் தலைவலி அதிக மன அழுத்தம், வேலைப்பளு உள்ளவர்களிலேயே பொதுவாக ஏற்படுகின்றது. இவர்களுக்கு தளர்வுப் பயிற்சிகள் பரிந்துரைக்கப்படுகின்றது. சிலருக்கு வலி நிவாரணிகள் தேவைப்படலாம்.

இருபதுக்கும், நாற்பதுக்குமிடையிலான வயதுடைய ஆண்களில் ஏற்படவல்ல 3 வகைத் தலைவலியாக இது காணப்படுகின்றது. மிகத் தீவிரமான தாங்க முடியாத தலைவலியாகக் காணப்படும். ஒரு பக்கத் தலைப்பகுதியிலேயே ஏற்படும். கண்ணின் பின்னாக உருவெடுக்கும். இத்தலைவலியுடன் கண்ணீர் சுரத்தல், மூக்கடைப்பு, கண் செந்நிறமாதல், தற்காலிகமாகக் கண்ணை இறுக்கி மூடமுடியாதிருத்தல் போன்றனவும் காணப்படலாம்.

தலைவலி நீடிக்கும் நேரம் 30-90 நிமிடங்களாக இருப்பினும், ஒரே நாளில் பல தடவைகள் ஏற்படலாம். நித்திரையில் கூட ஏற்படலாம். இவ்வகைத் தலைவலி பொதுவாக ஆண்டொன்றில் குறிப்பிட்ட காலத்துக்கே ஏற்படும்.

இவ்வகைத் தலைவலி உடையோருக்கு முற்காப்பு மருந்துகள் வழங்க முடிவதில்லையாயினும் தலைவலி ஏற்படும் சந்தர்ப்பத்தில் மருந்துகள் மூலம் தலைவலியை நிறுத்த முடிகின்றது. இவ்வகைத் தலைவலி உடையோரில் வலி நிவாரணிகள் பயனற்றவை ஆகின்றன.

Dr. தேவரஞ்சனா புவனேந்திரன்
*நீரிழிவு சிகிச்சை நிலையம்*
*போதனா வைத்தியசாலை*
*யாழ்ப்பாணம்.*



# உடல்நிறை குறைப்பு

## ஓர் இலகுவான கலை

பகுதி 10



சென்ற வாரத் தொடர்ச்சி..........

உடலால் பருத்து அதனால் உண்மையில் பலவீனப்பட்டு பல அந்நிய உணவுகளுக்கெல்லாம் அடிமைப்பட்டு எமது சுதேச ஆரோக்கிய உணவுகளிலிருந்து அந்நியப்பட்டு அடுக்கடுக்காய் பல நோய்களுக்கு ஆட்பட்டு நாம் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதன் காரணம் என்ன?

விளைநிலங்கள் எல்லாம் தரவைகளாய்க் கிடக்க, எமது உடம்பு மட்டும் விளைந்துபோய் வீட்டிலும் தோட்டத்திலும் உழைக்க மறந்து இயந்திரங்களில் ஏறி உடலுக்குதவுவதற்காய் வாங்கிய உடற்பயிற்சி இயந்திரங்கள் கூட சும்மா கிடக்க சோம்பேறி அடிமைகளாய் நாம் சும்மா இருப்பதே சுகம் என்று நினைக்கத் தொடங்கியதன் காரணம் என்ன?

நல்ல உடற்பயிற்சிகளாக அமையும் நடனம், நாட்டுக்கூத்து, மாவிடிப்பு, அம்மி அரைப்பு, சைக்கிள் சவாரி, உதைபந்து, கிட்டி, பொடிநடை, காவடி என எமது கலாசார மரபுகள் அருகிப்போய் எதற்கெல்லாமோ அடிமைகளாகிப் போய் எம்மை எதிர்நோக்கி நிற்கும் அபாயங்களை எல்லாம் மறந்து மகிழ்ந்திருக்கும் மனநிலை எப்படி வந்தது?

தொலைக்காட்சி நாடகம் - படம் பார்க்க, பத்திரிகை படிக்க, வெட்டிப் பேச்சுகள் பேச, சும்மா இருக்க, தூங்க, சாப்பிட, கணினி பார்க்க, கைத் தொலைபேசி பேச என எல்லாவற்றுக்கும் நேரமிருக்கும் போது எமக்கு உடற்பயிற்சி செய்ய மட்டும் நேரமில்லாமல் போவது ஏன்? கொஞ்சம் சாப்பிட்டாலும் நிறை தானாகக் கூடுவது ஏன்? திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டு, சத்துமா பேணிகளில்தான் சத்து என்று சத்தியமும் செய்துகொண்டு, நம் ஊர்க் கோழி முட்டைகளையும் உடன் பாலையும் ஆபத்தான உணவுகள் என அறிவித்துவிட்டு ஊதிப் போன உடம்பை குனிந்து பார்க்கவோ நிறுத்துப் பார்க்கவோ நேரமில்லாமல் அலைந்து திரியும் எம்மை தடுத்தாட்கொள்ளப் போவது யார்?

முயற்சிக்கும் ஊக்கத்துக்கும் பெயர் போனவர்கள், தியாகத்துக்குச் சிகரம் வைத்தவர்கள், சேமிப்புக்கும் கொடைக்கும் இலக்கணம் வகுத்தவர்கள், கல்வியில் கரை கண்டவர்கள் , நினைத்த இலக்கை அடையும் வரை உழைக்கும் நெஞ்சுரம் கொண்டவர்கள் உடல் பருத்து உயிர்விடுவதா?

நிறையைக் குறைப்போம் என்று உறுதி எடுப்போம். அதற்கான ஆர்வத்தை விதைத்து வளர்ப்போம். உடற்பரிமாணங்கள் பேணும் கலையைக் கற்றுத் தெளிவோம். இதை நடைமுறைப்படுத்த திடசங்கற்பம் எடுப்போம். இலகுவான வழிமுறைகள் மூலம் ஊக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் இந்த இலக்கை நோக்கி முன்னேறுவோம். மற்றவர்களையும் இந்த வழியில் செல்ல ஊக்குவிப்போம். உடற் பரிமாணங்களை பேணி வருபவர்களை பாராட்டி அவர்களின் வழிமுறைகளை நாமும் கற்றுக் கொள்வோம்.

வளர்ந்துவரும் சிறார்களின் மனதிலும் உடல்நிறை பராமரிப்பு சம்பந்தமான ஆர்வத்தைப் பதிக்க முயலுவோம். நிறைகூடிய எமது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஆலோசனை வழங்கி அவர்களையும் ஆரோக்கிய வாழ்வுக்கு மீட்டெடுப்போம்.

தற்பொழுது எம்மை எல்லாம் ஆட்டிப் படைத்துவரும் தொற்றா நோய்களான உயர்குருதி அமுக்கம், நீரிழிவு, கொலஸ்ரோல், புற்றுநோய், மாரடைப்பு, பாரிசவாதம், மூட்டு நோய்கள் போன்றவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக இருக்கும் உடல்நிறை அதிகரிப்பு என்ற மாபெரும் விருட்சத்தின் வேரறுக்க நாம் அனைவரும் கை கோர்ப்போம். (முன்பு பிரசுரிக்கப்பட்ட நிறை குறைப்பு சம்பந்தமான அனைத்துக் கட்டுரை களையும் (www.jaffnadiabeticcentre.org) என்ற இணையத்தளத்தில் பார்க்க முடியும்)

**சி.சிவன்சுதன்**
*மருத்துவ நிபுணர்*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தலைகீழாகி வரும் கோலங்கள்; தக்க வைப்பது எம்மவர் பொறுப்பே

வடக்கின் "நாட்டு நிலைமை", இங்கு வதியும் மக்களின் வாழ்வியல் நெறிகளை, நாளாந்த சமூக இயக்கத்தை, புதிது புதிதான தீங்கான நெறிகெட்ட நிலைக்கு, வேகவேகமாக இழுத்துச் செல்லும் போக்கு மலிந்து வருகிறது.

இறைபக்தி மேலோங்கி நிற்க வேண்டிய சிவராத்திரி நாளில் - வேளையில் - காடையர் கும்பல் ஒன்று, இணுவில் பிரதேசத்தின் பிரசித்தமான சிவன் கோயிலை அண்மித்து, கண் மூடித்தனமான வாள் வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது. ஆலயத்தை அண்டிய வீதியால் சென்ற மக்களை-பக்தர் களை-கேட்டுக் கேள்வி எதுவும் இன்றித் தாக்கியுள்ளது.

ஆபத்தில் மாட்டிக் கொள்ளாது தவிர்ப்பதற்காக தத்தம் வீடுகளுக்குள் முடங்கிக் கொண்ட மக்கள்-பக்தர்கள்-மீது கல் வீச்சும் நடத்தப்பட்டுள்ளது.

காயமுற்றவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்குப் பயப்பீதி காரணமாக எவரும் முன்வரவில்லை.

அதே நாளில் - சிவராத்திரி தினத்தன்று ஏழாலைப் பகுதியில் நட்டா முட்டிகளின் அட்டகாசத்தால்-வீதியால் சென்ற வாகனங்கள் மீது கல்லெறி நடத்தப்பட்டது. அவ்வேளை வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர் ஒருவர் காயமுற்றுள்ளார்.

மொத்தத்தில், மது போதைக்கு அடிமையாகுவதும், நட்டா முட்டித் தனத்தில் ஈடுபடுவதும் இன்று குடாநாட்டில் சாதாரண வழமைகள் என்றாகிவிட்டன.

அவை மட்டுன்றி, ஆள்கள் பார்த்திருக்கத் திருட்டுகளில் ஈடுபடுவது கிராமத்துக்குக் கிராமம் அதிகரித்து வருகிறது. ஏழாலையில் பெருந்தொகை பெறுமதியான நகைகள் திருட்டு. கோண்டாவில், அளவெட்டிப் பகுதிகளில் பட்டப் பகலில் திருட்டு. சுதுமலை, மூளாய் வீதி, யாழ்.நகர் ஆகிய இடங்களில் திட்டமிட்ட முறையில் பெரும் திருட்டுக்கள்- என்று திருட்டுச் சம்பவ வரிசைகள் நீள்கின்றன. பொலிஸ் அதிகாரிகள் உத்தியோக பூர்வமாக இவற்றை வெளியிட்டு வருகின்றனர். ஆனால் திருடர்களை இனங்கண்டு கைது செய்ய முடியாத நிலையே உயர்ந்து நிற்கிறது. பொலிஸாருக்கும் உதவக் கூடிய "ரிப்ஸை" கொடுக்க எவரும் முன்வருவதில்லை.

இவை ஒருபுறமிருக்க, மோசடிகளும், ஏமாற்றுச் சம்பவங்களும் குடாநாட்டின் மிகப்பல பிரதேசங்களிலும் தடுப்பார், தட்டிக் கேட்பார் இன்றி ஓங்கி வளர்ந்து வருகின்றன.

வட்டிக்குப் பணம் கொடுக்கும் குற்றத் தொழிலுக்கு மாற்றீடான நடைமுறை குடாநாட்டில் அதிகரித்து வருவதாகப் பொலிஸ் தகவல்கள் எச்சரிக்கின்றன. வட்டிக்குப் பணம் கொடுப்பதும் வாங்குவதும் சட்டவிரோதமானவை. அதனால் காசோலையைப் பெற்று வட்டிக்குப் பணம் வழங்கும் புதிய, மாற்று உபாயம், செயற்பாடு உச்ச நிலையை நோக்கி வளர்கிறது.

ஆனால், பாவம் வட்டிக்குப் பணம் கொடுத்து அதற்குப் பாதுகாப்புச் சாட்சியமாக காசோலையைப் பெற்றுக் கொள்வோர் பல சமயங்களில் தமது முதலும் போச்சு, வட்டியும் இல்லை என்ற பெரும் கையறு நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். காசோலை மோசடியாக மட்டுமே வழக்குத் தொடர இயலும் என்பது சட்டவிதி. கடந்த வாரத்தில் மட்டும் யாழ்.மாவட்டத்தில் 24 லட்சம் ரூபாவுக்கு காசோலை மோசடி நடைபெற்றிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வேறு கதி அற்ற நிலையில், குடாநாட்டில் மிகப் பலர் பொலிஸாரை நாடும் நிலை உருவாகி உள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

வன்முறைகளும், மோசடிகளும் பல்வேறு வகையறாக்களில் வடக்கில் பல்கிப் பெருகுவது, மாவட்டத்தின் பொருளியல் வளர்ச்சியில் பெரும் பின்னடைவை உண்டாக்கும், விளைவிக்கும்.

இதனை ஊன்றி உணர்ந்து எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது மேற்குறிப்பிடப்பட்ட வகை சார்ந்த பணப் பரிமாற்றங்களில் ஈடுபடுவோருக்கு மிக அவசியம்; அது அவர்களுக்குரிய ஒருவகைப் பொறுப்பும் ஆகும்.

கொள்ளை லாபம் பெறும் நோக்குடன் காசைக் கரியாக்காமல், அதனை தாழ்ந்து வீழ்ந்து போயுள்ள எங்கள் பொருளாதாரத்தை உயர்த்தி, போரினால் பாதிப்புற்றவர்களுக்குத் தேவைப்படும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு உதவ மனம் கொள்ள வேண்டும்.

தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன

-என்ற சங்கப் புலவர் கனியன் பூங்குன்றனாரின் அறிவு மொழி எமது மக்களுக்கு ஓர் எச்சரிக்கையாக அமைய வேண்டியவேளை-விவகாரம்-இது.

பாதிப்புற்றோரும், பாதிப்புறும் சாத்தியம் உள்ளோரும் இந்த நிலை குறித்து ஆழ்ந்து, உய்த்து உணர்வார்களாக.

# சுதந்திரமாகத் தொழில் புரியமுடியாமல் திண்டாடுகின்றனர் வடக்கு மீனவர்கள்

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் உதயனுக்குச் செவ்வி



நேர்கண்டவர்:-சோபனா

இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளின் பாவனை மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் வருகை என்பவற்றின் தாக்கங்களால் வடக்கு மீனவர்கள் வடபகுதிக் கடலிலே சுதந்திரமாக மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இந்தியா மற்றும் தென்னிலங்கை மீனவர்கள் வடக்குக் கடலுக்குள் உள்நுழைவது மட்டுமல்லாது, வடக்கின் கடல் வளத்தைப் பாதிக்கும் வகையில் மீன் பிடியில் ஈடுபடுகிறார்கள். இது வடக்கு மீனவர்கள் தற்போது எதிர் கொள்ளும் பெரிய பிரச்சினையாக உள்ளது என்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர் உதயனுக்கு தெரிவித்த கருத்துக்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

### தெற்கு மீனவர் ஊடுருவல்

தென்னிலங்கை மீனவர்களும் வடக்குக் கடல் பகுதிக்குள் தாராளமாக நுழைகிறார்கள். இலங்கையில் இருக்கும் சட்டத்தின் படி இலங்கை மீனவர்கள் தமது கடற்பரப்புக்குள் எங்கும் போகலாம் எங்கும் மீன் பிடிக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. இவற்றைக் காரணம் காட்டித் தென்னிலங்கை மீனவர்களும் வடக்குக் கடல் பகுதிக்குள் தாராளமாக மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள். அத்துடன் தென்னிலங்கை மீன வர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதா லேயே வடக்கு மீனவர்கள் பெரிதும் பாதிப்புற்று வருகின்றனர். ஆரம்பத்தில் பருவ காலத்தில் வந்து மீன் பிடித்தவர்கள் தற்போது சாதாரண காலத்திலும் வருகிறார்கள். தற்போது அதிகமான மீனவர்கள் சட்ட விரோத மீன்படி உபகரணங்களைப் பயன் படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள்.

### கடற்றொழில் அமைச்சின் பொறுப்பு

மீனவர்களின் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு கடற்றொழில் அமைச்சுக்கே உள்ளது. வடக்கில் உள்ள கடற்றொழில் திணைக்களமும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதையோ அல்லது தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன் படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதையோ துறை சார்ந்த அமைச்சே கவனிக்க வேண்டும். வடக்கு மீனவர்கள் இந்திய மீனவர்களையோ அல்லது தென்னிலங்கை மீனவர்களையோ தடுக்க முடியாது. இதற்கான பொறுப்பு கடற்றொழில் அமைச்சிடமே உள்ளது.

### மீனவர் பேச்சு பேச்சளவில்தான்

காலத்துக்குக் காலம் இந்திய-இலங்கை மீனவர்களுக்கிடையில் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இந்தப் பேச்சுக்களில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் அல்லது கோரிக்கைகள் வெறும் பேச்சளவில் மட்டுமே. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இரு நாட்டு அரசுகளும் முன்வரவில்லை. ஆனால் தற்போது இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இந்தக் கைது செய்யும் நடவடிக்கை புற்றுநோய்க்கு ஒரு பனடோலைக் கொடுப்பது போன்றது. பேச்சுகள் ஊடாக எடுக்கப்படும் தீர்மானங்களை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தினால் மீண்டும் இன்னொரு தடவை பேச்சுவார்த்தை தேவைப்படாது.

### பாதிக்கப்படுவது அப்பாவி மீனவர்களே

இருநாட்டு அரசுகளினுடைய பேச்சுக்கள் பொய்த்துப் போவதால் பாதிக்கப்படுவது அப்பாவி மீனவர்களே. இதற்குச் சரியான வழி கடல் எல்லைக்குள் வரவிடாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தான். எங்களுடைய கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் வரவிடாமல் தடுப்பது தான் சரியான வழி. ஆனால் அடுத்த பக்கம் மனித நேயப்படி பார்த்தால் இந்தியப் படகுகளில் இலங்கைக் கடல் பகுதிக்குள் வருகை தருவது சாதாரண மீனவர்கள் தான். அந்தப் படகுகளின் உரிமையாளர்கள் வேறு ஒருவராகத்தான் இருக்க முடியும். இந்திய-தமிழ் நாட்டு அரசுகள் மாற்று நடவடிக்கையாக இழுவைப் படகுகளைப் பாவிக்கவிடாமல் வேறு வகைப் படகுகளைப் பயன்படுத்த வைக்க வேண்டும். 1983 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தமிழ் நாட்டு அரசு தான் மீனவர்களுக்கு இந்த ரோலர் படகினை அறிமுகப்படுத்தி வைத்தது. ஆகவேஅந்தமுறையைமாற்றவேண்டும்.

### கிழக்கிலும் இதே நிலை

கிழக்கு மாகணத்திலும் இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் ஊடுருவுகின்றன. குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் இந்தப் பிரச்சினை உள்ளது. இதன் காரணமாக அங்கு பெரும் பகுதிக் கடல் வளம் அழிக்கப்பட்டு வருகிறது. உள்ளூர் மீனவர்கள் வருமானத்தில் பெரும் பாதிப்பைச் சந்தித்து வருகிறார்கள். அதேவேளை உள்ளூர் மீனவர்களும் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள்.

### இலங்கை மீனவர்ளின் முக்கிய பிரச்சினை

மண்ணெண்ணெய்க்கான மானியம் வழக்கப்படாதது மீனவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள் ளது. ஒரே இரவில் எண்ணெய் விலை அதிகரிக்கப்பட்டதுடன் தற்போது மானியம் வழங்கமாட்டோம் எனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் மீன்பிடி உபகரணங்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. படகு. இயந்திரம் போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. அதனால் மீனவர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு- கிழக்கைப் பொறுத்தவரையில் போர்ப் பாதிப்புக்கள் அதிகம் உள்ளன. ஆனால் பாதிப்புற்றுள்ள மீனவர்களுக்கு உப கரணங்கள் வழங்கப்படவில்லை. ஆரம்பத்தில் சொந்தப் படகுகள் வைத்திருந்தவர்கள் இப்போது கூலிகளாக வேலை செய்கிறார்கள்.

மாற்றுத்தொழிலுக்கு மாற வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர். கடற்றொழிலாளர்கள் இப்போது அதிகம் கூலி வேலை தான் செய்து வருகிறார்கள் மீனவத் தொழிலுக்குத் தேவையான வளங்கள் சரிவரக் கிடைக்காமை இதற்கு ஒரு காரணமாக இருப்பதுடன் வருமானம் போதாத காரணத்தால் மாற்றுத் தொழிலை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத் துக்கும் அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

### மீனவர்களுக்கான இடைத் தரகர்கள்

மீன்களைச் சந்தைப்படுத்தும் வாய்ப்பின்போது இந்த இடைத்தரகர்களுடைய தலையீடுகள் அதிகமாக இருப்பதால் நியாயமான விலைக்கு மீனவர்கள் மீனை விற்பனை செய்ய முடிவதில்லை. இடைத்தரகர்களே இதற்குக் காரணம். சரியான சந்தை வாய்ப்பு இல்லை. மீனவர்கள் எவ்வளவு தான் கஷ்டப்பட்டு மீன்பிடித்தாலும் குறைந்த விலையிலேயே மீனை விற்பனை செய் கிறார்கள்.

காலத்துக்கு காலம் இந்திய–இலங்கை மீனவர்களுக்கிடையில் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இந்தப் பேச்சுக்களில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் அல் லது கோரிக் கைகள் வெறும் பேச்ச ளவில் மட்டுமே. அவற்றை நடை முறைப்படுத் துவதற்கு இரு நாட்டு அரசுகளும் முன்வரவில்லை. ஆனால் தற்போது இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இந்தக் கைது செய்யும் நடவடிக்கை புற்று நோய்க்கு ஒரு பனடோலைக் கொடுப்பது போன் றது. பேச்சுக்கள் ஊடாக எடுக்கப்ப டும் தீர் மானங் களை உரிய காலத் தில் நடை முறைப் படுத்தினால் மீண்டும் இன்னொரு தடவை பேச்சுவார்த்தை தேவைப்படாது.

### மீனவர்களின் அமைப்புகளிடையே முரண்பாடுகள்

கடந்த காலங்களில் மீனவர் சார்ந்த பிரச்சினைகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் முன் மாதிரியாகச் செயற்பட்டு வந்தன. தற்போது கிராமிய அமைப்புக்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் தென்னிலங்கை மீனவர்களும் வடக்குக்கு வரவேண்டிய நிலை கொண்டுவரப்பட்டுள்ளது. மீனவர்களுக்குக் கடந்த காலங்களில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நல்லதொரு பலமாக இருந்தது. அதைப் பின்தள்ளுவதற்கே கிராமிய அமைப்புக்கள் கொண்டு வரப்பட்டன. வடக்கில் இது வேறு நோக்கத்துக்காகக் கொண்டு வரப்பட்டுள்ளது. கிராமிய மீனவர் அமைப்புக்கள் அவசியம் இல்லை. மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முற்படும்போது இவை மீனவர்களைத் தூண்டி விடுவதாக அரசு நினைக்கிறது. அப்பாவி மீனவர்களை நாங்கள் தூண்டிவிட்டுப் பிரச்சினைகளைக் கிளப்பி விடுகிறோம் என்று சொல்லி வருகிறது. ஆனால் மீனவர்களுக்கு தேவையான வழிகாட்டல் அறிவுறுத்தல்களையே நாங்கள் வழங்கி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## "ரென்சிங் நோர்வே" என்னும் கலைக் குழு இலங்கையில்

ரென்சிங் நோர்வே என்பது இளைஞர், யுவதிகளை புத்துருவாக்க செயல்களில் ஈடுபடுத்துகின்ற ஒரு சர்வதேச ரீதியான இளைஞர்களுக்கான நிகழ்ச்சி. ரென்சிங் 1968ஆம் ஆண்டு நோர்வேயில் ஸ்தாபிக்கபட்டது. பாடசாலை செயற்பாடுகளின் பின் இளைஞர்களுக்கான ஒரு மாற்றுத் தெரிவை அமைத்துக் கொடுப்பதே ரென்சிங் உருவாக்கத்தின் நோக்கம் ஆகும். 13-19ற்கு இடைப்பட்ட வயதுடைய இளைஞர்களுக்காக வை.எம்.சி.ஏ மற்றும் வை.டபிள்யு.சி.ஏ அமைப்புக்கள் ஒருங்கே இணைந்து இச் செயற்பாட்டை ஏற்பாடு செய்து வழங்குகின்றன.

ரென் சிங் நோர்வே என்பது நோர்வேயைச் சேர்ந்த வை.எம்.சி.ஏ மற்றும் வை.டபிள்யு.சி.ஏ அமைப்புக்களில் பரந்து காணப்படும் ஒரு தலைமைத்துவ நிகழ்ச்சி ஆகும். அங்கத்துவ வை.எம்.சி.ஏக்களில் அனுபவம் வாய்ந்த 19-21 வயது நிரம்பிய அங்கத்தவர்களை உலகளாவிய ரீதியில் ஒன்றிணைத்து, ஏறத்தாழ 20 இளம் அங்கத்தவர்களைக் கொண்டதாக இக் குழு வருவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் இசை, நடனம், பாடல், நாடகம், ஊடகம் மற்றும் வேறு புத்துருவாக்க வெளிப்பாடுகளை உள்ளடக்கியதான ஒரு நிகழ்ச்சியை ரென்சிங் நோர்வே நடத்தி வருகின்றது. இக் குழு நோர்வே மற்றும் வெளி நாடுகளுக்கு பயணம் செய்து இந் நிகழ்ச்சிகளையும், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளையும் அரங்கேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர்களின் இலக்குகளில் ஒன்றாக, இளைஞர்களை சமூகத்திற்கு சாதகமான ஒத்துழைப்பை வழங்குபவர்களாக மாற்றி, அதன்மூலம்; சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வண்ணம் அவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடு காணப்படுகின்றது. இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள், ஆகவே

இதனூடாக இளைஞர்கள் இடையே அனுபவம் வாய்ந்த தலைமைத்துவத்தை உருவாக்கி, ஒருங்கே அவர்களை தாமாவே தமது ஆற்றல்களை அர்த்தமுள்ள வகையில் வெளிப்படுத்தச் செய்யும் நடவடிக்கைகளில் இளைஞர்களை ஈடுபடுத்த முயற்சிக்கின்றனர்.

இலங்கை இளைஞர் கிறிஸ்தவ சங்கங்களின் தேசிய சபையே ரென் சிங் நோர்வே நிகழ்வை நடத்துகின்றது. இலங்கையில் 20,000க்கு மேற்பட்ட அங்கத்தவர்களை கொண்ட 38 அங்கத்துவ வை.எம்.சி.ஏக்கள் உள்ளன. வை.எம்.சி.ஏ 130 வருடங்கள் பழமைவாய்ந்ததோடு, இதன் தேசிய சபை 50 வருடங்களாக செயற்பட்டு வருகின்றது. இது சமூக அபிவிருத்தி மற்றும் சமூக நலனில் அக்கறை கொண்ட ஒரு நன்கு புகழ்பெற்ற தொண்டர் அமைப்பாக இலங்கையில் திகழ்கின்றது. இந்த இலங்கை இளைஞர் கிறிஸ்தவ சங்கமானது இன்றைய இளைஞர்களேநாளைய தலைவர்கள் என்ற கூற்றுக்கு இணங்க சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு இடையே தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதோடு அவர்களுக்கு பயன்மிக்க நிகழ்சிகளை ஒழுங்கு செய்வதற்கு முன்னுரிமை வழங்கி நிற்கின்றது.

இலங்கையில் ரென் சிங் நிகழ்ச்சியை புனருத்தாரணம் செய்யும் நிகழ்ச்சியின் முதற்கட்ட நடவடிக்கையாக ரென் சிங் நோர்வே குழு இலங்கைக்கு வந்துள்ளது. அத்துடன் இம்மாதம் 21 ஆம் திகதி வரை இது தொடர்பான பல்வேறுபட்ட கலைநிகழ்ச்சிகளையும், பயிற்சிப்பட்டறைகளை யும் நடாத்த உள்ளது. (த)

## சைபர் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த கைகோர்த்துள்ள மைக்ரோசொவ்ட் ஸ்ரீலங்கா

உலகையே உலுக்கும் 'சைபர்' (Cyber) குற்றச் செயலானது இலங்கையிலும் துரிதமான அளவில் அதிகரித்து வருகிறது, கணினி மற்றும் இணையத்தள சேவைகளின் ஊடாக தனிப்பட்ட, வணிக, வர்த்தக மற்றும் நிதி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படுகின்றன, இருந்த போதிலும் இவ்வாறான செயற்பாடுகளினால் 'சைபர்' குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கான அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக *Genuine & Legal Software* பாவனைக்கான தேவை அதிகரித்துள்ளது. தென்கிழக்கு ஆசியாவை மையமாகக் கொண்டு 'கணினி பாதுகாப்பு ஆய்வு என்ற செயற்திட்டமொன்றை 2013இல் மைக்ரோசொவ்ட் அறிமுகம் செய்தது. இதன் ஊடாக மூன்றில் இரண்டு முத்திரை *(Branded)* பதிக்கப்பட்ட புதிய கனிணிகளுக்கு திருட்டு மென் பொருளை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய விளைவுகள் மற்றும் *Virus, Malware* போன்றவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களும் சுட்டிக் காட்டப்பட்டது. *Genuine & Legal Software Cyber* குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும் என்பதும் பாவனையாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் சட்ட இயக்குநர் ஜயந்த பெர்னாண்டோ கூறுகையில், தகவல் மற்றும் இணையத்தள வளர்ச்சியினால்' (Cyber) அச்சுறுத்தல்கள் மற்றும் Cyber குற்றச் செயல்கள் அதிகரித்து அது ஒரு எதிர் மறையான தாக்கத்தை தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்படுத்தியுள்ளது. அரசு இந்தப் பிரச்சினையைக் கட்டுப்படுத்த கணினி குற்றவியல் சட்ட இலக்கம் 24/2007ஐ அமுல்படுத்தி அதன் அடிப்படையில் இந்தப் பிரச்சினையைக் கட்டுப் படுத்த முயற்சி செய்தது. இந்த Cyber குற்றச் செயல்களைக் குறைப்பதற்கு தேசிய அளவில் இலங்கையில்




*CERT* மையமொன்றை நிறுவியது. இந்த மையத்தின் ஊடாக அரச துறைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். மேலும் எமது நிறுவன மான *ICTA* அரசின் கொள்கையான (2009) தகவல் பாதுகாப்பு கொள்கைக்கு அமைய அரச துறைகளில் தகவல் பாதுகாப்பு தொடர்பாக எவ்வாறான சவால் கள் அடங்கியுள்ளன என்பது குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தகவல் பாதுகாப்பு சிறந்த நடைமுறை திட்டத்தின் வாயிலாக *Genuine & Legal Software* பயன்படுத்துவதனால் இந்தப் பிரச்சினைகளை குறைக்கலாம். *Genuine & Legal Software* முக்கியமான அடித்தளமாக அமைவதுடன், பாவனையாளர்களுக் கும் வணிகர்களுக்கும் கூட இது முக்கியமானதாகும்- என்றார். (த)


## கே.ஐ.ஏ மோட்டர்ஸ் லங்காவுடன் மொபில் லுப்ரிகன்ட்ஸ் இணைவு

இலங்கையில் காணப்படும் முன்னணி மசகு எண்ணெய் நிறுவனமான மொபில் லுப்ரிகன்ட்ஸ் பிரைவேற் லிமிடெட், உலகப்புகழ் பெற்ற மோட்டார் வாகனங்களை இலங்கையில் விநியோகிக்கும் கே.ஐ.ஏ மோட்டர்ஸ் லங்கா உடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் அடிப்படையில், மொபில் மசகு எண்ணெய் வகைகள், அனைத்து விதமான கே.ஐ.ஏ டீசல் வாகனங்களிலும் இலங்கையில் KIA மூலமாக வழங்கப்படும் பராமரிப்பு சேவைகளின் போது வழங்கப்படவுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில், மொபில் லுப்ரிகன்ட்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் டிலான் செனவிரட்ன மற்றும் கே.ஐ.ஏ மோட்டர்ஸ் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அன்ட்ரிவ் பெரேரா ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர்.

'கார் பிளான்' நிறுவனத்துடன் இணைந்து 1996ஆம் ஆண்டு முதல் 17 வருடங்களாக இலங்கையில் கே.ஐ.ஏ வாகனங்களுக்கு சிறந்த சேவைகளை KIA மோட்டர்ஸ் வழங்கி வருகிறது.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதை தொடர்ந்து KIA மோட்டர்ஸ் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அன்ட்ரிவ் பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், 'கே.ஐ.ஏ மோட்டர்ஸ் என்பது மொபில் லுப்ரிகன்ட்ஸ் உடன் இணைந்து பல [illegible] மூலம்




சிறந்த உறவு மற்றும் பங்காண்மை ஆகியன இரு வர்த்தக நாமங்களிடையேயும் காணப்படுகிறது. இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதன் மூலம் இரு நிறுவனங்களுக்குமிடையிலான புரிந்துணர்வு மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. எமது வாடிக் கையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த விற்பனைக்குப் பிந்திய சேவைகளை வழங்க வழிகோலியுள்ளது' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**எஸ்.ஆர். ஜெயப்பிரகாசம்**
(ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி- பிரதேச செயலகம் வலி தெற்கு உடுவில்)



மறைவு
06★03★2011

இந்த மண்ணில் எம்மை உயர்ந்த வாழ்வு வாழ வைத்த
எம் அருமை அப்பா
ஏன் எங்களை விட்டு இவ்வளவு விரைவில் பிரிந்து சென்றீர்கள்
வழிகாட்ட நீங்கள் இல்லையே என்று தினமும்
ஏங்கித் தவிக்கின்றோம்
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவு எங்களுக்குள் நிலைத்து நிற்கும்.

தெகிவளை, கொழும்பு. (43926)(3.6.4)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## சனசமூக நிலைய போசகரின் உருவப் படம் திரை நீக்கம்

சுழிபுரம், மார்ச் 2
தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தினர் நிலைய போசகராக விளங்கி அமரத்துவம் அடைந்த அமரர் சிவஸ்ரீ சு.சுந்த ராஜக் குருக்க ளின் உருவப் படத்தை நிலைய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திரைநீக்கம் செய்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடத்தினர். நிகழ்வு நிலையத் தலைவர் தி.உதய சூரியன் தலைமையில் நடைபெற்றது. (வ-28)

## தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,மார்ச் 2
தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் பல்வேறு பயிற்சிநெறிகள் நல்லூர் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இலவச மாக நடத்தப்படவுள்ளன. ஆர்வமுள்ளோர் தமது சுயவிவரக்கோவை, சான்றிதழ்கள் மற்றும் பங்கீட்டு அட்டையுடன் எதிர்வரும் 6ஆம் திக திக்கு முன்னர் திருநெல்வேலியி லுள்ள விதாதா வள நிலையத்துக்கு நேரில் சென்று பதிவை மேற்கொள்ளலாம். (வ)

## அனுமதியின்றி மணல் ஏற்றி வந்த மூவருக்கு தலா ரூ. 45,000 தண்டம்

***சாவகச்சேரி நீதிமன்றத்தால்***

தென்மராட்சி, மார்ச் 2
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகனச்சாரதிகள் மூவருக்கு தலா 45 ஆயிரம் ரூபா வீதம் சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த போது இவர்கள் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

சாரதிகள் மூவருக்கும் எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்குகள் நேற்றுமுன்தினம் வெள் ளிக்கிழமை தனித்தனியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன.

எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து மூவருக்கும் தலா 45 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன் வாக னத்தில் ஏற்றி வந்த மணலை பறிமுதல் செய்யுமாறும் நீதி வான் உத்தரவிட் டார். (ஓ-9)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்**
(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதிவான்)



தோற்றம்
18.02.1942

மறைவு
06.03.2011

இல்லத்தின் விருட்சமாய் பாச நிழல் தந்தையாய்
இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காத எந்தையே!
உமை நினைத்தே வாழ்கின்றோம்-நாம்
உய்ய வழிகள் காட்டிடுவீர் விண்ணில் இருந்தே

132, திருமகள் வீதி, அரியாலை. (45129)(3.6.4)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,உறவினர்கள்



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா பொன்னுத்துரை**

தோற்றம் 19.08.1943
மறைவு 12.03.2013
திதி: பூர்வபக்க பிரதமை
02.03.2014

ஆண்டொன்று ஆனதையா
ஆறவில்லை உம் நினைவு
நீங்கள் இல்லா எம் வாழ்வு
நீர்க்குமிழி ஆனதையா
வாடுகின்றோம் உமை நினைத்து
வாராயோ எமை எண்ணி எம்மிடத்தில்


உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
021 226 2146

வீரப்பதிராயன், கரணவாய் தெற்கு. கரவெட்டி.
(33388)(2.6.3)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
**கந்தையா ரவீந்திரராசா**
(செல்வம்)



அன்னையின் அன்பில்
01★01★1961

இறைவனின் அணைப்பில்
01★02★2014

எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், சகல தொடர்புகள் மூலமும் கலந்து கொண்ட அனைவருக்கும், எங்கள் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (03.03.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடை பெறவுள்ளதால் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதிறோட், மொட்டைப்புளியடி, உடுப்பிட்டி
T.P:077 389 8758 (45140)(3.6.4)
மனைவி-விஜயா குடும்பத்தினர்.



## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் செல்லத்துரை செல்வேந்திரன்**

தோற்றம் 02 . 10 . 1944



மறைவு 14 . 02 . 2010

திதி: வளர்பிறை பிரதமை

அன்புடனே அறிவூட்டி அயரா உழைப்பாலே
எம் வாழ்விற்கு வளம்கூட்டி
நலமோடு நாம் வாழ நல்வழி காட்டிய
எமது அன்புத் தந்தையே!
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழும்
எம் நெஞ்சில் எப்போதும்
அணையாத தீபமாக ஒளிர்ந்து நின்று
எமக்கெல்லாம் சிறப்புடன் வாழ வழிகாட்டுவீர்கள்.

K.K.S. வீதி, ஆஸ்பத்திரியடி, இணுவில் மேற்கு. (45121)(12.3.6)
குடும்பத்தினர்.



## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி **அருந்தவம் செல்வரட்ணம்**



பிறப்பு 1958.09.09
இறப்பு 2012.02.22

ஆண்டுகள் இரண்டும் வந்ததம்மா!
நீங்கள் இல்லாத "அருந்தவ இல்லம்"
வெறிச்சோடிக் கிடக்குதம்மா!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்த போது
எம்மையே நாம் இழந்து நின்றோமம்மா!!
கொடிய நோயிடமிருந்து மீட்டெடுக்க
நாம் காத்து நின்றோமம்மா!
ஆனால் கொடிய காலனவன் உன்னை
மீட்டெடுத்து விட்டானம்மா!!
ஆசைக் கனவுகளுடன்
இறைவனடி சேர்ந்தாயம்மா!!
ஈசனவன் உனைக் காப்பானம்மா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



என்றும் நீங்காத நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.
மாரியம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(45186) (12.3.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலி போட்டு அடைத்ததும் இடம்மாறினர் 'பெருங்குடிகள்'

## இவர்களின் கொட்டத்தை அடக்குவது யார்?

யாழ்ப்பாணம்,மார்ச் 2
சாவக்சேரி டச்சு வீதியில் உள்ள கண்டுவில் குளத்துக்குச் செல்லும் பாதை முட்கம்பி வேலி போட்டு அடைக்கப்பட்டதால் குளத்துக் கட்டிலிருந்து பொழுதுபோக்கிய 'பெருங்குடிமக்கள்' கண்டுவில் மேற்கு ஒழுங்கையில் உள்ள தோட்டங்களுக்குச் செல்லும் பூவரசுப் பற்றை மறைவிலும், டச்சு வீதி ஐங்கரன் மணி மண்டபத்துக்கு முன்னால் உள்ள வெற்றுக் காணிக்குள்ளும் தமது நாளாந்தக் 'கடமை'யை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆசாமிகள் வீதியில் செல்லும் பாடசாலை மாணவிகள், இளம் யுவதிகள் மீது கல் வீசுவது, தகாத வார்த்தைகளால் ஏசுவது போன்ற இழி செயல்களைப் புரிகின்றனர்.

இவர்களின் அட்டகாசங்களைத் தாங்க முடியாத அயல் வீட்டுக்காரர்களும் வீதியில் செல்வோரும் அந்தப் பகுதி கிராம அலுவலரிடம் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லையெனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி நகர்ப் பகுதி கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டபோது : உரிய காணி உரிமையாளர்களை காணிகளை முட்கம்பிகளினால் அடைக்குமாறு பல தடவைகள் கூறியுள்ளதாகவும், இதுவரை அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (ஓ)





அரச அதிபர் உரையாற்றுவதையும் யு.என்.எச்.சி.ஆர் முகாமையாளர் பாடசாலை அதிபரிடம் மின்பிறப்பாக்கியை கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# புதுக்குடியிருப்பில் பாடசாலை திறப்பு


புதுக்குடியிருப்பு, மார்ச் 2
புதுக்குடியிருப்பிலுள்ள மந்துவில் இரத்தின வித்தியாலயம் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகனால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் செ.செல்வநாயகம் தலைமையில் புதன்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது. பாடசாலையின் கட்டடம் ஏழு பில்லியன் ரூபா நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதியுதவியை யூ.என்.எச்.சீ.ஆர். நிறுவனம் வழங்க, கட்டடம் அமைப்பதற்கான அனுசரணையை சேவாலங்கா நிறுவனம் வழங்கியிருந்தது.

இந்தப் பாடசாலையின் மின்சாரத் தேவைகளைக் கருத்தில் கொண்டு மின்பிறப்பாக்கி ஒன்றை யூ.என்.எச்.சீ.ஆர். திட்ட முகாமையாளர் திருமதி விக்ரோறியா ரலிஸ்க்கோ பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி, சேவாலங்கா திட்டமுகாமையாளர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், வட மாகாணசபை உறுப்பினர்களான திருமதி மேரி கமலா குணசீலன், வீ.கனகசுந்தரசுவாமி ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-435-55)

# நிரந்தர வீடுகள் இன்றி இத்திமடு மக்கள் அவலம்



தற்காலிக வீடுகளில் வாழும் அவலநிலை

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பெரிய இத்திமடு கிராமத்தில் உள்ள அநேக குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை என அந்தக் கிராம மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

பெரிய இத்திமடு கிராமத்தில் 65 குடும்பங்கள் உள்ள போதிலும் ஐந்து குடும்பங்களுக்கு மட்டுமே நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் நாளாந்தக் கூலி வேலையில் ஈடுபட்டு தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இந்தக் குடும்பங்கள் மீளக்குடியமர்வு செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் இவர்களுக்கான அடிப்படை வசதிகளும் நிரந்தர வீடுகளும் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசு ஆகியவற்றால் வழங்கப்படவில்லை.

எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொண்டு தமது பிரச்சினைக்குத் தீர்வை வழங்குமாறும்இங்குள்ளமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (க-435)




மகிழ்ச்சியான குடும்பத்திற்கு
உத்தரவாதத்துடன்
HAPPY
WATER PUMP
GENERAL EQUIPMENTS (PVT) LTD
316 & 400, ஸ்ரீ சிங்கராஜ மாவத்தை, கொழும்பு 12
Tel: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799 Fax : 2434637

ரோலிங் செட்டர்
Rolling Shutters
Slotted Angles


25 வருடகால சேவை அனுபவம்
உறுதியான நம்பிக்கையான ரோலிங் செட்டர்களுக்கு உடனடியாக தொடர்பு கொள்ளவும்
NAFIS INDUSTRIES ( PVT ) LTD
075 5279488 ,0777721552,0212240221,0114999952
Email: nafis@sltnet.lk www:nafisindustries.com

IELTS™
Win university scholarships worth Rs.500,000

We are pleased to introduce the British Council University Scholarship programme. This programme provides the opportunity for two of our IELTS candidates to win scholarships worth Rs.500,000 each to pursue their higher education in any country outside of Sri Lanka.

The scholarship is open to candidates taking the IELTS test with the British Council between 1 January and 31 March 2014. For further details, terms and conditions and to download the application form, please visit **www.britishcouncil.lk**

BRITISH COUNCIL
IELTS is jointly owned by British Council, IDP: IELTS Australia and Cambridge English Language Assessment.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயுடன் மோதி இளைஞர் காயம்

வலி.வடக்கு, மார்ச் 2

குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தூக்கி எறியப்பட்டு படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இளைஞர் ஒருவர் புதன்கிழமை நண்பகல் சேர்க்கப்பட்டார்.

தெல்லிப்பழை துர்க்காபுரத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் சயந்தன் (வயது-22) என்பவரே படுகாயத்துடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளவராவார். (வ-86)

## பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய 956 மாணவருக்கு கற்றல் சாதனங்கள்

### யாழ்.வர்த்தகர் சங்கம் வழங்கவுள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாண வர்த்தகர்களின் நன்கொடையில் யாழ்.மாவட்டத்தில் பாடசாலையில் இருந்து இடைவிலகியுள்ள 956 பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் பாடசாலையில் இணைவதற்கு உதவியாக நாளை மறுதினம் 4 ஆம் திகதி பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாண வர்த்தகர்களினது நன்கொடையில் கடந்த வருடம் தொடக்கம் குடும்பப் பொருளாதாரமின்மை மற்றும் தாய் தந்தையை இழந்த பிள்ளைகள், பாடசாலைகளுக்கு செல்ல முடியாது இடை விலகியுள்ள மாணவர்கள் ஆகியோரைமீண்டும்பாடசாலையில் இணைக்கும் நோக்குடன் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 490 மாணவர்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 525 மாணவர்களுக்கும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட 956 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் மீண்டும் வழங்கப்படவுள்ளன. 15 பிரதேச செயலகங்களையும் சேர்ந்த ஆரம்பப்பிரிவில் 298 மாணவர்களுக்கும் ,கீழ்ப்பிரிவில் 329 மாணவர்களுக் கும், மத்திய பிரிவில் 261 மாணவர்களுக்கும், மேற்பிரிவில் 68 மாணவர்களுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்பட வுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வைத்து குறித்த உபகரணங்கள் வழங்கப்படும் -என்றார். (வ-14)

## மழைநீரால் பாதிக்கப்படும் மாணவர்கள்

மழையின் போது பாடசாலைக் கட்டடத்தின் கூரை வழியாக மழை நீர் சிந்துவதால் அக்கராயன் மகா வித்தியாலய மாணவர்கள் சிரமங் களை எதிர்கொள்வதாகப் பெற்றோர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். அண்மையில் இங்கு வருகை தந்த வடமாகாண கல்வி அமைச்ச ரிடம் இந்த முறைப்பாடு தெரிவிக் கப்பட்டது.

சுமார் 800 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். இந்தப் பாடசாலையில் போரால் ஏற்பட்ட பாதிப்புக் களும் காணப்படுகின்றன. மேலும் 40 ஆண்டுகளுக்கும் மேலாக பாடசாலைக் கட்டடங்கள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் மழை காலங்களில் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. (க-18)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி சந்தை வியாபாரிகளுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குக

## மனித உரிமை ஆணைக்குழு நல்லூர்ப் பிரதேச சபையிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம். மார்ச் 2
திருநெல்வேலி பொதுச் சந்தையில் நல்லூர் பிரதேச சபை வருமான வரிப்பரிசோதகர் உட்பட்ட குழுவினர். வியாபாரிகள் விற்பனைக்கு வைத்திருந்த உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் என்ப வற்றை அள்ளிச் சென்றதால் வியாபாரிகளுக்கு ஏற்பட்ட நட்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு பிரதேச சபையிடம் கோரியுள்ளது.

தவிர வருமானவரிப் பரிசோதகர் முன்னறிவித்த லின்றி குறித்த பொருள்களை அள்ளிச் சென்றதோடு. அவை பற்றிய விவரங்கள் எதனையும் வழங்காதது ஏதேச்சதி காரமான செயற்பாடாகவே உள்ளது. எனவே வருமான வரிப் பரிசோதகர் முறையான நடவடிக்கைகளைப் பின்பற்றவில்லை என்பது புலனாவதுடன் பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் நடந்துள்ளதால் அவரது செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரை ஆணைக் குழு கோரியுள்ளது.

நல்லூர் பிரதேச சபையினருடன் வியாபாரிகளால் 2010 ஆம் ஆண்டு குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந் நிலையில் முன்னறிவித்த லின்றி வருமான வரிப்பரிசோதகர் பிறேம்குமார் உட்பட்ட குழுவினரால் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. வெற்றிலை, பாக்கு, பழவகைகள் மற்றும் உணவுப் பொருள்கள் என்பவற்றை விற்கக்கூடாது என்றும், உருளைக்கிழங்கு மற்றும் சிறிய மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றை விற்பனை செய்யக்கூடாது என்பது குறித்து எதுவும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் வியாபாரிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விசாரணையில் தெரிவித்துள்ளனர். இதற்காக நல்லூர் பிரதேச சபைத் தரப்பினரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

விசாரணை முடிவில் ஒப்பந்தத்தில் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் என்பன விற்பனை செய்யக்கூடாது என்பது குறித்து எதுவும் கூறப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பில் பிரதேச சபையின் தீர்மானம் ஒன்று உள்ளதாக கடந்த 18 ஆம் திகதி இடம் பெற்ற இந்த விசாரணையில் வருமான வரிப் பரிசோதகரால் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதனைச் சமர்ப்பிக்குமாறு ஆணைக் குழு கோரியிருந்தது. அதன் படி வருமான வரிப் பரிசோதகர் அதைச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்துவிட்டுச் சென்றார். மறுநாள் வந்து அவ்வாறான ஒரு தீர்மானம் சபையில் இல்லை என்றும் தவறுதலாக அவ்வாறு கூறியதாகவும் ஆணைக்குழுவுக்குத் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 119 சந்தையை ஒழுங்குபடுத்தும் விடயங்களுக்கே சபைக்கு அதிகாரம் அளிப்பதுடன் அதன் தவிசாளருக்கோ அல்லது செயலாளருக்கோ அல்ல. சபைத் தீர்மானம் ஒன்று இல்லாத நிலையில் - ஒப்பந்தத்தில் இல்லாத ஒரு விடயம் தொடர்பில் செயற்படும்படி பிரதேச சபை கூறியது அடிப்படை உரிமை மீறல்.

எனவே வியாபாரிகளுக்கான நட்டஈட்டை வழங்க நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை எடுப்பதுடன் சில்லறை மற்றும் மொத்த வியாபாரம் தொடர்பில் வியாபார நடவடிக்கைப் பட்டியலும் வியாபாரிகளுடனான ஒப்பந்தத்தில் எதிர் காலத்தில் கருத்தில் கொள்ளப்படவேண்டும்என்றும்ஆணைக் குழு கோரியுள்ளது.

இது இவ்வாறிருக்க 'தமது சபையின் அனுமதியின்றி உருளைக்கிழங்கு சின்ன மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றை சில்லறையாக விற்பனை செய்வதன் மூலம் சந்தை ஒழுங்கைச் சீர் குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது என்றும் இது தொடர்ந்தால் வியாபாரப் பொருள்களை அகற்ற வேண்டிவரும்' என்றும் ஆணைக்குழுவில்விசாரணை நடந்த அதே திகதிய கடிதம் மூலமாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளரால் குறித்த வியாபாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர 400 ரூபா பணம் செலுத்திவிட்டு தாம் அள்ளிச் சென்ற பொருள்களை வந்து எடுத்துச் செல்லுமாறு சபையினர் வியாபாரிகளிடம் கோரியுள்ளனர் என்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். அதனால் அந்த செயற்பாடு தொடர்பில் வியாபாரிகள் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஊடாக சபையின் முன்பின் முரணான செயற்பாடு தொடர்பில் பதிலை எதிர்பார்த்துக் கடந்த 20 ஆம் திகதி கடிதம் அனுப்பியுள்ளனர். உரிய தீர்வு கிடைக்கத் தவறும் பட்சத்தில் நீதிமன்றை நாடவேண்டி வரும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். (வ-4)

### யாழ்.மாநகர சபைக்கு புதிய தீயணைப்பு வாகனம்

யாழ்ப்பாணம் மார்ச் 2
ஜப்பான் நாடடின் புதிய நவீன தீயணைப்பு வாகனம் ஒன்று யாழ்.மாநகர சபைக்கு கிடைத்துள்ளது.

கொழும்புக்கு வந்து சேர்ந்துள்ள இந்தத் தீயணைப்பு வாகனத்தை உள்ளூராட்சி அமைச்சு யாழ்.மாநகரசபைக்கு வழங்கியுள்ளது.

இந்த வாகனம் ஓரிரு வாரங்களில் இங்கு வந்து சேர்ந்து விடும் என்று யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார். (ஓ-7)

### தென்மராட்சியில் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடல்

தென்மராட்சி. மார்ச் 2
தென்மராட்சி பிரதேச வர்த்தக வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவை. நிறுவை உபகரணங்களுக்கு 2014 ஆம் ஆண்டுக்கான முத்திரையிடும்பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 10,11,13 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி நகர சபை அலுவலகங்களிலும், எதிர்வரும் 17,18,19 ஆகிய தினங்களில் கொடிகாமத்திலுள்ள சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்திலும். எதிர்வரும் 27,28 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப அலுவலகத்திலும் - இந்தப்பணி இடம்பெறும் என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவித்துள்ளார்.

தத்தமது வர்த்தக வியாபார நிலையங் களில் பயன்படுத்தும் அளவை. நிறுவை உபகரணங்களுக்கு அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் உரிய திகதிகளில் முத் திரையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

### சமுர்த்தி பெறும் குடும்ப மாணவருக்கு புலமைப் பரிசில் நேர்முகப் பரீட்சை

தென்மராட்சி. மார்ச் 2
தென்மராட்சி பிரதேச சமுர்த்தி மகா சங்கத்தில் சமுர்த்தி முத்திரை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் இணைந்துள்ள மாணவர்களுக்கான 'சிப்தொற' புலமைப் பரிசில் வழங்கல் தொடர்பான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 4 ஆம் , 6 ஆம் திகதிகளில் மு.ப. 11 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று க.பொ.த. உயர்தரம் கற்கும் சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம். தேசிய அடையாள அட்டை, சமுர்த்திப் பயனாளி என்பதை பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம். குடும்ப அட்டை, சமுர்த்தி குழு வைப்பு அங்கத்தவர் வைப்புக் கணக்குப் புத்தகம், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப்பெறுபேறு ஆகியவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் டி.எம். ஜெயரட்ண காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டார். அங்கு சென்ற பிரதமரை ஆலய ஆதீன கர்த்தர்களாகிய மு.சுந்தரலிங்கம். ஆ.அம்பலவிமுருகன் ஆகியோர் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர். (வ-250)

### தனியார் நிலையங்களில் எரிபொருள் விற்பனைக்குத் தடை

தனியார் வர்த்தக நிலை யங்களில் எரிபொருள்களை விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது:-

நகரப்பகுதிகளிலுள்ளஎரிபொருள் நிலையங்களில் இருந்து கொள்வனவு செய்யப்படும் பெற்றோல் ,டீசல், மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்கள் கிராமப்புறங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதைக் காண முடிகின்றது.

தற்போது இதற்குத் தடை விதிக்கப்பட்டு வருகின்றது. தனியார் விற்பனை நிலையங்களில் எரிபொருள்கள் விற் பனை செய்வதால் விபரீதங்கள் இடம்பெறுவதுடன் சுகாதார ரீதியிலான பாதிப்புக்களும் ஏற்படுவதாகத் தெரிவித்து, விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-421)

### பதிவு செய்யப்பட்ட ஓட்டோ சாரதிகளுக்கு சீருடைகள்

#### இம்மாதம் 15 இல்

யாழ்ப்பாணம், மார்ச் 2
யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களின் சாரதிகளுக்கு இந்த மாதம் 15 ஆம் திகதிக்குள் சீருடைகள் மற்றும் ஓட்டோக்களை அடையாளம் காணக்கூடியதாக சங்கத்தால் அடையாளப்படுத்தப்பட்ட 'ஸ்ரிக்கர்' என்பன வழங்கப்படவுள்ளன என்று யாழ்.மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவர் இ.மனோகரராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் :-

சங்கத்தில் பதிவு செய்யப்பட்டு பொது மக்களுக்கான சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களில் மக்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதற்கு ஏதுவாகவும், சாரதிகளால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும் சாரதிகளுக்கு சீருடையும் ஓட்டோக்களுக்கு ஸ்ரிக்கரும் வழங்கப்படவுள்ளன.

சீருடை இல்லாது சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களின் சாரதிகள் மீது நம்பகத்தன்மை இல்லாத காரணத்தால் பொது மக்கள் தமது உறவினர்கள் அல்லது தெரிந்த நபர்களது ஓட்டோக்களையே தேவைக்குப் பயன்படுத்து கின்றனர்.

இதனால் ஏனைய ஓட்டோ சாரதிகளும் பாதிக்கப்படுகின்றனர். எனவே மக்கள் நம்பகத் தன்மையுடன் பாதுகாப்பாக பயணிப்பதற்கு ஓட்டோ சாரதிகள் சீருடை அணிய வேண்டியது கட்டாயமாகும்.

இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் தற்போது 600 ஓட்டோக்கள் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் சாரதிகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக சீருடை வழங்கப்படும். அத்துடன் ஓட்டோ சாரதியின் பெயர், சங்கப்பதிவு இலக்கம், தரிப்பிட இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பன குறிக்கப்பட்ட ஸ்ரிக்கரும் ஓட்டோக்களுக்கு பின்புறமாக ஒட்டப்படும். இதற்கான நடவடிக்கைளை சங்கம் தற் போது மேற்கொண்டு வருகிறது.

ஓட்டோக்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக சங்கத்துக்கு நேரடியாகவோ அல்லது தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ மக்கள் தெரியப்படுத்தலாம் -என்றார். (வ-14)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

மாசி-19 திங்கட்கிழமை 03.03.2014
திதி: துதியை மு.ப.11.15 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.இ.06.32
சுபநேரம்: 12.27- 01.57 வரை
இராகுகாலம்: 07.57.-09.27 வரை

**மேடம்:** மிகுந்த நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். அதிக பணவரவில், சிறிதளவு சேமிப்பீர்கள். உறவினர்களிடம் உங்கள் மீது இருந்த மனக்கிலேசம் விலகி, அன்பு வளரும்.

**இடபம்**:இன்று, உங்கள் பார்வையில் நிகழ்கிற சுவாரஸ்யமான சம்பவங்களை ரசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி திட்டமிட்டப்படி நிறைவேறும். உபரி பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்**: கூடுதல் பொறுப்புகளால், மனதில் பதற்றம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை ஊக்கம் தரும். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும்.

**கடகம்**: உங்கள் உடல்நலத்தைச் சரிவரப் பேணுவதால் மட்டுமே, பணிபுரிவதில் ஆர்வம் வளரும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். ஆடம்பர எண்ணத்துடன், கூடுதல் பணச்செலவு மேற்கொள்வீர்கள்.

**சிங்கம்**: இஷ்ட தெய்வ அருளை நம்பி, முக்கியமான செயல் ஒன்றில் ஈடுபடுவீர் கள். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். ஆதாய பணவரவு கிடைக்கும். உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி**: நீங்கள் அன்பு வழியை அதிகம் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமாகும். பணவரவு தாராளமாகக் கிட்டும்.

**துலாம்**: மாறுபட்ட விதமாகப் பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் சார்ந்த பணி நிறைவேறத் தாமதமாகும். சேமிப்புப் பணம் சிக்கனச் செலவுக்கு பயன் படும். எதிர்பார்த்த முக்கியமான செய்தி வந்து சேரும்

**விருச்சிகம்**: உங்களுக்கு நன்கு அறிமுகம் இல்லாதவரிடம் பொது விவகாரம் பற்றிப் பேச வேண்டாம். கடினப் பணிகளில் தற் காப்பு அவசியம்.

**தனுசு**: உங்கள் செயலில், பிறர் நலன் பற்றிய அக்கறை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உற்பத்தி, விற்பனை உருவாகும். நீண்ட நாள் காணாமல் தேடிய பொருள் கைவந்து சேரும்.

**மகரம்**: மற்றவரை விமர்சிக்க, சிலர் உங்களைக் கருவியாகப் பயன்படுத்துவர். அவர்களிடம் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. தொழிலில் நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கும்பம்**: உங்கள் மனதில் உருவாகிற புதிய திட்டம், செயல் வடிவம் பெறும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் பெற அதிக அளவில் பணிபுரிவீர்கள். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மீனம்**: உங்கள் செயல்களால் வருகிற பின் விளைவுகளை உணர்ந்து நடந்து கொள்வது அவசியம். தொழில், வியாபார நடைமுறை சீராக, சில மாற்றங்களைப் பின்பற்றுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 7 | 2 | | |
| 2 | 9 | 8 | | | | 1 | 7 | |
| 5 | | 3 | 1 | 8 | 2 | | | |
| 3 | | 6 | 2 | | | 7 | | |
| | | | 7 | 5 | 8 | | | |
| | | 7 | | | 3 | 5 | | 1 |
| | | | 3 | 2 | 9 | 4 | | 7 |
| | 6 | 4 | | | | 3 | 2 | 9 |
| | | 2 | 6 | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 6 | 3 | 4 | 5 | 1 | 8 | 2 |
| 5 | 2 | 8 | 9 | 1 | 6 | 4 | 3 | 7 |
| 3 | 1 | 4 | 8 | 2 | 7 | 5 | 6 | 9 |
| 1 | 3 | 7 | 5 | 6 | 9 | 8 | 2 | 4 |
| 2 | 4 | 5 | 1 | 7 | 8 | 6 | 9 | 3 |
| 6 | 8 | 9 | 4 | 3 | 2 | 7 | 5 | 1 |
| 8 | 6 | 3 | 7 | 9 | 4 | 2 | 1 | 5 |
| 4 | 5 | 1 | 2 | 8 | 3 | 9 | 7 | 6 |
| 7 | 9 | 2 | 6 | 5 | 1 | 3 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## இளையதம்பி பரமசிவம்

(ஓய்வுநிலை பதிவு பெற்ற வைத்திய அதிகாரி)

**மண்ணில்** 1933.08.10 | **திதி: 2014.03.02** (பூர்வபக்க மாசிப் பிரதமை) | **விண்ணில்** 2013.03.12




ஆண்டொன்று மறைந்துவிட்டது அப்பா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை எம் இதயம்
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம்
மனதைவிட்டு நீங்காது
ஆத்மா சாந்தியடைய சந்தன முதலிச்சி புல
முருகமூர்த்தி பாதம் பணிகின்றோம்

**மனைவி: செல்வதி.**
**பிள்ளைகள்:**
சிவச்செல்வம் - சாந்தா குடும்பம்,
சிவதாஸ் - தபோதினி குடும்பம்,
சிவா - பத்மசேகரம் குடும்பம்,
சிவசந்தர் - நிர்மலா குடும்பம்,
சிவப்பிரியா - அஞ்சலன் குடும்பம்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(C/7654)(2.6.3)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வவுனியா இறம் பைக்குளம் மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு இல்ல மெய் வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது. இதன் போது இல்லங்களின் வீரர்கள் சத்தியப் பிரமாணம் செய்கின் றனர். (ஐ-402)



கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் பெற்றோர்களால் செய்யப்பட்ட சிரமதானத்தின் போது (ஐ-422)



ஆனையிறவு. தட்டுவன்கொட்டி அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டீ கடந்த திங்கட் கிழமை நடை பெற்றது. இதில் போட்டியாளர்கள் பலூன் உடைக்கின்றனர். (ஐ-18)



கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்திற்கு புதிதாக அ.சிவ கணேஷ் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் பாடசாலை மாணவர்களின் பெற் றோர்களுடன் கலந்து ரையாடலை மேற் கொண்டார். (ஐ-18)



வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. வெற்றி பெற்ற மாண வன் ஒருவனுக்கு நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.தர்மபாலன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-402)



வவுனியா பொது வைத்தியசாலையில் பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவின் 8ஆம் இலக்க விடுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. விடுதியை வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். இரவீந்திரன் திறந்து வைத்தார்(ஐ-402)




கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் இத்தாவில் முகமாலை கிராமங்களில் மீளக்குடியமர்ந்துள்ள 100 குடும்பங்களுக்கு தலா 10 தென்னங்கன்றுகள் வீதம் 1000 தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் பயனாளி ஒருவருக்கு தென்னங்கன்று வழங்கப்படுகிறது. (ஐ-18)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக விளையாட்டுக் கழ கங்களுக்கிடையே யான விளையாட்டு விழா கடந்த 26ஆம் திகதி கனகபுரம் விளையாட்டு மைதா னத்தில் நடைபெற் றது. நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் இதில் வெற்றி பெற்ற வீராங் கனைகளுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (ஐ-18)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வின் போது கல்லூரியின் முதன்மை மாணவன் ஒலிம்பிக் தீபம் ஏற்றி விளையாட்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், இடைவேளையின் போது மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வு இடம்பெறுவதையும், விருந்தினர்கள் முன் வரிசையில் அமர்ந்திருந்து விளையாட்டு நிகழ்வுகளை அவதானிப்பதையும் காணலாம். (ஒ-36)



கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி பரிசளிப்பு விழாவின் போது முன்னாள் அதிபர் சி.சிற்றம்பலம் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் பிரதம விருந்தினரான வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.சிறீகரன் மற்றும் பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் ஆகியோரும். (ஒ)



நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் மற்றும் பாடசாலை அதிபர் ந.தேவராஜா, வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் பொ.வியாகேசு உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (ஒ)





கைதடி நவீல்ட் செவிப்புலன்-கட்புலனற்றோர் பாடசாலை யின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் ஒரு காட்சி. (ஒ-51)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன், முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் உபஅதிபர் செல்வி க.இராமலிங்கம் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் அணி நடையையும் காணலாம். (க)



மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், விருந்தினர்களும் வரவேற்கப்படுகின்றனர். (ஒ-9)



வட்டு இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது அதிபர் சி.தனஞ்செயன் தலைமையில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (ஒ-28)





மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டிகளின்போது குரங்கோட்ட நிகழ்வு இடம்பெறுவதையும், முன்பள்ளிச் சிறார்களுக்குப் பரிசில்கள் வழங்கிய பின்னர் பாடசாலை அதிபர் திருமதி ஜே.தேவேஸ்வரன், முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம். (க-9)



வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெற்ற வலய மட்ட கால்கோள் விழாவுக்கு விருந்தினர்களாக கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.பஞ்சலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் ஆகியோர் மேடையில்... (ஒ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரணி மத்திய கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண மேலதிக கல்விப் பணிப் பாளர் கு.பிரேமகாந்தன் உரையாற்றுவதையும், போட்டியில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளுக்குப் பரிசில் வழங்குவதையும் காணலாம். (ஒ-122)



நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் மீரா பாரதியின் 'மரண இழப்பு மலர்தல்' நூல் பற்றிய உரையாடல் அண்மையில் திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நூலாசிரியர் மீராபாரதி விமர்சகர் யதீந்திராவுக்கு நூலை வழங்குகிறார். (வ-40)



பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றன. போட்டிகளுக்கு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமோதயன், சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவன திட்ட முகாமையாளர் மேற்றோ ஜெர்பர், பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.ஆனந்தசிவம், இத்தாவில் படைமுகாமைச் சேர்ந்த கப்டன் இந்திக்க சேனாநாயக்கா, லெப்டினன் சமந்த ஜெயரட்ண ஆகியோர் வரவேற்று அழைத்துச் செல்லப்படுவதையும் வெற்றி பெற்ற மாணவர்களையும் காணலாம். (ஒ-9)



யாழ்.வட்டு.வடக்கு பிளவத்தை அமெ.மி.த.க.பாடசாலை வருடாந்த மெய்வன்மைப் போட்டியின் போது விருந்தினர்கள், அதிபர் ஆகியோர் அழைத்துப் வரப்படுவதையும், மாணவர்களின் பாண்ட் வாத்திய அணியினரையும் காணலாம்.







யாழ்.கைதடி நவீல்ட் செவிப்புலன்-கட்புலனற்றோர் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆர்.மோகனதாஸ் ஆகியோர் வரவேற்கப்படுவதையும் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு அமைச்சர் பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் அணி நடையையும் காணலாம். (ஒ-51)



உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் கல்வி கற்று வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் பல துறைகளில் கடமையாற்றி வரும் பழைய மாணவர்கள் அண்மையில் மேற்படி கல்லூரிக்கு வருகை தந்தபோது பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான இடத்தில் அடையாள மிட்டு அங்கே நாடாவை வெட்டி திரை நீக்கம் செய்து வைக்கின்றனர். அருகில் பாடசாலை அதிபர் சகிதம் பழைய மாணவர்கள் நிற்கின்றனர். (வ-421)



யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களின் இல்லமெய்வன்மைப் போட்டியின் முன்னோடி நிகழ்வாக இல்ல மாணவர்கள் கலந்து கொண்ட 22 கி.மீ. தூர சைக்கிளோட்டப்போட்டியின் போது... (ஒ-51)





சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளின்போது பாடசாலை அதிபர் செல்வி நா.ஜெய ராணி [illegible] கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கு.கோசலை ஆகியோர் மங்கல விளக்கை ஏற்று வதையும், முதன்மை விருந்தினர் வெற்றியாளருக்கு வெற்றிக் கேடயத்தை வழங்க அருகில் பாடசாலை அதிபர் மற்றும் உபஅதிபர் திருமதி க.விமலாதேவி. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளிப்படைத் தன்மை என்பது இன்று பரந்தளவில் விவாதத் துக்குரிய தலைப்பாகவுள்ளது. இது கடினமானதும் விவாதத்துக்குரியதுமான தலைப்பாகவுமுள்ளது. அரசியல் மற்றும் நிர்வாக நிலைமைகளில் வெளிப்படைத் தன்மை என்பதை பல்வேறுபட்ட விதத்தில் மக்கள் விளங்கிக் கொள்கின்றனர்.

# கல்வி நிர்வாகமும் வெளிப்படைத் தன்மையும்

நடேசு தயாளன்,
(அதிபர்)

இன்றைய உலகமயமாதல் சூழ்நிலையில் வெளிப் படைத் தன்மை என்பது அவசியமாகவுள்ளது. நிறுவன மொன்றின் தீர்மானங்கள் பிரமிட் டின் உச்சியில் அமைந்திருப்பது போன்று உயர்நிலையில் இருக் காது. சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நெருக்கமானதாக அமைந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. வெளிப்படைத் தன்மை என்பது தகவல்களை அறிவதற் கான உரிமையை மதிப்பதாகும். எனவே நிறுவனமொன்றில் செய லொழுங்கில் அதுசார்ந்த பிரிவி னருக்கு தகவலறியும் உரிமை யுண்டு என்பதோடு, பொருத்தமான உரிய தகவல்களைப் பெறும் உரிமையுமுண்டு. எனவே உரித் தாளர்களுடன் வெளிப்படையான தொடர்பு இருக்க வேண்டும்.

வெளிப்படைத் தன்மை என்பது இன்று பரந்தளவில் விவாதத் துக்குரிய தலைப்பாகவுள்ளது. இது கடினமானதும் விவாதத்துக்குரியது மான தலைப்பாகவுமுள்ளது. அரசி யல் மற்றும் நிர்வாக நிலைமை களில் வெளிப்படைத் தன்மை என்பதைப் பல்வேறுபட்ட விதத்தில் மக்கள் விளங்கிக் கொள்கின்றனர்.

வெளிப்படைத் தன்மையானது தக வல் தொடர்பான வெளிப்படையா னதும் சுதந்திரத் தன்மை கொண் டதுமான நிலையாகும். பங்குபற் றுதல், வகைகூறுதல் என்றவாறான விடயங்கள் சம்பந்தப்பட்ட பிரிவினரி டையே இருத்தல் அவசியமாகும். கல்வி முகாமைத்துவத்திலும், கல்வி நிர்வாகத்திலும் இந்த வெளிப்படைத் தன்மையானது அவசியமானதா கும். இது சிறப்பான முறையில் காணப்படாவிடில் பாதகமான விளைவுகளை உண்டு பண்ணு வதாகவே இருக்கும் என்பதோடு கல் வியின் வெளியீட்டிலும் தாக்கத்தை உண்டு பண்ணும்.

கல்வி நிர்வாகத்திலும், கல்வி முகா மைத்துவத்திலும் வெளிப்படைத் தன்மை நிலவ வேண்டுமாயின், பின்வரும் நான்கு விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டியது அவசியமானதாகும்.

1. கல்வி நிர்வாகமானது தேவையான பொதுவான தகவல்களை அனைத் துப் பிரிவினருக்கும் வழங்கவேண் டும். இடமாற்றம், பதவியுயர்வு, லீவு வழங்கல், வள ஒதுக்கீடு போன்ற விடயங்களில் வெளிப்படையான தன்மை இருத்தல் அவசியமாகும்.
2. பக்கம் சாராத வகையிலான நிர் வாக நடைமுறைகள் கையாளப் படுதல் வேண்டும்
3. நிர்வாக ரீதியான நடைமுறை களை ஏனையவர்கள் பரீட்சிப்பதற்கும் வாய்ப்பளிக்கப்படுவதோடு, எவ ரையும் பாதிக்காத வகையிலான விசாரணைகள் இடம்பெறச் சந்தர்ப் பமளிக்கப்படல் வேண்டும்.
4. நிர்வாக நடைமுறைகளானது சம்பந்தப்பட்ட பிரிவினருடனான ஈடு பாட்டுடன் மேற்கொள்ளப்படுவ தற்கு வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டும்

கல்வி நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையானது சம்பந்தப்பட்ட தரப் பினருக்கு செயற்பாடுகள் தொடர் பான தகவல்களை வழங்குவதாக இருக்க வேண்டும். இதனூடாக எத்தகைய செயற்பாடுகள் இடம்பெறு கின்றன என்பதனை ஏனையவர்கள் அறிந்து கொள்ள முடிகின்றது.

சரியான முறையில் செயற்படுகின்ற கல்வி நிறுவனங்களில் இதனைத் தெளிவாகக் காணமுடியும். கல்வி நிர்வாகத்துக்கும், முகாமைத்துவத் துக்கும் பெருமளவான முதலீடுகள் உள்ளீடாக்கப்படுகின்றபோது, அது தொடர்பான வெளியீட்டில் கவனம் இருந்தல் அவசியமாகவுள்ளது. கல்வி அமைப்புக்களோடு சார்ந்தவர் கள் மட்டுமல்லாது, சமூக நிறுவ னங்க ளின் நோக்குநர்களும் இது தொடர் பில் கவனம் செலுத்துதல் வேண்டும். கல்விப் புலத்தில் சிறந்த குறிகாட்டி களை வெளிப்படுத்துவதற்கு வெளிப் படைத் தன்மை அவசியமானதாகும்.

கல்வி நிர்வாக முகாமைத்துவ ஒழுங் கமைப்பில் வெளிப்படைத் தன்மை தொடர்பான அவசிய நிலை யானது இரண்டு விதமாக உள்ளன.

1. பொது வகை கூறலூடாக உரித் தாளருக்குத் தெரியப்படுத்தல்.
2. அளவிடக் கூடிய வகையிலான வெளியீட்டின் அமைப்பு.

இன்றைய கல்வி நிர்வாகக் கட் டொழுங்கில் தலைமைத்துவத்துக் கான சிறப்பான, இயல்பான, வெளிப் படையான தலைமைத்துவமே வரவேற்கப்படுகின்றது. எனினும் இன்று இது அரிதாகவே காணப்படு கின்றது. நிர்வாகத் தலைமைத்து வத்தினை வகிப்பவர்கள் தமது சகபாடிகளிடையே, தன்னைப் பின் தொடர்பவர்களிடையே நம்பிக்கை யைக் கட்டியெழுப்புவராக விளங் குதல் அசியமாகும். கல்வி நிறுவனத் தலைவர்களானவர்கள் உறுதியான நிலையில் தனது நிறுவனம் சார்ந்த வர்களின் இயலுமைகளைக் கருத் தில் கொண்டவர்களாக அவர்களது தகவல்களைப் புரிந்து கொள்ளும் திறன்கள் தொடர்பாக அறிவுடை யவர்களாக விளங்குவதோடு, அதற் கேற்ற முறையில் தகவல்களை வழங்கக் கூடியவர்களாகவும் விளங் குதல் அவசியமாகும். இத்தகைய திறனற்றவர்கள் கல்வி செயலொ ழுங்கில் பங்குதாரராக விளங்குத லானது பல்வேறு மட்டத்திலுள்ள கல்விசார் பணியாளரின் வினைத் திறனில் பாதிப்பை உண்டு பண் ணுவதோடு வினைதிறன் மிக்க கற்றல் அடைவிலும், பாதிப்பை உண்டு பண்ணுவதாக இருக்கும்.

தலைமைத்துவத்துக்குரியவர்கள் நேர்மையானவர்களாகவும், ஒழுக்க நியமங்கள் சார்ந்தவர்களாகவும் விளங்குதல் அவசியமாகும். அது மட்டுமன்றி ஆளிடைத் திறன் விருத்தி யடைந்தவராக, சிறந்த செயற்பாட்டுத் திறன் உடையவராக நம்பகரமான வராக பொருத்தமான விதத்தில் தக வல்களை வெளியிடுபவர்களாக, தான் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற் பாட்டுக்கும் நியாயமான முறையில் தகவல்களை வெளியிடுவதோடு அவற்றின் நம்பகத்தன்மையை வலி யுறுத்துபவராகவும் விளங்க வேண் டும். மாறாக எந்தவொரு செயலுக் கும் தன்னிலையில் நின்று கார ணம் கற்பித்தல், தனது அதிகார நிலையில் நின்று கருத்துக்களை வெளியிடல், இரட்டை வேட தாரி யாகச் செயற்படல் நேரான தொடர் பாடற் கோலத்தைக் கட்டியெழுப் பாமை, அதிகார மேலாதிக்க நிலை யில் நின்று செயற்படல், என்பன கல்விப் புலத்தின் வெளிப்படைத் தன்மைக்குச் சவாலான விடயங் களாக உள்ளன.

கல்வி நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையானது வலுவுடையதாக இருக்க வேண்டுமானால், தீர்மா னங்கள் அனைத்தும் ஒழுக்கவி யல் ரீதியானதாகவும், நம்பகத் தன்மையுடையதாகவும் இருக்க வேண்டும். அதற்காகப் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும். அனைவரும் சமமாக நோக்கப் படுதல், ஒழுக்கவியல் ரீதியானதாக இருத்தல், நற்பண்புகளுடையதாக இருத்தல், நிலைமைகளுக்குப் பொருத் தமானதாகவும், நியாயமானதாக வும் இருத்தல் கல்வி நிர்வாகி யானவர், ஒரே சேவை நிலையத் தில் தொடர்ந்து கடமையாற்று வதைத் தடைசெய்தலும் அதனை உறுதிப்படுத்தலும், பக்கச் சார்பான செயற்பாட்டில் ஈடுபடும் கல்வி முகாமையாளர் மீது உரிய நிர்வாக நடைமுறைகளைக் கையாண்டு கடமைப் பட்டியலை மாற்றியமைத் தல், ஆளுமைமிக்க நிர்வாகிக ளைப் பணிக்கமர்த்துதல், சுற்றறிக் கைகள், தெரிவு முறைகள் பகிரங் கப்படுத்தப்பட்டிருத்தல் என்ப வையே அவையாகும்.

ஒழுங்கியல் ரீதியான குறைபாடு களோடு வெளிப்படைத் தன்மை யும் குறைவாகக் காணப்படுமா னால், கல்வித் துறைசார்ந்தோர் பொருத்தமற்ற நிர்வாக நடை முறைகளை மேற்கொள்பவர்களாக மாறுவதோடு, கல்விக் கட்டமைப்பி னையும் சிதறடிப்போராகமாறும்நிலை யுமுள்ளது. எனவேதான் ஒழுக்க நீதிசார்ந்த கல்வி நிர்வாக நடைமுறை யொன்று அவசியமானதாகவுள் ளது. அதனைக் கடைக்கொள்வ தன் ஊடாகவே தரமான கல்வி என்ற இலக்கு நோக்கி எம்மால் நகர முடியும்.

## இறைவன் மானிட வடிவில் அவதாரம் எடுப்பது ஏன்? அவன் எம் மீது வைத்துள்ள அன்பும் அருளுமே காரணம்

*ஆன்மிக குரு அருள்திரு அடிகளாரின் 74ஆவது அவதாரத் திருநாள் நாளை (03.03.2014) ஆகும். அந்த பெருமங்கல விழாவை முன்னிட்டு இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது*



அன்றைய காலம் முதல் இன் றைய காலம் வரை அதர்மம் ஓங்கு கின்ற பொழுது தர்மத்தை நிலை நாட்ட தெய்வம் மனித உருவிலே சித்தராக, மகானாக அவதரித்து மக்களுக்கு அருள்பாலித்த வர லாறுகள் அனைவரும் அறிந்த, உணர்ந்த உண்மையாகும்.

அவதார காலங்களில் மகான்கள் பல்வேறு வழிகளில் மக்களுக்கு அருளை வாரி வழங்கியுள்ளனர். அவர்களை இனங்கண்டு தரி சனம் பெற்றவர்களும், அவர்கள் கூறிய வழிமுறைகளைத் தவறா மல் பின்பற்றியவர்களின் குடும் பங்களும் மட்டுமே இன்றும் தலைமுறை, தலைமுறையாக தெய்வத்தின் பாதுகாப்புடன் வாழ்ந்து வரு கின்றன.

அந்த வகை யில், மேல் மரு வத்தூரில் ஆதி பராசக்தி சித் தர், ஆன்மிக குரு அருள்திரு அடி களாரின் அவ தார காலத்தில், நாமும் பிறந்து, அவர்களின் வழிமுறை யோடு தொண் டாற்றவும், ஆசிபெற வும் கிடைத்த வாய்ப்பு, நாம் பூர்வ ஜென் மத்தில் செய்த புண்ணியமே ஆகும்.

மனித மனங்களின் சரணாலயம் மேல்மருவத்தூர் என்பதை உலகுக்கு உணர்த்திய மகானான ஆன்மிககுரு அருள்திரு அடிகளா ரின் அருட் பார்வை பெறுவதற்கும், அருட் வாக்கு கேட் பதற்கும் உல கெங் கும்வாழ்கின்ற மக்கள் நாள் தோறும் மேல் மரு வத்தூரை நோக் கிச் சென்ற வண் ணம் உள்ளனர்.

இறைவன் மானிட வடிவில் அவதாரம் கொள்வதற்கு அவன் மானிட இனத்தின் பால்வைத்துள்ள அன் பும், அருளுமே கார ணம். அவை இரண் டுமே அவனைக் கீழே இறங் கச் செய் கின்றன. குறிப்பிட்ட மானிட உட லின் உருவத்தை ஏற்கச் செய்கின்றன.

நாம் அந்தப் பரம்பொருளின் விளை யாட்டில் வெளிப்படும் தோற்றங் களை, காட்சிகளை, நிகழ்ச்சிகளை, அற்புதங் களை அந்த அவதாரத் திருமேனியை அன்போடும், பக்தியோடும், உணர்ச்சி யோடும் சிந்தித்து, நினைத்து நினைத்து வழிபட்டு உணர்தல் வேண்டும். பய னற்ற, பொருத்தமற்ற கேள்விகளை எழுப்பிக் கொண்டு வாய்ப்பை நழுவ விடுதல் கூடாது.

ஒவ்வொரு அவதாரமும் சில நோக் கங்களை நிறைவேற்ற வேண்டியே அமைகின்றன. அவ் வாறே அடிகளார் அவர்களின் அவதார நோக்கம் மூன்றாகும். அவையாவன:-

1. தெய்வ நம்பிக்கை, தெய்வ பக்தி, ஆன்மிக உணர்வுகளை ஊட்டுதல்
2. பெண் குலத்தை ஆன்மிக வழியில் உயர்த்துதல்
3. அடித்தள மக்களை ஆன் மிக வழியில் உணர்த்துதல்

தாரமும் குருவும் தலைவிதி வசப்படி என்பது பழமொழி.

மனைவியும், குருவும் ஒருவர்க்கு அமைவது அவரவர் தலைவிதிப்படி என்பார்கள்.

குருவுக்குச் சமமான தெய்வம் இல்லை. அவருக்குச் சமமான பதவி யும் இல்லை. தெய்வத்தை அடைய - மோட்சம் பெற - குரு வின் தயவு தேவை. அத்தகைய குருவை அம்மாவே நமக்குக் கொடுத்திருக்கிறாள். உங்களுக் குத் தெய்வமாகவும், குருவாகவும் அடிகளாரைக் கொடுத்திருக்கிறேன்! என்பது அம்மாவின் அருள்வாக்கு.

இம்மேலான குருவருளைப் பெற நாம் காட்டுக்குப் போக வேண்டிய தில்லை. உடல் வருத்தித் தவம் செய்ய வேண்டியது இல்லை.

அம்மா நமக்கு அளித்துள்ள குரு போற்றி 108 மந்திரங்களையும், திரு வடி போற்றி 108 மந்திரங்களை யும் அடிக்கடி படித்து உருவேற்றி வந்தாலேபோதும். தொண்டு செய்து வந்தாலே போதும். எளிதில் அருள் பெறலாம். ஆச் சாரிய அபி மானமே போதும் என்கிறாள் அன்னை.

***மேல்மருவத்தூர்
ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம்,
யாழ்ப்பாணம்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரசடி வீதி, தஞ்சிலேனில்
2 பரப்பு 0.326 குழி (22.17 பேர்ச்)
பரப்பளவு கொண்ட கிணறு, சுற்றுமதிலுடன்
கூடிய காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு:077 775 9205
(45200) (3.6.4)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அளவெட்டி அழகொல்லை பிள்ளையார் கோவிலுக்கு அருகில் 4 அறைகள் கொண்ட(Tiles) பதித்த Attached Bath Room உள்ள வீடும் பனை, தென்னங்காணியும் விற்பனைக்குண்டு. கொழும்பில் வீடும் விற்பனைக்குண்டு.
077 739 2927, 077 502 3448 (C/12272) (3.6.4)

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## MAJESTIC CINEMA - CARGILLS SQUARE

CEYLON THEATRES
(Opposite Jaffna Teaching Hospital)
விசாரணை ☏ 021-2227712
www.facebook.com/CeylonTheatres
Web: www.ceylontheatres.com

இப்பொழுது திரையில் DAILY - 10.30am, 2.30pm, 6.30pm




Platinum | Silver | Bronze

## எசட்லைன்

...டேவிட் பீரிஸ் நிறுவன குழுமத்தின் முன்னணி நிறுவனமான எசட்லைன் லீசிங் நிறுவனமானது, லீசிங், வாடகைக் கொள்வனவு, கடன் வசதிகள், காப்புறுதி, முதலீடு மற்றும் நிறுவன நிதி சேவைகளுடன்...

விசேட திட்டங்களுக்கமைவான சிறந்த வாய்ப்புக்களை வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப வழங்கி மின்னல் வேகத்தில் வளர்ச்சியடைந்துவரும் ஒரு நிதி நிறுவனமாகும்.

### வாடிக்கையாளர் தொடர்பாடல் உதவியாளர்
(CUSTOMER RELATIONSHIP ASSISTANT)



அறவிடுதல் | விற்பனை மற்றும் வியாபார ஊக்குவிப்பு | ஆவண ஏற்பாடு

- க.பொ.த சா/த பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்துடன் சித்தியடைந்திருத்தல்
- க.பொ.த உ/த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
- 27 வயதுக்கு குறைந்தவராக இருத்தல்
- தொடர்பாடல் திறன் மற்றும் கணினி அறிவு முக்கியமாகும்
- ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டும் ஆற்றல்.

தகைமை மற்றும் அனுபவத்திற்கமைய கவர்ச்சிகரமான ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள்.

விண்ணப்பதாரர்கள், துடிதுடிப்பான மற்றும் பொறுப்புடன் செயலாற்றக்கூடியவர்களாகவும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பேச்சுத்திறன் மற்றும் எழுத்தாற்றல் கொண்டிருத்தல் அவசியம்.

வெளிப்படுத்தும் திறமைகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் நிச்சயிக்கப்படும். மேலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் உங்கள் விண்ணப்பங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள (அருகாமையில் உள்ள) எமது கிளைகளில் இன்றே கையளியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பத்தரமுல்லை | மாத்தளை | மொணராகலை | குளியாப்பிட்டி |
| களுத்துறை | பொலன்னறுவை | அம்பாறை | குருநாகல் |
| மத்துகமை | பதுளை | கேகாலை | அனுராதபுரம் |
| பிலியந்தலை | திருகோணமலை | கண்டி | கெக்கிறாவை |
| நுவரெலியா | மன்னார் | யக்கலை | இரத்தினபுரி |
| அம்பலந்தொட்டை | காலி | புத்தளம் | நீர்கொழும்பு |
| பலாங்கொடை | சிலாபம் | கம்பளை | அம்பிலிப்பிட்டிய |
| திஸ்ஸமஹாராமை | வவுனியா | ஹொரவபத்தானை | தம்புள்ளை |
| மாத்தறை | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | தெஹியத்தக்கண்டிய |
| அக்கரைப்பற்று | நிக்கவரட்டிய | வலஸ்முல்ல | மஹியங்கனை |
| மட்டக்களப்பு | தெனியாய | | |

மனிதவள முகாமையாளர்
**எசட்லைன் லீசிங் கம்பனி லிமிட்டட்**
120,120A, பன்னிபிடிய வீதி, பத்தரமுல்லை. தொ.பே: 011 4720100 [illegible] 011 4700[illegible]01
ஈ - மெயில்: jobs@dpm[illegible]
visionmedia

## ஆள்கள் தேவை
### தேசிய லொத்தர் சபை
### யாழ்ப்பாண மாவட்டம்

1)பின்வரும் இடங்களுக்கு விற்பனை முகவர் தேவை.

| | |
|---|---|
| 01. காரைநகர் | 09. சாவகச்சேரி |
| 02. வேலணை | 10. கொடிகாமம் |
| 03. ஊர்காவற்றுறை | 11. மீசாலை |
| 04. அச்சுவேலி | 12. சங்கானை |
| 05. புத்தூர் | 13. கொக்குவில் |
| 06. வல்வெட்டித்துறை | 14. நவாலி |
| 07. உடுப்பிட்டி/தொண்டமானாறு | 15. சின்னக்கடை |
| 08. கைதடி | 16. கொழும்புத்துறை |

அத்துடன் மேற்படி இடங்களுக்கு விற்பனையாளராகச் செயற்பட விரும்பினால் தேசிய லொத்தர் சபை லொத்தர் சீட்டுக்கள் யாழ் மாவட்ட காரியாலயத்தில் நேரடியாக வழங்கப்படும்.

2) யாழ் நகர் பகுதி விற்பனைக் கூடாரங்களுக்கு உதவி விற்பனை யாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
T.P. No: 021 221 7187, 077 220 9496, 077 789 9724
மாவட்ட விநியோக காரியாலயம்
தேசிய லொத்தர் சபை
No-04 K.K.S. Road, Jaffna.
(45266) (7.6.3)

## காணி விற்பனை

வியாபாரி மூலைச்சந்திக்கும், சுப்பர் மடத்துக்கும் இடையில் 751 பஸ் செல்லும் பிரதான கடற்கரை வீதியில் 2 பரப்புள்ள காணி வீடு, கடை கட்ட உகந்தது.
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 577 2350
(33390) (3.6.4)

## 30 வருடங்களுக்கு மேலான யாழ்ப்பாண மக்களின் நம்பிக்கைக்குரிய



## நந்தி கூரை ஓடுகள்

- உயர் தரத்தில் உருவாக்கப்பட்டது
- 10 வருடத்திற்கும் மேற்பட்ட உத்தரவாதம்
- வீடுகளுக்கு நேரில் வந்து தரம் குறைந்த கூரை ஓடுகளை விற்பவர்களிடம் ஏமாறாதீர்கள்
- இலங்கை முழுவதும் முகவர்கள் உள்ளனர்

(C/12270)

றூபிகா ரைல்ஸ் தொழிற்சாலை
உடங்கவ, கொச்சிக்கடை.
077 420 9294, 031 227 7346, 072 349 8575

## உடனடியான வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜாம்/கோடியல்/நூடில்ஸ்/தண்ணீர்ப் போத்தல் /PVC/கோழி இறைச்சி/தேயிலை/காமெண்ட்/பெயின்ட் மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், தரம்பிரித்தல், களஞ்சியப்பிரிவுக்கு ஆள்கள் தேவை. 18 - 50 வயதுடைய (ஆண் - பெண் இருபாலாரும்) சம்பளம் 18000/=, 25000/=, 32000/= வரை உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் தரப்படும்.
(நண்பர்கள்/குழுக்கள்/ஒரே தொழிற்சாலையில்) வருகை. அன்றே வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள்.
(குறிப்பாக வடக்கு/கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு)
தொடர்புகளுக்கு: 077 556 1883
(45198)(12.5.6)

## Vacancies

வடமாகாணத்தில் இயங்கிவருகின்ற எம்முடைய நிறுவனத்தில் பல வேலைவாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதனால் எம்முடைய நேர்முகத்தேர்வுக்கு க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடைந்தவர்களும், க.பொ.த உயர்தரத்தில் ஆகக்குறைந்த இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவர்களும் சமுகம் அளிக்க முடியும். இதன் மூலம் மாதாந்த வருமானம் 25000/= இற்கு மேலாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
தொடர்பு:021 221 9995
(45190)(3.6.4)

## யாழ். நகரில் ஆடைகளில் அச்சுக்கலை பயிற்சி
### FABRIC PRINTING TRAINING



2 நாள்கள் மட்டுமே நடைபெறுகின்றது

**இடம்:** ஜெரோம் மண்டபம் (Jerom Hall) 4ஆம் குறுக்குத் தெரு, OLR ஆலய வளாகம், யாழ்ப்பாணம்.

**காலம்:** மார்ச் மாதம் 15.16(சனி,ஞாயிறு)மு.ப.10 மணி முதல் 4 மணி வரை

இந்தியாவின் புகழ் பெற்ற அர்ச்சனா அக்கடமியின் ஸ்தாபகரும், ஆடைகளில் அச்சுக்கலை நிபுணரும், விஜய் ரிவி மற்றும் பொதிகை ரிவி புகழ் ஆர்.பரதராஜா அவர்களின் பயிற்சிப் பட்டறையில் நீங்களும் கற்றுக்கொள்ள அரிய வாய்ப்பு... சாறிகள்,பட்டுச் சாறிகள், கைத்தறிச் சாறிகள் மற்றும் சுடிதார், ரிசேர்ட், பெட்சீட் முதல் அனைத்து வகைத் துணிகளிலும் நாம் விரும்பிய டிசைன்களில் மிக இலகு முறையில் வீட்டிலிருந்தவாறே குறைந்த முதலீட்டில் 28 முறைகளில் இயந்திரம் இல்லாமல் பிரிண்டிங் செய்யும் முறைகளை 25 வருட துறைசார் அனுபவமுள்ள ஆர்.பரதராஜா தலைமையில் உங்களுக்கு செய்முறைப் பயிற்சியும், சுயபயிற்சியும் அளிக்கப்படுகின்றது. பயிற்சி நெறி முடிவில் இந்திய அர்ச்சனா அக்கடமியின் சான்றிதழ் வழங்கப்படும்.

(45191)(5.6)

உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
தொ.இல. 0778904131, 0777283192,0779382868
(பயிற்சியின் போது மாணவர்கள் மூலப்பொருள்கள் கொண்டுவரத் தேவையில்லை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி திருடியவர்கள் வசமாக மாட்டினர்

வலி.வடக்கு மார்ச் 02

சிவராத்திரி தினத்தன்று அதிகாலையில் கோழி திருடிய இருவர் இராணுவத்தினரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர். இந்தச் சம்பவம் ஏழாலைப் பகுதியில் கடந்த 27 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

ஏழாலை மகா வித்தியாலத்துக்கு அருகில் உள்ள கோழிப் பண்ணையில் எட்டு கோழிகளை பிடித்த திருடர்கள் மதில் பாய்ந்து தப்பிக்க முற்பட்ட வேளை அயலவர்கள் கண்டு திருடர்களை துரத்திச் சென்றுள்ளனர். எனினும் திருடர்கள் ஓடி மறைந்து விட்டனர். அப்போது அவ் வழியே வந்த இராணுவத்தினரிடம் மக்கள் தகவல் தெரிவித்தனர். சுற்றுப் பகுதியில் தேடிய இராணுவத்தினர் அங்குள்ள வீடொன்றில் பூ மரத்துக்குள் திருடர்கள் ஒளிந்திருப்பதைக் கண்டு அவர்களை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் பின்னர் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் இருவரையும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர். (ஐ-86)

## தலைக்கவச திருடர்கள் தாக்கினர் பிரதேச சபை உறுப்பினரை

வலி.வடக்கு மார்ச் 02

மோட்டார் சைக்கிள் தலைக் கவசங்களைத் திருட முற்பட்ட குழு ஒன்று அதனை தடுக்க முற்பட்ட பிரதேச சபை உறுப்பினரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை கீரிமலை ஆலயப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சிவராத்திரியை முன்னிட்டு கீரிமலைக்கு வந்த பக்தர்களின் மோட்டார் சைக்கிள்கள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இதன் போது அங்கு வந்த சிலர் தலைக் கவசங்களை திருடுவது பிரதேச சபை உறுப்பினரால் அவதானிக்கப்பட்டது. அவர்களை பின் தொடர்ந்து அவதானித்த வேளை திருடர்கள் பிரதேச சபை உறுப்பினரை தாக்கி விட்டு தப்பிச் சென்றனர். (ஐ-86)

# இன நட்புறவை ஏற்படுத்த மாணவரிடையே கருத்தாடல்

*மதர் விஸ்சஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில்*

யாழ்ப்பாணம்.மார்ச் 2

இனங்களுக்கிடையிலே நட்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தமிழ் சிங்கள பாடசாலை மாணவர்களுக்கிடையிலான செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கொழும்பு ஆனந்தாக்கல்லூரி மாணவர்களுக்கும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மாணவர்களும் பங்கு பற்றி கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இனநட்புணர்வு மதர் விஸ்சஸ் (அன்னையர் விருப்பம்) செயற்றிட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மதர் விஸ்சஸ் செயற்றிட் இணைப்பாளர் சமந்தவன்னியராச்சி கலந்து கொண்டார். அங்கு அவர் உரையாற்றுகையில்,

அமெரிக்கத்தூதரகத்தின் நிதி அனுசரனையில் இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இனங்களுக்கிடையில் நட்புணர்வினை ஏற்படுத்துவதன் ஊடாக தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்த்து எதிர்காலத்தில் நட்புணர்வுடன் கூடிய சமுதாயம் ஒன்றினை உருவாக்க முடியும் இதுவே இந்த செயற்றிட்டத்தின் நோக்கமாகும். எதிர்காலத்தின் தலைவர்களாக விளங்கக் கூடியவர்கள் மாணவ சமுதாயத்தினர். இளம் மாணவ சமுதாயத்தினரிடையே நட்புணர்வையும் புரிந்துணர்வையும் ஒற்றுமை உணர்வினையும் ஏற்படுத்துவதன் ஊடாக மாணவர்களுக்குடையியேலே கருத்துக்கள் பகிரப்படுகின்ற பொழுது புரிந்துணர்வுடன் கூடிய இன நட்புணர்வு மிக்க சமுதாயம் ஒன்று உருவாக்கப்படும். இச் செயற்பாட்டின் ஊடாக சிங்கள மாணவர்கள் மத்தியில் தமிழ் மொழியினையும் தமிழ் மாணவர்கள் மத்தியில் சிங்கள மொழியினையும் கற்கும் ஆர்வத்தினை ஏற்படுத்த முடியும்.

இந்த செயற்றிட்டத்தில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - கொழும்பு கோட்டை ஆனந்த பாலிக்கா பெண்கள் பாடசாலை, வவுனியா மத்திய மகாவித்தியாலயம் - கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலம், மன்னார் சென்சேவியர் கல்லூரி - நுகேகொட சமுத்திரா தேவி வித்தியாலயம், மட்டக்களப்பு வின்சன் பெண்கள் உயர்தரப்பாடசாலை - பத்தரமுல்லை சகுதி தேசியப் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கிடையில் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் ஊடக இணைப்பாளர் சாமந்தா சமரக்கோன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஊடக இணைப்பாளர் எஸ்.ரி.குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

**கார் விற்பனைக்கு**

NPGO -xxxx இலக்க Toyota Corolla AE III, Manual Model 1999, Silvar Colour.
தொடர்பு: 071 9830446
(திருநெல்வேலி)
(45279) (10.14)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் அத்தியடி அம்பலவாணர் வீதியில் 2 பரப்புக்காணி (பழைய வீடு விற்பனைக்குண்டு)
தொடர்பு: 077 9239334

**வேலையாள் தேவை**

யாழ். நகரில் ரயர் கடை ஒன்றுக்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 021 222 1082
(45275) (10.14)

**விற்பனைக்கு**

NPUM-xxxx இலக்கமுடைய கறுப்பு நிற Pulsar-180cc மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 666 0492

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து பணிசெய்யக்கூடிய பெண் தேவை. சம்பளம் 10,000/=
தொடர்பு:
077 3095952, 077 922 9331
(45274) (10.14)




**வாசிப்பு பிரியர்களே!**

இதோ வெளிவந்து விட்டது உங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கான மார்ச் மாத இதழ்
குடும்பத்தில் உள்ள அனைவரும் பூரண பயன் பெறக் கூடிய அற்புதப் படைப்பு.



OLI ARAZI மாத சஞ்சிகை
**ஒளி அரசி**
இல்லத்தரசிகளின் தோழி

பிரதிகளை சகல பத்திரிகை முகவர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 0714273035

**தரம் 5 மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஓர் நற்செய்தி**

சென்ற வருடம் (2013) பல்லாயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் அரச பரீட்சையில் சித்தியடைய காரணமாக அமைந்த புலமைச்சுடரின் 01 தொடக்கம் 45 வரையான பிரதிகளை ஒரே தொகுதியாக மிகக் குறைந்த விலையில் (300/=) பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக பயிற்சி தேவைப்படுவோர் வாங்கி பயிற்சி செய்யலாம். வரையறுக்கப்பட்ட சொற்ப தொகுதிகளே உள்ளதால் முன்னுரிமை அடிப்படையில் விநியோகிக்கப்படும். வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோர் சுடர்ஒளி முகவர் ஊடாக பணம் செலுத்தி முற்பதிவு செய்தும், நேரடியாக எமது கொழும்பு அலுவலகத்திற்கு வரக்கூடியவர்கள் நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.


**புலமைச்சுடர்**


யாழ் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 077 6569617 என்ற இலக்கத்தினூடாக தொடர்புகொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக தொடர்புகளுக்கு
T.P : 011 5737592
புலமைச்சுடர் அலுவலகம்
இல. 85, ஜயந்தமல்லிமாரச்சி மாவத்தை, கொழும்பு - 14.

**காணியுடன் கட்டடம் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் 50/39 அராலி வீதியில் சகல வசதி களும் கொண்ட கட்டடம் விற்பனைக்குண்டு. 2 பெரிய அறை, சிறிய அறை, பெரிய கோல், இணைந்த குளியலறை, களஞ்சியஅறை, சமையலறை, 60Amp 3PHS மின்சாரம், குழாய்கிணறு போன்ற சகல வசதிகளையும் கொண்ட கட்டடத்துடன் கூடிய காணி விற்பனைக் குண்டு. தொடர்பு : 077 3670882

**சாரதி தேவை**

கனரகவாகன (A.D) சாரதி தேவை.
தொடர்பு : 077 7667715

**Jaffna Wedding Fair 2014**

2014 .03.09 (08.00 am - 8.00 pm) நடைபெற இருக்கும் Wedding fair 2014 நிகழ்வுக்கு Cake Makers Setti back, Bridal makeup, Photo, Video Manavarai போன்றவற்றை காட்சிப்படுத்த விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
(வரையறுக்கப்பட்ட அனுமதிகள்)
(சிற்றுண்டிச்சாலைகள் வரவேற்கப்படுகின்றன)
தொடர்புகளுக்கு : Event Planners
Ajith - 077 0213712
Sena - 075 8921428

**Vacancy**

1. Store Keeper
Store Keeper வேலையில் ஒரு வருடத்துக்குக்குறையாத அனுபவம் உள்ளவர்கள் (ஆண்) விண்ணப்பிக்கலாம்.
2. வார்ப்பு உதவியாளர் (Foundry) அனுபவம் உள்ளவர்கள் தேவை.

Address :
Visvakarma (Pvt) Ltd,
No: 28, Maari Amman Lane,
Thirunelvely, Jaffna.
Tel: 021 222 6781, Fax: 021 221 9976

**வீடு / காணி விற்பனைக்கு**

நுணாவில் கிழக்கு கல்வயலில் 4 பரப்புக்காணியுடன் 3Room, 2Hall உடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (கண்டி வீதியிலிருந்து IKM க்குள்) தொடர்பு : 077 7724469

**தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள கருவாட்டுக்கடை ஒன்றுக்கு கணக்குத் தெரிந்த ஆண் காசாளர் தேவை.
தொடர்பு: 077 305 3170, 077 189 9685

**SALES REPRESENTATIVE**

Wanted experienced Sales Representative to be recruited for a reputed firm in Jaffna to work in Jaffna Town. Should have experience and familiar in marketing Cement and Cement Productions along with Tiles and Tile Productions. A good remuneration package is on offer for the correct person.

Ad.No.4490
C/O Uthayan
361, Kasthuriyar Rod, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்குத் தேர்தல் கடமையில் வடக்கு அரச அலுவலர்கள்

யாழ்ப்பாணம்.மார்ச் 2

அண்மையில் நடைபெற வுள்ள மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் தேர்தல் கடமையில் யாழ். மாவட்ட அரச அலுவலங்களில் பணி யாற்றும் உத்தியோகத்தர்களை ஈடு படுத்துவதற்கு விவரங்கள் யாழ்ப்பாணம் தேர் தல்கள் திணைக்களத்தினால் கோரப் பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டு ஜனவரி மாத சம்பளம் வழங்கப்பட்ட சகல நிரந்தர ஆண், பெண் அலுவலர்களின் விவரங்களை நாளை திங்கட்கிழமை அனுப்பி வைக்குமாறு சகல திணைக்களத் தலைவர்களுக் கும் மாகாண அமைச்சுக்க ளின் செயலாளர்களுக்கும் உதவித் தேர்தல்கள் ஆணை யாளர் பொ.குகநாதன் அறி வித்துள்ளார்.

சிறிய பிரதேசத்தில் தேர்தல் நடைபெற இருப்பதால் விண் ணப்பம் அனுப்பும் அனைவ ருக்கும் தேர்தல் கடமைகள் வழங்கப்படாட்டமாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை காலமும் தென் மாவட்டங்களைச் சேர்ந்த அலு வலர்கள் வட மாகாணத்தில் நடைபெற்ற தேர்தல்களில் கட மையாற்ற வந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (து-9)


பாதீனிய ஒழுப்பு செயலமர்வில் கலந்து கொண்டோர்

# உணவுக்கான வேலைத் திட்டத்தில் வடக்கில் பாதீனிய செடி அழிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 02

உலக உணவு திட்டத்தில் அனுசரணையுடன் உணவுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் பாதீனியம் செடியை முழு மையாக அழித்து ஒழிப்பதற்கான செயற்திட்டம் வட மாகாண விவசாய பணிப்பாளர் தலை மையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் நடைபெற்ற கலந்து ரையாடலில் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் , வட மாகாண சபை உறுப் பினர்கள் கலந்து கொண்டு பாதீனிய அழிப்பின் அவசியம் பற்றி கலந்துரையாடினர். இதன் போது கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசன், வட மாகாண சபையின் ஆட்சிக் காலத்தில் பாதீனிய செடியை இல்லா தொழிக்க முடியும்.

மலேரியா மற்றும் டெங்கு அழிப்புக்கென உருவாக்கப்பட்ட குழுக்களை போன்றே பாதீனிய ஒழிப்பிற்கென உருவாக்கப்பட்ட குழுக்களும் உள்ளன. இந்தக் குழுக்கள் மூலம் பாதீனியத்தை முற்றாக அழிக்க முடியும் - என்றார்.

இந்தச் செயற்றிட்ட கலந்துரையாடலில் வட மாகாணசபை உறுப்பினர்களான த.சித்தார்ந் தன், எஸ்.பரஞ்சோதி, கஜதீபன்.வலி. கிழக்கு பிரதேசசபை செயலாளர் உட்பட கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-10)

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
**GUNAA BEST PC** 52,Hospital Road,Jaffna.

**ஜோதிடர் வருகை**
இந்தியாவின் பிரபல ஜோதிடர்
C.M. சாமி (B.B.A, Dip.in Astrology)
யாழ் வருகை ஜாதக விளக்கங்களுடன் மலையாள மாந் திரீக முறைப்படி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.
ஜோதிடர் இராஜகுருசாமி அவர்களின் மருமகன்
N.பாலசுப்பிரமணியம், அர்மன் வீதி, தலங்காவல் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி, 077 768 4406
(44603)(4.6.3)

**காணி விற்பனைக்கு**
ஊரெழு கிழக்கு, ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அருகில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 7 பரப்புக் காணியும், ஊரெழு அம்மன் கோயிலுக்கு முன்பாக 7 பரப்புக் தோட்டக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 4696

**காணி விற்பனைக்கு**
கெற்பேலி கடற்கரையை தெற்கெல்லையாக கொண்ட 400 பரப்பு மேட்டுக்காணி (நல்லதண்ணீர் வசதியுடன்) உடன் விற்பனைக்கு உண்டு. சுற்றுலா விடுதி (Hotel) அமைப்பதற்கு உகந்த இடம்.
தொடர்பு:
077 696 9468, 077 0200 535
(45260) (10.14)

## திசைகாட்டியின் அறநெறிப்பாடசாலை திறப்பு நிகழ்வு நாளை

திசைகாட்டி நிறுவனத்தின் துன்னாலைப்பிரதேச இலவச அறநெறிப்பாடசாலையின் ஆரம்பவிழா நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு துன் னாலை வடக்கு மெதடிஸ்த மிஸன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

துன்னாலைப்பிரதேச கல்வி சமய அபிவிருத்தி மன்றத்தின் இணைத்தலைவர் எஸ்.சிவ கணே சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிர தம விருந்தினராக யாழ்.மேல் நீதிமன்ற நீதி வான் அன்னலிங்கம் பிறேம் சங்கர், சிறப்பு விருந் தினராக திசைகாட்டி கலை இலக்கிமன்றத்தின் தலை வர் ரி.கலாமணி ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-14)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## குறும்பட வெளியீடும் அறிமுகமும்

யாழ்ப்பாணம், மார்ச் 2

தினேஸ் ஏகாம்பரத்தின் அணுகுண்டுகள் எனும் குறும்படவெளியீடும் 6 குறும் படங்களின் அறி முக நிகழ்வும் சுதுமலை சிந்மய பாரதி வித் தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சுதுமலை அம்பாள் விளையாட்டுக்கழக த்தின் அனுசரணையில் இந்த வெளயீட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

குறித்த விளையாட்டுக்கழகத் தலைவர் இ.ரஞ் சித் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பண்டிதர் க.ஈஸ்வரபிள்ளை பிரதம விருந் தினராகவும் சுதுமலை சிந்மயபாரதி வித்தி யாலய ஓய்வு பெற்ற உபஅதிபர் திருமதி க.சிவ சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் பாடகர் எஸ்.ஜி.சாந் தன் மற்றும் நல் லூரான் பிக்சர்ஸ் இயக் குநர் க.மாறகன் ஆகி யோர் கௌரவ விருந்தி னரகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-4)

## தியானப்பயிற்சி

யாழ்ப்பாணம் சின்மயா மிஸன் வழங்கும் தியானப்பயிற்சி நல் லூர்.செட்டித்தெரு ஒழுங்கையில் உள்ள சின்மய ஞானவேல் மண்ட பத்தில் இன்று காலை 6.30 தொடக்கம் 7.30 வரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நான்கு நாள்கள் இடம்பெறும் தியானப்பயிற்சியை வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் வழங் கவுள்ளார். பயிற்சியில் ஆர்வமுள்ளோரைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

**மூன்று வீடுகள் வாடகைக்குண்டு**
யாழ். கச்சேரிக்கு அருகில்
(பிரிட்டிஸ் கவுன்ஸில் மற்றும் இந்தியன் எம்பசிக்கு அருகில்)
*. 6 அறை, 2 பெரிய hall, Attached bathroom, A/C, வாகனங்கள் நிறுத்தக் கூடிய வீடு நிறுவனங்களுக்கு நீண்ட கால ஒப்பந்தத்தில் வழங்கப்படும்.
*. 4 அறைகள் கொண்டது முழுமையாக மாபிள் பதிக்கப்பட்டது.
*. 2 அறைகள் கொண்டது முழுமையாக மாபிள் பதிக்கப்பட்டது.
T.P: 077 028 9212
(45262) (10.14)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சபாரத்தினம்



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாக வும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சபாரத்தினம் கடந்த (24.02.2014) அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் கனகசபை - அன்னம்மா தம்பதி யரின் அன்புமருமகளும் ஜெனீஸ்வரி, கமலா தேவி ஞானசௌந்திரி சுலோஜனா, நகுலேஸ் வரி, புவனேஸ்வரி, சிவனேஸ்வரி ஆகி யோரின் பாசமிகு தாயும் சிவஞானம், சின்னத் தம்பி, குலசிங்கம், ரவீந்திரகுமாரன், தன பாலன், ரவீந்திரன், ரகுபதி ஆகியோரின் அன்புமாமியும் அன்ன பூரணம், கமலாதேவி காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பத்மநாதன், செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவிலும் இத்துயரநிகழ்வு அளவெட்டியில் உள்ள மருமகனாகிய கணபதிப்பிள்ளை சிவஞானம் இல்லத்திலும் நாளை (03.03.2014) திங்கட்கிழமை நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளளவும்.

டச்சு றோட் அளவெட்டி,
தொ.பே. 021 3737099

தகவல்:
க.சிவஞானம் (மருமகன்),
மணி (மகன்), கமலி (மகள்), சுசிலா (மகள்)

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை வைரமுத்து

(இளைப்பாறிய ஆசிரியர், யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி)



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை வைரமுத்து நேற்று (01.03.2014) சனிக் கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங் கரப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகனும், காலஞ்சென்ற சேதுநாயகியின் பாசமிகு கணவரும், அருட்செல்வன் (கட்டடக் கலை ஞர் - கனடா), சிவச்செல்வன் (பொறியியலா ளர் - லண்டன்), கலைச்செல்வி (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், யாமினி (டாக்டர் - கனடா), ஜமுனா (லண்டன்), கிரிதரன் (கட்டடக்கலைஞர் - கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஆஷாபிருந் தினி, டனியாஹரினி, மிதுன், கிருத்தி, சேதுனா, தமயந்தி, தீபிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற மீனாட்சிப்பிள்ளை மற்றும் சிவசம்பு (கனடா), காலஞ்சென்ற சின்னையா மற்றும் வள்ளியம்மை ஆகி யோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி வடக்கு - மீசாலை, மருதடிவீதி, ''தேவபுரி'' இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மருதடி வீதி,*
*சாவகச்சேரி வடக்கு,*
*மீசாலை.*

(2.6.3)(29776)

தகவல்:
குடும்பத்தினர்.

## சம்பளத்தை உயர்த்த கோரிக்கை

வவுனியா, மார்ச் 2

பாதுகாப்பு அற்ற ரயில்வேகடவைகளில் கடமையாற்றும் ஊழி யர்களின் ஊதியத்தை அதிகரிக்கமாறு கோரி க்கை விடுக்கப்பட்டுள் ளது.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை 15 மேற்பட்ட கடவைக ளில் 45 இற்கு மேற் பட்டவர்கள் கடமை யாற்றுகின்றனர். இவர் களுக்கு 7500 ரூபா மாத சம்பளமாக வழங்கப் படுகிறது. இந்த சம் பளம் போதாதெனக் கூறியுள்ள ஊழியர் கள் அதனை அதிக ரித்து வழங்குமாறு கோரிக்கை விடுத்துள் ளனர். (ஐ-402)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கோபாலசிங்கம்



அச்செழுவைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கோபாலசிங்கம் நேற்று (01.03.2014) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கோபாலசிங்கம் தர்மகுலராணியின் அன்புக் கணவரும், சுதர்சன் தவநந்தினியின் பாசமிகு தந்தையாரும், சச்சிதானந்தமூர்த்தி சுதர்சன் (கிராம அபிவிருத்தித் திணைக்களம் - வ.மா) அவர்களின் மாமனாரும், காலஞ் சென்றவர்களான அருணாசலம் - மகேஸ்வரி, இராசரட்ணம் - இலட்சுமிப்பிள்ளை, நாகலிங்கம் - சிவசுப்பிரமணியம் மற்றும் நாகலிங்கம் - விஜயரத்தினம் (பின்லாந்து), நாகலிங்கம் - வெற்றிவடிவேல், ஏரம்பமூர்த்தி - மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நடராசா - மகேந்திரன் (கனடா), நடராசா - தவேந்திரன் (கனடா), நடராசா - லோகேஸ்வரன் (ஈசன் - கொழும்பு), புவனகுமார் - பத்மகுலராணி (கனடா), பாஸ்கரன் - வசந்தகுலராணி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (45268)(12.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆங்கிலத்தில் விசேடத்துவம் பெற்ற நிபுணர் ஒருவரை நீங்கள் சந்திக்கும் வரை உங்கள் ஆங்கிலத் தேவையை நீங்கள் அறிய மாட்டீர்கள். ரூ. 800/-மாத்திரம் செலுத்தி பரிந்துரைக்கப்பட்ட எமது விரிவான ஆங்கிலப் பரிசோதனையைப் பின்பற்றுங்கள். ஆரோக்கியமான ஆங்கிலத்திற்கு **British Council** க்கு பிரவேசியுங்கள்.

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 3
T +94 (0)11 7521 521

88/3 கொடுகொடல்ல வீதி, கண்டி
T +94 (0)81 2222 410

70 நக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
T +94 (0)21 7521 521

கொழும்பு / கண்டி: உங்கள் நேரத்தை ஒதுக்கிக்கொள்ள உடன் அழைக்கவும். யாழ்ப்பாணம்: 2014 மார்ச் 22 அல்லது அதன் பின்னர் அழைக்கவும்.

E info.lk@britishcouncil.org

BRITISH COUNCIL

www.britishcouncil.lk

www.jwt.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு
வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்த ORIGINAL RALEGH BICYCLE (துவிச்சக்கரவண்டி) 3 GEARS உள்ளது. விற்பனைக்குண்டு. விலை ரூபா 8000/=
தொடர்பு: 075 503 2515
(45091)(12.3.4)

## அரிசி ஆலை தேவை
குத்தகைக்கு அரிசி ஆலை தேவை.
தொடர்பு: 075 6433153
(45045)(3.6.3)

## வீடு வாடகைக்குண்டு
இல.114,4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் சகல நவீன வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:077 244 8489 (45139)(3.6.4)

## வீடு விற்பனைக்கு
யாழ்.கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள 3 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
(45150)(4.6.3) தொடர்பு: 077 614 6434

## வீடுவளவு விற்பனைக்கு
சாவகச்சேரி வீதி, அல்லாரை தெற்கு, கொடிகாமத்தில் 6 பரப்பு 3 குழியுடன் கூடிய காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 285 5860 (29782)(7.6.3)

## விற்பனைக்கு
யாழ். கொழும்புத்துறை 2ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணியும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 907 9464 (44994)(7.6.3)

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், அரியாலை கண்டி வீதியில் (புங்கன்குளம் சந்திக்கு அருகில்) ஒரு பரப்பு 14 குழி காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:021 321 1393, 077 687 3150
(45070)(3.6.4)

## வேலையாள் தேவை
புத்தகசாலை ஒன்றுக்கு வேலை செய்ய 18-25 வயதுக்கு இடைப்பட்ட பணியாளர் ஒருவர் தேவை. பண்டத்தரிப்பை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு,
தொடர்பு:077 990 5546 (45105)(3.6.4)

## தேவை
யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் Food Centre கொத்துரொட்டி, பிரைட்ரைஸ், பிரியாணி சமைக்கத் தெரிந்த சமையற்காரர் தேவை. 077 230 6642/021 224 1731 என்றஇலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

## பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணம், அளவெட்டியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து 80 வயதான தாயாரை பராமரிக்கவும், சமையல் மற்றும் வீடு வளவைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும் 35 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 940 1002 (சி/12287)(7.6.3)

## கார் விற்பனைக்கு
19- XXXX தொடர்இலக்கமுடைய நிசான் கார், சில்வர் நிறம், B-13 நிசான்சனி மொடல், ACPS நல்ல நிலையிலுள்ள கார் விற்பனைக்குண்டு.
(43190)(12.6) தொடர்பு:071 172 1723 - வவுனியா.

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி-நல்லூர் வீதியில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (45149)(3.6.4)
தொடர்பு: 077 614 6434

## பணிப்பெண் தேவை
வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் ஒருவரை உடன் எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு: 078 715 4715 (43192)(3.6.4)

## வெளிவந்து விட்டது...
அக்கரைப்பற்று I.L.M ஸபான் ஆசிரியரின் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான
**புதிய பூங்கா கணிதம்**
(25மாதிரி வினாத்தாள் தொகுதி விடைகளுடன்)
**இலகு பயிற்சி-இலகு வெற்றி**
புத்தகசாலைகள், பாடசாலைகள், கல்வி நிறுவனங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
(45120)(3.6.4) MAPCO வெளியீடு:077 613 9307

## மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1974 இல் பிறந்த பூராடம் 4 ஆம் பாதம் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு:077 935 7105
tharmeswaran@g.mail.com (45138)(3.6.4)

## கடை வாடகைக்கு
யாழ்.கே.கே.எஸ். வீதி மிட்டாசு கடைச் சந்தியில் கண்ணாடிப் பிற்றிங்குடன் காட்சி அறை வாடகைக்குண்டு. (45161)(3.6.4)
தொடர்பு: 077 225 9798

## வீடு வாடகைக்கு
சாவகச்சேரி, சங்கத்தானையில் இந்துக் கல்லூரிக்கு அண்மையாக மூன்று அறைகள், ஒரு விறாந்தை, குசினி, குளியலறை வசதிகளுடன் நல்ல சூழலில் வீடு வாடகைக்குண்டு.
(45172)(12.6) தொடர்பு: 077 771 1449

## Car விற்பனைக்கு
Toyota Corsa GJ-xxxx, 2001 Reg. மிகவும் நல்ல நிலையில் உள்ளது.
-நல்லூர்.
(45198)(3.6.4) T.P:077 662 1884

## வீடு வாடகைக்கு/குத்தகைக்கு தேவை
500-1000 சதுர அடி கொண்டதும் யாழ்ப்பாண நகர எல்லைக்குட்பட்டதுமான வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. ஹெல்த் (Health) கிளினிக் நடத்துவதற்கு பொருத்தமாயிருத்தல் விரும்பத்தக்கது.
தொடர்பு:077 776 8370
(C/12269)(3.6.4)

## ஜோதிடம்
துல்லியமான முறையில் ஜாதகம் பார்த்து பலன்கள் சொல்லப்படும்.
தொடர்பு: 077 264 3316
(45251)(3.6.4)

## வேலைக்கு ஆள்கள் தேவை
கொழும்பில் பெண் ஒருவர் தலைமையின் கீழ் வீட்டில் இருந்து கேக் ஓடர் தயாரிப்பில் ஈடுபடுவதற்கும் மற்றும் வீட்டில் சமையல் வேலைகளில் ஈடுபட ஆர்வமுள்ள, அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் 18 - 55 வயதுக்குட்பட்ட பெண்கள் தேவை.
(45182)(12.3.6) மேலதிக விவரங்களுக்கு: 077 756 3627

## காணி விற்பனைக்கு
சாவகச்சேரி தபாற்கந்தோருக்கு முன்பாக 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 642 8502 / 077 813 1599
(29789)(3.6.4)

## மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1981 பூரட்டாதி முதலாம் பாதம், 36 பாவம், U.K சிற்றிசன் சிவில் எஞ்சினியராக U.K இல் வேலை செய்யும் மணமகனுக்கு U.K இல் P.R. அல்லது Student Visa அல்லது உள்ளூர் மணமகள் தேவை.
தொடர்பு:
(45181)(12.3.6) 021 205 7041 /0044 7414 299 901

## காணி கட்டடம் விற்பனைக்கு
நகரின் மத்தியில் 2 பரப்பு விஸ்தீரணமுள்ள 3500 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ள மாடிக்கட்டடம் விற்பனைக்குண்டு. மேற்பகுதி வீடாகவும், கீழ்ப்பகுதி காட்சியறையாகவும் உபயோகிக்கலாம்.
தரகர்தேவையில்லை.
தொடர்பு: 071 777 5111
(சி/12330)(3.6.4)

## காணி கட்டடம் விற்பனைக்கு
நகரின் மத்தியில் 3½ பரப்புக்கு மேல் விஸ்தீரணமுடைய காணியுடன் கூடிய அலுவலகத்திற்கு உபயோகமான கட்டடம் விற்பனைக்குண்டு.
தரகர்தேவையில்லை.
தொடர்பு: 071 777 5111
(சி/12330)(3.6.4)

## குருக்கள் தேவை
வவுனியாவிலுள்ள பிரசித்திபெற்ற அம்மன் கோயிலுக்கு மூன்று வேளை பூசையுடன், விசேட தினங்களுக்கான அபிஷேக ஆராதனைகள் மற்றும் திருவிழாக்கால கிரியைகள் யாவும் நடத்தக்கூடிய குருக்கள் தேவை. தங்குமிடவசதியுண்டு.
(43188)(12.3.6) தொடர்பு: 077 453 6519

## வாடகைக்கு
இல. 8, புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் மற்றும் தனி அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 011 250 4281/077 183 2404 (சி/12271)(7.6.3)

## வாடகைக்கு/குத்தகைக்கு
யாழ்ப்பாணம், கோப்பாயில் 1300 சதுர அடிக்கு மேற்பட்ட விஸ்தீரணமுடைய நீர், 3 Phase மின்சார வசதி யுடன் பாதுகாப்பான சுற்றாடலில் (பொலிஸ் அருகில்) அமைந்துள்ள களஞ்சியம் வாடகைக்கு/குத்தகைக்கு உண்டு. விவசாய/பொதுவான களஞ்சியம் தொழிற்சாலைகளுக்கு உகந்தது.
தொடர்பு: 545, ஸ்ரீரங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
011 242 1668/011 242 1669 (சி/12268)(7.6.3)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
HONDA CD-125 BENLY, பதிவு இலக்கம் GZ-xxxx, ON LIGHT, 5 GEARS உடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777 120 229 (45189)(10.6.3)

## கடை வாடகைக்கு
ஆஸ்பத்திரி வீதியில் நியூ மார்க்கற்றுக்கு முன்னால் 185 அடி நீளமுடைய கடை வாடகைக்குண்டு.
எல்லாவிதமான வியாபாரத்திற்கும் ஏற்றது.
தொடர்பு: 077 059 6858 (45255)(3.6.4)

## நிரந்தர தொழில்
கொழும்பு துறைமுகம் விமானநிலையம் (தனியார்) வேலைவாய்ப்புக்கள் கப்பல் புனர்நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர்கள்/வெல்டர்/தச்சர் மற்றும் விமானநிலையத்தில் சுத்திகரிப்பாளர் காகோ/லொன்றி போன்ற பிரிவுகளுக்கு 18-45 ஆண்,பெண் தேவை.
சம்பளம் 17000/=, 25000/=, 38000/= உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும்.
(43197)(12.3.6) தொடர்புகளுக்கு: 077 556 1883

## தேவை
கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவரா? தெஹிவளை/கண்டி/கம்பஹா/யாழ்/மாங்குளம்/கொழும்பு ஆகிய பிரதேசங்களில் மேசன்/தச்சன்/பெயின்டர் (1200/=, 1500/=) கை உதவி ஆள்களுக்கு (900/=, 1100/=) ஆள்கள் தேவை.
(43198)(12.3.6) தொடர்புகளுக்கு: 077 556 1883

## தொடர்பு கொள்ளவும்
கிளிநொச்சி, வவுனியா, வன்னி மாவட்டங்களில் அந்திமக்கிரியை, அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்விப்பதற்கு சைவக் குருக்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
99, கச்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
9/1, கோயில் வீதி, தருமன்காடு காளி கோயில் திருமண மண்டப பின்புறம், வவுனியா.
வவுனியாவில் ஓதுவார் ஒருவர் தேவை.
தொடர்பு:077 601 6649, 024 222 1075,
(44051)(3.6.4) 024 490 7125, 024 490 7603




## வேலைவாய்ப்புக்கள்
01. சாவகச்சேரி நுணாவிலில் இயங்கி கொண்டிருக்கும் சிவா எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு (IOC) எரிபொருள் நிரப்புநர்கள் (Pumpers) தேவை.



தகைமை:
I. க.பொ.த. சாதாரண தரம் படித்தவர்கள்.
II. சாவகச்சேரி பிரதேசத்தில் வசிப்பவர்கள்.
III. ஆண்கள் மட்டும்.

02. சாவகச்சேரி மற்றும் நுணாவிலில் ஆரம்பிக்கஇருக்கும் சுப்ப மார்க்கற்றுக்கு(Super market) காசாளர் (Cashier) தேவை.
தகைமை: I. க.பொ.த.சாதாரணதரம் சித்தி
II. கணினி அறிவு அவசியம்
III. ஆண்கள் மட்டும்.



03. பொதி செய்யக்கூடியவர்கள் தேவை.



தகைமை:
I. தங்கி நின்று வேலை செய்வது அவசியம்
II. ஆண்கள் மட்டும்
III. வயதெல்லை 18-25

இவ்வேலைவாய்ப்புக்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் உரிய ஆவணங்களுடன் சுயவிவரக்கோவையை 08.03.2014 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
**சிவா எரிபொருள் நிரப்பு நிலையம்**
278, கண்டி வீதி, நுணாவில், சாவகச்சேரி.
077 784 9207
(45261)(3.6.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபையின் கவனவீனம் காரணமாகவே நெடுந்தீவில் 12 வயதுச் சிறுவன் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 02

மின்சார சபையினரின் கவனவீனம் காரணமாகவே நெடுந்தீவில் 12 வயதுச் சிறுவன் மின்சாரத்தாக்குதலுக்கு உள்ளாகி பரிதாபகரமாக உயிரிழுந்தான் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொலிஸாரின் கவனவீனம் காரணமாக இரண்டு நாள்களாகச் சடலம் சம்பவ இடத்திலேயே இருந்த நிலையில் நேற்று விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நெடுந்தீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மங்களதாஸ் யதுசன் (வயது-12) என்ற சிறுவனே கடந்த வியாழக்கிழமை சிவராத்திரி தினத்தன்று பிற்பகல் இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தான்.

குறித்த பகுதியில் மின்சாரத் திருத்தப் பணி இடம்பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து மின்சாரக் கம்பம் ஒன்றைக் கம்பியால் இழுத்துக் கட்டி அதன் மறுமுனையைப் பனை மரம் ஒன்றில் நிலத்திலிருந்து சுமார் ஒன்றரை அடி உயரத்தில் கட்டியுள்ளனர் மின்சார சபையினர். அந்தப் பகுதியிலிருந்து மறுபகுதிக்குச் செல்வதற்குக் குறுக்குப்பாதையாக அந்தப்பாதையை அப்பகுதியிலுள்ளவர்கள் பயன்படுத்தி வந்தனர். அவ்வாறு கம்பி கட்டிய பின்னர் சுமார் இரண்டு வாரங்களாக அந்தக் கம்பியைக் கடந்து நடந்து சென்று வந்துள்ளான் அந்தச் சிறுவன்.

கடந்த வியாழக்கிழமை மழை பெய்தமையால் இழுத்துக் கட்டப்பட்டிருந்த மின்கம்பம் சரிந்து மின்சாரம் பாயும் கம்பியில் சாய்ந்துவிட்டது. அது தொடர்பில் உரிய அதிகாரிகளும் கவனம் செலுத்தியிருக்கவில்லை. அதனால் இழுத்துக் கட்டிய கம்பி வளியாக மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்துள்ளது. அதனை அறிந்திராத குறித்த சிறுவன் வழமை போன்று அந்த வழியே கம்பியைக் கடக்க முற்பட்டபோதே கால் ஊடாக மின்சாரம் தாக்கிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். கம்பியில் கால் பட்ட இடம் எரிந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை சிவராத்திரி தினத்தன்று பிற்பகல் 5.30 அளவில் கோயிலுக்குப் புறப்பட்டுச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. எனினும் சிறுவன் கோயிலில் தங்கிவிட்டதாக நினைத்துத் தாயார் வீட்டில் இருந்துள்ளார். சிறுவனின் தாயாரும் சுகவீனமுற்றவர். தந்தையார் முன்னர் இடம்பெற்ற விபத்தில் சிக்கி உயிரிழந்து விட்டார். மற்றொரு சகோதரரும் அவருக்கு உள்ளார். மறுநாள் காலையே சிறுவன்சடலமாகக் கிடக்கக் காணப்பட்டான். அது தொடர்பில் நெடுந்தீவுப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவத்தை அடுத்து மின்சார சபை பொறியியலாளர் நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி விட்டார்.

பொலிஸார் அது தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு உடனடியாக அறிவித்திருக்கவில்லை. நேற்று முன்தினம் இரவே ஊர்காவற்றுறைப் பதில் நீதிவானுக்கு பொலிஸார் அறிவித்துள் ளனர். அதனால் நேற்றுக் காலையே அங்கு சென்று விசாரணை நடத்த முடிந்தது. விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மின்சார சபைப் பொறியியலாளரைச் சம்பவ இடத்துக்கு வருமாறு கூறியிருந்த போதும் அவர் அங்கு செல்லவில்லை.

இது தவிர பொலிஸார் நேற்றுக் காலை சட்டவைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன் மற்றும் தீடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் ஆகியோரை அழைத்துச் செல்லச் சென்றிருந்தபோதும் வாகனம் கொண்டு சென்றிருக்கவில்லை. அதனால் சிறிது நேர இழுபறியின் பின்னரே வாகனம் ஒழுங்குபடுத்தப்பட்டு அவர்கள் புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் என்ன காரணத்துக்காக அவ்வாறு கவனவீனமாகச் செயற்பட்டார்கள் என்பது தெரியவரவில்லை. (த-4)

# நான்கு இலங்கை அகதிகள் புழல் சிறைக்கு மாற்றம்

சென்னை, மார்ச் 2

இலங்கைத் தமிழ் அகதிகள் நால்வர் திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னை புழல் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை திருச்சி சிறப்பு முகாமில் அரச அதிகாரிகளை துஷ்பிரயோகத்துக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, இலங்கைத் தமிழர்கள் நான்கு பேரும் கைது செய்யப்பட்டனர்.

உதயாஸ், பகீரதன், கங்காதரன் மற்றும் நேரு என்கிற ஈழ நேரு ஆகியோரே கைது செய்யப்பட்டுப் பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் புழல் சிறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

சிறப்பு முகாமுக்கு வருகை தந்திருந்த நைஜீரியத் தூதரக அதிகாரிகளை உள்ளே வைத்து பூட்டியதாக கே.கே. நகர் பொலிஸாரால் குறித்த நான்கு தமிழர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், நான்கு பேரையும் மார்ச் 12 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (த)

# வீட்டிலிருந்து சென்ற சிறுவனை காணவில்லை

வீட்டிலிருந்து சென்ற சிறுவனை காணவில்லையென வவுனியா கனகராயன் குளம் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாங்குளம் குஞ்சுக்குளம் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

முற்பகல் 11.30 மணிக்கு அருகில் உள்ள ஏ -9 வீதிக்கு சிறுவன் சென்றதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் -6 இல் கல்வி பயிலும் ஞானசேகரம் டிலக்சன் (வயது -12) என்ற சிறுவனையே காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது.

சிறுவனைக் கண்டால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது கனக ராயன் குளம் பொலிஸ் நிலையத்துக்கோ தகவல் தெரிவிக்கும்படி கனகராயன்குளம் பொலிஸார் அறிவித்துள்ளனர். (த-18)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சர்வதேச

அழைப்புக்கு தாம் ஆதரவளிப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த இராஜதந்திரியும், ஐ.நாவுக்கான அமெரிக்காவின் நிரந்தரத் தூதுவருமான சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல், போர்க் குற்றங்கள் தொடர்பில் நம்பகத் தன்மை வாய்ந்த விசாரணை நடத்தப்படவில்லை. இதனால் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் அமெரிக்க மூத்த அதிகாரி சமந்தா பவர் தனது ருவிட்டரில், இலங்கையில் ஜனநாயக ஆட்சி முறைக்கும், மனித உரிமைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். மத வன்முறைகள் அதிகரித்துள்ளன. மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்தவேண்டும் என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் விடுத்துள்ள அழைப்புக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று, தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் தமது ருவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில்,

இலங்கையில் நல்லிணக்கம் அல்லது போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூறுவது அல்லது நீதி வழங்குவதில் எந்த முன்னேற்றமும் ஏற் படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (த-5)

### இலங்கைக்

கையைமேற்கொண்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 4 பேர் கடந்த மாதம் முதலாம் திகதி கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு மீன்களையும் பறித்துக் கொண்டு சென்றனர்.

இது குறித்து பாதிக்கப்பட்ட படகு உரிமையாளர் சகாயராஜ் சம்பவம் இடம்பெற்ற மறுநாளே இராமேஸ்வரம் பொலிஸ் நிலையத்தில் இலங்கைக் கடற்படையினருக்கு எதிராக முறைப்பாடு கொடுத்தார். இந்த நிலையில் 27 நாள்களுக்குப் பிறகு இராமேஸ்வரம் பொலிஸார் இலங்கைக் கடற்படையினர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இதே போன்று கடந்த மாதம் 3 ஆம் திகதி மீன்பிடிக்கச்சென்ற பாம்பன் மீனவர் ஜோன் பிறிட்டோ என்பவரின் வலைகளை இலங்கை மீனவர்கள் 20 இற்கும் மேற்பட்டோர் அபகரித்துச் சென்றனர். இது குறித்துப் பாம்பன் காவல் நிலையத்தில் கடந்த 5 ஆம் திகதி இலங்கை மீனவர்கள் மீது பிறிட்டோ முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் இலங்கை மீனவர்கள் மீது 23 நாள்களுக்குப் பின்னர் பாம்பன் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (த-5)

### மஹிந்தவுக்கான

யப்பட்டுள்ள பிரார்த்தனையில் பங்கேற்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரிட்டன் நாடாளுமன்றத்தின் பிரபுக்கள் சபையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை மற்றும் அது தொடர்பான பிரிட்டனின் நிலைப்பாடு குறித்து விவாதம் இடம்பெற்றது. இதன் போது பிரிட்டன் தொழிற் கட்சியை சேர்ந்த பவுஸ்கஸே, ஜனாதிபதி மஹிந்தவின் அழைப்புக் குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என வலியுறுத்தினார்.

இலங்கையின் பயங்கரமான மனித உரிமைகள் நிலை குறித்து இங்கு விபரிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் இதில் பங்கேற்பது விந்தையானது. ஏற்கனவே ஸ்கொட்லாந்திலுள்ள அமைப்புகள் பல கோரிக்கை விடுத்துள்ள நிலையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்தவுக்கான அழைப்பைப் பிரிட்டன் ஏன் மீள்பரிசீலனை செய்யக் கூடாது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (த-5)

### இலங்கையில்

கொழும்பில் உள்ள ஐ.நா. குழுவினர் பல்வேறு விடயங்களைத் தலைமையகத்துக்கு அறிவித்துள்ளபோதும் அவர்கள் ஊடகத் தணிக்கை மற்றும் தடை பற்றி குறிப்பிட்டிருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் உள்ள ஐ.நா குழுவுடன் எனக்கு தற்போது நேரடியான தொடர்புகள் இல்லை. இதனால் என்னால் உங்கள் கேள்விகளுக்கு உடனடியாகப் பதிலளிக்க முடியாது. கருத்துச் சுதந்திரம் மிகவும் முக்கியமானது என்பதை ஐ.நா. செயலாளர் பான் கி மூன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளமையை பேச்சாளர் சுட்டிக்காட்டினார். (த-5)

### நம்பகமான

பகிர்ந்துள்ளார்.

நவநீதம்பிள்ளையின் அறிக்கை தொடர்பிலும், அதற்குப் பதிலளித்து இலங்கை அரசு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பிலும் நாங்கள் ஆராய்கின்றோம். சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமான சட்டங்கள் கடந்த காலத்தில் மீறப்பட்டுள்ளமை தொடர்பில் இலங்கை சுதந்திரமானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான விசாரணை நடத்தத் தவறியதை, நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை முழுமையாக ஆதரிக்கின்றோம் என்று தெரிவித்த ஸூவைர், சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையைப் பிரிட்டன் ஏற்றுக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரிட்டன் தற்போதுள்ள தனது நிலையைப் பயன்படுத்திச் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை விடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைத்தல், கண்ணிவெடி அகற்றல், சிறுவர் போராளிகளுக்கான புனர்வாழ்வு போன்ற இலங்கை அரசின் நடவடிக்கைகளை வரவேற்கின்றோம். எது எப்படியிருந்த போதிலும், கடந்த காலத்தில் நடந்தேறிய குற்றங்கள் தொடர்பில் நம்பகமான விசாரணைகள் நடத்தப்படாமல் உண்மையான நல்லிணக்கம், நீடித்த சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை என்று தீர்க்கமாக பிரிட்டன் நம்புகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

### முகமது

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில், இலங்கையில் சர்வதேச விசாரணை ஒன்றைக் கோரும் ஒரு தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வரலாம் என்ற நிலைமையில் ஜனாதிபதி ராஜபக்ஷ அரசின் மீதான சர்வதேச அழுத்தம் அதிகரித்துள்ளது.

வொஷிங்ரன் ஏன் ஒரு விசாரணையை வலியுறுத்தியுள்ளது என்பதையிட்டுத் தனக்கு எதுவும் விளங்கவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

இது களியஸ் கிளே என்று [illegible] புகழ்பெற்ற குத்துச் சண்டைச் சம்பியன் முகமது அலியுடன் பாடசாலை மாணவனொருவன் மோதுவது போல உள்ளது' என்று அதனை ஜனாதிபதி வர்ணித்துள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் அழுத்தம் காரணமாக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை பிரிட்டனும் கனடாவும் ஆதரிக்கின்றன. சீனாவும் ரஷ்யாவும் சில சமயம் இந்தியாவும் இலங்கைக்கு ஆதரவு வழங்குமென இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (த-5)

### மூத்த அதிகாரிகளை

திப்படுத்திக் கொள்வதற்கு இந்தப் பயணத்தைப் பிஸ்வால் பயன்படுத்திக் கொள்வார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாத முற்பகுதியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுவிட்டு, ஜெனிவா சென்றிருந்த பிஸ்வால் இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து ஜெனிவாவுக்கான இந்தியத் தூதுவர் திலிப் சின்ஹாவுடன் பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

### ஜெனிவா

இலங்கை தொடர்பான விடயங்களும் சுட்டிக்காட்டப்படும்.

இரண்டாம் வார அமர்வுகள் 10 ஆம் திகதி ஆரம்பமாகும். இதன்போது, விசேட தூதுவர் தொடர்பில் ஆராயப்படும். மூன்றாவது வார அமர்வுகளில் கொரியா தொடர்பிலான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. இறுதி அமர்விலேயே இலங்கை தொடர்பான விடயம் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சர்வதேச விசாரணை கோரும் அறிக்கையை தாக்கல் செய்யவுள்ளார். மறுநாள் 27 ஆம் திகதி இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானம் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (த-5)

### மீண்டும்

நிலையில் தற்போது ஒவ்வொரு நாளும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே பொது மக்களை அவதானமாக இருக்குமாறு மாகாண சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

வடக்கில் யாழ்ப்பாணத்திலேயே டெங்குத் தொற்று அதிகமாகவுள்ளது. கடந்த மாதம் 44 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகிச் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் மாத்திரம் சேர்க்கப்பட்டுள்ளனர். 23 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி ஏனைய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

கிளிநொச்சியில் 8 பேரும் மன்னாரில் ஒருவரும் வவுனியாவில் 11 பேரும் முல்லைத்தீவில் 8 பேரும் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் வடக்கில் 189 பேரும் நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 515 பேரும் கடந்த பெப்ரவரி மாதம் வடக்கில் 95 பேரும் நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 384 பேரும் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர எல்லைக்குள் மாத்திரம் 182 பேரும் மாநகர எல்லைக்கு வெளியே 292 பேருமாகக் கடந்த மாதம் 472 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். நாடளாவிய ரீதியில் கடந்த இரண்டு மாதங்களில் 4 ஆயிரத்து 899 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். எனவே பொது மக்களை டெங்குத் தொற்றிலிருந்து அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்துகின்றனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடுமீன், ராணுவ அணிகள் கிண்ணங்களைத் தமதாக்கின


குருநகர் பாடுமீன் வி.க. அணி


இராணுவ அணி

யாழ்ப்பாணம்,மார்ச் 2
யாழ். உதைபந்தாட்ட லீக்தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே தலைவர் கிண்ணத்துக்காக நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று தலைவர் கிண்ணத்தை சுவீகரித்து கொண்டது. நேற்று சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முற்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு தமது அணிக்கான கோல்களை பெற்றிட வேண்டும் என்று எதிர் அணியினரின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர்.

ஆனால் முற்பாதி ஆட்டத்தின் போது இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும்தமது ஆட்டத்தின்வேகத்தை அதிகரித்து எதிர் அணியின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர்.

இதன்போது பாடு அணி வீரர் எதிர் அணியினரின் கோல் கம்பத்தை நோக்கி அடித்த பந்து அன்ரனீஸ் கோல் காப்பாளரினால் தடுக்கப்பட்டது. இரண்டாம் பாதி ஆட்டத்தின் போதும் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையும் சமநிலை யில் முடிவுற்றது.

இதனால் இரண்டு அணியினருக்கும் தலா ஒரு சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதன்போது அன்ரனீஸ் வீரன் தனக்கு கிடைத்த பந்தைக் கோலாக்கத் தவறினார். பாடுமீன் அணி வீரன் தனக்கு கிடைத்த பந்தை கோலாக்கினார்.

இதனால் ஆட்ட முடிவில் 6:5 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற சம்பியன் ஒவ் சம்பியன் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் விமானப்படை அணியை எதிர்த்து இராணுவ உதைபந்தாட்ட அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என நிருபிக்கும் வண்ணம் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காக கடுமையாக போராடினர். இதன் போது இராணுவ அணிக்கு கோல் பெறும் சந்தர்ப்பம் கிடைத்த போது அதனை அவர்கள் தவற விட்டனர். விமான படை அணி யினரும்தமக்குகிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டனர்.

இதனால் முதற்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாதமையினால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெற எதிர் அணியின் கோல் பரப்பை மாறி மாறி ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆனால் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெற முடியவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் இராணுவ உதைபந்தாட்ட அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுசம்பியன் ஆனது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் உபாலி கேவஹே, யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் றொஹான் டயஸ் மற்றும் விமானப்படை, இராணுவ படை அதிகாரிகள் கலந்துகொண்டனர். (த-23)

## நல்லூர் பிரதேச விளையாட்டு விழா இன்று

வலி. வடக்கு மார்ச் 2
நல்லூர் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் நடத்தப்படும் 2014 ம் ஆண்டுக்கான பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளை யாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் ஆர்.சிவரூபனும்.சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற் கல்விப் பணிப்பாளர்கே.கணேசநாதன், யாழ்ப்பாணப் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஐ.தவேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

பெண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லாரி இளைஞர் சேவைகள் மன்ற அணி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி இளைஞர் சேவைகள் மன்ற அணி.

ஆண்கள் பிரிவில் ஜொலி ஸ்ரார் இளைஞர் சேவைகள் மன்றம் எதிர் நல்லூர் இளைஞர்சேவைகள்மன்றம். (த-86)

## தாச்சிப் போட்டி

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் விசேட அனுமதியுடன் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட கழகங்களுக்கிடையே மின்னொளியில் நடாத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 7.00 மணிக்கு கோண் டாவில் மறுமலர்ச்சி விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலிட்டி பாரதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (த-288)

# யங் ஹென்றிஸ் வசமானது கிண்ணம்



## நண்பர்களின் துடுப்பாட்டம்

வலி. வடக்கு மார்ச் 2
தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி,சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிஆகியவற்றின் பழைய மாணவர்களுக்கு இடையே 14ஆவது ஆண்டாக நடைபெறும் நண்பர்களின் போர் துடுப்பாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் சிவசுப்பிரமணியம் சிவபாலாவும்.சிறப்பு விருந்தினராக ஸ்கந்தவரோதயாக் கல்லாரியின் முன்னாள் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஜெ.ஜெயமோகனும் கலந்து கொள்வர். (த-86)

வலி.வடக்கு, மார்ச் 2
வலிகாமம் உதைபந்தாட்ட லீக், இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக தனது லீக்கிற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்தி வந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியனாகியது.

இறுதிப்போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழக அணி 7:1 என்ற கோல் கணக்கில் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணியை வென்றது.

விலகல் முறையில் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினைச் சேர்ந்த 29 உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றியிருந்தன.

அரையிறுதி ஆட்டங்களில், இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் குப்பிளான் குறிஞ் சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியினையும், சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணியையும் வென்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.


இளவாலை யங் ஹென்றிஸ் அணி

இறுதிப்போட்டி கடந்த வெள்ளி [illegible] ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆட்டம் தொடங்கிய நிமிடம் முதல் யங்ஹென்றிஸ் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற அவ்வணி அடுத்தடுத்து கோல்களைப் போட்டு போட்டியினை முழுமையாகத் தமது கை [illegible]

முதல் பாதியாட்டத்தில் யங் ஹென்றிஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் அதிக கோல்கள் தமக்கெதிராக அடிக்கப் படக்கூடாது என்றவாறு கல்வளை விநாயகர் அணி முனைப்புடன் செயற்பட்டது. இதனால் யங்ஹென்றிஸ் அணியினரின் கோல்கள் அடிக்கும் பல சந்தர்ப்பங்கள் கல்வளை விநாயகர் அணியின் பின்கள வீரர்களினால் தடுக்கப்பட்டன.

இருந்தும் அவ்வாறு போடப்பட்ட தடைகளையும் மீறி யங் ஹென்றிஸ் அணி 2 கோல்களைப் போட்டது. ஆட்டத்தின் இறுதி நேரத்தில் ஆறுதலளிக்கும் வகையில் கல்வளை விநாயகர் அணி ஒரு கோலினைப் பெற்றுக்கொண்டது.

இறுதியில் யங்ஹென்றிஸ் அணி 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் தொடர்நாயகனாக யங் ஹென்றிஸ் அணியின் அ.டிலக்சனும், இறுதிப் போட்டியின் நாயகனாக இறுதிப் போட்டியில் 4 கோல்களை அபாரமாகப் போட்ட செ. ஞானரூபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற அணி மற்றும் சிறந்த வீரர்களுக்கான பரிசில்களை இலங்கை கால்ப் பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக் கோ, செயலாளர் உபாலி ஹேவகே, நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுர டி சில்வா ஆகியோர் வழங்கினார்கள். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7ஆவது ஐ.பி.எல் தொடர் எங்கே ?

7ஆவது ஐ.பி.எல் தொடரை இந்தியா, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் நடத்த இந்தியக் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

7ஆவது ஐ.பி.எல் போட்டிகள் ஏப்ரல் 9ஆம் திகதி முதல் ஜூன் 3ஆம் திகதி வரை நடக்க உள்ளன.

இதே காலகட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலும் நடப்பதால், பிரிமி யர் தொடருக்கு பாதுகாப்பு அளிக்க முடியாது என மத்திய அரசு கைவிரித்தது.

இது குறித்து விவாதிக்க ஒரிசாவில் உள்ள புவனேஸ்வரில் இந்திய கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டம் நேற்று நடந்தது.

இதில் மே 15 க்குள் வாக்கு எண்ணிக்கை முடியும் பட்சத்தில் 3 முதல் 5 சுற்றுப் போட்டிகளைப் பங்களாதேஷ் அல்லது ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்துவது என திட்டம் வகுக்கப்பட்டது. மீதமுள்ள போட்டிகள் இந்தியாவில் நடக்கும்.

இது குறித்து செயற்குழு உறுப்பினர் ஒருவர் கூறுகையில், மே மாதம் முழுவதும் நாடாளுமன்றத் தேர்தல் பணி தொடர்ச்சியாக நடந்தால், தென்னாபிரிக்க மண்ணில் பிரிமியர் தொடர் முழுமையாக நடக்கும்.

ஒருவேளை மே 15 க்குள் வாக்கு எண்ணிக்கை முடிந்து விட்டால், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அல்லது பங்களாதேஷில் தொடரை நடத்துமாறு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். மீதிமுள்ள போட்டிகளை இந்தியாவில் நடத்திக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக த் தெரிவித்துள்ளார்.


இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவர் சீனிவாசன் கூறுகையில், நாடாளுமன்றத் தேர்தல் திகதி இன்னமும் அறிவிக்கப்படவில்லை. இதன் பின்தான் ஐ.பி.எல் தொடர் நடக்கும் இடம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும். தேவைப்பட்டால் வெளிநாடுகளில் சில போட்டிகள் நடக்கலாம். இப்போட்டிகளை நடத்த தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் ஆர்வமாக உள்ளன என்று தெரிவித்துள்ளார். (கு)

## இங்கிலாந்து மூன்றாமிடம்

19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணி மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது. ஆஸ்திரேலியா அணியை ஓர் இலக்கினால் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாடிய ஆஸ்திரேலியா அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பென் மக்டெமொட் 56 ஓட்டங்களையும் மத்தியூ சோர்ட் 41 ஓட்டங்களையும் பெற்றனர். எட் பேர்னாட் 3 இலக்குகளைப் பந்துவீச்சில் கைப்பற்றிக் கொண்டார்.

இங்கிலாந்து அணி 49.4 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் பென் டக்கட் 100 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பென் அஸ்கெனாசி 3 இலக்குகளைக் கைப்பற்றிக் கொண்டார். (கு)



# மேற்கிந்திய தீவுகள் அபாரம்

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 15 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பொறுப்பாக ஆடிய இங்கிலாந்து வீரர் மைக்கல் லம்ப் சதம் வீணானது. இங்கிலாந்துக்குச் சென்றுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி, இங்கிலாந்து அணியுடன், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி ஆன்டிகுவாவில் நேற்று முன்தினம் நடந்தது.

அதில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்டுவர்ட் புரோட் களத்தடுப்பினைத் தெரிவு செய்தார். மேற்கிந்திய தீவுகள் அணிக்குப் பவல் (5) மோசமான ஆரம்பம் கொடுத்தார். மற்றொரு ஆரம்ப வீரர் டுவைன் ஸ்மித் (24) பெரிய அளவில் சோபிக்கவில்லை. அடுத்து வந்த கிர்க் எட்வர்ட்ஸ் (10), டரன் பிராவோ (2) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். ஒரு கட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி 45 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து திணறியது.

பின்னர் இணைந்த சிம்மன்ஸ், அணித் தலைவர் டுவைன் பிராவோ ஜோடி ஆட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டது. இங்கிலாந்து பந்து வீச்சை எளிதாக சமாளித்து, இலக்குச் சரிவிலிருந்து அணியை மீட்டனர்.

பொறுப்பாக ஆடிய சிம்மன்ஸ், ஒருநாள் அரங்கில் தனது 14ஆவது அரைசதம் அடித்தார். ஐந்தாவது இலக்குக்கு 108 ஓட்டங்களை சேர்த்த போது சிம்மன்ஸ் (65) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த டரன் சமியுடன் இணைந்த டுவைன் பிராவோ, ஒருநாள் போட்டியில் தனது 10 ஆவது அரைச் சதத்தைப் பதிவு செய்தார். மறுமுனையில் இவருக்கு ஒத்துழைப்பு தந்த டரன் சமியும் தன்பங்குக்கு அரைச்சதம் அடிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது. ஆறாவது இலக்குக்கு 116 ஓட்டங்கள் சேர்த்த போது சமி (61) ஆட்டமிழந்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குக்கு 269 ஓட்டங்களை எடுத்தது. டுவைன் பிராவோ (87) ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து சார்பில் டிம் பிரஸ்னன் அதிக பட்சமாக 3 இலக்குகளை வீழ்த்தினார்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு, அறிமுக வீரர்களான மைக்கல் லம்ப், மொயின் அலி ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. முதல் இலக்குக்கு 96 ஓட்டங்கள் சேர்த்தபோது மொயின் அலி (44) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த லூக் ரைட் (1) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய மைக்கல் லம்ப், அறிமுகப் போட்டியில் சதம் அடித்து அசத்தினார். இவர் 106 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மத்திய தர வரிசையில் களமிறங்கிய பென் ஸ்டோக்ஸ் (5), ஜோ ரூட் (37), ஜாஸ் பட்லர் (12) பெரிய அளவில் சோபிக்கவில்லை. கடைசிப் பந்துப்பரிமாற்றத்தில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு 22 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ரவி ராம்போல் வீசிய 50 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 6 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தன.

இங்கிலாந்து அணி 50 பந்துப்பரிமாற்றத்தில் 6 இலக்குகளை இழந்து 254 ஓட்டங்கள் மட்டும் எடுத்துத் தோல்வி அடைந்தது. ரவி போபரா (23), டிம் பிரஸ்னன் (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர். மேற்கிந்திய தீவுகள் சார்பில் சுனில் நரைன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக டுவைன் பிராவோ தெரிவானார். இந்த வெற்றியின் மூலம், மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது போட்டி ஆன்டிகுவாவில் இன்று நடக்கிறது. (கு)

# தோல்விக்கு காரணம் அதிக பனிப் பொழிவே



இலங்கைக்கு எதிரான ஆசியக் கிண்ணப் போட்டியில் 2 இலக்குகள் வித்தியாசத்தில் இந்திய அணி தோல்வி அடைந்தது.

இது குறித்து அணித்தலைவர் விராட் கோஹ்லி கூறுகையில், எங்கள் பந்துவீச்சாளர்கள் தங்கள் பணியை சிறப்பாகச் செய்தனர். ஆனால் இறுதிக்கட்டத்தில் கடுமையான பனிப் பொழிவு பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

இந்த அளவுக்குப் பனி பெய்யும் என்று நினைக்கவில்லை. ஏனெனில் முந்தைய நாள் பனியின் தாக்கம் அதிகமாக இல்லை. மொத்தத் தில் ஆட்டத்தைக் கடைசிவரை கொண்டு சென்ற பெருமை பந்து வீச்சாளர்களையே சாரும்.

நாங்கள் 30 முதல் 40 ஓட்டங்கள் குறைவாக எடுத்து விட்டோம். ஜடேஜாவின் பந்து வீச்சு அருமையாக இருந்தது. பாகிஸ்தானுக்கு எதிராக நாங்கள் நேர்த்தியாக விளையாட வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

ஆட்டநாயகன் விருது பெற்ற சங்கக்கார கூறுகையில், பனிப் பொழிவு தனது வேலையை எளிதாக்கி விட்டது என்றும், கடைசி வரை களத்தில் நிற்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி விளையாடினேன் எனவும் தெரிவித்துள்ளார். (கு)

# இறுதிப் போட்டியில் பெடரர்



டுபாயில் நடை பெற்றுவரும் டுபாய் டியுட்டி பிறி சம்பியன்சிப் தொடரின் அரை இறுதிப் போட்டியில் சுவிட்சர்சலாந்தின் ரென்னிஸ் வீரர் ரொஜர் பெடரர், சேர்பியா நாட்டின் வீரரும், உலகின் முதல் நிலைவீரருமான நோவாக் ஜோக்கோவிக்கை 2 - 1 என்ற செற் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத்தெரிவாகியுள்ளார். 3-6 , 6-3 , 6 -2 என்ற புள்ளிகளின் அடிப்படையிலேயே பெடரர் வெற்றி பெற்றார்.

இன்னுமொரு அரை இறுதிப் போட்டியில் செக் குடியரசின் தோமஸ் பேடிச் , ஜேர்மனி நாட்டின் பிலிப் கோல்ஸ்ரைபர் உடன் மோதி 2-0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானார்.

இறுதிப் போட்டியில் மூன்றாம் நிலை வீரரான தோமஸ் பேடிச், நான்காம் நிலை வீரரான ரொஜர் பெடரர் ஆகிய இருவரும் இன்று மோதவுள்ளனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுக ஆப்கானிஸ்தான் வெற்றி

நேற்று இடம்பெற்ற ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் அனுபவ அணியான பங்களாதேஷை எதிர்த்து அறிமுக அணியான ஆப்கானிஸ்தான் அணி மோதிக் கொண்டது.

இதில் ஆப்கானிஸ்தான் அணி 32 ஓட்டங்களால் பங்களாதேஷை வெற்றி கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதனடிப்படையில் ஆப்கானிஸ்தானின் முகமட் சஹாட், ஹரீம் சட் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். அஷ்கர் ஸ்ரனிசாய் ஆட்டமிழக்காமல் தனது அணிக்காக 90 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். அவருடன் தொடந்து ஆடிய சமிஉல்லா ஸ்னேன் வாரி 81 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்துரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து பவிலியின் திரும்பினார். அந்த அணியினர் 50 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றனர். இதனைத்தொடர்ந்து 255 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய பங்களாதேஷ் அணியினர் ஆட்டநேர முடிவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 47.5 பந்துப்பரிமாற்றங்களில் 222 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

ஆட்டநாயகனாக ஆப்கானிஸ்தானின் ஷமுல்லா ஷின்வெரி தெரிவு செய்யப்பட்டார்.


**GERMAN LANGUAGE ACADEMY**
(ஜேர்மன் கல்லூரி)

ஜேர்மன் டொச் மொழிகள் இலகுவான வழியில் ஜேர்மனியில் வசித்து வந்த ஆசிரியரால் ஜேர்மன் தூதரகம் நடத்தும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு கற்பிக்கப் படுகின்றன.

குறிப்பு:- ஜேர்மன் தூதரக அனுசரணையுடன் நடைபெறுகின்றன.

ஏற்கனவே கல்வி கற்று சித்தியடையாத மாணவர்களுக்கு எமது நிறுவனத்தினூடாக கற்பிக்கப்படும். கட்டணம் சித்தியடைந்த பின்பு அறவிடப்படும்.

YAAL TECH — கண்டி வீதி, சாவகச்சேரி. 077 970 7322 GERMAN LANGUAGE ACADEMY — பலாலி வீதி யாழ்ப்பாணம்.

**ஊர்க்கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு**

தென்பகுதி பிரபல Farm ஆன Lanka Fram இன் உயர்தர கலப்பின கினிராஜ் ஒரு நாள் ஊர்க்கோழிக்குஞ்சுகள் தற்போது யாழ்ப்பாணத்திலும் கிடைக்கும். விலை 75/= மொத்த கொள்வனவுக்கு விலைக்கழிவு உண்டு.

தொடர்பு: 077 753 1344, 077 466 9669
(45146)(3.6.4)

**Soft View Computer Center**

வேகமாகவும் குறைந்த கட்டணத்துடன் நீங்கள் விரும்பிய நேரத்தின்படி Advance Diploma கற்கை நெறிகள் தினமும் நான்கு மணிநேர பயிற்சி நெறிகள் Ms Office, DTP, Graphic Designing, Web Design (3 வாரத்தில்) Java, C/C++,C, Web Development (6 வாரத்தில்) சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள் புதிய வழி முறைகளுடன் ஆரம்பம்
102 Main Street,Jaffna (Head Office)
2St Floor 74 1/1 Kannathiddy Softlogic முன்பாக
0779053545, 021 222 4885

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
**After O/L What Next?**

**Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)**
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப் படுகிறது.
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற் கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப் படுகிறது.

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 – 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.

**Diploma In English (2Months)**
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exam-Sponsor Visa/ Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை.
- U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
- எமது கல்லூரியிலேயே மாதிரிப் பரீட்சைகள் நடைபெறும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system
We gurantee minimum 6.0 band and above — Duration 2 1/2 Months

**B1 Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

Batch - 01 03.03.2014 | Batch - 02 08.03.2014 | Batch - 03 10.03.2014 | Batch - 04 15.03.2014

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550
Hotlines : 0777585913, 0777222422, 0714299935, 0777730074
Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel : 024 324 5287

**CHEMISTRY ▶ S.Vasu**
A/L 2014 — தொழில்முறை இரசாயனவியல் — Tue, Fri - 4.00 - 4.00 pm
A/L 2016 — இரசாயனக் கணிப்பீடுகள் — Wed, Thu - 3.30 - 4.30 pm
**NEC** ஆனைப்பந்தி, யாழ் நகர்.
தொடர்பு: 077 996 1250, 077 469 6695

**FRENCH LANGUAGE CENTRE**
FALC யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.
**FRENCH CLASSES**
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 774 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: எமது ஆசிரியரின் வகுப்புக்கள் யாழ் ஆரியகுளத்தடி, நெல்லியடியில் மட்டுமே..
எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறார்கள்......
ஆரம்பம்: 08.03.14 am — No. 40, Palaly Road, Jaffna. (ஆரியகுளத்தடி)
ஆரம்பம்: 11.03.14 at 11am — No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973, 0779 789 456

**மிகப்புதிய வரவு அபூர்வ வரவு**
**கனடாவில் படிக்க உழைக்க**
3 மாதங்களில் பறக்கலாம்
எதிர்பார்க்கப்படும் செலவினம்
22 இலட்சங்கள். எண்ணி 7 பேருக்கு
மட்டுமே இவ் வாய்ப்பு
(யாவும் நிபந்தனைகளுடன்)
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9016, 021 568 9090
(45276) (10.14)


**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ்ப்பாணத்தில் எப்பிரதேசத்திலும் வீடு வாடகைக்குத் தேவை.
T.P: 077 087 0883
(45194) (3.6.4)

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"
வார நாள் பிரிவுகள் ஆரம்பம் 06.03.2014 வியாழக்கிழமை
1. காலை 09.00-11.00 2. முற்பகல் 11.00-01.00
**SAAMSON** Language School 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

**IELTS Preparation classes**
Academic or General Training Exam Dates:
Jaffna - May 10
Colombo - April 5, 24 | May 10, 17, 24
May 10 அம் திகதி யாழில் நடைபெறும் IELTS(A/GT) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பம்
**48 Hours** Week days & Week end Training Program
British Council Special Trained Lecture Panel
- Modern Language Lab
- Focus individual Attention
- Proper Feedback and Analysis
- Conducive Learning Environment
- Test Practice on the pattern of IELTS Exams in Four Skills

Guaranteed 7+ Band
Limited Seats Avilable
Registration Fee: Rs: 1000/-
Weekdays 03.03.2014 | 10.03.2014 || Weekends: 02.03.2014 | 08.03.2014
#197, Arasady Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk
LONDON METROPOLITAN COLLEGE

**ஜூஸ் பக்கெட் மெசின்**
அதிக இலாபத்திற்கு சிறந்த தெரிவு
பெறுமதியான பரிசுகள் உடன்
1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கலாம்
- 1 வருட உத்தரவாதம்
- இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
- விற்பனைக்கு பின் சேவை
- இலவச விநியோகம்

ரூ.2 /= ரூ.5 /= ரூ.10 /= பக்கட்டுகளை தயாரிக்கலாம்


தமிழில் தொடர்பு கொள்ள :
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03
max adz

**கட்டார் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு**
கட்டார் நாட்டிலுள்ள முன்னணி நிறுவனத்தில் எலக்ரீசியன் உதவியாளர் 10 பேர் உடன் தேவை. கைவசம் வீசா இருப்பதால் ஐந்து நாள்களில் பயணமாகலாம். அதி உயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம், இலவசம். வயது 18-35 வரை. உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
Lanka Voice: 077 058 4658
டுபாய், சவுதிராஜ்ஜியத்திலும் ஏராளமான தொழில் வாய்ப்புக்கள். உங்கள் தொழில் தகைமைக்கேற்ப எம்மிடம் வேலை வாய்ப்புக்கள். உங்கள் சுய விவரக்கோவையை எமக்கு அனுப்பி வையுங்கள்.
E-mail - lankavoicenafees@gmail.com
(43194) (7.6.3)

ராஜா பிளாசா, 74, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. You Too Can Have A Car
**AQUA SHOWROOM**
இப்போது எமது காட்சியறையில்
Unregistered Honda Fit Hybrid GP1
- 10th Anniversary Edition
- Pearl White
- SMART INTELLIGENT KEY
- Central lock
- Auto folding winker mirror
- Low mileage • Fog Lamps
- Original DVD MP3 USB BT
- Front & Reverse Camera
- Factory fitted Dual Multifunction steering
- Cruise control
- HID lights
- Scuff welcome lights
- Interior illumination
- Chrome door handle guards
- Original 10th Anniversary Carpets



Hotline 077 3 169 433


உயர்ந்த சம்பளத்துடன் வேலை வாய்ப்பு அதிகமுள்ள தகவல் தொழில் நுட்ப பட்டப்படிப்பு.(கொழும்பு பல்கலைக்கழகம்).
+Industrial Certifications[Comp. Engineering-USA, CCNA,JAVA,WEB]
க.பொ.த உயர்தரம் பயின்றோர் நேரடியாகவும் ஏனையோர் கொழும்பு பல்கலைக்கழக அடிப்படைக்கணினிப்பயிற்சியொன்றை பூர்த்தி செய்வதன் மூலமும் பயிலமுடியும்.
கற்கை நெறியைப்பூர்த்தி செய்தோருக்கு வெளிநாடுகளில் மேற்படிப்பு, தொழில்வாய்ப்பு.
புலமைப்பரிசிலிற்கு Type <name>BE & send to 0772395895 மேலதிக விபரங்களிற்கு
MCS (யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில்.)
கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து விருது பெற்ற நிறுவனம்.


## மரண அறிவித்தல்

### திருமதி சத்தியரஞ்சிதம் சந்திரசேகரி

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை - பதுளை தமிழ் ம.வி, பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாசாலை)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியரஞ்சிதம் சந்திரசேகரி 27.02.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஓய்வுநிலை அதிபர் பொன்னையா சந்திரசேகரியின் அருமை மனைவியும், சத்தியராணி, காலஞ்சென்ற சத்தியலீலா மற்றும் சத்தியவதி, மகாலிங்கசிவம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பாலகௌரி, பாலச்சந்திரன், பாலேஸ்வரி, சந்திரபாலன், பாலரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரமூர்த்தி, சறோஜாதேவி, லோறன்ஸ், நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், சுபாஷன், சாமந்தி, ஷாருகி, நிறாஞ்சன், அபிநயன், நிஷாந்த், யதுர்ஷன், பிரணவி, லினுஷா, கவிதரன், ஷாருகா, தர்ஷிகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்துமயானத்திற்கு (டிப்போ அருகில்) எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். 021 490 2960
(45188) (12.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

ஞாயிறு சிறப்பிதழ்
02.03.2014



# தூக்கை ஒழிக்காமல் தூங்க மாட்டேன்

மகன் மீண்ட மகிழ்ச்சியில் அற்புதம் அம்மாள் புதிய சபதம்

இந்தியச் சிறைகளில் உள்ள சாவுக் கொட்டடிகளில் அடைக்கப் பட்டுள்ள எல்லா மனிதர்களையும் விடுவிக்காமல் இந்த உலகில் இருந்து விடுதலை பெறப்போவ தில்லை என்ற உறுதி இன்னும் தீவி ரம் பெற, புதுப்பொலிவுடன் ஜொலிக் கிறார் அற்புதம் அம்மாள். ஒரு நாள் இரு நாள்களல்ல, இரு தசாப்தங்க ளாகத் தன் மகனை சாவுக் கொட்ட டியில் இருந்து மீட்கப்போராடிய தாய். இப்போதுதான் அவர் பெற்ற வயிறு கொஞ்சம் குளிர்ந்திருக்கிறது. மகன் வெளியே வந்துவிடுவான் என்ற நம்பிக்கையுடன் எங்களுடன் பேசினார்.



வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த நாளில், அற்புதம் அம்மாளைச் சந்திக்க முடிய வில்லை; ஓரிரு நாள்கள் கழித்துச் சென்றபோது, வழக்கம்போல, தூக்குத் தண்டனைக்கு எதிரான புத்தகங்கள் கனக்கும் தோள்பையுடன் இருந்தார். "என் பிள்ளை மட்டும் இல்லை, இன்னும் நிறையப் பிள்ளைகளைத் தூக்குக் கயிற்றுப் பிடிக்கு வெளியே இழுத்து வர வேண்டியிருக்கும்" என்றவர், வழியில் ஒரு பொரிப் பொட்ட லத்தை வாங்குகிறார். "தாங்கவே முடியாத பசியென்றால் தவிர நான் சாப்பாடு தேடுவதில்லை. பல நாள்கள் இந்தப் பொரிதான் நமக்குச் சாப்பாடு" என்கிறார் சிரித்துக்கொண்டே. நடந்துகொண்டே பேச ஆரம்பித்தோம்.

இந்தியாவின் சர்வ வல்லமை பொருந்திய அமைப்புக ளோடு 23 வருடங்களாகப் போராடி, உங்கள் மகனைத் தூக்குக் கொட்டடியிலிருந்து மீட்டிருக்கிறீர்கள். இந்தப் போராட்டத்துக்கான மனோபலம் எங்கிருந்து உருவானது?
தந்தை பெரியார் தந்ததுதான் அந்த மனோபலம். நான் பிறந்தது திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்போதும் ஆதரிக்கும் குடும்பத்தில். என் அப்பா டி.ஏ.திருவேங்கடம் கட்சியின் எந்தக் கூட்டம், போராட்டம் என்றாலும் எங்க ளையும் கூட்டிக்கொண்டுதான் போவார். குறள் ஒப்பிப்பது, கூட்டங்களில் பேசுவது என்று வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் திமுகவுடன்தான் இருந்தேன். ஆனால் உண்மையான அரசியலைப் பெரியாரிடமிருந்துதான் கற்றுக்கொண்டேன்.

பெரியார் எப்போது அறிமுகமானார்?
எனது கணவர் குயில்தாசன்தான் பெரியாரை அறிமுகப்படுத்தி வைத்தவர். அவர்தான் பெரியாரையும் சுயமரியாதை வாழ்க்கையையும் அறிமுகப்படுத்தினார். முதன் முதலில் நான் கலந்து கொண்ட திராவிடர் கழகக் கூட்டத்தில் பார்த்த சின்னச் சின்ன விஷயங்கள்கூட பிடித்தன. திமுக கூட்டங்களிலும் பங்கெடுத்து இருக்கிறேன், கூட்டத்தை அங்கே ஆண்- பெண் என்று இரு வரிசைகளாகப் பிரித்துவிடுவார்கள். திகவில் அந்தப் பாகுபாடு கிடையாது. எல்லோரும் சமம்.
ஒருகாலத்துல எல்லாப் பெண்களையும்போல நகைநட்டு எல்லாம் போட்டுக்கொண்டு வெளியே போன நான், பெரியார் பேச்சைக் கேட்ட பின்னர்தான், இந்தச் சமூகம் பெண்களுக்கு அழகு என்று கற்பித்து வைத்திருப்பவை எல்லாமே கைவிலங்குகள் என்பதைப் புரிந்து கொண்டு தாலியே வேண்டாம் என்று முடிவெடுத்தேன். எல்லோரும் எதிர்த்து நின்றாலும் நாம் சளைக்கக் கூடாது என்கிற தைரியத்தையும் அங்கேதான் கற்றுக்கொண்டேன். என் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுத்தேன். கூட்டங்கள், போராட்டங்களில் எல் லாம் குடும்பமாவே கலந்து கொண்டோம். நானே இரண்டு தடவை சிறைக்குப் போயிருக்கிறேன். இயக்கத்தைத் தனியாவும் எங்கள் குடும்பத்தைத் தனியாவும் நாங்கள் பார்த்ததில்லை.

ராஜீவ் கொலையை இப்போது நினைவுகூர முடியுமா?
எப்படி மறக்க முடியும்? எங்கள் வாழ்க்கையையே புரட்டிப் போட்ட சம்பவம் இல்லையா அது? ராஜீவ் கொல்லப்பட்ட செய்தி வந்தபோது எல்லாக் குடும்பங்களையும் போல எங்கள் குடும்பமும் ஆடிப்போச்சு. அதுவும் ராஜீவோட கோரமான சாவு, அந்தப் படங்களை எல்லாம் பார்த்த போது உடைஞ்சே போய்விட்டோம். ஆனால் அப்போது தெரியவில்லை அந்தச் சாவுதான் எங்கள் வாழ்க்கையையும் சூறையாடப் போகிறது என்று.

ஈழத் தமிழர் பிரச்சினையில் ராஜீவ் நிலைப்பாட்டையும் அவர் கொல்லப்பட்டதையும்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ராஜீவோட அணுகுமுறையை சரி என்று சொல்ல முடியாது. ஈழத் தமிழர்கள் எவ்வளவு பேரை இந்திய அமைதிப்படை கொன்றது. எவ்வளவு தமிழ்ப் பெண்கள் சீரழிக்கப்பட்டார்கள். ராஜீவின் தவறான முடிவுதானே இதற்கெல்லாம் காரணம்? அவர் அவருடைய அம்மா இந்திராவின் பாதையைப் பின் பற்றி இருக்கலாம். ஆனால் எதற்காகவும் ஓர் உயிர் கொல் லப்படக் கூடாது என்று போராடுகிற நான் எப்படி ராஜீவ் கொல் லப்பட்டதைச் சரி என்று சொல்வேன்? பெரிய தவறு அது.

பேரறிவாளன் இந்தக் கொலை வழக்கில் சிக்கியபோது, உங்கள் வீட்டுச் சூழல் எப்படி இருந்தது? அதை நீங்கள் எப்படி உள்வாங்கினீர்கள்?
அப்போதுதான் என் மூத்த மகள் அன்புவுக்கு மாப்பிள்ளை பார்த்திருந்தோம். கடைசி மகள் அருள் படித்துக் கொண்டி ருந்தாள். அறிவுக்கு 19 வயசு. டிப்ளோமா படித்திருந்தவன் வேலை செய்துகொண்டே பொறியியல் படிப்பதற்காகச் சென்னையில் பெரியார் திடலில் தங்கியிருந்தான். அதுதான் அன்றைக்கு எங்களுக்கு இருந்த சொந்தக்காரர்களின் வீடு. மே 21ஆம் திகதி ராஜீவ் கொல்லப்படுகிறார். ஜூன் 10ஆம் திகதி இரவு 12 மணிக்கு எங்கள் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. உங்க மகனிடம் சில விவரங்களை விசாரிக்க வேண்டும்; இரண்டு நாள்களில் மல்லிகைக்கு வரச் சொல்லுங்கள் என்று சொலலி விட்டுப் போனார்கள். படிப்பிலயும் சரி பண்பிலும் சரி, உயர்வானவன் அறிவு. எங்கள் பக்கம் எந்தத் தவறும் இல்லையே என்கிற தைரியத்தில் நாங்கள் போனோம். விசாரித்துவிட்டு மறுநாள் காலையில் அனுப்பி விடுகிறோம் என்று சொல்லித்தான் அவனைக் கூட்டிக்கொண்டு போனார் கள். ஆனால் என் பிள்ளை இன்னும் வெளியே வரவேயில்லை.

இந்த வழக்கில் பேரறிவாளன் சிக்கியதற்கான பொறி எது?
அன்றைய காலச் சூழல். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஒவ்வொரு தமிழரும் தமிழகத்தில் அனுதாபம் காட்டிய நேரம் அது. தமிழ் உணர்வாளர்கள் பலருடைய வீடுகளிலும் இருந்தது பேன்றே எங்கள் வீட்டிலும் தம்பி (பிரபாகரன்) படம் மாட்டப்பட்டிருந்தது. அறிவு, அவனுடைய அப்பா இரண்டு பேரும் ஈழத் தமிழர்களுக்காகக் குரல்கொடுத்தவர்கள். அத்தோடு, நளினியின் தம்பி பாக்கியநாதன், திக கூட்டங்கள் வாயிலாக இவர்களுக்கு அறிமுகமாயிருந்தார். இது எல்லாவற்றையும் சேர்த்தே அறிவைக் குற்றவாளி என்று சோடித்தார்கள்.

ஆரம்பத்தில், உங்கள் மகன்தான் வெடிகுண்டைத்தயாரித் தவர் என்று சொன்னார்களே!
அறிவு ஒரு வெடிகுண்டு நிபுணன் என்றே சோடிக்கப் பார்த் தார்கள். அந்தப் பொய்யை நம்பவைக்க முடியவில்லை. அதனால் அறிவு பற்றரி வாங்கிக்கொடுத்தான்; அந்த பற் றரியைப் போட்டுத்தான் குண்டை வெடித்தார்கள் என்று கதையை மாற்றி எழுதினார்கள். உண்மை என்ன வென்றால் ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை இவர்களால் பிடிக்க முடியவில்லை. அதனால், பிடித்தவர்கள் எல்லோரை யும் குற்றவாளியாக மாற்றினார்கள்.
அவர்கள் போடும் ஆட்டத்துக்கு ஏற்ற மாதிரி ஒரு சட்டம் இருந்தது. தடா சட்டம். ஒருவரைப் பிடித்துக்கொண்டுபோக எந்தக் காரணத்தையும் சொல்ல வேண்டும் என்றில்லை. என்ன குற்றச்சாட்டை வேண்டும் என்றாலும் சுமத்தலாம். அடித்துத் துவைத்து மிரட்டி வாங்கும் கையெழுத்துக்களை வைத்து வாக்குமூலம் தயாரிக்கலாம். மூடிய அறைக்குள் யாரையும் விடாமல் விசாரிக்கும் எல்லாவற்றையும் நீதிமன்றம் ஏற்கும். அப்படி ஏற்றுக்கொண்டுதான் உலகத்தில் எந்த நாட்டிலும் நடக்காத கொடுமையாக, 26 பேருக்குத் தூக்குத் தண்டனையை விதித்தார்கள்.

பேரறிவாளனுக்கு நீதிமன்றங்களில் மூன்று முறை மரண தண்டனை அறிவிக்கப்பட்டது. உச்சக்கட்டமாக, இந்திய ஜனாதிபதியே கருணை மனுவை நிராகரித்தார். அந்தச் சூழல்களை எல்லாம் எப்படி எதிர்கொண்டீர்கள்?
ஒவ்வொரு முறையும் நெஞ்சு வெடித்துச் சிதறுகிற வலியைக் கடந்துதான் வந்தேன். அதெல்லாவற்றையும்விடப் பெரிய கொடுமை, கருணை மனு நிராகரிக்கப்பட்டதற்குப் பின்னர் வேலூர் சிறையிலிருந்து, "செப்ரெம்பர் 9ஆம் திகதி தூக்கிலிடப் படும் உங்கள் மகனின் சவத்தை நீங்கள் பெற்றுச்செல்ல வேண்டும்" என்று அனுப்பப்பட்ட கடிதம். ஒரு தாயாக, என் நிலைமையை அன்றைக்கு யோசித்துப் பாருங்கள்... நான் சந்தித்த அதிர்ச்சி களுக்கு எல்லாம் நான் எப்போதோ செத்திருக்க வேண்டும். வீட்டில் ஏற்கனவே உடம்பும் நைந்து மனதும் நைந்துபோய் இருக்கிறார் அப்பா; இதில் அம்மா நானும் போய் விட்டால் என் பிள்ளையின் நிலமை என்ன? இந்த ஒரே கேள்வி யும் வைராக்கியமும்தான் இன்றும் என்னை உயிருடன் வைத் திருக்கிறது.

பேரறிவாளன் விடுதலைக்கான இந்தப் போராட்டதிற்கு இடையில் சிறைச் சூழல் மாற்றத்துக்காகவும் போராடினீர் கள் அல்லவா?
ஆமாம்! வெளியில் இருந்து பார்க்கிற மாதிரி இந்திய விசாரணை அமைப்புகளும் சிறைகளும் அவ்வளவு இலேசான இடங்கள் இல்லைப்பா, அதிகாலையில் புறப்பட்டு, பல பஸ்கள் மாறி நாள் முழுக்கக் கொதிக்கும் வெயிலில் காத்திருப்பேன், எதற்கு? ஐந்தே நிமிடங்கள் பிள்ளையின் முகத்தைப் பார்ப்பதற்காக. ஈவிரக் கமே இல்லாம துரத்தியடித்துவிடுவார்கள்.
அறிவு எவ்வளவோ சித்திரவதைகளையும் அவமானங்க ளையும் தாங்கியிருக்கிறான். தனிமைச் சிறையில், ஒரு சின்னக் கொட்டடியில் இருக்கும் அவனுக்கு எதைத் துணை யாக் கொடுக்க முடியும்? அவன் கேட்கும் பத்திரிகைகள், புத்தகங்களை எல்லாம் வாங்கிச் சுமந்து கொண்டு போவேன். இந்த நிலை யில் அரிதா கிடைக்குற அஞ்சு நிமிட சந்திப்பும் எப்படி இருக்கும்னு நினைக்கிறீர்கள்?
ஒவ்வொரு சிறையும் ஒவ்வொரு மாதிரி இருக்கும். ஒரு சிறையில் குறுக்கே கண்ணாடிச் சுவர் இருக்கும். எதுவும் பேச முடியாது. கேட்காது. எல்லாம் சைகைதான். இன் னொரு சிறையில இரண்டடி இடைவெளியில் இரு கம்பித் தடுப்புகள் இருக்கும். இரண்டு பக்கமும் எல்லோரும் கத்துகிற சத்தத்தில் யாருக்கும் எதுவும் கேட்காது. இவற்றை எல்லாம் எதிர்த்து நீதிமன்றத்துக்குப் போனேன். இன் றைக்குக் கொஞ்சம் மாற்றத்தை அந்த வழக்குகள் கொண்டு வந்திருக்கின்றன.

தொடக்கத்தில் எல்லோரும் உங்களை விட்டு ஒதுங்கி யிருப்பார்கள் இல்லையா?
நிறையப் பேர் ஒதுங்கி விட்டார்கள். ஆனால் சில நல்ல மனி தர்கள் அப்போதுதான் வந்து கைகோர்த்தார்கள். என்னுடைய மூத்த மகளைப் பெண் பார்த்துட்டுப் போயிருந்தார்கள் என்று சொன்னேன் இல்லையா. அந்தச் சம்பந்தம் விட்டுப்போகலை. பேருக்கு ஏற்ற மாதிரியே அமைந்த மாப்பிள்ளை ராஜா வழக் கெல்லாம் கிடக்குது என்று சொல்லி என் மகளைத் திருமணம் செய்து கொண்டார். அறிவின் விடுதலைக்காக காத்திருந்து திருமணம் செய்ய மாட்டேன் என்று அடம்பிடித்த இளைய மகளுக்கும் மாப்பிள்ளை தனசேகரன் அப்படித்தான் தேடிவந் தார். இன்றை வரைக்கும் வழக்குகளுக்காக ஏற்படும் பெருஞ் செலவுகளை எல்லாம் என் மகள்களும் மாப்பிள்ளைகளும்தான் பகிர்ந்து கொள்கிறார்கள்.

ஏன் அரசியல் கட்சிகள் பகிர்ந்துகொள்ளவில்லையா?
சிலவற்றை இப்போது பேச வேண்டாம் என்று நினைக்கிறேன். அவ்வளவு துரோகங்கள் இருக்கு அறிவு கதையில். இரண்டு உதாரணங்களை மட்டும் சொல்கிறேன். எந்த இயக்கத்தை எங்கள் உயிராக நினைத்தோமோ, அந்தத் திராவிடர் கழகம், அறிவு கைதுசெய்யப்பட்ட உடனேயே, இயக்கத்துக்கும் அறிவுக் கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அறிவித்தது. விரைவில் பகுத்தறிவுக் கழக மாவட்டப் பொறுப்பாளராக இருந்த என் கண வர் குயில்தாசனையும் ஒதுக்கி விட்டார்கள். அவசர நிலைக் கால கட்டத்தில், கலைஞர் அரசு கவிழ்க்கப்பட்டபோது, எதிர்த்துப் போராட நிதி வசூலித்துக் கொண்டு, ஊரையே திரட்டிக் கொண்டு போய், "தலைவா! நாங்கள் இருக்கோம் உன்கூட" என்று நின்ற குடும்பம் எங்களுடையது. ஆனால், அறிவு கைதுசெய்யப்பட்ட பின்னர் இந்த 23 வருடங்களில் ஒருமுறைகூட கலைஞரைச் சந்திக்க முடிந்ததில்லை. இதையெல்லாம் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. வேதனையால்தான் சொல்கிறேன். இப்படி எவ்வளவோ கதைகளைச் சொல்லலாம். ஆனாலும், நெடுமா றன், நல்லகண்ணு, தியாகு, வைகோ, சீமான் இவர்கள் எல்லாம் பெரிய ஆதரவைத் தந்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேல் முதல்வர் அம்மா என் பிள்ளையை மீட்டுத்தருகிறேன் என்று சொல்லிவிட்டார்கள். இனியென்ன வேண்டும்!

முதல்வரிடம் என்ன பேசினீர்கள்? ஏனையோர் இதைத் தேர்தல் நாடகம் என்றெல்லாம் விமர்சிக்கிறார்களே?
நானாகத்தான் ஓடினேன், நன்றி சொல்வதற்காக. அவரைப் பார்த்த போது அழுகையைத் தாண்டி எதுவும் வரவில்லை. இவ்வளவு மகிழ்ச்சியை என்னால தாங்கவே முடியவில்லை யம்மா என்று கதறினேன். இனி நீங்கள் அழக் கூடாது. உங்க மகன் விரைவில் வந்து விடுவான் என்றார்கள். விமர்சிக்கிற வாய்கள் இத்தனை நாள் என்ன பேசின, என்ன செய்தன என் பது ஊருக்கும் உலகுக்கும் தெரியும்.

தமிழக முதல்வரின் முடிவுக்கு, இந்தியப் பிரதமர் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறார். மத்திய அரசின் எதிர்ப்பால், உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கிறது. இவற்றை யெல்லாம் எப்படிப் பார்க்கிறீர்கள்?
என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும். முதல்வர் அம்மா சொல்லி விட்டார்கள். இனி என் பிள்ளை வெளியே வருவதை யாராலும் தடுக்க முடியாது.

சரி! பிள்ளை வந்துவிடுவார். அடுத்து என்ன?
அவனைப் பற்றி ஆயிரம் கனவுகள் இருக்கு. ஆனால் அதை எல்லாம் தாண்டிச் செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கு. இந்திய நாட்டில் தூக்குத் தண்டனையை ஒழிக்க வேண்டும். என் பிள்ளை விடயத்தில் எதிர்பாராத விதமாக நிறைய நடந்தன. அவனது வாக்குமூலத்தைப் பதிவுசெய்த சி.பி.ஐ. அதிகாரி தியாகராஜன் பின்னர், "நான் கடமையிலிருந்து வழுக்கியிருக்கேன்; வாக்குமூலத்தை பேரறிவாளன் சொன்ன படி முழுமையாகப் பதிவு செய்யவில்லை" என்று சொன்னார். அதேபோன்று, தூக்குத் தண்டனையை விதித்த நீதிபதி கே.டி.தோமஸும் இவ்வளவு ஆண்டுகள் காத்திருக்க வைத்துத் தூக்குத் தண்டனை கொடுப்பது சரியில்லை என்று சொன்னார். செங்கொடி மாதிரி ஓர் இளங்குருத்து தன்னை மாய்த்துக் கொண்டு உருவாக்கிய போராட்டத் தீ இந்த மாநிலமே தூக்குத் தண்டனைக்கு எதிராகத் திரளக் காரணமாக இருந்தது. அரசு சட்டப்பேரவையில், தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. இப்போது முதல்வர் விடுதலை அறிவிப்பை யும் வெளியிட்டிருக்கிறார். ஆனால், எல்லோருக்கும் இதெல்லாம் வாய்க்குமா? சாத்தியமா? என் காலத்துக்குள் இந்தியாவில் இருந்து தூக்குத் தண்டனையை ஒழிக்க வேண்டும். அதற்காகக் கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும் போராடுவேன் – என்றார்.
கனக்கும் பையை ஒரு தோளிலிருந்து இன்னொரு தோளுக்கு மாற்றுகிறார் அற்புதம் அம்மாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலை உள்ளும் புறமும்

■ தி.அமுதன்

ராஜீவ்காந்தி கொலை வழக்கு மீளவும் பேசு பொருளாகியிருக்கின்றது. கொலை வழக்குடன் தொடர்புடையவர்கள் என்று தண்டிக் கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோ ரது தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டிருக்கின் றது. மறுநாளே அவர்களுக் கான விடுதலை உத்தரவும் பிறப்பிக்கப்படுகின்றது.

23 வருடங்கள் சிறைவாசம் முடிவை எட்டியது. ஆனாலும் அதன் பின்னரும் அவர்களை விடுவதற்கு மத்திய அரசு தயாராக இல்லை. இந்த நிலையிலேயே ராஜுவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உண்மை யான குற்றவாளிகளா என்ற கேள்வியும், இந்தக் கொலையு டன் முக்கியமாகத் தொடர்புடையவர்கள் இன்னமும் விசாரிக்கப்படவேயில்லை என்ற வாதங்களும் முன்வைக் கப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு நிலையில் ராஜுவ்காந்தி கொலையில் நடந்தது என்ன என்பது தொடர்பில் ஆராய்கிறது இந்தக் கட்டுரை.

### *முதல் கொலை முயற்சி*

1987ஆம் ஆண்டு, டில்லி ராஜ்கோர்ட், மகாத்மா காந்தியின் பிறந்த நாள் விழாவுக்கான ஏற்பாடுகளால் களைகட்டியி ருந்தது. நாட்டின் அப்போதைய பிரதமர் ராஜுவ் காந்தி மரியாதை செய்வதற்கு அந்த இடத்திற்கு வருகின்றார். மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்த அந்த சதுக்கத்தில் தீடீரென துப்பாக்கி வேட்டாலிகள். முதலாவது வெடிச் சத்தத்தை யாரும் கணக்கெடுக்கவில்லை. தொடர்ச்சியாக 20 நிமிடங்கள் வேட்டொலிகள் நீடிக்கின்றன.

இதன் பின்னர் துப்பாக்கி வெடியொலி வந்த திசையை பாதுகாப்பு படையினர் சுற்றி வளைக்கின்றனர். அப்போது நாட்டுத் துப்பாக்கியுடன் பதுங்கியிருந்த சீக்கிய இளை ஞனை கைது செய்கின்றனர். அவனிடம் விசாரணை நடத்தப்படுகின்றது.

1984ஆம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிராக நடந்த கலவ ரத்தை தடுக்கத் தவறியதால் ராஜுவ்காந்தியை கொல்ல முயன்றான் என்று அவன் தெரிவிக்கின்றான். கோபத்தி னால் உந்தப்பட்ட அந்த இளைஞனின் கொலை முயற்சி தோல்வியில் முடிவடைந்தமையால் ராஜுவ் காந்தி அன்று உயிர் தப்புகின்றார்.

### *சர்வதேச அரசியல் சூழல்*

இந்தச் சம்பவத்தில் ராஜீவ் தப்பி பிழைத்திருந்தாலும் நான்கரை ஆண்டுகளின் பின்னர் நடந்த சம்பவத்தில் கொல்லப்படுகின்றார். அந்தக் கொலை முயற்சியில் எந்தத் தவறுக்கும் இடம்கொடுக்கப்படவில்லை. சிக்கலான, அதேவேளையில் தெளிவான திட்டத்தை முன்வைத்த உலகத் தரம் வாய்ந்த வலைப்பின்னல், அந்தக் கொலையை கனகச்சிதமாக நிறைவேற்றுகின்றது.

1989ஆம் ஆண்டு உலக அரசியலில் வேகமான பல மாற்றங்கள் அரங்கேறுகின்றன. கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனிகளைப் பிரித்திருந்த பேர்ளின் தடுப்புச் சுவர் தகர்த்தெறியப்படுகின்றது. இது உலகின் முதல் சோசலிச நாடான சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கு தொடக்கப் புள்ளியாக அமைகின்றது. அமெரிக்கா, சோவியத் ரஷ்யா என்ற இரு பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான பனிப்போர் முடிவுக்கு வரும் நிலையை எட்டுகின்றது.

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சி உலக நாடுகளிடத்தில் புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. உலகின் இந்தக் குழப்பமான அரசியல் சூழல் இந்தியாவிலும் எதிரொலிக்கத் தவறவில்லை. ராஜீவ்காந்தி பிரத மர் பதவியை இழக்கின்றார். அடுத்த இரண்டே ஆண்டுகளில் இரண்டு பிரதமர்கள் ஆட்சிக்கு வருகின்றனர்.

### *நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்பு*

1991ஆம் ஆண்டு இந்திய நாடா ளுமன்றத்துக்குத் தேர்தல் அறி விக்கப்படுகின்றது. தேர்தல் பரப் புரைக் கூட்டங்களில் ராஜீவ்காந்தி கலந்து கொள்கின்றார். வட இந் தியாவில் தேர்தல் பரப்புரைகள் முடிவுற்ற நிலையில், தென்மா நிலங்களில் தேர்தல் கூட்டங்க ளுக்கு ஏற்பாடு செய்யப்படுகின் றது.

1991 மே 1 - அன்று இந்தியாவின் கரையோர மாவட்டமான நாகப் பட்டினம், கோடியக்கரையில் ஆர்ப்பரிக்கும் கடல்அலைகளை கிழித்துக்கு கொண்டு மோட்டார் படகு வந்து கொண்டிருக்கின்றது. கடற்கரை யோரம் நிறுத்தப்படும் அந்தப் படகிலிருந்து, இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் சில ஆண்களும், பெண்களும் இறங்குகின்றனர். கோடியக்கரைப் பகுதியில் செல்வாக்கு மிகுந்த நபரான சண்முகம் அவர்களை வரவேற்கின்றார்.

1991 மே 21 - விதி நிறைந்த நாளில் ராஜீவ் தனது தென் மாநில பரப்புரைப் பயணத்துக்குப் புறப்படுகின்றார். பல்வேறு கூட்டங்களில் பங்கெடுத்த பின்னர் விசாகப்பட்டினத்தி லிருந்து விமானம் மூலம் சென்னையை வந்தடைகின்றார் ராஜீவ். விமான நிலையத்திலிருந்து வரும் வழியில் போந்தூர் மற்றும் பூந்தமல்லியில் பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் ராஜீவ் இரவு 10 மணியளவில் ஸ்ரீபெரும்பத்தூரை வந்தடைகின்றார்.

மேடைக்கு சில மீற்றர்கள் தொலைவில் அமைக்கப்பட் டிருந்த இந்திராகாந்தி சிலைக்கு மாலையணிவித்த ராஜீவ், மேடையை நோக்கி நடக்கின்றார். தொண்டர்களின் மரி யாதையை ஏற்றுக் கொண்டே நடந்து வந்த ராஜீவை,



தீடீரென ஒரு பெண் நிற்கச் சொல்லிக் கேட்கின்றாள். அவள் அருகே நின்ற ராஜீவுக்கு, அந்தப் பெண்ணின் மகள் ராஜீவுக் காக எழுதப்பட்ட ஹிந்திக் கவிதையை வாசிக்கின்றாள்.

ராஜீவ் கவிதையை ரசித்துக் கொண்டிருந்த அதேவேளை யில், நடுத்தர வயதுடைய ஒரு பெண், கையில் சந்தன மாலையுடன் கூட்டத்தை முண்டியடித்துக் கொண்டு ராஜீவை நெருங்குகின்றாள். நெருங்கி வந்த அந்தப் பெண்ணை, பெண் காவலர் ஒருவர் தடுக்கின்றார். நிகழவிருக்கும் பயங்கரத்தை சற்றும் அறியாத ராஜீவ் அந்தப் பெண்ணை தடுக்க வேண்டாம் என்று காவலருக்கு சைகை செய்கின்றார். தனது இலக்கை நெருங்கிய அந்தப் பெண் கையில் வைத்திருந்த சந்தன மாலையை கீழே தவறவிடுகின்றாள். தரையில் விழுந்த மாலையை எடுப்பதற்காகக் குனிகின்றாள் அவள்.

அடுத்த சில நொடிகளில் பலத்த சத்தத்துடனும், பளிச்சென்ற வெளிச்சத்துடனும் பெரும் குண்டு வெடிக்கின்றது. ராஜீவ் கொல்லப்படுகின்றார். புகைமூட்டம் விலகியபோது மேடை யில் இருந்த கதிரைகள் எல்லாம் சிதறிக்கிடக்கின்றன. ராஜீவும் அவ்வாறே சிதைந்து கிடக்கின்றார். மாலை



கொண்டு வந்த பெண்ணின் தலை மட்டும் சிதையாமல் இருக்கின்றது. உடல் பாகங்கள் சிதைந்து கிடக்கின்றன.

1991 மே 24 - ராஜீவ் படுகொலை தொடர்பில் விசாரிப் பதற்காக சி.பி.ஐ. (இந்திய மத்திய விசாரணை ஆணையம்) சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்படுகின்றது. அவர்கள் ராஜீவ் கொலை நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்ட மேடையை ஆராய்கின்றனர். அங்கு ஏதாவது தடயங்கள் கிடைக்குமா என்று தேடுதல் வேட்டை நடத்துகின்றனர்.

கொலை நடந்ததற்கு மறு நாள் கோடியக் கரையில் கரையேறியவர்களில் சிலர் திருப்பதியில் சாமி தரிசனம் செய்கின்றனர். அவர்கள் சிவராசன் (ஒற்றைக் கண் சிவ ராசன்), சுபா, முருகன் மற்றும் நளினி என்பதை பின்னர் சி.பி.ஐ. பின்னர் சொல்கிறது. படகில் வந்திறங்கிய பெண்க ளில் தனு என்ற பெண்ணே, கூட்டத்தில் சந்தன மாலையை தவறவிட்டவள் என்றும் சி.பி.ஐ. சொல்கிறது.

1991 ஜூன் 11 - கொலை நடந்த 21ஆவது நாள், சென்னையில் பத்மா என்ற பெண்ணையும், அவளின் மகன் பாக்கிய நாதனையும் சி.பி.ஐ. கைது செய்கின்றது. அவர்களது வீட் டிலேயே கோடியக்கரையில் படகில் வந்தவர்கள் தங்கியிருந்தனர் எனத் தெரியவருகின்றது.

அங்கு வைத்தே கொலைக்கான திட்டம் தீட்டப்பட்டதாகச் சி.பி.ஐ. சொல்கிறது. அவ்வாறு அவர்கள் கைது செய்யப் பட்டு, மூன்று நாள் கழித்து நளினியும், முருகனும் கைது செய்யப்படுகின்றனர். ஆனால் தேடுதல் வேட்டை தொடர்கின்றது.

1991 ஜூன் 28 - சென்னையிலிருந்து பெங்களூருக்குச் சென்றுகொண்டிருந்த லொறியை பொலிஸார் தடுத்து நிறுத்துகின்றனர். ஆவணங்கள் சரிபார்க்கப்பட்ட பின்னர் அந்த லொறி அனுமதிக்கப்படுகின்றது. நாடு முழுவதும் தேடப்பட்டுவரும் இரண்டு பேர் அந்த லொறியில் ஒளிந்திருந்ததை பொலிஸார் கண்டுபிடிக்கவில்லை. சிவராசனும், சுபாவும் பெங்களூருக்குத் தப்புகின்றனர்.

1991 ஜூலை - கோடியக்கரை சண்முகத்தை சி.பி.ஐ. கைது செய்கின்றது. அவரிடம் நடத்திய விசாரணைகளில் மே முதலாம் திகதி படகில் வந்தவர்களில் சிவராசன், சுபா மற்றும் தனுவும் இருந்ததை உறுதி செய்கின்றனர்.

### முதல் தடயம் அழிகின்றது

இலங்கையில் இருந்து வந்ததாகக் கூறப்படும் குழுவை வரவேற்ற சண்முகம் சி.பி.ஐயின் பலத்த பாதுகாப்பி லிருந்து அன்றிரவே ஆச்சரியமளிக்கும் வகையில் தப்பு கின்றார். அதற்கு மறுநாள் அவர் காவலில் வைக்கப்பட் டிருந்த விருந்தினர் மாளிகை வளாகத்தில் மர்மமான முறையில் தூக்கில் தொங்கி உயிரிழந்திருப்பது கண்டுபிடிக் கப்படுகின்றது.

கால்கள் நிலத்தில் முட்டியபடியே சண்முகத்தின் உடல் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்படுகின்றது. அவரைக் கொலை செய்துவிட்டு தூக்கில் தொங்குவதைப் போல நாடகமாடியிருப்பதாக, திருச்சி வேலுச்சாமி (தூக்கு கயிற்றில் நிஜம் நூலின் ஆசிரியர் - காங்கிரஸ் கட்சிகாரரும்கூட) தெரிவிக்கின்றார்.

1991 ஓகஸ்ட் 18 - இந்தியா முழுவதும் சல்லடை போட்டு தேடப்பட்டு வந்த சிவராசனும், சுபாவும் பெங்களூர் புறநகர் பகுதியான ஹொரனகுண்டாவில், மறைந்திருக்கின்றனர் என்று கர்நாடக பொலிஸ் அறிவிக்கிறது. உடனடியாக சி.பி.ஐ. சிறப்பு விசாரணைக் குழு விரைகின்றது. அடுத்த சில மணிநேரத்தில் அந்தப் பகுதியை பொலிஸார் சுற்றி வளைக்கின்றனர்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் சிறப்பாக செயற்படும் என்.எஸ்.ஜி. கொமாண்டோக்களும் வரவழைக்கப்படு கின்றனர். அந்தக் கடினமான நேரத்தில் ஒவ்வொரு நொடி யும் பதற்றத்துடனேயே கழிகின்றது.

1991 ஓகஸ்ட் 19 - காலை 7 மணி, சுற்றி வளைக்கப்பட்ட வீட்டிலிருந்து துப்பாக்கிகள் வெடிக்கின்றன. அடுத்த அரை மணிநேரத்துக்கு மேலாக நீடிக்கின்றது துப்பாக்கிச் சமர். வெடியோசைகளால் அந்தப் பகுதியே அதிர்கின்றது. அதன் பின்னர் ஓய்வுக்கு வந்த துப்பாக்கிச்சூடு மீண்டும் இரவு 8 மணியளவில் தொடங்குகின்றது. இந்த முறை 7 சுற்றுகள் மட்டுமே வெடித்த துப்பாக்கிகள் அத்துடன் மௌனிக்கின்றன. 48 மணிநேரம் நீடித்த நாடகம் முடிவை நெருங்குகின்றது. ஆயுதக் குழுவினர் தங்கியிருந்த வீட்டை என்.எஸ்.ஜி. கொமாண்டோக்கள் அதிரடியாக உடைத்துக் கொண்டு உள்ளே நுழைகின்றனர். எதிர்தாக்குதலை சமாளிக்கும் வகையில் முன்னேறும் கமாண்டோக்கள் ஒரு அறையில் 7 பேரின் சடலங்களைக் கண்டு அதிர்சியுறுகின்றனர்.

ராஜுவ் கொலையின் முக்கிய சூத்திரதாரிகள் என்று சி.பி.ஐ. கூறும் சிவராசனும், சுபாவும் தற்கொலை செய்து கொண் டதை சி.பி.ஐ. அதிகாரபூர்வமாக அறிவிக்கின்றது.

### விசாரணைக் குழுக்கள் அமைப்பு

ராஜீவ்காந்திக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பிலிருந்த குறை பாடுகளை விசாரிப்பதற்காக வர்மா ஆணைக்குழு அமைக் கப்படுகின்றது. அத்துடன் படுகொலைக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் சதித் திட்டங்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக ஜெயின் ஆணைக்குழுவும் அமைக்கப்படுகின்றது. இவை 1991ஆம் ஆண்டு அமைக்கப்படுகின்றன.

இந்த இரு ஆணைக்குழுக்களும் தங்கள் அறிக்கைகளை இந்திய மத்திய அரசிடம் சமர்பித்துள்ளன.

ஜெயின் ஆணைக்குழு வழங்கிய பரிந்துரைகளின் பிர காரம், ராஜீவ் கொலைக்குப் பின்னால் உள்ள சதியை விசாரிப்பதற்காக எம்.டி.எம்.ஏ. என்ற விசாரணை அமைப்பு 1998ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பு இன்று வரையில் தனது விசாரணையை நடத்தி வருவதாகச் சொல்லிக் கொள்கின்றது. ஆனாலும் மத்தியில் இருக்கின்ற காங்கிரஸ் அரசுகூட இந்த ஆணைக்குழு என்ன செய்கின்றது என்பதை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை.

ராஜுவ் கொலைக்குப் பின்னால் பல்வேறு மர்மங்கள் ஒளிந்திருப்பதாக தொடக்கம் முதலே பல்வேறு தரப்பினரும் கூறி வருகின்றனர். இது தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரி ரகோத்தமன், டில்லியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ராஜுவ்சர்மா, மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருச்சி வேலுச்சாமி ஆகியோர் எழுதியுள்ள புத்தகங்கள் அந்த மர் மங்கள் குறித்து ஆதாரங்களுடன் கேள்வியெழுப்புகின் றன.

இதற்கு மேலாக, நளினியின் வழக்கறிஞர் துரைசாமி எழுதிவரும் புத்தகம் ராஜீவ் கொலை வழக்கை மீண்டும் விவாதப் பொருளாக மாற்றவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04
02.03.2014
சூரியகாந்தி

### கேள்வியெழுப்பும் ஆதாரங்கள் - பின்னணி

1991 மே ஜூலை - கொலையாளிகள் பயன் படுத்திய மறை விடங்களை சோதனையிட்ட சி.பி.ஐ. சிவராசனின் இரண்டு டயறிகளைக் கைப்பற்றியதாகக் கூறியது. பின்னர் அந்த டயறிகள் தடா நீதிமன்றத்தில் ஆவணசாட்சிய மாக வும் தாக்கல் செய்யப்பட்டன. இந்த டயறியில் பெயர் குறிப்பிடப்பட்டி ருந்ததற்காகவே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த சாந்தன் கைது செய்யப்பட்டிருந்தார். இரகசியம் பொதிந்த அந்த டயறியில் விசாரிக்கப்படாத பக்கங்களைத் தனது புத்தகத்தில் சுட்டிக்காட்டுகின்றார் வழக்கறிஞர் துரைசாமி.

கொலை நடந்த மே 21ஆம் திகதியன்று கோராப்பூர், ஸ்ரீக்காக்குளம், விஜயநகர், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கலந்து கொண்ட ராஜீவ் இறுதியாகச் சென்னையை வந்தடைகின் றார்.

சிவராசனின் டயறியில், ராஜீவ் வருகின்ற விமானம் விசாகப் பட்டினத்தில் பழுதாகி, ஒரு மணிநேரம் தாமதமாக ஸ்ரீபெரும்பத்தூர் வரும் என்று எழுதி வைத்திருக்கின்றார். இந்தத் தகவல் சிவராசனுக்கு எப்படிக் கிடைத்தது? விசாகப் பட்டினத்திலிருந்து யாரோ ஒருவர் அவருக்கு சொல்லி யிருக்க வேண்டும்.

அத்துடன் கைத்தொலைபேசி வசதியில்லாத அந்தக் காலத்தில் இந்தத் தகவலை சிவராசனுக்கு சரியான சமயத்தில் தெரிவித்திருப்பதானது, ராஜீவ் கொலையில் அவருடன்கூட இருந்தவர்களும் சம்பந்தப்பட்டிருக்கின்றார் கள் என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

1991 மே 21 கொலை நடைபெற்ற நாளன்று மாலை 5.30 மணிக்கு சிவராசன் உட்படக் கொலைக் குழுவைச் சேர்ந்த 5 பேர் சென்னை பாரி முனையிலிருந்து ஸ்ரீபெரும்பத்தூ ருக்கு பஸ்ஸில் புறப்பட்டனர் என்று சி.பி.ஐ. கூறுகின்றது.

இரண்டு மணிநேரப் பயணத்திற்குப் பின்னர் இரவு 7.30 மணிக்கு ஸ்ரீபெரும்பத்தூர் சென்றடைந்தனர் என்பது சி.பி.ஐ. தரப்பு வாதம். சி.பி.ஐ. கூறும் இந்த வாதத்தை வழக்கறிஞர் துரைசாமி முற்றிலும் மறுக்கின்றார்.

அந்தக் காலத்தில் கைத்தொலைபேசி கிடையாது. எனவே சிவராசனுக்கு ராஜீவ் விமானத் தாமதம் குறித்த தகவல் வழங்கப்படுகின்றபோது, அவர் ஸ்ரீபெரும்பத்தூரில் வீட்டில் தான் தங்கியிருந்திருக்க வேண்டும். அது யாருடைய வீடு? இதை எல்லாம் ஏன் சி.பி.ஐ. விசாரிக்கவில்லை? அல்லது விசாரித்து விட்டு மறைத்து விட்டார்களா?

பக்கம் பக்கமாகப் புரளும் டயறியில் புதைந்துள்ள மர்மங்கள் ஏராளம். சுழன்றோடும் நமது கண்களை அந்த டயறி மீது மேயவிடுகின்றபோது அதில் எழுதப்பட்டுள்ள சில பெயர்கள் நம் கவனத்தை ஈர்க்கின்றன.

### இந்திய ஆயுத அமைப்புக்கள்

பரேஷ் பர்போவா, அர்பிந்தா ராக்போவா, இவை இரண்டும் அஸாமில் செயற்படும் உல்பா இயக்கத் தலைவர்களின் பெயர்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் சிவராசனின் டயறியில், அஸாமில் செயற்படும் உல்பா இயக்கத் தலைவர்களின் பெயர்கள் ஏன் எழுதப்பட்டுள்ளன என்ற கேள்வியெழுகின்றது.

சிவராசனுக்கும் உல்பாவுக்கும் என்ன தொடர்பு? அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் உல்பாவுக்கும் என்ன தொடர்பு? இதற்கான விடையை, ராஜீவ் சர்மா எழுதியுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள சில உளவுத்துறைத் தகவல்கள் சொல்லுவதாக இருக்கின்றது.

1990 ஜனவரி 23, உளவுத்துறை தனது உயரதிகாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்புகின்றது. அந்த அறிக்கையில் அசாமில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப் படுத்தியதற்காகவும், இயக்கத்திற்கு தடை விதித்ததற்காகவும் ராஜீவ்காந்தியைக் கொலை செய்வதற்கு உல்பா இயக்கம் திட்டமிட்டிருப்பதாகக் கூறுகின்றது.

1991 பெப்ரவரி 15, இதன் பின்னர் சிலநாள்கள் கழித்து இந்தியாவின் அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கும், இடைமறிக்கப்பட்ட ரேடியோ செய்தி ஒன்றை உளவுத் துறை அனுப்புகின்றது. அதில் ராஜீவ்காந்தியைக் கொல்வதற்காக உல்பா இயக்கம் 30 தற்கொலைப் படையினரை உருவாக்கியிருப்பதாக அதிர்ச்சியளிக்கும் தகவலைத் தெரிவிக்கின்றது.

உளவுத்துறையின் இந்த அறிக்கைகள் ராஜீவின் உயிருக்கு உல்பா இயக்கம் குறிவைத்திருந்ததை உறுதி செய்கின்றன. மறுபுறம் சிவராசனின் டயறியில் உல்பா இயக்கத் தலைவர்களின் பெயர் எழுதப்பட்டிருக்கின்றது. இவற்றை வைத்துப் பார்க்கும்போது உல்பா இயக்கம் சிவராசன் போன்றோரைத் தமது திட்டத்திற்குப் பயன்படுத்தி இருக்குமா என்ற சந்தேகம் எழுகிறது.

ஏனென்றால் ராஜீவின் பயணத் திட்டப்படி மே 21ஆம் திகதி ஸ்ரீபெரும்பத்தூர் பொதுக் கூட்டத்தில் கொல்லப்படாமல் இருந்தால் 24ஆம் திகதி அஸாம் மாநிலம் ஹொகாத்தியில் ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டிருப்பார்.

இவ்வாறு எந்தக் குழப்பமுமில்லாத தெளிவான தடயமாக இருக்கின்ற உல்பா இயக்கத் தொடர்பு குறித்து சி.பி.ஐ. ஏன் தனது சந்தேகப் பார்வை யைச் செலுத்தவில்லை? இதுவரையில் உல்பா இயக்கத் தலைவர்களை சி.பி.ஐ. விசாரிக்கவில்லை என்று குற்றஞ் சாட்டுகின்றார் வழக்கறிஞர் துரைசாமி.

### விரிவடையும் சந்தேகங்கள்

சிவராசனின் டயறி, உளவுத் துறையின் அறிக்கைகள் உல்பாவையும், விடுதலைப் புலிகளையும் சந்தேகிக்க வைக்கும் அதேவேளையில் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஷிரோன்மனிய கட்சியின் தலைவர் மதன்சேவா தாஸ், ஜெயின் ஆணைக்குழு முன் வழங்கிய வாக்குமூலம் சந்தேகப் பார்வையை மேலும் விரிவடையச் செய்கின்றது.



அந்த வாக்கு மூலத்தில் 1990ஆம் ஆண்டு இறுதியில் பஞ்சாப் பிரிவினைவாத இயக்கமான காலிஸ்தான் இயக்கத்தின் தலைவர் ஒருவரை தான் லண்டனில் சந்தித்தார் என்று மதன்சேவா தாஸ் கூறுகின்றார். அந்தச் சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப் புலிகள், ஜம்மு காஷ்மீர் விடுதலை இயக்கம் உள்பட பல்வேறு இயக்கங்களின் பிரதிநிதிகளும் இருந்தனர் என்று தாஸ் தனது வாக்குமூலத்தில் தெரிவிக்கின்றார்.

தாஸின் வாக்கு மூலத்தை வைத்துப் பார்க்கும்போது ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னால் பல்வேறு இயக்கங்கள் சம்பந்தப்பட்டிருப்பதை உணர முடியும். அந்தச் சந்திப்பில் ராஜீவ்காந்தி கொல்லப்படப் போகும் தகவலை காலிஸ்தான் இயக்கத் தலைவர் தன்னிடம் கூறினார் என்றும், அதில் ராஜீவ் டெல்லியில் கொல்லப்படமாட்டாரென உறுதியளித்தார் எனவும் தாஸ் அதிர்சியளிக்கும் வாக்கு மூலத்தை வழங்கினார்.

தாஸின் இந்த வாக்கு மூலம் உல்பா இயக்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பவற்றையும் தாண்டி பல்வேறு இயக்கங்களின் மீதும் சந்தேகங்களை எழச் செய்கின்றது.

### நிரூபிக்கப்படாத குற்றம்

இவை வெறும் ஊகங்களாகவோ, கற்பனைகளாகவோ இருக்கலாம். ஆனால் விசாரணை அமைப்பைப் பொறுத்த வரையில் சிறு சந்தேகங்களுக்கும் இடமளிக்காமல் குற்றத்தை நிரூபிக்க வேண்டியது அதன் கடமை என்கிறார் வழக்கறிஞர் துரைசாமி.

வழக்கின் ஆரம்பத்திலேயே விடுதலைப் புலிகள்தான் இந்தப் படுகொலையைச் செய்தார்கள் என்ற முடிவுக்கு வந்துவிட்டே கார்த்திகேயன் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை நடத்தினார்கள்; சாட்சியங்களைத் தேடினார்கள் என்கிறார் துரைசாமி. உண்மையான விசாரணையை அவர்கள் செய்யவே இல்லை என்று துரைசாமி மேலும் குறிப்பிடுகின்றார்.

துரைசாமியின் வாதமும், மதன்சேவா தாஸின் வாக்கு மூலமும் ராஜீவ் கொலையின் பின்னணியில் உள்ள ஒரு கூட்டுச் சதி குறித்து கேள்வி எழுப்பு கின்றன.

இதற்கிடையில் கடந்த காலத்தில் பதிவு செய்யப்பட்ட சில சம்பவங்களை இவற்றுடன் தொடர்புபடுத்திப் பார்க்கின்ற போது, இவற்றை எல்லாம் தாண்டிய வல் லாதிக்க சக்திகளும் இருப்பது தெரியவருகின்றது.

### ரேடியோ உரையாடல்

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் தங்கியிருக்கும் கே.பி. என்கின்ற குமரன் பத்மநாதனுக்கும், இலங்கையின் வடபகுதியில் மறைந்திருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலை இந்திய உளவுத்துறை இடைமறித்துக் கேட்டதாக சி.பி.ஐ. கூறுகின்றது.

இடைமறிக்கப்பட்ட தகவல்கள் குறித்து உளவுத்துறையின் இணை இயக்குநர், கூடுதல் இயக்குநருக்குக் கடிதம் எழுதுகின்றார். அந்தக் கடிதத்தில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. உடன் கே.பி தொடர்பு ஏற்படுத்தியிருக்கிறார் என்ற கூறுகின்றார்.

இலங்கையின் திருகோணமலை மீது அமெரிக்காவுக்கு இருக்கும் விருப்பத்தைப் பயன்படுத்தி புலிகள் தங்களுடைய ஆயுதத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள விரும்புகின் றனர் எனவும் கூறுகின்றார். புலிகளின் தேவையை சி.ஐ.ஏ. உணர்ந்துள்ளதாகவும், அந்த உதவி இருதரப்பிற்கும் பய னுள்ளதாக இருக்க வேண்டும் என்று சி.ஐ.ஏ. புலிகளுக்குச் சொல்லியுள்ளதாகவும் இணை இயக்குநர் கூடுதல் இயக்குநருக்கு எழுதியுள்ள கடிதம் குறிப்பிடுகிறது.

1990 செப்டெம்பர் 4 - மீளவும் புலிகளின் ரேடியோப் பேச்சை இந்திய உளவுத்துறை இடைமறித்ததாகக் கூறப்படுகிறது. இம்முறை தரையிலிருந்து விண்ணுக்கு தாவும் ஏவுகணைகளை தான் எதிர்பார்ப்பதாக, பிரபாகரன் கே.பியிடம் தெரிவிக்கின்றார்.

இந்தச் செய்திகள் மூலம் சி.ஐ.ஏ. விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஒரு சதிச் செயலுக்கு தயாராகி வருவதை இந்திய உளவுத்துறை உணர்ந்திருக்க வேண்டும். சி.ஐ.ஏ அரசி யல் கொலைகள் மூலம் பல்வேறு நாடுகளிலும் ஆட்சிக் கவிழ்ப்புக்களையும், ஆட்சிமாற்றங்களையும் ஏற்படுத்தி யுள்ளது என்கிறார் ராஜீவ்சர்மா.

### வளைகுடாப் போரும் இந்தியாவும்

உலக நாடுகளின் பல்வேறு எதிர்ப்புக்களுக்கு இடையில் வளைகுடாப் போர் தொடங்குகின்றது.

1991 ஜனவரி 15 இரவு - இந்த இராணுவ நடவடிக்கையின் மூலம் ஈராக்கின் முக்கிய இலக்குகள் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்துகின்றன.

1991 பெப்ரவரி 7 - ஈராக் போர் பற்றி ராஜீவ் அறிக்கையை வெளியிடுகின்றார். அதில், ஒரு பிராந்தியத்தின் பாதுகாப்பை நிலைநிறுத்த இன்னொரு பிராந்தியப் படைகள் புகுந்தால், அது அந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு மேலும் அச்சுறுத்தல் எனக் குறிப்பிடுகின்றார்.

அமெரிக்க விமானங்களுக்கு பெற்றோல் நிரப்புவதற்கு திருவனந்தபுரத்தில் இந்திய அரசு இடம்கொடுத்திருந்தது. இந்திய அரசு அவ்வாறு இடம் கொடுத்ததை நாடாளுமன்றத்திலுள்ளே ஆக்ரோஷத்துடன் ராஜீவ்காந்தி மிகக் கடுமையாக விமர்சித்தார் என்கின்றார் திருச்சி வேலுச்சாமி.

இந்தப் பின்னணிகளுடன் ஒப்பிட்டு ராஜீவ் காந்தி கொலையில் சி.ஐ.ஏ. பங்கு பற்றியும் சிவராசன், தனு போன்ற ஈழத்தமிழர்களை அமெரிக்கா தனது தேவைக்குப் பயன்படுத்திக் கொண்டதா என்பன பற்றியும் சி.பி.ஐ. எந்தவித விசாரணைகளையும் மேற்கொள்ளவே இல்லை.

1991 மார்ச் 12 - இதனிடையே பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தின் தூதுவர், ராஜீவ்காந்தியை சந்திக்கின்றார். அந்தச் சந்திப்பில், ராஜீவின் உயிருக்கு ஆபத்து உள்ளதாக அவரை எச்சரிக்கின்றார்.

ஐரோப்பா மற்றும் லெபனான் நாடுகளிலுள்ள தொடர்புகள் மூலம் இந்தத் தகவல் யசீர் அரபாத்துக்கு கிடைத்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

அப்படிப்பட்ட தகவலை வழங்கிய அரபாத்தை, ராஜீவ்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைக்குப் பின்னர் சி.பி.ஐ. சந்திக்கவே இல்லை. அவர் கள் உண்மையான விசாரணையை நடத்தியிருந்தால் அரபாத் உயிருடன் இருக்கும் போதே சந்தித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொண்டிருக்க முடியும் என்கிறார் பழ.நெடுமாறன்.
அரபாத்தின் எச்சரிக்கை குறித்துக் கருத்துத் தெரிவித்த நீதிபதி ஜெயின், ஏற்கனவே நாடுகளின் உறுதித் தன்மை யைக் குலைத்தது தொடர்பாகவும், கொலைச் சதியில் ஈடுபட்டது தொடர்பாகவும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சி.ஐ.ஏ. மீது உள்ளன. எனவே அரபாத்தின் எச்சரிக்கை இந்த வகையில் ஆராயப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறு கின்றார்.
மேலும் இஸ்ரேலிய உளவு நிறுவனமான மொசாட் மூலமாக, சி.ஐ.ஏ. வேலை செய்திருக்க வேண்டிய சாத்தியக் கூறுகள் குறித்தும் இந்திய உளவு நிறுவனம் விசாரணை செய்திருக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்கச் சதி?

"இந்தியத் தலைவர்களை அப்புறப்படுத்த சில வல்லரசு நாடுகள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. அப்போது தான் இந்த தேசத்தை சீர்குலைக்க முடியும் என்று அவர்கள் நினைக்கின்றனர்" என்று ராஜீவ் சொல்கின்றார். உடனே பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். இது கே.ஜி.பியா என்று. "கே.ஜி.பிக்கு ஆப்கானிஸ்தான் பிரச்சினையே ஒரு பெரிய தலைவலியாக இருக்கின்றது" என்று சொல்லிவிட்டு ராஜீவ் நடந்து செல்கின்றார்.
அப்போது பத்திரிகையாளர்கள் சி.ஐ.ஏயா என்று கேட்டதும், ராஜீவ் சிரித்துக்கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்று விட்டார். சி.ஐ.ஏ. என்று சொல்வதற்கு ராஜீவ்காந்தி





பயந்தார் என்கின்றார் பத்திரிகையாளர் சுதாங்கன்.
பி.சி.சி.ஐ. என்ற சர்வதேச வங்கியின் மீது எழுந்த குற்றச் சாட்டுக்களை விசாரிப்பதற்காக அமெரிக்கன் செனட்டர் ஜோன் ஹெரியின் தலைமையில் ஒரு குழு அமைக்கப் படுகின்றது. சி.ஐ.ஏ. தன்னுடைய இரகசிய வேலைகளுக்கு பி.சி.சி.ஐ. வங்கியைப் பயன்படுத்திக் கொண்டதாக அந்தக் குழுவின் அறிக்கை கூறுகின்றது.
சி.ஐ.ஏயால் பயன்படுத்தப்பட்டு வந்த அந்த வங்கியில் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் கே.பி. கணக்கு வைத் திருப்பதை சி.பி.ஐ. பின்னர் கண்டுபிடிக்கின்றது. கறை படிந்த அந்த பி.சி.சி.ஐ. வங்கியில் இந்தியாவைச் சேர்ந்த அரசியல் சாமியார் சந்திரசாமி பயன்படுத்தி வந்ததை சி.பி.ஐ. கண்டுபிடித்தது.
சந்திராசாமி உலகின் பிரபல ஆயுத வியாபாரியான கொசோக்கியின் மூலம் அந்த வங்கியைப் பயன்படுத்தி வந்ததாக ஜெயின் ஆணைக்குழு கூறுகின்றது. அதே வேளை கொசோக்கி சி.ஐ.ஏயுடன் உறவு வைத்திருந்ததை உறுதிப்படுத்த முடிவதாகவும் ஜெயின் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.
மிகவும் கவனிக்கத்தக்க விதத்தில் ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு முந்தைய திகதியில், இரண்டு வருட காலத்தில் கொசோக்கியின் வங்கிக் கணக்குக்கும் கே.பியின் வங்கிக் கணக்கும் இடையில் பணப் பரிமாற்றம் நிகழ்ந்துள் ளதை ஹெரிக் குழுவின் அறிக்கை உறுதி செய்கின்றது.
கே.பியின், பி.சி.சி.ஐ. வங்கிக் கணக்கை சி.பி.ஐ. சோதனை செய்தபோது அதில் 258 ரூபாய் மாத்திரமே மீதம் இருந்த தாகவும், 1986ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்த வங்கிக் கணக்கில் பலமில்லியன் டொலர் பணபரிமாற்றம் நடை பெற்றதை சி.பி.ஐ கண்டுபிடித்திருந்தது.
இவற்றின் அடிப்படையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இந்தப் படுகொலையைத் தானே, தனக்காக நிகழ்த்தவில்லை, அவர் வேறு ஒருவருக்காக இந்தக் கொலையைச் செய்து கொடுத்துள்ளார், அது யார் என்ப தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்கிறார் ராஜிவ்சர்மா.
ஓர் அரசியல் சாமியார், ஓர் ஆயுத வியாபாரி, இவர்கள் இரு வரையும் இணைக்கும் அயல்நாட்டு சக்தி, இந்த முக் கோணச் சதியின் பின்னணியில் வெளிவராத பல ரகசியங் கள் ஒளிந்திருப்பதாகக் கூறுகின்றார் ராஜிவ் சர்மா.
ராஜீவ் கொலையில் வெளிநாட்டு சதி இருப்பதை முழுவது மாக மறுக்க முடியாது என்று ஜெயின் ஆணைக்குழுவும் தனது இறுதி அறிக்கையில் குறிப்பிவதுடன் கே.பி. என் கின்ற குமரன் பத்மநாதன் விசாரிக்கப்பட வேண்டும் என்று சொல்லி யிருப்பதும் ராஜீவ்சர்மாவின் வாதத்திற்கு வலுசேர்ப் பதாகவே அமைந்துள்ளது.
ஜெயின் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டவர்களை இது வரையில் விசாரிக்கவே இல்லை. அத்துடன் எம்.டி. எம்.ஏ. என்ன செய்து கொண்டிருக்கின்றது என்று இதுவரை யில் யாரும் கேள்வி எழுப்பவில்லை என்கின்றார் திருச்சி வேலுச்சாமி.

### தீராத சந்தேகங்கள்

1989 டிசெம்பர் 8 - இந்திய உளவுத் துறை மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு ஓர் அறிக்கையை அளிக்கின்றது. அதில், இஸ்ரேலிய உளவுத்துறையினாலும், சில மேற்கத்தைய நாடுகளின் உளவுத்துறையினாலும் இந்தியாவின் முக்கிய நபர்களுக்கு ஆபத்துக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படு கின்றது.
உளவுத்துறையின் இந்த இரகசிய அறிக்கை ராஜீவின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதை தெளிவுபடத் தெரிவிக் கின்றது.
1990 ஜனவரி 23 - இந்திய உள்துறை அமைச்சால் அனைத்து மாநில தலைவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்படுகின்றது. அதில் ராஜீவின் உயிருக்கு குறி வைத்திருக்கும் தகவல் வெளி யிடப்படுகிறது.
உளவுத்துறைக்குக் கிடைத்த இந்தத் தகவல்கள் ராஜீவ் காந்தியின் உயிருக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் ஏற்பட்டுள் ளது என்பதை உறுதிப்படுத்தி வந்துள்ளன. இந்த உளவுத் துறை தகவல் களின் அடிப்படையில் அவருக்கு நியாயமாக கூடுதல் பாது காப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இது தொடர்பில் உள்துறை அமைச்சகம் உடனடியாக எடுத்த முடிவும், அது தொடர்பில் கேள்வியெழுப்பாத உள வுத்துறையின் மௌனமும் எல்லோரையும் சந்தேகிக்க வைக்கின்றது.
1990 ஜுலை 19 - அதுவரையில் ராஜீவ்காந்திக்கு வழங்கப்பட்டு வந்த என்.எஸ்.ஜி என்றழைக்கப்படும் உயர் பாதுகாப்பு தீடீரென நீக்கப்படுகின்றது. யாராலும் இலகுவில் நெருங்க முடி யாத பாதுகாப்பு வளையத்தில் இருந்த ராஜீவ்காந்தி தற்போது, தாக்குவதற்கு எளிதான இலக்காக மாற்றப்படுகின்றார்.
இந்த நடவடிக்கையின் பின்னாலும் சதி உள்ளது. இது தான் அவரது கொலைக்கான தொடக்கப் புள்ளி என்றே கூற லாம். இதன் மூலம் ராஜீவை இலகுவாக தாக்குவதற் குரிய வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக ராஜிவ் சர்மா தெரிவிக்கின்றார்.
1991 மே 20 (கொலைக்கு முதல் நாள்) - பாதுகாப்பு விலக்கப் பட்ட பின்னர், கொல்லப்படுவதற்கு சரியாக 24 மணி நேரத் துக்கு முன்னர் உளவுத் துறையின் இணை இயக்குநர் தாக் கூர், உள்துறை இணைச் செயலாளருக்கு அவசர கடி தத்தை எழுதுகின்றார்.
அதில் ராஜீவ்காந்திக்கு உடனடியாக என்.எஸ்.ஜி. பாது காப்பு வழங்குங்கள் என்று கேட்டுக்கொள்கின்றார். தாக்கூர் இந்தக் கடிதத்தைத் தற்செயலாக எழுதினாரா அல்லது மறுநாள் ராஜீவ் கொல்லப்படுவதை அறிந்துதான் எழுதினாரா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. ஏனெனில் அவரது கடிதம் எழுதப் பட்ட காலம் அதைச் சுட்டி நிற்கின்றது.
1991 மே 21 - ஸ்ரீபெரும்பத்தூரில், பாதுகாப்பு தளர்த்தப்பட்டு தாக்குவதற்கு மிக எளிதாக இருந்த இலக்கான ராஜீவ் தாக்குத லாளியால் கொல்லப்படுகின்றார். மிக இலகுவாக அவரைத் தாக்குவதற்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கின் றன. ராஜீ வுடன் சேர்த்து அன்றைய தினம் 18 பேர் கொல் லப்படுகின்றனர்.
ராஜீவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு விலக்கப்பட்டதற்கு அரசு சொல்லும் காரணங்கள் வலுவானதாக இல்லை என்று வர்மா ஆணையம் தெரிவிக்கின்றது.
இது தொடர்பில் ஜெயின் ஆணைக்குழுவிடம் வாக்கு மூலம் வழங்கிய பஷஜுப் என்ற உளவாளி, ராஜீவுக்கு வழங்கப் பட்ட பாதுகாப்பு விலக்கப்பட்டது அவரைக் கொலை செய்ய லாம் என்று வெளிநாட்டு சக்திகளுக்கு கொடுக்கப்பட்ட சமிஞ்ஞை என்ற அதிர்ச்சியான உண்மையை வெளியிட்டார்.

### காணாமற்போகும் ஆவணங்கள்

1989ஆம் ஆண்டுக்கும் 1991ஆம் ஆண்டுக்கும் இடையில் ராஜீவ்காந்திக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு தொடர்பில் அதிகாரிகள் வழங்கிய முக்கிய ஆவணம், அதி உச்ச பாதுகாப்பு மிகுந்த பிரதமர் அலுவலகத்திலிருந்து காணா மற் போயுள்ளன.
வர்மா ஆணைக்குழு, ஜெயின் ஆணைக்குழு [illegible] [illegible] ஆணையம் [illegible] வேண்டும் என்ன வரையறையினுள் செயற்பட வேண்டும் என்று கடிதம் மூலம் அறி வுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் கடி தம் காணாமற்போய்விட்டது.
ஜெயின் ஆணைக்குழு அதனைக் கேட்டபோது, அதைத் தயார் செய்து அதே மாதிரியான கடிதத்தை கொண்டு வந்து கொடுத் தார்களே தவிர மூலப் பிரதி இல்லை.
வெளிநாட்டு உளவுத்துறை நிறுவனங்களிடமிருந்து சந்திர சுவாமிவுக்கும் சுப்பிரமணிய சுவாமிக்கும் சில தகவல்கள் வருகின்றன. அந்தத் தகவல்கள் அடங்கிய ஆவணத்தையும் காணவில்லை என்று சொல்கின்றார் கள்.
இதேபோன்று ராஜீவ் கொலையுடன் தொடர்புடைய பல்வேறு ஆவணங்கள் காணாமற்போயிருப்பதாக குற்றம் சுமத்துகின் றார் திருச்சி வேலுச்சாமி.

### வலுக்கும் சந்தேகங்கள்

நான் ஜெயின் ஆணைக்குழுவிடம், 1991 மே 21ஆம் திகதி சம்பவம் நடந்த அன்று காலையிலிருந்து மாலை வரை யில் சுப்பிர மணிய சுவாமி எங்கிருந்தார் என்பதை அவரது நடவடிக்கை ஆவணத்தைப் (மூவ்மன்ற் ரெஜிஸ்ரார்) பார்த்தால் தெரியும் என்று சொன்னேன். ஏனெனில் அவர் அப்போது மத்திய அமைச்சராக இருந்தபடியால், நட வடிக்கை ஆவ ணம் இருந்தி ருக்கும்.
இதனையடுத்து ஜெயின் ஆணைக்குழு அரசிடம் கேட்ட போது, குறித்த நாளுக்குரிய ஆவணம் மாத்திரம் காணா மற் போய்விட்டதாக அவர்கள் பதிலளித்திருந்தார்கள்.
காணாமற்போன ஆவணங்கள் ஒருபுறம் இருக்க இன்னும் இந்தக் கொலை வழக்கில் கிடைக்காமலே போன ஆதாரங் களும் இருப்பதாகச் சொல்கின்றார் ரகோத்தமன் (சி.பி.ஐ முன்னாள் விசாரணை அதிகாரி)

### வெளிச்சத்துக்கு வந்த பக்கங்கள்

கொலை நடந்த அன்று, அந்தச் சம்பவத்தின் பின்னர் சிறிதும் சேதமடையாமல் இருந்த கமராவை பொலிஸார் கைப்பற்று கின்றனர். அதிலிருந்த ஒளிப்படச் சுருள் மூலமா கவே கொலையாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர்.
இந்த ஒளிப்படச் சுருள் வெளிவந்த பின்னரே கொலையின் இருள் சூழ்ந்த பக்கங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. ஒரே பரி ணாமம் கொண்ட 9 ஒளிப்படங்கள் மர்மத்தின் திரையை மெதுவாக விலக்கின. ஆனால் கொலை நடந்த மாலைப் பொழுதின் ஒவ் வொரு அசைவும் வீடியோ செய்யப்பட்டது. ஆனால் அந்த வீடியோ மூலமாக சி.பி.ஐ. எந்த ஆதாரங் களையும் கண்டு பிடிக்கவில்லை என்பது ஆச்சரியம் தரும் உண்மை.
கொலை நடந்த மறுநாள் பிரதமர் சந்திரசேகருக்கு அப் போதைய உளவுத்துறை இயக்குநரும் தற்போதைய மேற்கு வங்க மாநிலத்தின் ஆளுநருமான எம்.கே.நாராண யனன் கடிதம் எழுதுகின்றார். அதில் கொலை நடந்த பொதுக் கூட் டத்தை பதிவு செய்த வீடியோ கசட்டை உளவுத் துறை கைப்பற் றியிருப்பதாகத் தெரிவிக்கின்றார்.
அந்த வீடியோ கசட் மூலம் கொலையாளி ராஜீவ் காந்தியை எவ்வாறு நெருங்கினார் என்பதை ஆராய்ந்து வருவதாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் இன்றுவரை அந்த வீடியோ கசட் எங்குள்ளது என்பது யாருக்கும் தெரியாது என்கின் றார் ரகோத்தமன்.
கொலை நடந்த இரவில் பதிவு செய்யப்பட்ட மற்றொரு வீடியோ கச்சட்டை வர்மா ஆணைக்குழுவிடம் சி.பி.ஐ. வழங்கியது. பொது விசாரணையின்போது அந்த வீடியோ கசட் அனைவர் முன்பாகவும் திரையிடப்பட்டது. முக்கியத்து வம் வாய்ந்த அந்த வீடியோவில் சில காட்சிகள் அழிக்கப் பட்டிருந்தமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.
எம்.கே.நாராயணன் தன்னிடம் உள்ளதாகக் கூறிய வீடி யோவும், சி.பி.ஐ. வர்மா ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்த வீடியோவும் ஒன்றுதானா? அவை இரண்டும் ஒன்றுதான் என்றால் அதி லுள்ள முக்கிய காட்சிகளை அழித்தது யார்? அந் தக் காட்சிகளுக்குள் ஒழிந்துள்ள ரகசியம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிற கேள்விகள் கொலையின் மர்ம முடிச்சுக் களை மேலும் இறுக்குகின்றன.
கடைசி நேரத்தில் தனு கூட்டத்தில் வந்து சேர்ந்து கொண்டதால் எங்களால் அவரை சோதனையிட முடிய வில்லை என்று சொன்னார்கள். இந்த வீடியோவில் பார்த் தால் அவர் எத்தனை மணிக்கு வந்தார் என்பது நிரூபண மாகிவிடும், அதனால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்கின்றார் ரகோத்தமன்.
1992 ஜுன் 12 - வர்மா ஆணைக்குழு தனது அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கின்றது. அதில் எம்.கே.நாராய ணன், அப்போதைய உள்துறைச் செயலர், பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட முக்கியமான அரச அதிகாரிகளை விசாரிக்க வேண் டும் என்ற பரிந்துரையை வழங்குகின் றது. ஆனால் அந்தப் பரிந்துரை கிடப்பில் போடப்படுகின் றது.
வர்மா ஆணைக்குழுவின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்த பின்னும் அதன் பரிந்துரைகள் மீது அரசு நடவடிக்கை எடுக்காமையினால் பல்வேறு தரப்பிலி ருந்தும் அரசுக்கு நெருக்கடி முற்றுகின்றது. இறுதியில் அந்த நான்கு பேரிடமும் காலம் கடந்த விளக்கம் கேட்கப்படுகின் றது. ஆனாலும் அவர்கள் தாம் தற்போது ஓய்வு பெற்று விட்டதால் சட்டப்படி தம்மை விசாரிக்க முடியாது என்று நீதிமன்றத்தி னூடாகத் தெரியப்படுத்துகின்றனர். இறுதி வரையில் வர்மா ஆணைக்குழு விரல் சுட்டிக்காட்டிய எந்த வொரு அரச அதிகாரியுமே விசாரிக்கப்படவில்லை.
நாட்டின் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளமை தொடர் பில் தானே முன்வந்து சாட்சியமளித்திருக்க வேண்டிய வர்கள், இன்று வரை வாயே திறக்காமல் மௌனம் காப்பது ஏன்? யாரைக் காப்பாற்றுவதற்காக? என்று கேள்வி யெழுப்புகின் றார் ரகோத்தமன்.
பல்வேறு இயக்கங்களின் கூட்டுத் திட்டம் அவற்றை இயக் கிய வெளிநாட்டு புலனாய்வு அமைப்புக்கள், விசாரிக்கப் படாத கறுப் புப் பக்கங்கள், விசாரணைக்கு ஒத்துழைக்காத அரச அதிகாரி கள் என்று ராஜீவ் கொலைக்குப் பின்னால் மறைந்திருக்கும் மர்மங்களைச் சுட்டிக்காட்டுகின்றன இந்த விடயங்கள்.




### விடை காணமுடியாத வினாக்கள்

எல்லோருடைய சந்தேகப் பார்வையும் இருக்கக் கூடிய, ஜெயின் ஆணைக்குழுவால் விசாரிக்கப்பட வேண்டிய வர்கள் என்று சொல்லப்பட்ட சுப்பிரமணிய சுவாமி, சந்திர சுவாமி இருவரையும் இந்த இருபது ஆண்டுகாலத்தில் சி.பி.ஐ. ஒரு முறையும் அழைத்து விசாரிக்கவில்லை என் றால் அதற்குப் பின்னால் இருக்கின்ற சக்தி சாதாரண சக்தியா ? என்கின்றார் திருச்சி வேலுச்சாமி.
எதையுமே திட்டமிடாமல், ராஜீவைக் கொலை செய்தால் என்ன ஆகும் என்பதுகூடத் தெரியாமலா புலிகள் நடந்திருப் பார்கள்? அத்துடன் தமிழ் நாட்டில் தமக்கு இருக்கும் ஆதரவு இதனால் பாதிக்கப்படும் என்பதை அவர்கள் கணக்கெடுக் காமல் விட்டிருப்பார்களா? போன்ற சந்தேகங் கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டி ருப்பார்களா என்பதைச் சந்தேகிக்க வைப்ப தாக ஊடகவியலாளர் பஸ்வான் கூறுகின்றார்.
இந்த வழக்கில் தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்படும் ஆயிர மாயிரம் சந்தேகங்கள் தொடர்பில், அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் காங்கிரஸ் கட்சியே அவை தொடர்பில் உண்மைகளைக் கண்டுபிடிக்காமல் நிரபராதிகளை தூக் கில் போட்டு உண்மைக் குற்றவாளிகளை விட்டுவிட முயல் வது ஏன் என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது.
ஆயிரம் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டாலும், ஒரு நிரபராதி கூடத் தண்டிக்கப்பட கூடாது என்பது இந்திய சட்டத்தில் எப்போதும் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் ராஜீவ் காந்தி கொலை வழக்கு புதிரும், மர்மங்களும் விடுவிக்கப்படாத நிலையில் அந்த வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட வர்களுக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என காங்கிரஸ் இன்று ஒற்றைக் காலில் நிற்பது ஏன்?
ராஜீவ் கொலை வழக்கில் தேடப்பட்டு பின்னர் துப்பாக்கி யால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்பட்ட சிவ ராசன், காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடியுடன் எடுத் துக் கொண்ட புகைப்படம் எல் லாம் கிடைத்ததே, இதை இந் திய புலனாய்வு துறை ஏன் மறைத்தது? இப்படி அடுக்கடுக் காக சந்தேகங்களும் கேள்வி களும் தொக்கி நிற்கின்ற நிலை யில் அவசர அவசரமாக குற்ற வாளிகளின் விடுதலையை காங்கிரஸ் அரசு தடுப்பது ஏன்?
ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட போது சந்திரசேகர் தலைமை யிலான கூட்டணி மத்தியில் ஆட்சியில் இருந்தது. இந்தப் படு கொலை பற்றி விசாரிக்க நீதிபதி வர்மா தலைமையில் ஒரு விசாரணைக் ஆணைக்குழு அமைக்கப்படும் என்று அப் போதைய உள்துறை அமைச் சர் சுபத்காந்த் சகாய் அறிவித் தார்.
அப்போது சட்டத்துறை அமைச்சராக இருந்தவர் சுப்பிர மணியம்சாமி. இருவருமே வர்மா ஆணைக்குழு என்பது, இந்த படுகொலை நேர்ந்ததில் இருந்த பாதுகாப்பு குறை பாடுகளை மட்டுமே விசாரிக்கும் என்று அறிவித்தனர். கொலைச் சதி பற்றி விசாரிக்காது என்று சொன்னார்கள். கொலைச்சதியையும் இந்த ஆணையம் விசாரிக்க வேண் டும் என்று பாரதிய ஜனதா உள்ளிட்ட கட்சிகள் வலியுறுத் தின. ஆனால் அது நிராகரிக்கப்பட்டது.
சந்திரசேகர் ஆட்சிக்குப் பிறகு பி.வி.நரசிம்ம ராவ் தலை மையில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை பிடித்தது. அதன் பின் னர், தங்கள் கட்சியின் தலையாய குடும்பத்தை சேர்ந்த ராஜீவ் கொலை வழக்கு வேகம் பிடிக்கும், உண்மையான குற்றவாளிகள் பிடிபடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காங்கிரஸ் ஆட்சியை பிடித்த பிறகும்கூட ராஜீவ் கொலை வழக்கை விசா ரிக்க அமைக்கப்பட்ட நீதிபதி வர்மா ஆணைக்குழு வுக்கு அலுவலகம்கூட ஒதுக்கப்படவில்லை. செயலாளர்கள் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் கூட நியமிக்கப்படவில்லை. விசாரணை வரம்பையும் அறிவிக்கவில்லை. இந்த அவலத்தைப் பற்றி நீதிபதி வர்மாவே குமுறியுள்ளார்.
தமிழீழ விடுதலைப் புலிகளைச் சிக்க வைப்பதற்காக, அமெரிக்க - இந்திய கூட்டுச் சதியில் அரங்கேற்றப்பட்ட நாட கம் இதுவென்றே இன்று பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். தமி ழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு பெருகி வந்த ஈழ ஆதரவு, பின்னாளில் இந்தியாவுக்கே உலை வைக்கும் என்பதால் இந்திய மத்திய அரசும், தமிழீழ விடுதலைப் புலிகள் பல மான ஆயுத இயக்கமாக வளர்வதை தடுக்க அமெரிக்காவும் தீட்டிய திட்டத்தில் விடுதலைப் புலிகளை விழ வைத்து விட்ட னர் என்று விமர்சனங்கள் எழாமலும் இல்லை. ஏனெனில் ஆரம்பத்திலிருந்தே விடுதலைப் புலிகள் மீதும், அதனோடு தொடர்புடையவர்கள் மீதும் குற்றங்களைச் சுமத்தியவர்கள், அப்போதைய இந்திய மத்திய அரச அதிகாரிகள் மீதோ, இந் திய இயக்கங்கள் மீதோ, ஏன் அமெரிக்கச் சதி குறித்தோ எந்தவொரு இடத்திலும் விரல் நீட்டவில்லை. இதுவே இந் தக் கொலை வழக்கு எவ்வாறு திட்டமிட்டுக் கொண்டு செல் லப்பட்டது என்பதை பட்டவர்த்தனமாக சொல்லி நிற்கின்றது.
ராஜீவ் கொலை நடந்தேறி 23 வருடங்கள் கடந்தும் உண்மைக் குற்றவாளிகள் இன்னமும் கண்டறியப்படாத நிலையில், கைது செய்யப்பட்டுள்ளவர்களைக் குற்றவாளி களாக்கித் தண்டனை கொடுத்த பின்னரும் விடுவிக்கத் தயங்கும் காங்கிரஸ் அரசு, காந்தீய தேசத்தில் ஆட்சி செய் வதற்கே தகுதியற்றது. *



## முல்லாவும் வாத்தும்

ஒருநாள் முல்லாவின் ஊருக்கு வந்த நண்பர். நேரம் ஆகிவிட்டதால் முல்லா வீட்டி லேயே தங்கினார். அவர் ஒரு விவசாயி. முல்லாவும் அவரை வரவேற்று விருந்தளித்து உபசரித்தார். விவசாயி கிளம்பும்போது முல் லாவுக்குத் தான் கொண்டுவந்த வாத்தைப் பரிசாகக் கொடுத்துச் சென்றார்.
பிறகு அந்த வாத்தைச் சமைத்து முல்லா தன் குடும்பத்துடன் சாப்பிட்டார். அதன் அபார ருசி முல்லாவுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அந்த விவசாயியை நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.
அடுத்து இரண்டு நாள் கழித்து முல்லா வீட்டுக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. திறந்து பார்த்தபோது நின்றிருந்தவர்கள், வாத்தைப் பரிசளித்த விவசாயின் பிள்ளைகள் என அறிமுகம் செய்தனர். முல்லரவும் மன மகிழ்ச்சியுடன் வாத்துக் கறி சமைத்து விருந் தளித்தார்.
நாள்கள் கடந்து வாரம் ஆயின. ஒருநாள் மீண்டும் முல்லா வீட்டுக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. வந்தவர்கள், வாத்தைப் பரி சளித்த விவசாயின் பக்கத்துவீட்டுக்காரர் எனக் கூறினர். முல்லா சற்றுத் தயக்கத் துடன் விருந்தளித்தார்.
வாத்தைப் பரிசாகப் பெற்றுக்கொண்டது தவறோ என்றுகூட நினைத்தார். பிறகு மன தைத் தேற்றிக்கொண்டார். அடுத்த வாரம் வந்தது. கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. வந் தவர்கள் உங்களுக்கு வாத்தைப் பரிசளித்த விவசாயின் பக்கத்துவீட்டுக்காரரின் நண்பர் கள் எனச் சொன்னார்கள். முல்லா கடுப்பான முகத்துடன் வரவேற்று உபசரித்தார். இனி வாத்துக்கு ஆசைப்படுவாயா? எனத் தன்னைத் தானே கடிந்தும் கொண்டார்.
வாரங்கள் கடந்து மாதமும் முடிந்தது. மீண் டும் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. முல்லா கதவைத் திறக்கும் முன்பே கடுப்பாகிவிட்டார். வந்தவர்கள். உங்களுக்கு வாத்தைப் பரி சளித்த விவசாயின் பக்கத்துவீட்டுக்காரரின் நண்பரின் நண்பர்கள் எனச் சொன்னார்கள். முல்லா ஒன்றும் சொல்லாமல் வரவேற்றார். அவர்களை அமரவைத்துவிட்டு, அவர்களுக்கு கிண்ணங்களில் வெந்நீர் ஊற்றி, அருமை யான வாத்து சூப் எனச் சொல்லியிருக்கிறார். வந்திருந்தவர்களுக்கு உதடு புண் ஆனது தான் மிச்சம். ஒருவர், என்ன முல்லா இது சூப் என்றீர்கள். இது வெறும் வெந்நீர் போலத் தெரிகிறதே எனக் கேட்டுள்ளார். அதற்கு முல்லா, இது சூப்தான். உங்கள் நண்பரின் பக் கத்துவீட்டுக்காரரின் பக்கத்துவீட்டுக்காரரான விவாசயி பரிசளித்த வாத்துடைய சூப்பின் சூப்பின் சூப்புடைய சூப்பு என்றார்.



## சொக்லேட் நல்லது இதயத்துக்கு

கடும் சொக்லெட்டுகளைச் சாப்பிடுவது இதயத்தின் ஆரோக்கியத்துக்கு மிக உகந்தது என ஆய்வில் தெரியவந்துள்ளது. நெதர்லாந்தில் உள்ள உணவு மற்றும் நுண்ணூ டக் கழகம் மற்றும் வாகெனிங்கன் பல்கலைக்கழக ஆய்வுக் குழுவினர் இது தொடர்பா ஆய்வில் ஈடுபட்டனர். அதில், கடுமையான சொக்லெட்டைச் சாப்பிடுவதால் இதய ஆரோக்கியமாக இருக்கிறது எனத் தெரியவந்தது.
சொக்லெட்டுகளைச் சாப்பிடுவது, தமனிகளின் நெகிழ்வுத் தன்மையைத் தக்க வைக் உதவுகிறது. மேலும், குருதியின் வெள்ளை அணுக்கள் குருதி நாளச்சுவர்களில் ஒட்டு தன்மையை வெகுவாகக் குறைக்கிறது.
தமனிகளின் விரைப்புத்தன்மையும், வெள்ளை அணுக்களின் ஒட்டும்தன்மையு தமனி வீக்கத்துக்குக் காரணமாக அமைகின்றன. இச்செயல்கள் தடுக்கப்படுவதால் இ யம் ஆரோக்கியமாக இருப்பது உறுதி செய்யப்படுகிறது.
ஆய்வில் ஈடுபட்ட டைடெரிக் எஸ்ஸெர் தெரிவித்ததாவது: கடும் சொக்லெட்டுகளில் உள் பிளாவனல்கள் உணவு அருந்தும் தூண்டலை நிறுத்துகின்றன. இந்த சொக்லெட்டுகள் ஆரோக்கியமானவைதான் என்றார். நடுத்தர வயதுடைய அதிக எடைகொண்ட 44 பேரிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. நான்கு வாரங்களுக்கு தினமும் 70 கிராம் அ வுக்கு அவர்கள் சொக்லெட் எடுத்துக் கொண்டனர்.
அவர்களைத் தொடர்ந்து ஆய்வு செய்ததில் மேற்கண்ட முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெழுகு சிலைகளுக்கென்று அரசியல் இல்லை

■ ஜெரா

தமிழர்களுக்கு இப்போது யார் தேவை? நல்ல நிர்வாகியா? நல்ல அரசியல்வாதியா? என்கிற கேள்வியை கடந்தவார வடக்கு அரசியல் எழுப்பியிருந்தது. இதற்குப் பதில் வடக்கில் நல்ல நிர்வாகி அரசுக்குத் தேவை. நல்ல அரசியல்வாதி தமிழர்களுக்குத் தேவை என்பதே.

அரசின் நல்ல நிர்வாகி மெழுகு சிலைபோல இருக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும். வெண்மையாக, கரடுமுரடுத்தனங்களற்றவராக, எந்த வடிவத்திலும் செதுக்கிக் கொள்ளக்கூடியவராக மற்றும் சிற்பிக்கு சிலை அருவருக்கும் தருணத்தில் உருகி உருமாற்றம் செய்துகொள்ளக் கூடியவராக இருக்கவேண்டும். மெழுகுச் சிலைகளால் அலுங்காமல் குழுங்காமல் நிர்வாகத்தை நடத்த முடியும். (நிர்வாகத்தை இந்த வகையில் நடத்துவதில் பெயர்பெற்ற மன்மோகன் சிங்கை நினைவுபடுத்திக் கொள்ளவும். பொருளாதாரத் துறையில் மற்றும் நுண்பொருளாதாரத் துறையில் இரு கலாநிதிப் பட்டங்களை பெற்றவர் அவர். அவரையே மெழுகுச் சிலையாகவே சோனியா அம்மையார் நடத்துகிறார் என்பது உலகறிந்த விடயமாக இருக்கிறபடியால், அந்த எளிய உதாரணத்தைநம்முன்தெரியும்மெழுக சிலைகளிடமும் பிரயோகித்துப் பார்க்கலாம்.) பெரும்பாலும் இது போன்ற நிர்வாகத் திறனுடையவர்கள் அதிகாரத்தின் பொம்மலாட்ட நிழலுருவங்களாகவே செயற்படுகின்றனர் என்பதையும் ஊகித்தறிய நேரமெடுக்காது. இதுவேமெழுகுச்சிலைகளுக்கான எளிய தத்துவார்த்த விளக்கம்.

### ஏன் மெழுகுச் சிலை போன்ற நிர்வாகி?

தமிழர்களால் சர்வதேசம் என்று சொல்லப்படுகின்ற மேற்கு நாடுகளையும், அவர்களின் பிரதிநிதிகளையும், தமிழ் ஊடகங்களையும், ஏமாற்றவும் ஏய்த்துப் போக்குக் காட்டவும் அரசுக்கு மெழுகு சிலை நிர்வாகிகள் வேண்டும். இவற்றைச் செய்வதற்குப் பிரபாகரனைப் போன்ற வீரர்கள் எவரும் அரசுக்கு உதவ முடியாது. எனவேதான் அதற்கு மெழுகுச் சிலைகள் தேவை.

அயல் நாடான இந்தியாவுக்கும் இத்தகைய மெழுகுச் சிலைகள் இருப்பதுவே பாதுகாப்பானது. அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் தலையாட்டிக் கொண்டும், அவர்கள் விரும்புபவற்றைச் ஊடகங்களுக்குச்சொல்லிக் கொண்டும் இருப்பதற்கு மெழுகுச் சிலைகளைவிட வேறு எவை சாலப் பொருத்தமாக இருக்கக் கூடும்? எனவேதான் மெழுகுச் சிலை அவசியப்படுகிறது.



**ஒவ்வொரு ஜெனிவா தீர்மானம் வருவதற்கு முன்பும் இலங்கைக்கு படையெடுக்கும் இராஜ தந்திரிகளிடம் உண்மையைச் சொல்லும் அரசியலாளர்கள் வேண்டும். அரசைக் காப்பாற்றும், முள்ளிவாய்க்கால் பழியில் எம் பிள்ளைகளையும் பங்கிட்டுக் கொள்ளும் நபர்களல்லர் தமிழர்களின் தேவை. பிள்ளைகளைத் தேடும் தாய்களின், தந்தைகளின், உடன் பிறப்புக்களின் கண்ணீரைத் தொட்டுப் பார்க்கவல்ல அரசியல் நிர்வாகி வேண்டும்.**

### வடக்கில் அரசின் தேவை என்ன?

வடபகுதி இரண்டுக்கு மேற்பட்ட ஆளுகை வகைகளுக்கு உட்பட்டிருக்கிறது. ஜனநாயக முறை யில் தேர்ந்தெடுக்கப்பட்ட வட மாகாண சபை ஒரு வகை. இராணுவம், மத்திய அரசின் கீழ் வருகின்ற நிர்வாக சபை மற்றொரு வகை. எனவே இங்கு நிர்வாகக் குழப்பங்கள், பங்கு பிரிப்புக்களில் அசம்பாவிதங்கள் நிகழ அதிக வாய்ப் புக்களுண்டு.

இந்த முதன்மையான நிர்வாக வகைகளுக்குள் அரசுக்குத் தேவையானது மெழுகுச் சிலை நிர்வாகிகளும் நிர்வாகமுமே. அதைத்தான் அரசு எதிர்பார்க்கிறது. அதற்காகத்தான் வடக்கு மாகாண சபையை இயங்காமல் முடக்கி வைக்க அது முயற்சிக்கிறது.

இதற்கு மாறாக மக்கள் பக்கம் இருக்கும் பலமான அமைப்பாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைப்பே இருக்க வேண்டும். அது ஏனைய அமைப்புக்களால் பலவீனப்படுத்தப் பட்டுக் கொண்டிருந்தாலோ, அதன் செயற்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தாலோ, உடனடி நடடிவக்கை எடுக்ககூடிய வகையில் அது செயற்றிறன் பெற்றிருக்க வேண்டும். ஆனால் வடக்கின் நிலைமை என்ன? தீர்மானம் இயற்றுவதில் கின்னஸ் சாதனை படைத்தலுக்கான ஒரு சபையாக மட்டுமே இந்த நிர்வாகம் செயற்படுகிறது. அதையே அரசும் எதிர்பார்க்கிறது. நடைமுறையில் வீரியமற்ற, ஆனால் பரப்புரையில் வீரியத்தைக் காட்டும் ஒரு நிர்வாகமாக அது தோற்றமளிக்கிறது. தனது இயலுமை என்ன என்பதை இன்னமும் வெளிக்காட்ட மறுத்து நிற்கிறது.

**மக்களின் கண்ணீருக்குப் பயந்து ஓட்டமெடுக்கும் அரசியல்வாதிகளால் யாருக்கு என்ன லாபம்? அவர்களை அரியணையேற்றவும், மாடிகளில் நின்று கையாட் டவுமா வரிசை கட்டி நின்று வாக்களித்தது சனம்? தன் துயர் போக்கும் மீட்பர்கள் என்ற நம்பிக்கையில்தானே ஒவ்வொரு அச்சமிகு தேர்தலையும் துணிவோடு எதிர் கொள்கின்றனர் மக்கள்.**

இதில் இன்னொரு விடயத்தையும் கவனித்தல் அவசியம். வடக்கைச் சுற்றிப் பார்க்க வரும் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கும், தகவல் திரட்டுநர்களுக்கும் வெண்மையான, பளபளப்பான, கண்ணீரற்ற, காயங்களின் சீழற்ற நிர்வாகத்தைக் காட்ட வேண்டிய தேவை அரசுக்கு உண்டு. ஆகவே இந்த இடத்தில் மெழுகே அழகு. நாறும் பிணங்களின் மேலான, பிள்ளைகளைத் தேடும் பசையான கண்ணீருக்கு கீழான அரசு செய்யும் அபிவிருத்தியோ கொள்ளை அழகு.

எப்பேர்ப்பட்ட ராஜதந்திரியும் இன்னொரு தேசத்தை சுற்றிப் பார்க்கையில் முதலில் அவர் சுற்றுலா தேசமாகவே அணுகுவார் என்பது ராஜதந்திரத்தின் தலையாய விதி. அப்படியே அணுகவும் வேண்டும். முதலில் அந்தப் பிராந்திய சமூக பண்பாட்டு, சூழல் நெறிமுறைகளை எடைபோட்டுக்கொள்ள இந்த விதி அவசியப்படுகிறது.

இந்த நோக்கில் போருக்குப் பின், முதன் முதலாக வடக்கை அணுகும் ராஜதந்திரி ஒருவருக்கு கிடைக்கும் முன் அனுபவம் என்னவாக இருக்கும்? பளபளப்பான நிர்வாகம். உயரிய ஆங்கிலத்தில் பேசும் மெழுகு சிலைகள். திரும்பும் தெருவின் திசைகளெல்லாம் அபிவிருத்தியின் சத்தங்கள். இதை நுகரக் கொடுக்கும் மெழுகுச்சிலைகளே அரசுக்குத் தேவை.

ஆக, இதனை நல்லதொரு அரசியல்வாதியால் செய்ய முடியுமா? சாதாரண அரசியல்வாதியாலேயே முடியாத இந்தச் செயலை எப்படி நல்லதொரு அரசியல்வாதியால் செய்ய முடியும்? எனவேதான் நல்லதொரு மெழுகு நிர்வாகி வடக்கிற்கு அவசியப் படுகிறார். ஆனால் மக்களுக்குத் தேவை நல்லதொரு அரசியல் நிர்வாகி.


இந்த அநாதையான அரசியல் பெரு வெள்ளக் காலத்தில், தமி ழரகளின் தேவை நல்ல தொரு அரசியல் நிர்வாகி யும் நிர்வாகமுமே. அவர் நல்ல அரசியல்வாதி யாகவும், மக்களுக்கான நிர்வாகியாகவும் தொழிற்படுபவராக இருக்க வேண் டும்.

ஒவ்வொரு ஜெனிவாத் தீர்மானம் வருவதற்கு முன்பும் இலங்கைக்கு படையெடுக்கும் இராஜதந்திரிகளிடம் உண் மையைச் சொல்லும் அரசியலா ளர்கள் வேண்டும். அரசைக் காப்பாற்றும், முள்ளிவாய்க்கால் பழியில் எம் பிள்ளைகளையும் பங்கிட்டுக்கொள்ளும் நபர்க ளல்லர் தமிழர்களின் தேவை. பிள்ளைகளைத் தேடும் தாய்களின், தந்தைகளின், உடன் பிறப்புக்களின் கண்ணீரைத் தொட்டுப் பார்க்கவல்ல அரசியல் நிர்வாகி வேண்டும்.

மக்களின் கண்ணீருக்குப் பயந்து ஓட்டமெடுக்கும் அரசியல்வாதிகளால் யாருக்கு என்ன லாபம்? அவர்களை அரியணையேற்றவும், மாடிகளில் நின்று கையாட்டவுமா வரிசை கட்டி நின்று வாக்களித்தது சனம்? தன் துயர் போக்கும் மீட்பர்கள் என்ற நம்பிக்கையில்தானே ஒவ்வொரு அச்சமிகு தேர்தலையும் துணிவோடு எதிர் கொள்கின்றனர் மக்கள்.

எலும்புக்கூடு மீட்புச் செய்திகள் வடமாகாணம் முழுதிலும் பரவலடைந்து கொண்டே போகின்றன. காணாமல் போனவர்களின் பெற்றோர் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றனர். நில சுவீகரிப்பு, சட்டபூர்வமானதாக மாறிவருகிறது. விவசாயம், மீன்பிடியில் என்றுமில்லாத சரிவை வடக்கு சந்தித்திருக்கிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட கணவன்களையும், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளையும் வைத்துக் கொள்ள ஆசைப்படும் வடக்கு மனிதர்களுடன் கலாசாரம் கறையேறுகிறது. இப்படியாக நம்மைச் சூழ்ந்த ஆயிரத்தெட்டுப் பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இதையெல்லாம் கட்டுப்படுத்தி தன் ஆளுகைக்குள் கொண்டு வந்து நெறிப்படுத்தக்கூடிய அரசியல் நிர்வாகியே தமிழ் மக்களின் தேவை. அரசுக்கான மெழுகு சிலை நிர்வாகியல்ல தமிழர்களின் தேவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம்: தி கார்டியன்,
தமிழில்: சாரி

# உலகை ஆளும் அப்பிள்

இந்த உலகை மூன்று அப்பிள்கள் ஆண்டன. முதலாவது ஆதாம் ஏவாள் உண்ட அப்பிள். இரண்டாவது புவிஈர்ப்பு விசையைக் கண்டறிய நியூட்டனுக்கு உதவிய அப்பிள். மூன்றாவது ஸ்டீவ் ஜொப்ஸ் கண்டறிந்த அப்பிள் நிறுவனம்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள ஐ-போன், ஐ-பாட், ஐ-போட் ஆகியவற்றைத் தயாரிக்கும் நிறுவனம் அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் இருக்கிறது. இந்த நிறுவனம் குறித்து மிகக் குறைவாகவே வெளியுலகுக்குத் தெரியும். மேலும் தெரிந்துகொள்ளச் சில தகவல்கள்:

### *ஸ்டீவ் ஜாப்ஸ் ஒரு தத்துப் பிள்ளை*

அப்பிள் நிறுவனத்தை ஸ்டீவ் ஜொப்ஸ், ஸ்டீவ் வோஸ்னியாக், ரொனால்ட் வெய்ன் என்ற மூவர் தொடங்கினர். இந்த நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாகவும் இருந்த ஸ்டீவ் ஜாப்ஸ், 2011 ஒக்டோபரில் காலமானார்.

ஜோன் ஷிபல், அப்துல்ஃபட்டா ஜண்டாலி என்ற இருவர் தங்களுடைய 23ஆவது வயதில் விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தபோது சந்தித்துக்கொண்டனர். அவர்களுடைய மகன்தான் ஸ்டீவ் ஜாப்ஸ். ஷீபலின் பெற்றோர் கொடுத்த நெருக்குதல் காரணமாக 1955இல் ஸ்டீவ் ஜொப்ஸ் தத்துக்கொடுக்கப்பட்டார். ஷீபலும் ஜண்டாலியும் பிறகு திருமணம் செய்துகொண்டனர். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

### *அப்பிளின் முதல் கணினிக்குச் சாத்தான் விலை*

அப்பிள் நிறுவனம் தயாரித்த முதல் கணினி அப்பிள்-1 விலை 666.66 டொலர் என்று நிர்ணயிக்கப்பட்டது. 6 என்ற எண் அடுத்தடுத்து 3 முறை வருவது சாத்தானைக் குறிப்பது என்பது விலையை நிர்ணயித்த ஸ்டீவ் வோஸ்னிக்குக்குத் தெரியாது. அந்தக் கணினியின் மொத்த விற்பனை விலை 500 டொலர். அத்துடன் மூன்றில் ஒரு பங்கு விலையைச் சேர்த்து சில்லறை விற்பனை விலையை நிர்ணயித்தார். 667 டொலர் என்பதே அந்த விலை. ஆனால், பில்லில் ரைப் செய்ய வசதியாக இருக்கட்டும் என்று 666.66 என்று நிர்ணயித்தார்.

### *விமானத்தில் பறக்கும் அப்பிள்*

கதேய் பசிபிக் விமான நிறுவனத்தின் மிகப் பெரிய வாடிக்கையாளர் அப்பிள் நிறுவனம்தான். கப்பல் வழியாக அனுப்ப விரும்பாமல் தன்னுடைய தயாரிப்புகளை விமானம் மூலமே அனுப்பியது. இதனால் சரக்குகள் உரிய இடத்தை வெகு விரைவாக அடைந்தன. சரக்குக் கட்டணம் அதிகமாக இருந்தாலும், சரக்குகள் விற்பனைக்கு வராமல் முடங்கும் காலம் கணிசமாகக் குறைந்தது. இதனால், கையிருப்பில் உள்ள பொருள்களில் பணம் முடங்குவது கணிசமாகக் குறைந்தது.



சர் ஜோனி ஐவ்

கப்பல்களில் ஏற்றப்படும் சரக்குப் பெட்டகங்களில் கைபேசிகள், மடிக்கணினிகள், மேசைக் கணினிகள் வருவதை அறிந்து அதை கொள்ளைக்காரர்கள் கடத்தும் ஆபத்தும், விபத்து நேரிட்டால் கடலில் மூழ்கி, சந்தைக்குக் கிடைக்காமல் போகும் வாய்ப்புகளும் உண்டு. விமானத்தில் அனுப்பியதால் அவை தவிர்க்கப்பட்டன.

### *மக்கின்டோஷ்*

அப்பிள் நிறுவனம் தயாரித்த மக்கின்டோஷ், ஜெஃப் ரஸ்கினுக்கு மிகவும் பிடித்த ரகம். அப்போதைக்கு அது குறியீட்டுப் பெயர்தான். ரஸ்கின் அலுவலகத்தில் இல்லாத நேரம் அங்கு வந்த ஜாப்ஸ் அதற்கு பை-சைக்கிள் என்று பெயர் சூட்ட முற்பட்டார். என்ன காரணத்தாலோ அது தடைப்பட்டது. மக்கின்டோஷ் என்ற பெயர் நிலைத்ததுடன் நன்கு பிரபலமும் ஆகிவிட்டது.

### *அப்பிளின் வித்தியாசமான ஹீரோ ஷொட்டுகள்*

அப்பிள் நிறுவனத்தின் விளம்பரங்களில் இடம்பெற்ற படங்கள் கணினியில் உருவாக்கப்பட்டவை அல்ல. மிக நன்றாகப் படம்பிடிக்கப்பட்ட சூப்பர் - குளோசப் புகைப்படங்களைச் சேர்த்து உருவாக்கியவை.

### *ஸ்டீவ் வோஸ்னியாக் இன்னமும் ஊழியர்தான்*

அப்பிள் நிறுவனத்தின் இணை நிறுவனரான ஸ்டீவ் வோஸ்னியாக், வோஸ் என்றும் அழைக்கப்படுவார். 1976இல் தன்னுடைய கார் தரிப்பிடத்தில் ஸ்டீவ் ஜாப்ஸுடன் சேர்ந்து ஆப்பிள் நிறுவனத்தைத் தொடங்கினார். இப்போது தொடர்ந்து வேலைக்கு வருவதில்லை என்றாலும், ஊழியர் பட்டியலில் அவரது பெயர் இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஆண்டுக்கு 120,000 டொலர்கள் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

### *ஓ வவ். ஓ வவ். ஓ வவ்*

ஸ்டீவ் ஜொப்ஸ் இறப்பதற்கு முன்னால் தனது படுக்கைக்கு அருகில் திரண்டு நின்ற குடும்பத்தினரைப் பார்த்து ஓ வவ். ஓ வவ். ஓ வவ் என்று 3 முறை கூறினார் என்று அவருடைய சகோதரி மோனா சிம்ப்சன் தெரிவிக்கிறார். மோனா எழுதிய இரங்கல் கவிதைதான் ஸ்டீவ் ஜொப்ஸ் நினைவு பிரார்த்தனைக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டு நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டது.

### *3,500 கோடி டொலர் போச்சே*

அப்பிள் நிறுவனத்தை 1976இல் ஸ்டீவ் ஜாப்ஸ், ஸ்டீவ் வோஸ்னியாக், ரொனால்ட் வெய்ன் ஆகிய மூன்று பேர் தொடங்கினாலும் ரொனால்டுதான் அப்பிள் நிறுவனத் தின் இலச்சினையை வரைந்து, கூட்டு ஒப்பந்தப் பத்திரத் தைத் தயாரித்து, அப்பிள்-1 கணினி நிறுவனத்துக்கான தயாரிப்பு வரைமுறையை எழுதியவர்.

பிறகு, கடன் தொல்லையால், அந்த நிறுவனத்தில் தனக்கிருந்த 10 சதவீதப் பங்குகளை வெறும் 800 டொலர்களுக்கு விற்றுவிட்டார். அந்தப் பங்குகளை மட்டும் அவர் இப்போது தன்னிடமே வைத்திருந்தால், அதன் மதிப்பு 3,500 கோடி டாலர்களாகும்!


### *ஐவ்-வுக்கு நன்றி*

வெள்ளை நிறத்தில் எதையுமே தயாரிக்கக் கூடாது என்று முதலில் எதிர்ப்புத் தெரிவித்தார் ஸ்டீவ் ஜொப்ஸ். ஆனால், அப்பிள் நிறுவனத்தின் வடிவமைப்பாளரான சர் ஜோனி ஐவ் அதை வெள்ளை நிறத்தில் தயாரித்தபோது ஏற்றுக்கொண்டார். மூன் கிரே வண்ணத்தில் தயாரித்துக் காட்டினாராம் ஐவ். அது வேண்டாம் என்று ஸ்டீவ் ஜாப்ஸ் நிராகரித்ததால் வெள்ளை நிறத்தில் தயாரித்துக் காட்டினாராம். இதை மற்றொரு வடிவமைப்பாளரான டக் ஸாட்ஸ்கர் தன்னுடைய சுயசரிதையில் குறிப்பிட்டிருக்கிறார்.

### *கட்டு எப்படி?*

அப்பிள் நிறுவனம் தன்னுடைய பொருள்களைத் தயாரிக்க எடுத்துக்கொள்ளும் அக்கறைக்குச் சற்றும் குறைவில்லாமல் அதை அடைக்கும் 'பக்கிங் கவர்'களுக்கும் தருகிறது. கலிஃபோர்னியாவின் கபுர்டினோ என்ற இடத்தில், 'பக்கிங்' வடிவமைப்பதற்காக இரகசிய இடத்தையே வைத்திருந்தார்களாம்.

பக்கிங் டிசைனர்கள் என்ற வடிவமைப்பாளர்கள் மணிக் கணக்கில் வேலை செய்து விதம்விதமாகப் பெட்டிகளைத் தயாரித்துவந்து காட்டுவார்களாம். அப்பிள் நிறுவனத் தயாரிப்புகளை விலைகொடுத்து வாங்கும் வாடிக்கையாளர்கள் வீட்டுக்குப் போய் அதைப் பிரிக்கும்போது அவர்களுடைய முகங்களில் ஏற்படும் மகிழ்ச்சி, திருப்தி, பூரிப்பு, பெருமிதம் ஆகியவை வெளிப்படும் விதத்தில் பக்கிங் இருக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள்.



ஸ்டீவ் ஜொப்ஸ்

### *பந்துகள்*

ஜானி ஐவ் வாழ்க்கைகுறித்துப் புத்தகம் எழுதிவரும் லியாண்டர் கானி தனது புத்தகத்தில், ஐமேக் ஜி4 என்பது ஒரு பெட்டிக்குள் வைக்கப்பட்டிருப்பது போன்ற புகைப்படத்தைச் சேர்த்துள்ளார். அந்த சாதனத்தில் பந்து வடிவ ஸ்பீக்கர்கள் அதன் இரு புறங்களிலும் இருப்பதைப் [illegible] வடிவமைத்துள்ளனர். அசப்பில் இது ஆண் உறுப்பைப் போலவே காட்சி தருகிறது. இது என்ன என்று கேட்டால், வடிவமைப்பாளர்கள் வேண்டுமென்றே இப்படி இதைச் செய்தனர் என்று பதில் கிடைத்திருக்கிறது.

ஜானி ஐவ் உலகப் புகழ் பெற்ற வடிவமைப்பாளர். அவருடைய பள்ளிக்கூடப் புகைப்படமும் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. அந்தப் புகைப்படத்தில் அவருடைய தலை அலங்காரம் மிக வித்தியாசமாக வசீகரமாக இருக்கிறது.

---

# இரு மடங்காகின கோள்கள்

புதிய கோள்களைப் பற்றிய மனிதர்களின் தேடுதல் வேட்டையில் குறிப்பிடத்தக்க அளவு புதையல் கிடைத்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இதுவரை மனிதர்களால் அடையாளம் காணப் பட்ட கோள்களின் எண்ணிக்கை வியக்கத்தக்க வகையில் இரு மடங்காக உயர்ந்திருக்கிறது.

புதிய கோள்களைத் தேடுவதற்காகவே அமைக்கப்பட்ட கெப்ளர் தொலைநோக்கி, 715 புதிய கோள்களைக் கண்டறிய உதவிகரமாக இருந்துள்ளது. நாம்வாழும் பூமியைப் போன்றே வேறு கோள்கள் இருக்கக்கூடுமா என்ற ஆசையின் விளைவே இந்தத் தேடுதல் வேட்டை. நம் சூரியக் குடும்பத்துக்கு வெளியே தற்போது மட்டும் 715 புதிய கோள்கள் கண்டறியப்பட்டுள்ளன என நாசா அறிவித்திருக்கிறது.

கெப்ளர் தொலைநோக்கி புதிய உத்தி மூலம் புதிய கோள்களுக்கான தேடலில் அதிகப்படியான கோள்கள் கண்டறியப்பட்டுள்ளன.

நாசா ஆய்வாளர் லிஸ்ஸாயர் கூறியதாவது: மனிதர்களுக்குத் தெரிந்த கோள்களின் எண்ணிக்கை இன்று இரு மடங்காகியிருக்கிறது. 305 வெவ்வேறு நட்சத்திரங்களை 715 கோள்கள் சுற்றி வருவது கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் மனிதர்கள் அறிந்த கோள்களின் எண்ணிக்கை 1,700 ஆக உயர்ந்துள்ளது என்றார்.



புதிய கோள்கள் கண்டறியப் பட்டாலும், இக்கோள்களின் கூட்டுப் பொருள்கள் (அல்லது எவற்றையெல்லாம் உள்ளடக்கியவை) என்பது குறித்த அதிக விவரங்கள் தெரியவில்லை. கடினமான தரை, நீர், அவை சுற்றிவரும் நட்சத்திரங்களிலிருந்து அவற்றின் தொலைவு, உயிர்கள் வாழ்வதற்கான சூழல் ஆகியவை குறித்து அறியப்படவில்லை. அந்தக் கோள்கள் அதிக வெப்பமுடையவையா, கடும்குளிர் நிலவும் பிரதேசமா என்பன போன்ற விவரங்களும் அறியப்படவில்லை. ஆனால், தங்கள் நட்சத்திரங்களை அவை பலமுறை கடப்பதை வானியலாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

இந்த புதிய கோள்கள் அனைத்தும் கெப்ளர் நிறுவப்பட்ட 2009 மார்ச் முதல் 2011 வரையிலான காலகட்டங்களில் கண்டறியப்பட்டவை. புதிய பகுப்பாய்வு முறையின் மூலம் அவை கடந்த புதன்கிழமை உறுதி செய்யப்பட்டன. இந்த கண்டுபிடிப்புகள் வரும் மார்ச் 10ஆம் திகதி வெளிவரவுள்ள ஆய்விதழில் வெளியிடப்படவுள்ளன.

**புதிய கோள்களைத் தேடுவதற்காகவே அமைக்கப்பட்ட கெப்ளர் தொலைநோக்கி, 715 புதிய கோள்களைக் கண்டறிய உதவிகரமாக இருந்துள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசைபோட ஒருவிடயம் 114

# அண்ணன் தம்பி

■ ரம்யன்

இது ஒரு சிறுவர்களுக்கான சின்ன கதை - படிப்பினையுண்டு. படித்துப் பார்க்கலாம் வாருங்கள்.

அண்ணனாய் இருப்பது அவஸ்தையாய் இருந்தது அர்ஜூனுக்கு. அண்ணனாய் இருப்பதை விட தம்பியாய் இருப்பதால் அருண் எல்லாவற்றிலும் முக்கியம் பெறுகின்றான். இது சரியில்லை நியாயமாகவும் தெரியவில்லை அர்ஜுனுக்கு.

அவனுக்கு கோபம் கோபமாய் வந்தது. அதனால் ஓர் இடத்தில் அமர்ந்து கோபத்தைத் தீர்த்துக் கொள்ள என்ன செய்யலாம் என்று யோசிக்கலானான் அந்த நேரத்தில் அங்கு அம்மா வந்தாள். "என்ன முழுசிக் கொண்டிருக்கிறாய். உனக்கு என்ன வந்து விட்டது என்று சொல்லு பார்ப்பம்" என்று உரத்துக் கூறினாள்.

அம்மாவும் கோபமாகத்தான் இருக்கிறா - எனக்கு அது தெரிகிறது. அவ பெரிய ஆள். ஆனால் நான் சின்னவன் - ஏழு வயது தான் ஆகிறது. ஆனால் என்னையே எல்லாரும் பெரியவன் பெரியவன் என்கிறார்கள். அருண் சின்னவனாம் பெரியவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? தெரியவில்லை. ஆனால் அருண் சின்னவனாம். அவன் என்ன செய்தாலும், என்ன சொன்னாலும் மன்னித்து விடுகிறார்கள். இவ்வாறு பலவாறு யோசித்துக்கொண்டிருக்க, அம்மா என்னையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதை அறிய மேலும் நான் மெதுவாக முனகினேன். முனுங்காதே - வாயைத் திறந்து பேசு" என்று கத்துகிறா.

"தம்பி பாவம். அவனுக்காக கவலைப் படுகிறேன்". அம்மா என்று சும்மா சொல்லி வைத்தேன். "ஆமாம் உன் சின்ன தம்பியை நல்லா நடத்தா விட்டால் நீ கவலைப்படத்தான் வேண்டும்." என்றார். சின்ன தம்பியாம்! குழந்தைப் பிள்ளை - அவனுக்கு ஐந்து வயது ஆகிறது எனக்கு திரும்பவும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

இதுதான் என் வாழ்க்கை. நான் பெரியவன் - அண்ணன் - அருண் சின்னவன் சின்ன தம்பி - இது நியாயமாகத் தோன்றவில்லை.

நான் ஏன் முதலில் பிறந்தேன். இரண்டாவதாக பிறந்திருக்கலாமே. அப்படி நடந்திருந்தால் எல்லாருமே என்னைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். அருணை புறக்கணிப்பார்கள். இப்படி குதூகலமான எண்ணங்களோடு, சீருடைகளைப் போட்டுக் கொண்டு காலைச் சாப்பாட்டை முடித்த பின் பாடசாலை வான் வந்ததால் அதில் ஏறிப் புறப்பட்டு விட்டேன்.

நல்ல வேளையாக அருண் வேறு பாடசாலைக்குப் போனான். அது ஒரு விளையாட்டுப் பள்ளி. வீட்டுக்கு அருகிலேயே இருந்தது. அவனுக்குரிய நேரங்களும் வித்தியாசம். முழுநாளும் அருணிடமிருந்து விடுதலையாகி என்பாட்டில் நாளைக் கழிக்கிறேன். ஆசிரியர்களும் என்னை விரும்புகிறார்கள். நல்ல நண்பர்களும் இருக்கிறார்கள்.

இருந்தாலும் மாலையானவுடன் வீடு திரும்பியாக வேண்டும். திரும்ப வும் அம்மா, அப்பா மற்றும் அருண். பாடசாலையில் இருந்து திரும்பி ஒரு தூக்கம் போட்டு எழுந்த பின் துடிப்பாக துள்ளி குதித்துக் கொண்டிருக்கிறான் அவன். நான் ஏற்கெனவே களைத்துப் போயிருக்கிறேன். பாடங்களுக்கான வீட்டு வேலையும் செய்தாக வேண்டும். அருண் என் அருகில் அமர்ந்து அலட்டிக் கொண்டிருப்பான். கலர் பென்சில் பெட்டியைத் திறந்து பென்சில்களை எடுத்து கிறுக்குவான். எனக்கு கோபம் வந்து ஒரு முறை முறைத்தால் அல்லது கோபமாக ஏதும் சொல்லி விட்டால் போதும் குழறத் தொடங்கிவிடுவான். அவன் ஊளையிடுவது நிற்கா விட்டால் அல்லது பெரிதாகிப் போனால் அப்பா வந்து விடுவார்.

அர்ஜூன் இந்த குழந்தையை ஏன் அழுவிக்கிறாய்? அவன் பாவம் என்று என்னிடம் கோவிப்பார்.

எனக்கு கோபம் பிய்த்துக் கொண்டு வரும். கண்கள் சிவப்பாகிவிடும்.

முன்னர் எல்லாம் இவ்வாறான சமயங்களில் நான் அழுவதுண்டு. ஆனால் இன்னும் அதிகமாகத்தான் திட்டு கிடைக்கும். நீ பெரிய பையன். இதுவா நீ உன் தம்பிக்கு காட்டும் முன்மாதிரி. நீ இப்படியே போனால் அவனும் உன்னைப் போலவே ஆகிவிடுவான்" என்பார்கள்.

ஆனால் இதில் எனக்கு உடன்பாடு இல்லை. இது எனக்கு விளங்குவதும் இல்லை. பையன்கள் அழக் கூடாதாம். ஆனால் என் தாத்தா இறந்த போது என் அப்பா அழுதிருக்கிறார். நான் அதைப் பார்த்திருக்கிறேன். ஒரு பெரிய மனிதர் அழலாம் என்றால் - ஒரு சின்ன பையன், நான் அழக் கூடாதா? என் அப்பா அழும் போது அவரது மாமா கூறினார், ஓ மனோகர் நன்றாக அழுதுமுடி, அடக்கி வைக்காதே- நெஞ்சில் கிடப்பதை வெளியில் கொட்டி விடுவது நல்லது" என்று. பள்ளிக் கூடத்தில் ஆசிரியர்களும் கூட அப்படித்தான் சொல்கிறார்கள், பையன்கள் அழக் கூடாதாம்.

அந்த வாரம் ஒருவாறு முடிந்தது. யாவும் அமைதியாக இருந்தது. நானும் அருணும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தோம். அப்பாவும் அம்மாவும் உள்ளே வந்தார்கள்.

"நாளைக்கு நாம் எல்லோரும் கடைக்குப் போகிறோம்" என்று அறிவித்தார்கள். நான் தலையை மட்டும் ஆட்டி விட்டு பேசாமல் இருந்தேன். அம்மா சொன்னார்" நாளைக்கு நாங்கள் உங்களுக்கு என்ன வாங்கப் போகிறோம் என்பது தெரியுமா" என்று கேட்டார். அமைதி தான் நிலவியது. "எங்கே, கண்டுபிடியுங்கள் பார்ப்போம்" என்று அப்பா சொன்னார். அது என்னவோ எங்கள் இருவரையும் சம்பந்தப்படுத்தியதாகத்தான் இருக்க வேண்டும். அதனால் எங்களுக்கு அறிந்து கொள்ள ஆர்வம் தோன்றினாலும் என்னவாய் இருக்கும் என்று. சொல்ல முடியவில்லை. கடைசியில் அவர்களே இரகசியத்தை சொன்னார்கள். "நாங்கள் உங்களுக்காக ஒரு மிதிவண்டி வாங்கப் போகிறோம்" என்று உடனே அருண் துள்ளிக் குதித்தான், "என்ன மாதிரி சைக்கிள்எனக்குவாங்கப்போகிறீங்கள்?" என்று கேட்டு நின்றான். அவன் முகத்தில் ஆவல் மிகுந்து காணப்பட்டது.

"இல்லை இல்லை", அம்மா சொன்னார்" புதிய மிதிவண்டி அர்ஜுனுக்குத்தான். அருணுக்கு அர்ஜுன் பாவிக்கும் மிதிவண்டி இருக்கிறது. அவன் வளர்ந்து விட்டான். இந்த சைக்கிள் சின்னதாகி விட்டது. அவன் கால்களுக்கு" என்று சொன்னார் அம்மா.

அருணின் முகம் கவலையால் சிவந்தது. அவன் அழத் தொடங்கினான்.

எப்பவுமே அர்ஜுனுக்குத்தான் புதிய சைக்கிள். அவனுக்கு எல்லாமே புதிதாக கிடைக்குது. பழசெல்லாம் எனக்கு தாறீங்கள். அவனுடைய பழைய உடுப்புகளையும் நான்தான் போட வேண்டியிருக்கும் என்று கதறி அழுதான். அவன் இப்படி அழுததை நான் முன்பு ஒரு போதும் பார்த்ததில்லை. அவன் கூறியவைகளை நான் கூர்ந்து கவனித்தேன்.

"நான் ஏன் இரண்டாவதாக பிறந்தேன். முதலாவதாக நான் பிறந்திருக்கவேண்டும். இதைநான் வெறுக்கிறேன்" என்று அருண் கூறினான். சின்னவனாய் இருப்பது வெறுப்பாக இருக்கிறது. நான் ஏன் மூத்தவனாய் பிறக்கவில்லையென்று கூறி சிணுங்கினான்.

இது என் தலையில் மிகப் பாரமானதொரு சம்மட்டியால் அடித்ததுபோல் இருந்தது எனக்கு. நான்தான் இரண்டாவதாக பிறந்திருக்க வேண்டும் என்று வெதும்பிக் கொண்டிருந்துள்ளேன். ஆனால் அருண் - தான் முதலாவதாக - அண்ணனாக பிறந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறான். இது விசித்திரமாகவும் - வேடிக்கையாகவும் இருந்தது எனக்கு.

திடீரென ஒரு கணத்தில் நான் வளர்ந்து விட்டதாக - அறிவுள்ளவனாக மாறிவிட்டதாக உணர்ந்தேன். அருண் இருந்த இடத்துக்குப் போய் அவன் தோள் மீது கையை வைத்து "சரி சரி, அருண் கவலைப்படாதே. இந்த முறை உனக்கு புத்தம் புதிய மிதிவண்டி வாங்கித் தரும்படி அப்பா அம்மாவிடம் நான் சொல்கிறேன். எனக்கு மிதிவண்டி தேவையில்லை" என்று கூறினேன். அப்பாவும் அம்மாவும் ஆச்சரியமாக எங்களைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அருண் கூறியது எனக்கு விளங்கியது. என் நெஞ்சமெல்லாம் அவனுக்காக அன்பினால் நிறைந்து வழிந்தது. அவனை அன்போடு கட்டித் தழுவி கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டேன்.

*(இந்து)*



> "நான் ஏன் இரண்டாவதாக பிறந்தேன். முதலாவதாக நான் பிறந்திருக்க வேண்டும். இதை நான் வெறுக்கிறேன் சின்னவனாய் இருப்பது வெறுப்பாக இருக்கிறது. நான் ஏன் மூத்தவனாய் பிறக்கவில்லை"



## அவதாரம்

இலட்சியக் கதவு
சாத்தப்பட்டாலும்
சிறு ஜன்னலாவது
திறந்திருக்கும்....
முயற்சியை
மூச்சுத் திணற விடாதபடி
முயற்சி செய்
வில்லங்கம் வந்து போகட்டும்....
கவலைகளை கசக்கி
பிழிந்து காயவிடு....
பூமியின் மணல் மேடுகளில்
மனது வெள்ளைக் கடதாசியாய்
பளபளக்கட்டும்....

உதாசீனப்படுத்தாமல்
உடுத்துக் கொண்டிரு
ஆயுளின்
தொலைவு வரை....
கடந்துபோன நாள்களை
பறவையின் எச்சங்களாக
கழித்து விடு....
உனக்கான சிலுவைகளை
பார்....?
நட்டு வைத்தாலும்
அவர்களுக்கு
மன்னிப்பை உன்னான்மாவில்
பொறித்துவை....

■ *சா.ரமேஸ்குமார்*
*மருதனார்மடம்.*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என் மகளாய் பிறப்பாய் அம்மா!

பாய் விரித்த படுக்கையில்
நோய் விரித்துப் படுத்திருந்தாள்.
பத்து மாதம் கருச்சுமந்த
பாசமிகு என் தாய். . . . .

எனக்கான உயிர் கொடுத்தாள்
தனக்காக எதை எடுத்தாள்
பொழிந்திட்ட அன்பு மட்டும்
போர்வையாய் போர்த்திக் கொண்டாள். . . .

தாலாட்டி எனை வளர்த்தாள்
பாலூற்றக் காத்து இருந்தாள்
கிண்ணம் கொண்டு அமுதூட்ட
எண்ணம் எனக்கு இல்லையம்மா . . . .

மார் முட்டி அருந்தியதை
உயிர் விரட்ட கொடுப்பதுவோ
பார் முழுதும் இப்பழக்கம்
பழக வைத்தப் பாவியரே. . . .
துடியாய்த் துடி துடித்தாள்
முடியாமல் நான் அழுது
தெரியாமல் திகைக் கின்றேன்
தேவை என்ன நானறியேன். . . .

■ மணியன்



பெண்கள் குல மங்கையவள்
கண்ணால் எனைத் துலாவுகின்றாள்
என்னைக் கண்டு மேதுபயன்
பின்னர் நான் தீவைக்கவோ. . . .

கதை சொல்லி வளர்த்தவளே
சிதை யினிலேச் சாம்பலாக
அதைக் காணும் என்மனமும்
பதை பதைத்து ஓலமிட. . . .

கணக்காக உயிர் பிரித்து
காலன் உன்னைக் களவாட
கன்றும் நான் மீண்டுமுந்தன்
கருவறை உள் புகுவேன். . . . . .
என்று நான் தீர்ப்பதம்மா
எனக்கு நீயளித்த கடன்
ஏதேனும் ஓர் பிறவியேனும்
என் மகளாய்ப் பிறப்பாயம்மா. . . . . .

# வீழ்வேனென்று நினைத்தாயோ?

■ இரா.சந்தோஷ் குமார்



அரவணைத்து ஆதரி..!
அதட்டி தட்டிக்கொடு..!
உனக்கு உரிமையுண்டு -உன்
எதிரியாக எனை நீ
கருதிக்கொண்டு என்னை
கரியாக்கி விடாதே...!


வெந்தணலாய்
எரியுமென் தன்னம்பிக்கை
என்னில் படர்ந்திருக்கிறது
முயற்சி காற்றில்
விஸ்வரூப தீயாக
எந்த நேரத்திலும்
எந்த திசையிலும்
எழுந்திட முடியும்..!

தோழனே..!
நீயென் எதிரியல்ல..!
நீயே என் தூண்டுகோல் !

மங்கிக்கொண்டிருக்கும்
தீபத்தின் திரிகளை
சாமி தூண்டினாலும்
ஆசாமி தூண்டினாலும்
பொங்கிக்கொண்டுதானே
ஜொலிக்கும்.

சீண்டிவிட்டால்
துவண்டு கொண்டு
வீழ்வேனென்று நினைத்தாயோ?

# சிரிக்கலாம் வாங்க...



''நம் மன்னர் வாளால்
சாகமாட்டார் என்று
எப்படிக் கூறுகின்றாய்...?''

''வாள் எடுத்தவன் தானே
வாளால் சாவான்...!''



''மன்னா! எதிர் மன்னள் நம்
அரண்மனையை
நெருங்கிவிட்டான்.''

''என்ன அமைச்சரே! நாம்
தப்புவதற்கு வழி ஒன்றுமே
இல்லையா?''

கவலைப்படாதீர்கள் மன்னா...!
அவன் எம் மகாராணியின்
முகத்தைப் பார்த்ததும் அப்படியே
நொருங்கி விட்டான்.''

''...???''



''எனக்கு புகழ்ச்சி
பிடிக்காது
புலவரே''

''சரி மன்னா... வந்ததுதான்
வந்துவிட்டேன்..
இகழ்ந்தாவது பாடிவிட்டுப்
போய்விடுகின்றேனே...?''

CWAK

# வளமாக வாழ வாஸ்து சாஸ்திரம்

## வாரம் - 14

**வடகிழக்கு மூலை நீண்ட காணி**
வடகிழக்கு மூலை நீண்ட வடிவத்தைக் கொண்ட காணி. இவ்வாறான காணி களில் வீட்டை அமைத்துக் கொண்டால் மூளை வளர்ச்சிக் குறைபாட்டை நீக்கும். குறுகிய மனதுடன் அனைவரிடமும் இரக்கமற்ற முறையில் நடந்து கொள்ப வர்களைக் கூட மக்களிடம் மிக இணக் கமாக பழகக் கூடியவராக மாற்றும். அரச அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். நீதிமன்ற வழக்குகளில் மிகச் சாதகமான பலன்களைப் பெற்றுத் தரும். விவசாயம் செழித்து ஓங்கும். கால்நடைகளால் அதிக இலாபங்கள் கிடைக்க வழி செய்யும்.

**வடக்கு நோக்கி வடகிழக்கில் நீண்ட காணி**
இவ்வாறான காணிகளைத் தேர்ந் தெடுத்து அதற்குள் வீட்டைக் கட்டிக் கொண்டால் பலன்களை மிகுந்த நம் பிக்கையுடன் உடன் பெற்றுக் கொள்ள லாம். திடீரெனப் பணக்காரர்கள் ஆவது. குறைந்த விலையில் நிலங்களை வாங்கி அதிக விலைக்கு விற்று இலாபம் பெறு வது என்பன நடக்கும். விவசாயம் மேற் கொள்பவர்கள் தழைத்தோங்குவர். ஏனையவர்களிடையே செல்வாக்கு அதி கரிக்கும். உங் கள் திறமைகள் பெரிதும் பேசப்படும். திருமண வயதில் உள்ள பெண்களுக்கு திருமணம் கைகூடுவது டன். குழந்தைக ளும் கிடைக்கும். மதிப்பு மிக்க காரியங்க ளைச் செய்து பெண்கள் புகழும், பொருளும் பெறுவர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த
பிரபல வாஸ்து
ஆலோசகர் எண்
கணித நிபுணர் கலாநிதி
**ஜே.என்.எஸ்.செல்வன்**

# சிந்தனைக்கு ஒரு விடயம்



■ மார்க் ஏப்ரகாம், வதிரி

1977 ஆம் ஆண்டு நான் ஹாட்லிக் கல்லூரியில் 7 ஆம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது நடைபெற்ற ஒரு சுவாரசியமான சம்பவம். அப்பொழுது நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரை கள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு காலகட்டம். எங்கள் வகுப்பறையிலும் மாண வர்கள் கட்சிகளாகப் பிரிந்து ஒருவரோடொருவர் மோதிக் கொள்வோம். குறிப்பாக அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் அவர்களை எதிர்த்துப் போட்டியிடுகின்ற தமிழ்ச் சுயேட்சை வேட்பாளர்களுக்கும் கடும் பிரசாரப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெரும் பான்மை அரசியல் கட்சிகளை யாரும் கணக் கெடுப்பதில்லை. நானும் வில்வராஜன் என்ற ஒரு வல்வெட்டித்துறைப் பொடியனும் தீவிர கூட்டணி ஆதரவாளர்கள்.

ஒரு நாள் நான் வகுப்பறையில் இருந்தவாறு Mr. Rajalingam is standing in the election in Uduppiddy area என்று கூறி னேன். அதாவது "திரு.இராசலிங்கம் உடுப்பிட் டிப் பிரதேசத்தில் தேர்தலில் நிற்கிறார்", என்ற தமிழ் வசனத்தை அப்படியே சொல்லுக்குச் சொல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினேன். உடனே எனக்குப் பக்கத்திலிருந்த வில்வராஜன் Mr. Thurairatnam is asking election in the Poinpedro area என்று கூறினான். அதாவது "திரு.துரைரட்ணம் பருத்தித்துறைப் பிரதேசத் தில் எலக்ஷன் கேக்கிறார்" என்ற தமிழ் வச னத்தை பச்சையாக ஆங்கிலத்தில் அப்படியே கூறினார். இவற்றை இரகசியமாக செவிமடுத் துக் கொண்டிருந்த எங்கள் ஆங்கில ஆசிரியர் எங்கள் இருவரையும் தனிமையாக அழைத்து அவற்றின் சரியான ஆங்கில வடிவங்களை சொல்லித் தந்தார். Mr.Rajalingam is contesting in the Parliamentary election for the Uduppiddy electorate என்று எனது வசனத்தையும் Mr. Thurai ratnam is representing the Pointpe dro electo rate in the forthcoming Parliamentary election என்று வில்வராஜ னின் வசனத்தையும் சரியான ஆங்கில மொழி யமைப்பில் திருத்தமாக சொல்லிக் கொடுத்தார். அதுமட்டுமல்ல English should be spoken in the English pattern அதாவது ஆங்கிலம் ஆங்கிலப் பாணியிலேயே கதைக்கப்பட வேண்டும் என்ற உண்மையையும் எமக்குக் கற்றுத் தந்தார். எம்மைத் திருத்தியமைத்த அந்த ஆங்கிலக் கடல் வேறுயாருமல்ல உயர் திரு. D.R. அருமைநாயகம் அவர்களே. He is a majestic ocean of English language.

மேற்படி சம்பவமானது நகைச்சுவையோ என்னவோ தெரியாது. ஆனால் "சிறந்த ஆசிரி யர்கள் பொக்கிஷங்கள்" Good teachers are treasures என்ற முது மொழியை நிரூபிக்கும் வகையி லான ஆசிரியர்களிடம் நாம் கற்றது நாம் செய்த பாக்கி யமே என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அற்புதமான அனுபவம் வாஜ்தா

காலக்ளுக்குக் கீழே பூமி வழுக்கிச் செல்லும் அற்புதத்தை நமக்கு அறிமுகப்படுத்தி வைப்பவை மிதிவண்டிகள் (சைக்கிள்). பால்யத்தின் முதல் சிறகைத் தரும் மிதிவண்டி அனுபவம் சவூதி அரேபிய தேசத்தின் பெண்களுக்கு கிடைப்பதே இல்லை. அங்கே ஆண்களுக்கு இணையாக மிதிவண்டியோட்டப் பெண்களுக்கு அனுமதி கிடையாது.

சவூதியின் கட்டுப்பாடுகள் பெண்களின் சிறகுகளை முற்றாக வெட்டிப்போடுபவை. திரையரங்குகளே இல்லாத அந்த தேசத்தின் முதல் திரைப்படத்தை இயக்கி, துணிச்சலாக சுதந்திரச் சிறகு விரித்திருக்கிறார் திருமதி ஹய்பா அல்-மன்சூர் (Haifaa AldMansour). ஒரு சிறுமியின் மிதிவண்டிக் கனவை, அரேபியே பெண்ணியத்தின் குறியீடாகச் சித்தரித்தது. இவர் இயக்கியிருக்கும் வாஜ்தா(2012) திரைப் படம். உலக அளவில் அள்ளி வந்திருக்கும் விருதுகளின் பட்டியல் நீளமானது. கடந்த ஆண்டு சிறந்த வெளிநாட்டுப் பட்ப் பிரிவில் ஒஸ்கர் விருதுக்கும் பரிந்துரைக்கப்பட்டது இந்தப் படம்.

சவூதி அரரேபியாவின் தலைநகரான ரியாத்தின் ஒருபகுதியில் தனது தாய் தந்தையுடன் வசிக்கிறாள் 11 வயதேநிரம்பிய வாஜ்தா. அவள் வயதையொத்த அப்துல்லா அவளது பக்கத்து வீட்டுத் தோழன். பள்ளிக்கூடத்துக்கு அவன் மிதிவண்டியில் தினசரி சிட்டாகப் பறந்து வரும் அழகை ஏக்கத்துடன் பார்க்கிறாள்.

அவள் பள்ளி சென்று திரும்பும் வழியில் ஒரு அங்காடி. அங்கே விற்பனைக்காக சைக்கிள்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றில் பச்சை நிற சைக்கிள் அவளது உள்ளத்தைக்கொள்ளையடிக்கிறது. தினசரி அதை ஏக்கமாகப் பார்த்துச்செல்லும் அவள், அம்மாவிடம் தனக்கு சைக்கிள் வேண்டும் என்று கேட்கிறாள். "பெண்கள் சைக்கிள் பழக அனுமதியில்லை. உன்னை ஆண் பிள்ளை என்று நினைக்காதே! அப்பாவுக்குத் தெரிந்தால் நீ தொலைந்தாய்" என்று அம்மா எச்சரிக்கிறாள். என்றாலும் மகளின் சுதந்திரத்தை அந்த இளம்தாய் மதிக்கிறாள். தனக்குக் கிடைக்காத சுதந்திரம் அவளுக்காவது கிடைக்கட்டும் என்று நினைக்கிறாள்.

தனக்கு பிடித்தமான பச்சை நிற சைக்கிளைதானே வாங்கினால் என்ன என்று சின்னச்சின்ன பொருள்களை விற்றுப் பணம் சேர்க்கத் தொடங்குகிறாள் வாஜ்தா.



வாஜ்தா(2012) திரைப்படம்

ஆனால் சைக்கிளின் விலை 800 சவூதி ரியால்கள். இந்த நேரத்தில் வாஜ்தாவின் பள்ளியில் குர்ஆன் ஒப்புவிக்கும் போட்டி அறிவிக்கிறார்கள். அதில் பங்கேற்கும் மாணவிகளைப் பெயர் கொடுக்க அழைக்கிறார் வகுப்பாசிரியர். முதலில் பெயர் கொடுக்காத வாஜ்தா, போட்டியில் வெல்லும் மாணவிக்கு 1000 ரியால்கள் முதல் பரிசு என்றதும் ஓடி வந்து பெயர் கொடுக்கிறாள்.

போட்டியிலும் வெல்லும் அவள், தனது கனவான பச்சை நிற சைக்கிளை வாங்கிப் பழகினாளா? அப்துல்லாவை சைக்கிள் பந்தயத்தில் வென்று காட்டினாளா என்பதுதான் திரைக் கதை. இதில் சவூதி அரேபிய வாழ்வியலில் பெண்களின் இன்றைய நிலை, அங்கிருக்கும் அரசியல் சூழல் இரண்டையும் எளிய படிமங்களாகவும் குறியீடுகளாகவும் நுட்பமாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார் ஹய்பா.

"என்னை நீ ஜெயிச்சிட முடியும்னு நினைக்கிறாயா?" என்று அப் துல்லா கேட்கும்போது, "எனக்கு மட்டும் சைக்கிள் கிடைச்சா, நாம ரெண்டு பேரும் சமம் தான்" என்ற வாஜ்தாவின் பதில் வழியாக பச்சை நிற சைக்கிளை, சவூதி அரேபியப் பெண்களின் சுதந்திரமாக உருவகித்துக் காட்டியிருக் கிறார் இயக்குநர். வாஜ்தாவின் சைக் கிள் கனவுக்கு நடுவே அவளது தந்தை வேறொரு பெண்ணை மணந்து கொள்ளத் தயாராகிறார். இதனால் தனது அம்மாவுக்கு ஏற்படும் மனப் போராட்டங்களை வாஜ்தா உணராமால் இல்லை. அம்மா, மகள் இரண்டு பேருமே தாங்கள் சுதந்திரத்துக்காகப் போராடுவதைப் பரப்புரை இல்லாத காட்சிகளின் வழியே அழுத்தமாகப் பேசுகிறது படம்.

ஒரு கவிஞருக்கு மகளாகப் பிறந்த ஹய்பா முறையாகத் திரைப்படக் கல்வி கற்று, குறும்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் வழியாகப் பயணித்து, சவூதி அரேபியாவின் முதல் திரைப்படத்தை உலகத் தரத்துடன் அளித்திருக்கிறார். விக்டோரியா டிசிகா, பிரான்ஸிஸ் த்ரூபோ போன்ற படைப்பாளிகள் மூலம் பெற்றுக்கொண்ட படைப்பூக்கத்தை மிகச் சரியாகத் தனது திரைமொழியில் பிரதிபலிப்பதில் வெற்றி பெற்றிருக்கிறார். சவூதியில் படைப்புக் காற்று சற்று சுதந்திரமாக வீசுவதற்கான சமகால சாட்சியாகியிருக்கிறது வாஜ்தா.

வாஜ்தா மாதிரியே ஆயிரம் மிதிவண்டிக் கதைகள் எம்மத்தியிலும் உண்டு. அவையும் திரைக்காவியங்களாகும் நாளுக்காக நாம் காத்திருக்க வேண்டும்.



திருமதி ஹ... மன்சூர் (Haif... Al...ansour)

# பிரமன் சொல்லிக் கொள்ளும்படி இல்லை

குத்தகைக்குக் கிடைத்த ஒரு தியேட்டரை திருமண மண்டபமாகவோ, அங்காடிக் கூடமாகவோ உருமாற்றிவிடாமல் பார்த்துக் கொள்ளத் துடிக்கும் இளைஞனின் போராட்டமே இந்த *பிரம்மன்* திரைப்படம்.

சினிமாதான் வாழ்க்கை என்று ஊரின் திரையரங்கில் உள்ள 'ரீல்' பெட்டியைக் கடத்திக் கொண்டு போய் நண்பர்களுக்குப் படம் காட்டும் இரண்டு சிறுவர்களின் கனவுகளோடு தொடங்குகிறது படம்.

அந்தச் சிறுவர்களில் ஒருவன் சிவா (சசிகுமார்). நண்பனுடன் (சந்தானம்) சேர்ந்து ஊரில் உள்ள நவீன திரையரங்கை குத்தகைக்கு எடுத்து நடத்துகிறான். பழைய படம் மட்டுமே ரிலீஸ் ஆகும் அந்தத் தியேட்டருக்குப் பெரிதாகக் கூட்டம் வருவதில்லை. வருமானம் ஈட்டித் தராத அந்தத் திரையரங்கால் ஒரு கட்டத்தில் 12 லட்சம் கடனாளி ஆகிறான் சிவா. சிறு வயதில் தன்னோடு சேர்ந்து தியேட்டரில் ரீல் பெட்டி கடத்திய நண்பன் குமார் (நவீன் சந்திரா) இப்போது பெரிய இயக்குநராக இருப்பது ஞாபகம் வருகிறது. அவனைப் பார்த்து உதவி கேட்கலாம் என்று சென்னைக்குப் புறப்படுகிறான்.

அங்கு அவனுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் அடிக்கிறது. அதன் மூலம் பணம் கிடைக்கிறது. நண்பனையும் சந்திக்கிறான். ஆனால் அவனுக்கு இவனை அடையாளம் தெரியவில்லை. அடுத்தடுத்து நடக்கும் சம்பவங்களால் சிவா பெரும் இழப்புக்கு ஆளாகிறான். அவன் நண்பனுக்கு உண்மை தெரியவரும்போது அவன் அதை எப்படி எதிர்கொள்கிறான்? என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

ஆதரவற்ற திரையரங்கம் என்னும் பின்புலத்தில் கதையை அமைத்த விதத்தில் புது இயக்குநர் சோக்ரடீஸ் கவனிக்கவைக்கிறார். ஆனால் காதல், நாயகனின் போராட்டம், அவனுக்கு ஏற்படும் திருப்பங்கள் ஆகியவற்றை அழுத்தமாகச் சொல்லத் தவறிவிட்டார். திருப்பங்களில் நம்பகத் தன்மை இல்லை. உணர்வுபூர்வமான காட்சிகளை மட்டும் கொஞ்சம் கவனமாகச் செதுக்கியிருக்கிறார். தன் சிறுவயது... நாயகன் சொல்லாததற்கான காரணம் அழுத்தமாகச் சொல்லப்படவில்லை. எனவே அவன் தியாகமும் வலியும் பார்வையாளர்களைப் பாதிக்கவில்லை. காதலியையும் விட்டுக் கொடுக் கத் தயாராவதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அது, தன் காதலியும் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதை அவன் ஏன் யோசிக்கவில்லை என்ப தற்குப் படத்தில் போதிய விளக்கம் ஏதுமில்லை.

பெரிய இயக்குநரான அந்த நண்பன் ஏன் இவ்வளவு சொரணையில்லாமல் நடந்துகொள்கிறான்? தன் காதலை அங்கீகரித்த வீட்டார், வேறு கல்யாணத்துக்கு முயற்சி செய்யும்போது நாயகி ஏன் மௌனமாக இருக்கிறாள்? என்று படத்தில் பதிலே இல்லாத கேள்விகள் ஏராளம், தாராளம். சமீபத்திய படங்களில் ஹீரோ, ஹீரோயின்களுக்கான காட்சிகளை விட அவர்கள் பெற்றோர்களுக்கு அமையும் காட்சிகள் நன்றாக இருக்கின்றன. இந்தப் படத்திலும் அப்படியே. நாயகி புதுமுகம் லாவண்யா அழகுப் பதுமையாக வருகிறார். உணர்ச்சிகரமான காட்சிகளில் கொஞ்சம் நடிக்கவும் முயற்சி செய்கிறார்.

தான் கோயிலாக நினைத்த திரையரங்கில் ஆபாசப் படம் ஓடுவதைப் பார்த்து சசிகுமார், சந்தானத்தை அடிக்கும்போது அவர் கொடுக்கும் ரியாக்ஷன்... நகைச்சுவையைப் பார்க்கிறோம்.

இணை இயக்குநராக வரும் சூரி, தண்ணீர் தெளிப்பதைப்போல அங்கும் இங்கும் நகைச் சுவையை வீசியிருக்கிறார். அவர் நடிப்பில் மெருகு ஏறியிருக்கிறது.

கடைசிக் காட்சியில் காதல், நட்பு, உணர்ச்சி என்று எல்லாமும் ஒன்றாகக் குவிந்து நிற்கும் நிலையில் நண்பன் நாயகனைக் கட்டிப் பிடித்து, "நீதாண்டா என் பிரம்மன்" என்று தலைப்புக்குக் காரணம் கற்பிப்பது, போன்ற நகைச்சுவை படத்தில் வேறு எங்கும் இல்லை.

நட்பின் திரு உருவம்; நட்புக்காக எதையும் செய்யும் முரடர் என்பதுதான் சசிகுமாரின் வழக்கமான பாணி. இந்தப்படத்தில் அவரை மென்மையானவராக இயக்குநர் காட்டியிருந்தாலும் நட்பை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறார். புதுப்புது வடிவங்களில் உடை, வெளிநாட்டு காட்சிகளில் நடனம் ஆகியவற்றைத் தவிர சசிகுமாருக்கு வித்தியாசமாகச் செய்ய எதுவும் இல்லை. அவரது சோக நடிப்பும் வலுவற்ற காட்சிகளால் எடுபடாமல் போகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் வசீகரிக்க



நிலாமகன்

பிரதிநிதிகள் நிறைந்திருந்த அந்தக் கூட்டம் ஒரு எதிர்பார்ப்புடன் காத்திருந்தது. ஊக்கத்தைத் தூண்டுகிற, தலைமைப் பண்புகள் நிறைந்த ஒரு வல்லுநர் பேசுவதைக் கேட்க அவர்கள் காத்து இருந்தனர். இறுதியாக அறைக்குப் பின்னாலிருந்து நுழைந்த அவர், அங்கு கூடி இருந்த மக்கள் வியப்படையும் வகையில் பாடத் தொடங்கினார்; தன்னம்பிக்கையோடு உறுதியாக இருந்தது அவர் நடை. சத்தமாகப் பாடிக்கொண்டே மேடைக்குச் சென்றார். அவர் பாட்டில் சொற்கள் பேரார்வத்தோடு பொருத்தமான தகவலை வெளிப்படுத்தின; அதைப் புரிந்து கொண்டு அங்கிருந்தோர் அவற்றைப் பெரிதும் ரசித்தனர். ஆழமாகப் பதியக்கூடிய கவர்ச்சி விளைவை ஏற்படுத்திவிட்டார். பேசத் தொடங்குவதற்கு முன்பே அவர்களுடைய கவனத்தைத் தன்பால் அவர் ஈர்த்துவிட்டார்.

உங்கள் கவர்ச்சி விளைவை வளர்த்துக் கொள்ள அறிமுகமில்லாத இடத்தில் காலடி எடுத்து வைக்கும் அபாயத்தை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா? அல்லது ஆபத்தை எதிர்கொள்ள நீங்கள் விரும்பவில்லை. ஆனாலும் உங்கள் தனிப்பட்ட தாக்கத்தை மேம்படுத்திக் கொள்வதில் இன்னமும் உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா? அப்படியானால், ஆபத்தை எதிர்கொள்வது தொடர்பாகச் சில சுய விழிப்புணர்வு செயற்பாடுகளைச் செய்வதற்கான நேரம் இதுவாக இருக்கக் கூடும்.

சுவாரஸ்யமான, சவாலான வழிகளில் உங்கள் தகவல்களை மற்றவர்களுக்குத் தெரிவிப்பது நிச்சயமாக உங்கள் கவர்ச்சி விளைவுக்கு வலுவூட்டுவதாக இருக்கும். ஆனால் அதிகம் யோசிக்காமல் அப்படிச் செய்வது உங்கள் எண்ணத்தை நிலை குலையச் செய்யக் கூடும். உதாரணமாக ஒரு புது வாடிக்கையாளரை முதலில் சந்திக்கும்போது ஒரு கவிதையைப் படிப்பது, ஒரு கார்ட்டூனைக் காட்டுவது, ஒரு மாஜிக் செய்வது போன்றவற்றைச் செய்து உங்கள் கருத்தை அவருக்குப் புரிய வைக்க முயற்சி செய்யலாம். ஆனால் அவருக்கு உங்கள் கருத்தை விளக்க ஆறு அங்குலக் கத்தியை மேசையின் மீது குத்துவது என்பது நிச்சயமாக அசட்டு துணிச்சல் அது உங்களுடைய ஆக்கபூர்வமான தாக்கத்தைச் சற்றும் உயர்த்தாது.

துணிவு என்பதற்குச் செயற்கையாக ஆபத்தை எதிர்கொள்வது என்று பொருள் கொள்ளக்கூடாது. மற்றவர்களைச் சென்றடைய உடல் ரீதியான செயல்களைத் துணிவாகச் செய்வது என்பது போல் எளிமையானவையாகவும் அது இருக்கலாம். உங்கள் கைகள், முகம், உடல் மூலம் இயற்கையாக உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியும் என்றால் துணிச்சலாக இருப்பது ஒரு பிரச்சினையே இல்லை. ஆனால்பெரும்பாலானோருக்கு உடல்ரீதியாக உணர்ச்சிகளை வேண்டுமென்றே வெளிப்படுத்துவதற்கு நிச்சயமாக அதிக துணிச்சல் தேவைப்படும். பரஸ்பர கருத்துப் பரிமாற்றத்தின் போது துணிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமானால் அதிக அளவு பயிற்சியும், நிறைய பின்னூட்டமும் தேவை. அவசியமானால் இவற்றை நீங்கள் கே[illegible]டுப் பெறலாம்.

## அறிவு பூர்வமாக துணிந்து செயற்படுதல்

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றைச் சீர்தூக்கிப் பார்த்த பிறகு, உங்கள் செய்தி மற்றவரைச் சென்றடைவதற்குத் துணிந்து செயற்படுவது அவசியம் என்றால் அப்படிச் செய்வது சரியானது தான்:

◆ எல்லாமே தவறாக முடிந்தாலும் அதனால் பெறும் நலன்கள் அதிகமாக இருக்கும் போது.

◆ மிக மோசமான சூழ்நிலை ஏற்பட உண்மையில் மிகக் குறைவான வாய்ப்பே இருக்கும் போது (துணிந்து செயற்படலாம்)

மேலும், மிகவும் ஆபத்தானதாகத் தோன்றுவது அல்லது அதிகத் துணிச்சல் தேவைப்படுவது போன்ற விடயங்கள் கூர்ந்து நோக்கும் போது வெறும் அச்சத்தின் நிழலாகவே இருக்கக்கூடும். அதனால் உங்கள் அச்சத்தோடு செயற்படுவது என்பது உங்கள் மனத் துணிவை வேறுவிதமாக வளர்த்துக் கொள்வது என்றாகிறது.

சாதக பாதகங்கள்: துணிந்து செயற்படுவதைப் புரிந்து கொள்ளுதல்

1. ஒரு வாடிக்கையாளரிடம் தளராத ஊக்கத்தோடு தொடர்ந்து ஆர்டர் கொடுக்குமாறு கேட்டு வருகிறீர்கள்.

◆ மிக மோசமான விளைவு - அவர் மறுக்கிறார். உங்களுடனான தொடர்பை முறித்துக் கொள்ளத் தீர்மானிக்கிறார்.

◆ மிகச் சாதகமான விளைவு - உங்களுக்கு ஆர்டர் கிடைக்கிறது; நீண்ட நாள் நிலைத்திருக்கும் இலாபகரமான உறவு ஏற்படுகிறது.

2. ஒருவருக்கொருவர் சந்திப்பில் உங்கள் சக ஊழியரிடம் அவர் செயல்திறனை மேம்படுத்திக் கொள்ளச் சொல்லுகிறீர்கள்.

மிக மோசமான விளைவு - அந்த நபருக்குக் கோபம் வருகிறது; நீங்கள் பயமுறுத்துகிறீர்கள், நியாயமற்ற வகையில் சீர்தூக்கிப் பார்த்து வேற்றுமைப் படுத்துகிறீர்கள் என்று சொல்லி ராஜினாமா செய்கிறார்.

மிகச் சாதகமான விளைவு- வெளிப்படையான உங்கள் பேச்சுக்கு அந்த நபர் நன்றி கூறுகிறார்; மேலும் கடுமையாக உழைக்க முயல்வதாகக் கூறி, பிறகு மற்றவர்களிடம் உங்கள் புகழ் பாடுகிறார்.

3. ஒரு அறைக்குள் நுழைந்து உங்களுடன் பேசுவதற்குத் தனியாக இருக்கும் முதல் நபரிடம் பேசுகிறீர்கள்.

மிக மோசமான விளைவு - அந்த நபருக்குக் கோபம் வருகிறது; நீங்கள் பயமுறுத்துகிறீர்கள், நியாயமற்ற வகையில் சீர்தூக்கிப் பார்த்து வேற்றுமைப்படுத்துகிறீர்கள் என்று சொல்லி ராஜினமாக செய்கிறார்.

மிகச் சாதகமான விளைவு - வெளிப்படையாக உங்கள் பேச்சுக்கு அந்த நபர் கூறுகிறார்; மேலும் கடுமையாக உழைக்க முயல்வதாகக் கூறி, பிறகு மற்றவர்களிடம் உங்கள் புகழ் பாடுகிறார்.

3. ஒரு அறைக்குள் நுழைந்து உங்களுடன் பேசுவதற்குத் தனியாக இருக்கும் முதல் நபரிடம் பேசுகிறீர்கள்.

மிக மோசமான விளைவு - உங்களை அவர் கடுமையாகத் தவிர்த்து விடுகிறார்; உங்களிடமிருந்து விலகிச் செல்கிறார். ரொம்ப மோசமாக நடப்பதாக நினைக்கிறீர்கள்.

மிகச் சாதகமான விளைவு - உற்சாகத்தோடு அவர் பதிலளிக்கிறார். காலத்துக்கும் நீடிக்கும் நண்பனோ அல்லது வர்த்தக ஒப்பந்தமோ உங்களுக்குக் கிடைக்கிறது. அதன் மூலமாகப் பெரிய பிசினஸ் கிடைக்கிறது.

(தொடரும்)

> மற்றவர்களைச் சென்ற டைய உடல் ரீதியான செயல் களைத் துணிவாகச் செய் வது என்பது போல் எளிமையானவை யாகவும் அது இருக்கலாம். உங்கள் கைகள், முகம், உடல் மூலம் இயற்கையாக உணர்ச் சிகளை வெளிப்படுத்த முடியும் என்றால் துணிச்சலாக இருப்பது ஒரு பிரச்சினையே இல்லை.






1. நீங்கள் அதிகாலையில் நித்திரைவிட்டு எழும்புகிறீர்களா?
2. காலைக் கடன்களை ஒழுங்காக நிறைவேற்றுகிறீர்களா?
3. வெறும் வயிற்றில் தண்ணீர் குடிக்கிறீர்களா?
4. இறைவனுக்கு நன்றி செலுத்துகிறீர்களா?
5. 'காலை எழுந்தவுடன் படிப்பு' - இதனை அமுல்படுத்துகிறீர்களா?
6. தேவையற்ற குப்பை கூளங்களை அகற்றுகிறீர்களா?
7. அப்பாவின் வருமானத்துக்குள் செலவு கட்டுபடியாகிறதா?
8. குளித்த பின்னர் தான் சாப்பாடு என்பதில் சந்தோஷப்படுகிறீர்களா?
9. சத்துள்ள சாப்பாட்டை தெரிவு செய்கிறீர்களா?
10. உங்களது கோப்பைகளை நீங்களே கழுவுகிறீர்களா?
11. வீட்டுக்குரிய கடமைகளை நீங்களும் செய்கிறீர்களா?
12. நேரத்துக்குக் கடமைக்குப் போகிறீர்களா?
13. கடமை நேரத்தில் (உங்கள்) தொலைபேசி கடமையின் நிமித்தம் பாவிக்கப்படுகிறதா?
14. கடமை நேரத்தில் கைத்தொலைபேசியை தேவை நிமித்தம் மட்டும் பாவிக்கிறீர்களா?
15. அன்றைய கடமைகளை அன்றே முடிக்கிறீர்களா?
16. பலனை எதிர்பார்க்காமல் கடமையாற்றுகிறீர்களா?
17. எல்லோரையும் அன்னியோன்னியமாக, சகோதரமாக எண்ணி வழிநடத்துகிறீர்களா?
18. ஏதாவது 3 மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருக்கிறீர்களா?
19. உங்களது கடமைகளில் ஏதாவது ஏனையவர்களிடம் திணிக்கவே மாட்டீர்கள் இல்லையா?
20. மது, மாது, போதை, சீதனம், பேராசை இவற்றுக்கு அடிமையாகமாட்டீர்கள் இல்லையா?

*கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நின்றறுப்பான் கடவுள்

பூபாலராசா இப்பொழுதும் அந்தத் தர்ம ஆஸ்பத்திரியிலதான் கிடக்கிறார். அவருக்குஏற்பட்ட காயத்தின்நோவைத் தாங்க இயலாமல் அனுங்கலும் சிணுங்கலுமாக அந்த ஆஸ்பத்திரிக் கட்டிலில் அவர் புரண்டு கொண்டிருக்கிறார்.

அவருடைய காயம் கொஞ்சம் பெரிதாகத்தான் இருக்கிறது. அதெல்லாம் ஆறக் கொஞ்சம் நாள் எடுக்கும் என்பதாய்ப் பலரும் பேசிக் கொண்டார் கள். அவருக்கு நேர்ந்த இந்த விபத்துக்கும் அவரேதான் காரணம் என்பதாய் ஒரு சிலரது பேச்சும்அடிபட்டது.

அவரைப் பார்க்கப்போனவர்களின் மத்தியில் கதிரேசுவின் கருத்தும் அதுவாகத்தான் இருந்தது. பலரது பார்வையில் அது நிகழ வேண்டிய ஒன்றுதான் என்ற கிசுகிசுப்பும் எதிர்பார்ப்பும் வேறு இருந்தது.

அந்த எண்பதுகளில் எங்கள் ஊர்க் கிராமச் சங்கம் எங்கள் கிராமத்தின் வலிமை பொருந்திய மக்கள் சபை என்று போற்றப்பட்டது. நாகேந்திரர், கணபதியார், அம்பலத்தார், யேமிஸ் வாத்தியார், குமாரசாமி உடையார் என்று அந்த ஊரவர் பலரும் கிராம சபையின் தலைவராய் இருந்து கிராமத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள்தாம்.

பூபாலராசாவும் அவ்வாறு ஒரு கிராமசபை எலக்சனில நின்று ஒரு அங்கத்தவராக வென்றவர்தான். கிராமத்திலுள்ள பதினைந்து வட்டாரங்களில் ஒன்றான பதினோராம் வட்டார மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அங்கத்தவர்.

சபாபதிப்பிள்ளை அந்தக் கிராம சபையின்; சேர்மன் என்று சொல்லப்பட்ட கிராம சபைத் தலைவராக இருந்தார்.

இவரைத் தலைவராய்த் தெரிவதற்கு முன்னின்று ஓடி உழைத்தவர் பூபாலராசாதான். கிராமசபை என்றால் அந்தக் காலத்தில அது ஒரு சின்னப் நாடாளுமன்றந்தான். கிராமத்திலே றோட்டுப் போடுறதும் கிணறு வெட்டிறதும் மலசலகூடம் கட்டிறதும் அவர்களது பிரதான சேவைகள். போக்குவரத்து, சுகாதாரம் என்பவை தொடர்பாகவும் கல்வி, வியாபாரம் என்பவற்றிலும் பல முன்னேற்றகரமான பிரேரணைகளும் தீர்மானங்களும் இந்தக் கிராம சபையிலே விவாதிக்கப்படுவதும் நிறைவேறுவதும் அந்த நாள்களில் நிகழ்வதுண்டு. சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், நூல்நிலையங்கள் எனப் பலவும் தோன்றவும் அவற்றைப் பேணவும் இந்தக் கிராம சபையே அன்று உதவியது.

கால்நடை வளர்ப்பையும் விவசாயத்தையும் இந்தச் சபையினர் ஊக்குவித்தனர். பனம் பொருள் உற்பத்திகளை அதிகரிக்கவும் இந்தக் கிராமசபை நிதியிலிருந்து உதவிகள் வழங்கப்பட்டன.

பூபாலராசா அந்தக் கிராம சபையின் மதிப்புக்குரிய அங்கத்தவர். அவரது வாக்கு ஒன்றே சபாபதிப்பிள்ளை அவர்களைச் சேர்மன் ஆக்குவதற்காகப் பணம் வீசிப் பிடிக்கப்பட்ட மதிப்புயர்ந்த ஒன்று. சபாபதிப்பிள்ளையுடன் போட்டியிட்ட சங்கரலிங்கத்தைத் தோற்கடித்ததும் அவரது வாக்குத்தான். அதனால் கிராம சபைத் தலைவரான சபாபதிப்பிள்ளைக்கு பூபாலராசா தன்னைவிட்டு விலகாமலும் மறுகட்சிக்குத் தாவாமலும் இருக்க வேண்டுமே என்ற அந்தரிப்பு.

சபாபதிப்பிள்ளையின் பார்வை பூபாலராசா மீது ஒரு தந்திரம் குவிந்த கவனிப்பையே ஏற்படுத்தியிருந்தது. கிராம சபைப் பணிகள் யாவுமே ஒரு தொகைப் பணத்தின் முதலீட்டுடனேயே முன்னெடுக்கப்பட்டன. எந்தப் பணிகளுக்கும் ஒதுக்கப்படும் நிதிக்கேற்ப வேலைகள் நடைபெற்றன. வேலை ஒவ்வொன்றுக்கும் முன்வைக்கப்படும் கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றையும் அங்கத்தவர்கள் சிலரே தமது தரகர்கள் மூலம் தமதாக்கிக் கொள்வர். அந்த வேலையில் முடிந்தவரை இவர்கள் பெரியதொரு இலாபத்தையும் சுருட்டிக் கொள்வர்.

இந்தவகைச் சுருட்டல்களுக்கு வசதியாகப் பூபாலராசாவும் தனது தரகர் ஒருவர் மூலம் கால்நடைகள் நீரருந்தும் கேணியொன்றைக் கட்டுவதற்கான கேள்விப் பத்திரத்தை கொடுத்து வைத்தார். அந்த வேலைக்கான செலவுத் தொகையைக் குறைத்துக் காட்டி ஒருவாறு அந்தக் கொண்றாக்ரைப் பெற்றுக் கொண்டார். சேர்மன் சபாபதிப்பிள்ளையும் அதற்கு உடந்தை. ஆடு மாடு குதிரைகள் தண்ணீர் குடிப்பதற்கான அந்தக் கேணியின் கட்டுமான வேலை அவருக்கே கிடைக்க உதவினார். வேலை தொடங்கி விட்டது.

எங்கள் கிராமத்தவர்கள் தமது கால்நடைகளை வீடுகளிலே கட்டி வைத்து வளர்ப்பதில் பலசிரமங்களிருந்தன. அதனால் வீட்டுக்குவெளியிலே கால்நடைகளை புல்வெளிகளில் மேயவிட்டனர். அவை அங்கிங்கென மேய்ந்து மாலையில் வீடுகளுக்கு வந்து சேரும் புல்வெளிகளில் மேயும் ஆடுகளும் மாடுகளும் குதிரைகளும் காய்ந்து வறண்ட குளங்களை முகர்ந்து அலைந்து கடந்து தமக்கான கேணிகளைத் தேடி தாகத்தோடு ஓடிவருவது வழக்கம். இத்தகைய கால்நடைகளின் மீது கருணைவைத்து முன்வைக்கப்பட்ட புதிய கேணி அமைக்கும் வேலை இப்பொழுது கிராமசபை அங்கத்தவரான பூபாலராசாவின் கைக்கு வந்திருந்தது.

தான் பதவிக்குவர ஆதரவாகவிருந்தவர் என்ற அடிப்படையில் பூபாலராசாவும் இந்தக் கொண்றாக்ற் மூலம் கொஞ்சமென்றாலும் உழைக்கட்டுமே என்ற மறைமுக நோக்கத்தில் தெரிந்தேதான் பூபாலராசாவின் 'பினாமி'க்கு அந்தக் கொண்றாக்றரை முடித்துக் கொடுத்தார்.

கேணியைக் கட்டி முடித்துவிட்டார்கள். அதற்காகத் திட்டமிட்டு முன்வைக்கப்பட்ட முழுத் தொகையும் வழங்கப்பட்டாயிற்று.

கேணியின் அமைப்புகள் வேலைகள் எல்லாம்சரிபார்க்கப்பட்டுப்புதிய கேணி கிராம சபையின் சொத்தா கியது.

ஆறேழு மாதங்கள் கடந்தன. மண்ணும் கல்லும் சீமெந்தும் கலந்து கட்டப்பட்ட கேணியின் சுவர்கள் உறுதியின்றிச் சிறிது சிறிதா கச்சிதையத் தொடங்கியது. கலவை குறைந்த சீமெந்துக் குளையலின் சீர்கேட்டால் வந்த வினை. காசு அடிக்கிறத்துக் காகபூபாலராசா மண்ணில நிறைய அள்ளிப் போட்டுக் கட்டினதின்பயன், கேணி மண்ணாய் உதிர்ந்தே கரைந்தது. சுற்றிக் கட்டப்பட்ட சுவர்கள் இடிந்து வீழ்ந்து கேணியின் நீர்ப்பரப்புக் குறுகிப்போனது. தாகத்தோடு கேணியைத் தேடிவரும் ஆடுகளும் மாடுகளும் குதிரைகளும் கேணியின் ஓர் ஓரத்தில் ஊறிய நீருக்காக ஒன்றுடன் ஒன்று முட்டி மோதி தடுக்கி விழுந்து காயப்பட்டன. கேணியின் பக்கச் சுவர்கள் சரிந்து மண் மேடாகிப் போக எஞ்சி நின்ற சிறு குழி நீரும் தாகத்தோடு ஓடிவரும் விலங்குகளால் கலங்கிச் சேறும் சகதியுமாய் குடிக்க இயலாத கூழ்க்களியாகியது. குறுகியகாலத்திற்கு உள்ளேயே கேணியின் நீர் வரண்டு போகப் பூபாலராசாவின் வேலையின் புனிதம் ஊர் கதைக்கும் பெரியதோர் புதினம் ஆகியது.

கிராம சபையின் கூட்டங்களில் இந்தக் கேணியின் சிதைவு குறித்துப் பேசப்பட்டாலும் ஆடுகளுக்காகவும் மாடுகளுக்காகவும் குதிரைகளுக்காகவும் அதிகம் அலட்டிக்கொள்ளாத அங்கத்தவர்கள் அந்தச் சபையில் அதிகமாக இருந்ததோடு மௌனமாகவும் இருந்தார்கள். நீருக்காக விலங்குகள் தாகத்தோடு அலைந்து வாடும் நிலைகண்டு கால்நடைகளின் உரிமையாளர்கள் கவலைப்பட்டாலும் கிராம சபையோ கண்ணை மூடிக்கொண்டது.

பூபாலராசா தனது வேலை முடிந்தது என்ற பாவனையில் எந்தக் கவலையுமின்றி வழமைபோல் அடுத்துவரும் வேலைக்குக் கேள்விப்பத்திரம் கோரப்படும் நாளை எதிர்பார்த்திருந்தார். எல்லாமே மௌனமானாலும் தாகத்தோடு அலையும் கால்நடைகளின் கதறல்கள் ஓய்ந்துவிடவில்லை.

இவை நடந்து [illegible] போய்விட்டன. [illegible] இந்தச் சம்பவங்கள் ஞாபகத்திலிருந்து மறைந்து போயிருந்தன.

இப்பொழுது இருக்கும் பிரதேச சபை நடவடிக்கைகளில் பூபாலராசா ஈடுபடுவதில்லை. ஒதுங்கிவிட்டார். ஆனாலும் பிரதேச சபையின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொள்வார். அக்கறையினால் அல்ல. தங்கள் காலத்தைவிட இவர்கள் என்ன செய்கிறார்கள் என்கிற விடுப்புப் புத்தியினால்தான். அவரைப் பொறுத்தவரையில் புதிய முயற்சிகளும் நவீன திட்டங்களும் என்று இன்றைய பிரதேச சபைகள் இருந்தாலும் அங்கத்தவர்கள் பணம் பார்க்கும் வகையிலேயே தீர்மானங்கள், வேலைகளும் அங்கே முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் அவருக்கு ஒரு மனத் திருப்தி. பழி பாவம் ஒன்றும் தங்களுடன் மட்டும் நின்றுவிடாது என்பதுதான் அந்தத் திருப்தி.

அந்தக் காய வாட்டிலே கட்டிலில் முனகியபடி கிடக்கும் பூபாலராசாவுக்குப் பக்கத்தில் அவரைப் பார்க்க வந்த அவரது நண்பன் சுப் பிரமணியம் அவரைச் சுகம் விசாரித்ததோடு "எண்டாலும் மச்சான் நீ அந்த மாடுகளுக்குக்கட்டின கேணியைப் பற்றி, இப்பதான் அந்த மாடுகளுக்குத் தெரிய வந்திருக் குப் போல" என்றார் நமட்டுச் சிரிப்போடு. "தெய்வம் நின்று கொல்லும் என்பதிலும் உண்மை இருக்குத் தானே!" என்று தொடர்ந்த சுப்பிரமணியத்தைப் பார்த்த பூபாலராசா, தான் அன்று செய்தவைகள் தவறுதான் என்பதைப் போலப் பரிதாபமாகச் சிரித்தார்.

வயது போன காலத்தில் மெல்ல நடந்து தனது மகனின் வீட்டுக்குப் போக அந்த ஒழுங்கையைக் கடக்க முயன்ற பூபாலராசாவை வேலி ஓரமாக ஓடிவந்த மாடு இப்படி இடித்துக் குத்திக் குதறிப் போட்டது. மூர்க்கத்தோடு பாய்ந்து முட்டியது. பூபாலராசாவின் வயிற்றிலே பெரிய காயம் இரண்டு மூன்று தையல்கள் போட்டிருக்கிறார்கள். ஆள்த் தப்பினது அருந்தப்புத் தான் என்று எல்லோரும் வாயில் விரலை வைக்கிறார்கள். வாயில்லாப் பிராணிகளுக்குச் செய்யிறதுன் பங்களுக்குத் தண்டனை கிடைக்காமற்போகாதுஎன் ஊர் பேசிக் கொண்டது. எதிர்த்துப் பேச இயலாத அப்பாவிகளை ஏமாற்றி அவர்களின் சொத்துக்களை கள்ள உறுதி எழுதி அபகரித்துக்கொண்ட சிங்காரவேலுவுக்கும் இந்தச் செய்தி ஏனோ சாவுப் பயத்தை ஏற்படுத்தியது.

பூபாலராசா அந்த ஆஸ்பத்திரிக் கட்டிலி லேயே கிடந்து வலி தாங்க இயலாமல் அனுங்கினார். எந்த வாயில்லாப் பிரா ணிகளுக்குத் தீங்கிழைத்தாலும் எவ்வகையிலேனும் தண்டனை கிடைக்கத்தான் செய்கிறது என்று நினைத்துக் கொண்டார். "நான் இந்த நீதியற்ற ஊழல் வேலையைச் செய்திருக்கக் கூடாதுதான்" பூபாலராசாவின் கண்கள் கலங்கின. அவை மூடியுமிருந்தன.

## பதில் இல்லையா???

என்னுடைய போதிமரங்கள்
விறகாகின்றன....
நெருப்பு என் நெஞ்சில்...

நான் தொட்டவை
எப்படி தொலைவாகின??

கண்ணீரோடு
கண்களும் விழுவதா??
என்ன நியாயம் கடவுளே...???

என் நாசி
எப்போது
காற்றுக்கு
தடை உத்தரவு போட்டது...???

என் நகமும் சதையும்
எப்போது
போர்க்கொடி தூக்கின??

ஏன்
என் தலைமுடி
சீப்போடு நட்பாயின??

என் கைகள்
ஏன்
விரல்களைத் துரத்துகின்றன??

எப்போதும்
மேலுதடு
கீழுதட்டை நச்சரிக்கின்றதே???

உடலைவிட்டு
கால்கள் நடப்பதா?
என்ன கடவுளே!!!!

எனது இமையங்களுக்கு
இடையே வாய்க்காலை வெட்டிவிட்டது யார்???

ஏன் கடவுளே???
பதில் இல்லையா???
ஓ....

இவற்றின் வரிசையில் நீயும் சேர்ந்து
கொண்டாயோ?????????

அம்பிகை பஞ்சலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தர்சன்

# விடிவு எப்போது?



வடபகுதியில் இன்று தொழிற்சாலைகள் என்று கூறுமளவு எவையும் இல்லை. எமது பிரதேச மக்களுக்குப் பெருமளவு வேலைவாய்ப்புகளையும், உள்ளூர் தேவைகள் பலவற்றையும் நிறைவு செய்து கொண்டிருந்த தொழிற்சாலைகள் பல போரின் பெயரால் முடக்கப்பட்டன. போர் முடிவுற்று 4 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையிலும் எமது பிரதேசங்களில் தொழிற்சாலைகளை மீள் இயக்கவோ, புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கோ எவ்விதமான முனைப்புகளையோ அல்லது அக்கறையையோ சம்பந்தப்பட்டவர்களிடம் காணமுடியவில்லை.

பலருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கிக் கொண்டிருந்த ஒரு தொழிற்சாலை. உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருந்த இந்தத் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள் பிரபல்யம் வாய்ததாகவும் இருந்தது. அதன் பின்னர் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக அதன் செயற்பாடுகள் சிதைவடைந்து போயின. இப்போது அந்தத் தொழிற்சாலை தொடர்பான தகவல்களை நாம் செவி வழிக் கதையாகவே கேட்கின்றோம்.




ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை முல்லைத்தீவு மாவட்டத்தில் 1968ஆம் ஆண்டு செரமிக் கோப்பிரேசன் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டது இந்தத் தொழிற்சாலை.

ஒரு சுற்றுலாத்தளம் போன்று காட்சி யளிக்கின்றது அந்தத் தொழிற்சாலை. அந்தக் காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகளும், பழைய இரும்புக் கம்பிகளுமாக ஓர் இயக்கமற்ற தொழிற்சாலையில் நிற்பது போன்ற எண்ணம் ஏற்படவில்லை. ஒருகாலத்தில் மிகவும் பரபரப்பாக இயங்கி இருக்கும் என்று தோன்றுகின்றது.

ஆள்கள் நடமாட்டம் அற்ற அந்த இடத்தில் தலையில் ஒரு துண்டுடன் ஒருவர் மட்டும் செங்கற்களின் மீது உட்காந்திருந்தார்.

அவரிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தால் என்ன என்று தோன்றியது.

"ஐயா... நீங்கள்...?.

"நான்தான் இதுக்கு வோச்சர்.."

"இங்க இப்ப ஓட்டுத் தொழி....." நாம் முடிக்க முன்னரே இடைமறித்த அவர், "அதெல்லாம் நிண்டு கனகாலம் ஆச்சு... இதால போங்கோ அங்கதான் ஒப்பிஸ்" என்று தன்வேலையைக் கவனிக்கத் தொடங்கினார்.

அந்தப் பக்கத்தில் தெரிந்தது செங்கல் உற்பத்தித் தொழிற்சாலை என்ற பெயர்ப்பலகை. ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை என்று கேள்வியுற்றிருந்த எமக்கு ஒட்டுசுட்டான் செங்கற் தொழிற்சாலை என்ற பெயர்ப்பலகை சற்று நெருடியது. அந்தப் பகுதி மக்களுடன் சற்றுப் பேசினோம்.

அனுபவம் வாய்ந்த வேலையாள்கள், இயந்திரங்களை இயக்குவதில் நிவுணத்துவம் மிக்க பணியாளர்கள், தேவை யான களிமண், உமி, விறகு என்று அனைத்தும் இருந்தும்கூட இந்தத் தொழிற்சாலை இயக்கமற்று இருப்பது அந்தப் பகுதி மக்களின் மிகப் பெரிய குறையாக இருக்கின்றமை அவர்களின் பேச்சில் தெரிகின்றது.

அரசியல்வாதிகளினதும் அதிகாரி களினதும் அலட்சியப் போக்கினால்தான் இந்த தொழிற்சாலை ஒரு கண்காட்சிப்பொருளாக மாறியுள்ளது என்றும் விசனிக்கின்றனர் அந்தப் பகுதி மக்கள்.

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு 46 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் அந்தத் தொழிற்சாலை முன்று பிரிவினரிடம் கைமாறியுள்ளது. 1968ஆம் ஆண்டு செரமிக் கோப்பிரேசன் நிறுவனத்தினரால் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது தொழிற்சாலையில் மொத்தம் 33 தொழி லாளர்கள் பணிபுரிந்தனர். அதன்பின்னர் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த ஓட்டு தொழிற்சாலை தமிமீழ விடுதலைப்புலிகளில் கைகளுக்கு மாறியது. அப்போது தொழிற்சாலையில் 125 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். தற்போது போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது என்று அரசு அறிவித்ததன் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கத்தினருடைய கைகளுக்கு மாறியது. போர் முடி வுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் அதுவரையில் இயங்கிக் கொண்டிருந்த தொழிற்சாலையின் உற் பத்தியும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. ஓட்டு தொழிற்சாலை செங்கல் தொழிற்சாலையாக மாற்றம் பெற்றது. 75 தொழிலாளர்கள் பணியாற்றினர். இன்று செங்கல் உற்பத்தியும் நிறுத்தப்பட்டு ஓட்டுத் தொழிற்சாலை வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

## நிலமே பிரச்சினை

"இந்த ஓட்டுத் தொழிற்சாலை மொத்தம் 13 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பில் இருக்கிது. அந்த நிலப்பரப்புத்தான் இப்போது பிரச்சினைக்குக் காரணமாக மாறியிருக்கு. அரசாங்கம் ஆரம்பத்தில் செரமிக் கோப்பிரேசன் நிறுவனத்துக்கு 'லீசிங் கில்' கொடுத்திருத்தது. ஆனால் இப்ப அரச வங்கிகள் கைத் தொழில் அமைச்சு அப்படி அல்ல, நிலம் எங்களுக்குச் சொந் தம் என்கிறது. இவர்கள் இப்பிடிச் சொல்ல செரமிக் கோப் பிரேசனும் தங்கட நிலம்தான் அது எண்டினம். இப்பிடி இவங்கள் மாறி மாறி சொல்லிக் கொண்டிருக்கேக்கதான் கவர்னர் ஓட்டு தொழிற்சாலைய எங்கட நிறுவனத்திட்ட தந்திட்டார். ஆனா எழுத்து மூலமா ஒண்டும் தரேல்ல."

"எங்களுக்கு இந்த ஓட்டுத் தொழிற்சாலையைத் தொடர்ந்து நடத்துறத்துக்கும் உற்பத்திகள மேற்கொள் ளுறதுக்கும் நிதி உதவிகள் தந்த சர் வதேச தொண்டு நிறுவனங்களின்ர உதவி யோட அந்த நிலத் வாங்குவம் எண்டு தீர்மானிச்சம். ஆனா அரச வளங்கள் கைத் தொழில் அமைச்சு விற்க முடியாது. வேணுமெண்டால் 5 கோடி ரூபாவுக்கு குத்தகைக்குதான் தருவம் எண்டு சொல்லினம். அவ்வளவு தொகை குடுத்து குத் தகைக்கு தொழிற்சாலைய தொடங்க வேண்டாம் எண்டு அந்த நிறுவனம் சொல்லிட்டுது" என்று தொழிற்சாலையின் தற்போதைய நிலையை விளக்குகின்றார் தற்போது ஓட்டுத் தொழிற்சாலைக்கு பொறுப்பாக உள்ள சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கங்களின் சமாச மாவட்ட செயலர் யோசப் ஸ்ராலின்.

## யாரும் உதவவில்லை

இந்தப் பிரச்சினைக்கு என்னதான் தீர்வு என்று அவரிடம் கேட்டோம். "நிலம்தான் பிரச்சினையா இருக்கு. இது சம்மந்தமாக 2013 ஆம் ஆண்டு 10 மாதம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு கடிதம் ஒண்டு அனுப்பின்னாங்க. அவரிட்ட இருந்தும் எந்தப் பதிலும் வரேல்ல. அது போல டக்ளஸ் தேவானந்தா, றிசாத் பதியுதீன் போன்றவையளுக்கும் கடிதங்கள் அனுப்பிட்டம். யாரிட்ட இருந்தும் பதில் கிடைக்கல. இப்ப அங்க இருந்த 'மிசினறியள்' எல்லாம் பழுதாப்போச்சு. தொழிற்சாலைய தொடங்கிறதென்டா பழைய மிசின றியள அப்புற படுத்துங்கோ எண்டு எஞ்சினியர் சொல்லிட்டார். நாங்களும் எல்லா முயற்சியும் எடுத்திட்டம். கடைசியா முல் லைத்தீவு மாவட்ட வடமாகண சபை உறுப்பினர்களிட்ட சொன்னாங்கள். அவையும் இதப்பற்றி தங்களின்ர அமர்வில கதைக்கிறதா சொல்லியிருக்கினம். இதுக்கு மேல நாங்கள் என்ன செய்ய முடியும்? என்கிறார் அவர்.

அவர் சொன்னது போன்று கடந்த வட மாகாணசபை அமர்வில் முல்லைத்தீவு மாவட்ட வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் இந்த ஓட்டு தொழிற்சாலை மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற பிரேரனையை கொண்டுவந்தார். ஆனால் முன்மொழியப் பட்ட பல பிரேரனைகள் செயற்படுத்தப்படாது கிடப்பிலேயே கிடக்கின்ற நிலையில் இதுபோன்ற பிரேரணைகளால் பயன் கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.



## மீள இயங்க வேண்டும்

மீளவும் அந்தத் தொழிற்சாலை இயங்க வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின் பெரும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. தொழிற்சாலை இயங்கத் தொடங்கினால் தமது வாழ்க்கைத் தரம் உயரும் என்று நம்பிக்கை வெளியிடுகின்றனர் அவர்கள்.

"கூழா முறிப்புக் குளத்திலபோய் தான் மண்வெட்டி கொண்டு வருவம் அதிலயும் ஒரு சந்தோசம். ஓட்டுசுட் டான் ஓட்டுக்கு தனி டிமாண்ட்டு இருந்திச்சு. இங்க மட்டு மில்ல நாடு முழுக்க எங்கட ஓட்டுக்குத்தான் டிமாண்டு. எத்தின ஓடுகள இந்த கையால எண்ணியிருப்பன், எவ்வளவு நாள் வீட்டயும் போகம வேல செய்தனான். இப்ப எல்லாம் போச்சு. மிசி னுகள் எல்லாம் கறள் பிடிச்சு போச்சு. இனிக் குளத்து மண், விறகுகள் எல்லாம் கொண்டு வாறதென்டா பொலிஸ் பிடிப் பாங்களாம். இதுகளுக்கு பயந்து தான் உவங்கள் இத துவங்காம வைச்சிருக்கிறாங் கள்" என்று மனக் குமுறலைக் கொட்டுகின்றார் ஓட்டுத் தொழிற்சாலையில் வேலை செய்த ஒருவர்.

## இயங்க நடவடிக்கை எடுப்பார்களா?

ஓட்டு சுட்டான் என்றவுடன் எல்லோர் மனதிலும் எழுவது ஓட்டுத்தொழிற்சாலையும், தான்தோன்றீஸ்வரர் ஆலயமுமே. ஆனால் அடையாளமாக இருந்த அந்தத் தொழிற்சாலை இப்போது அடைபட்டு இருப்பது எவராலும் ஜீரணிக்க முடியாத ஒன்றே. போரின் வடுக்களில் நைந்து போய் பசியாலும், பட்டினியாலும் முடங்கிப் போயுள்ள எம்மக்க ளுக்கு இவ்வாறான தொழிற்சாலைகளை மீள இயங்க வைப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சில அத்தியாவசியப் பொருள்களைக் கொடுப்பதை விடுத்து இவ்வாறான தொழிற்சாலைகளை இயங்க வைத்தால் அவர்கள் தமது சொந்தக் கால்களில் நின்று தம்மைக் காப்பாற்றிக் கொள்வார்கள். மக்கள் நலன் மக்கள் நலன் என்று கோஷம் போடுபவர்கள் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதன் முலம் அவர்களுக்கான வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ள இந்த ஓட்டு தொழிற்சாலையின் 13 ஏக்கர் நிலத்துக்கு ஒரு முடிவை பெற்று கொடுத்து அவற்றை மீளவும் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டார்களா? என்பதுதான் அந்த பகுதி மக்களின் ஏக்கமாக இருக்கின்றது.

**மீளவும் அந்தத் தொழிற்சாலை இயங்க வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின் பெரும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. தொழிற்சாலை இயங்கத் தொடங்கினால் தமது வாழ்க்கைத் தரம் உயரும் என்று நம்பிக்கை வெளியிடுகின்றனர் அவர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரிகளை விட துரோகிகளே ஆபத்தானவர்கள்

சந்திரசேகர ஆசாத்

**தென்னாபிரிக்கப் பிரச்சினையும் இலங்கைப் பிரச்சினையும் சில பொதுப் பண்புகளைக் கொண்டிருந்த போதிலும் அடிப்படையில் வெவ்வேறானவை.**



அண்மையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் ஒரு குழுவினர் தென்னாபிரிக்க பயணமாகியிருந்தனர். இதில் முஸ்லிம் மக்கள் சார்பில் பைசல் முஸ்தபாவும், தமிழ் மக்கள் சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொண்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வந்த தென்னாபிரிக்க அதிபர் பேக்கப் சூமர் தென்னாபிரிக்காவில் இன ஒடுக்குமுறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்பு எட்டப்பட்ட நல்லிணக்கம் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் விதமாக தென்னாபிரிக்காவுக்கு வரும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்புக்கமையவே அரச தரப்பினர் இப்போது ஆபிரிக்க பயணத்தை மேற்கொண்டனர் எனக் கூறப்படுகிறது.

இந்தப் பயணம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட தென்னாபிரிக்க வெளி விவகார அமைச்சர் இப்ராஹிம் இப்பிராஹிம், எந்தப் பிரச்சினையும் உள்நாட்டிலேயே தீர்க்கப்பட வேண்டும் எனவும் பிரச்சினை தீர்க்கப்படாமல் நல்லிணக்கத்தை எட்ட முடியாது எனவும் தெரிவித்திருந்தார்.

போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் நிறைவடைந்தும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதது மட்டுமன்றி பிரச்சினையை மேலும் மேலும் சிக்கலாக்கிக் கொண்டிருக்கும் ஓர் அரசின் பிரதிநிதிகள் தென்னாபிரிக்கா தரப்பிடமிருந்து எதைக் கற்றுக் கொள்ளப்போகிறார்கள் என்பதுதான் இங்கு எழும் கேள்வியாகும்.

விடுதலைப் புலிகளுடன் இறுதிச் சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றபோது அரச தரப்புக்குத் தலைமை தாங்கியவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா. பேச்சு மேசையில் தீர்வு தொடர்பான எந்தவொரு ஆலோசனையையும் முன்வைக்காது பேச்சு மேசையைக் காலத்தை இழுத்தடிக்கும் ஒரு களமாகப் பயன்படுத்த முயன்று சமாதானப் பேச்சுக்களை குழப்பியடித்த பெருமை இவருக்குண்டு. அவரே தென்னாபிரிக்கக் குழுவின் தலைமை உறுப்பினராகச் சென்றுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரச தரப்புப் பிரதிநிதிகளுக்குமிடையே பேச்சுகள் இடம்பெற்ற போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில ஆலோசனைகளை முன் வைத்தது. அரச தரப்பு பதில் வழங்காமல் இழுத்தடித்தது. அப்போது இலங்கைக்கு வந்த இந்திய வெளி விவகார அமைச்சர் கிருஷ்ணாவிடம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே ஒரே வழி என்பதை முன்வைத்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அதை அடுத்து கூட்டமைப்புடனான பேச்சு அரசால் கைவிடப்பட்டு நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்ற உருப்படாத வழிமுறையே மீண்டும் மீண்டும் உரக்கக் கூறப்பட்டு வருகிறது. அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்களை நிறுத்தும் வாய்ப்பை உருவாக்க அரசுக்கு வழிகாட்டியவர் அமைச்சர் தேவானந்தா. அவரும் இந்தக் குழுவில் தமிழரின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

அதாவது இக்குழுவில் இடம்பெறும் இரு முக்கிய நபர்களும் பேச்சுகளைக் குழப்புவதிலும், ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதைத் தடை செய்வதிலும் அனுபவமும் நிபுணத்துவமும் கொண்டவர்கள். இவர்கள் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்ட, நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்ட தென்னாபிரிக்காவிடமிருந்து எதைக் கற்று வந்துள்ளனர் எனப் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ, தென்னாபிரிக்க அனுபவங்களின் அடிப்படையில் இன நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை தனக்கு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். அது எதனால் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

தென்னாபிரிக்க மக்கள் எதிர்கொண்ட பிரச்சினையும் இலங்கையில் உள்ள நிலைமைகளும் சில பொதுத் தன்மைகளைக் கொண்டிருந்தபோதிலும் அடிப்படையில் வெவ்வேறானவை எனத் தென்னாபிரிக்க வெளி விவகார அமைச்சர் குறிப்பிட்டமையை நாம் இங்கு கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது.

தென்னாபிரிக்கக் கறுப்பின மக்கள் வெள்ளையர் அரசு தமக்கெதிராக மேற்கொண்ட இன ஒதுக்கல் கொள்கைகளுக்கு எதிராக நீண்ட போராட்டத்தை நடத்தினர். அப் போராட்டங்கள் கொடிய முறையில் ஆயுத வன்முறை மூலம் அழிக்கப்பட்ட போது ஆபிரிக்க தேசிய இராணுவத்தை அமைத்து ஆயுதப் போராட்டத்தை அவர்கள் நடத்தினர். இறுதி யில் வெள்ளையர் அரசு 27 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்ட தலைவர் நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்து சமாதானப் பேச்சுக்களை நடத்தியது. இறுதி யில் தென்னாபிரிக்க மக்கள் விடு தலை பெற்று தமக்கென ஆட்சியை அமைத்துக் கொண்டனர்.

விடுதலை பெற்ற தென்னாபிரிக்கக் கறுப்பின மக்கள் தமது அரசை அமைத்த பின்பு பெருமனதுடன் உண்மையைக் கண்டறியவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவுமான குழுவை அமைத்தனர். அக்குழு பாரபட்சமற்ற முறையில் விசாரணைகளை நடத்தி இரு தரப்பினரின் குற்றங்களையும் வெளிப்படுத்தியது. அங்கு எவரும் தண்டிக்கப்படவில்லை. அனைவரும் மன்னிக்கப்பட்டனர். அதன் மூலம் தென்னாபிரிக்க வெள்ளையர்களுக்கும் கறுப்பின மக்களுக்கும் இடையே நியாயமான நிரந்தர மான நல்லிணக்கம் உருவாக் கப்பட்டது.

அதாவது ஒடுக்குமுறையிலிருந்து விடுதலைபெற்ற கறுப்பின மக்களால் மீது ஒடுக்குமுறையாளர்கள் தமது ஒடுக்குமுறை நடவடிக்கைகளை கைவிட்ட பின்பு ஒரு நிலையான நல்லிணக்கம் உருவாக்கப்பட்டது.

இலங்கையின் நிலைமையே முழுமையிலும் எதிர்மாறானது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பெரும் இரத்தக் களரி மூலமும் வகை தொகையற்ற உயிர்க் கொலைகள் மூலமும் முறியடிக்கப்பட்டது. அதுமட்டு மன்றி போர் முடிந்த பின்பும் ஒடுக்குமுறை நட வடிக்கைகள் பலமுனைகளிலும் விரிவாக்கப்பட்டன. தமிழ் மக்களின் காணிகளை அபகரித்தல், தொழில் வாய்ப்புகளை முடக்கல், சிறையிலிருக்கும் அரசியல் கைதிகளைத் தொடர்ந்து தடுத்து வைத்தல், இராணுவமயப்பட்ட ஒரு நிர்வாகத்தை தமிழர் தாயகங்களில் நிலைநிறுத்தல், இனப்பரம் பலை மாற்றும் வகையில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவல், தமிழ், முஸ்லிம் மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்துக்கு இடையூறு செய்தல், வட மாகாண சபை முறைப்படி இயங்க விடாமல் முட்டுக்கட்டை போடல் எனப் பல்வேறு வடிவங்களிலான ஒடுக்குமுறைகள் தமிழ் மக்கள் மேல் திணிக்கப்படுகின்றன.

தென்னாபிரிக்காவில் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட மக்கள் விடுதலை பெற்று இன்று ஆட்சியதிகாரத்தில் அமர்ந்துள்ளனர். இலங்கையிலோ ஒடுக்கப்பட்ட மக்கள் மேலும் மேலும் ஒடுக்கப்படும் வகையில் ஒடுக்குமுறையாளர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளனர். ஒடுக்குமுறை நடவடிக்கைகளை அவர்கள் கைவிடவுமில்லை, கைவிடத் தயாராகவுமில்லை.

ஒரு பகுதி மக்கள் மேல் கொடிய ஒடுக்குமுறை நிலை பெற்றிருக்கும் போது அந்த மக்கள் ஒடுக்குமுறையிலிருந்து விடபடத் துடிக்கும்போது சமாதானமும் நல்லிணக்கமும் உருவாக முடியுமா?

அதன் காரணமாகவே இப்ராஹிம் இப்ராஹிம் அவர்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நல்லிணக்கம் உருவாவது சாத்தியமில்லை எனத் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பிரச்சினைகளைத் தீர்க்க இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது மட்டுமன்றி அரசு மேலும் மேலும் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருகிறது. அப்படி இருக்கையில் எப்படி இங்கு நல்லிணக்கம் உருவாக முடியும்?

தென்னாபிரிக்காவில் உண்மைகளைக் கண்டறிந்து நல்லிணக்கத்தை உருவாக்கும் குழுவின் விசாரணை தொடர்பாக வின்னி மண்டேலா குற்றஞ் சுமத்தப்பட்டார். வின்னி தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவின் மனைவி மட்டுமன்றி தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கிய தலைவர். நெல்சன் மண்டேலா 27 வருடங்கள் சிறையிலிருந்தபோது பல நெருக்கடிகள் மத்தியிலும் படகேறிச் சென்று அவரைச் சந்தித்து அவரின் ஆலோசனைகளைப் பெற்று அவற்றைப் போராளிகளுடன் பகிர்வதில் முக்கிய பங்காற்றியவர். அவரும் வெள்ளையினச் சிறுவர்களைக் கடத்திய குற்றச்சாட்டில் விசாரிக்கப்பட்டார். அவர் குற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் அதிபரின் மனைவி யாக இருந்த போதிலும் மனித உரிமை மீறல் குற்றம் காரணமாக அவர் தென்னாபிரிக்காவின் முதல் பெண்மணியாக அங்கீகரிக்கப்படவில்லை.

ஆனால் இலங்கை அரசோ போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் எனக் கருதப்படும் படை அதிகாரிகளுக்கு இராஜதந்திரப் பதவிகளை வழங்கி வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமித்து அவர்களை சர்வதேசப் போர்க் குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தப்பட முடியாது பாதுகாப்பு வழங்கியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பெரும்பான்மையானவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளில் அக்கறை காட்டவில்லை. ஒரு சில பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாகக் கூறி அனைத்தையும் குழப்பியடிக்கும் நிலைமையே ஏற்படுத்தப்படுகிறது. போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றம் படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை எனவும் மனிதாபிமான நடவடிக்கைகளையே மேற்கொண்டனர் எனவும் தீர்ப்பு வழங்கியது. அது மட்டுமன்றி அதே நீதிமன்றம் போரில் மக்கள் எவரும் காணாமற் போகவில்லை எனவும் படையினரே காணாமற் போயினர் என வும் தீர்ப்பு வழங்கியது.

குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவமே குற்றங்களை விசாரிக்கும் விந்தை இலங்கையில் மட்டும் தான் இடம் பெற்றது. காணாமற் போனோர் தொடர்பாக விசா ரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு, விடுதலைப் புலிகளைக் குற்றஞ் சாட்டும் வகையில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அது மட்டுமன்றி இராணுவத்தின் மீது ஆதாரபூர்வமாகக் குற்றஞ் சுமத்தப்பட்டால் அது தொடர்பாக மேலும் ஒரு விசா ரணைக் குழு நியமிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது காலத்தைக் கடத்தும் ஒரு நடவடிக்கை மட்டுமன்றி இக்குழுவின் விசாரணை எப்படி அமையும் என்றும் சொல்லத் தேவை யில்லை.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மனிதகுல விரோத நடவடிக்கைகள் என்பன தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற அழுத்தம் அதிகரித்து வருகிறது. உண்மையாகவே பிரச்சினையைத் தீர்க்க விரும்பினால் இலங்கை நேர்மையான முறையில் சர்வதேச விசாரணைக்கு முகம்கொடுக்க வேண்டும். ஆனால் இலங்கை அரசோ சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானத்துக்கு எதிராக நாடு நாடாகச் சென்று ஆதரவு கோரி வருகிறது.

இப்படியான ஒரு நேர்மாறான நிலையை அரசு எடுக்கும் போது எப்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தென்னாபிரிக்க அனுபவங்களை இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் பிரயோகிக்கப் போகிறார் என்பதுதான் புரிந்துகொள்ள முடியாத மர்ம மாகவே உள்ளது.

அடிப்படையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கோ இன நல்லிணக்கத்தை உருவாக்கவோ அரசுக்கு தென்னாபிரிக்க அனுபவங்களைப் பயன்படுத்தும் நோக்கம் இல்லை. அப்படியானால் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவின் தென்னாபிரிக்க பயணத்தின் நோக்கம்தான் என்ன? ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வரவுள்ள வேளையில் இப்பயணம் ஏன் மேற்கொள்ளப்பட்டது?

தென்னாபிரிக்க அனுபவங்களின் அடிப்படையில் உள்நாட்டிலேயே விசாரணைகளை நடத்தி நீதியை நிலைநாட்டப் போவதாகத் தென்னாபிரிக்கத் தரப்புக்கு வாக்குறுதியை வழங்கி ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட அதைத் தூண்டும் முயற்சியே இந்த பயணம். தமிழின விடுதலைக்குத் துரோகம் செய்ததில் நிறைந்த அனுப வங்களைப் பெற்றுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது வழமையான பங்களிப்பின் ஒரு பகுதியாக இந்தப் பயணத்தில் பங்குகொண்டுள்ளார். எதிரிகளை விடத் துரோகிகள் ஆபத்தானவர்கள் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணமகள் அலங்காரம்

மணமகள், அலங்காரம் இயற்கையாகவும், சூழ் நிலைக்கு ஏற்றவாறும் இருப்பதுடன், முகத்தில் உள்ள புள்ளிகள், பருக்களின் வடு, தோலில் இருக்கும் சுருக்கங் கள் தெரியாதவாறு மறைத்து விட வேண்டும். இவ்வாறு செய்யும் போது, முகம் பளபளப்பாகவும், மிகுந்த பொலிவு டனும் காணப்படும். அதே நேரம், அழகுப் பொருள்கள் தோலில் அதிக நேரம் இருப்பதால், ஒவ்வாமை மற்றும் பாதிப்பு வராமல் இருப்பதற்கு, தரமான அழகுப் பொருள் களையே உபயோகிக்க வேண்டும். மேலும், முகத்தில் உள்ள மேடு, பள்ளங்களை கவனித்து மேக்கப் போடுவது மிகவும் அவசியம்.

மணப்பெண் தலை அலங்காரம், மற்றொரு முக்கியமான பகுதி. மணப்பெண்ணுக்குத் தலை அலங்காரம் செய்யும் முன், முன் பகுதியை அழகுபடுத்துவது மிக முக்கியம். பெண்களில் சிலருக்கு நீண்ட தடிமனான முடி இருக்கும். அவர்களுடைய முக வடிவத்துக்கு ஏற்ப, சிகை அலங்காரம் செய்திட வேண்டும். சிலருக்கோ முடி குறைவாக இருக்கும். அவர்களுக்கு தகுந்தபடி முன் பகுதியைச் சரி செய்யும் விதமாக, தலையலங்காரம் செய்வது மிக முக்கியம். மணப்பெண்ணின் உயரம், பருமன் ஆகியவற்றை கணக்கிட்டு, முடி அலங்காரம் செய்ய வேண்டும். குட்டையான கழுத்துள்ள பெண்களுக்கு, சற்றே தூக்கியவாறு உள்ள கொண்டையும், நீளமான கழுத்துள்ள பெண்களுக்கு, கழுத்தை மூடிய அளவுக்கு இறங்கும் கொண்டையும் போடுவது அழகாக இருக்கும்.

முகம் நீளமாக இருந்தால், காதுகளை மூடியும், இரண்டு பக்கத்திலும் சிறிது முடியை, சுருள் செய்து தொங்கவிடலாம். இது, முகத்தை அகலமாக காட்டும். அகலமான முகம் உடையவர் களுக்கு, முகத்தின் முன் பக்க முடியை தூக்கி காட்டுவதன் மூலம், முகத்தை உருண்டையாக காட்ட முடியும். இதில், முகத்தின் முன் பகுதி அமைப்புக்கு ஏற்ப, மொத்த முடியையும், பின் நோக்கி இருப்பது போல், பின்பக்கமாக சீவுவதோ அல்லது நடு வகிடு எடுத்து, இரண்டு புறமும் பின்புறமாக சீவி, முகத்தின் வடிவத்துக்கேற்றாற் போல் உயர்த்தி காட்டலாம். நடுவில் வகிடு இருக் கும் இடத்தில், அழகிய நெற்றிச் சுட்டியை வைக்கலாம். இதில், இன்னொரு முறையும் உள்ளது. அது, காதின் ஒரு பக்கத்தில் இருந்து, மறு பக்கத்துக்கு பின்புறமாக தலை சீவ வேண்டும். இதில், நெற்றிச் சுட்டி வைக்க முடியாது. இந்த மாதிரி முன்புறம் சரி செய்யும் போது, முன் நெற்றியில் ஒட்டிக் கொள்ளும் சுட்டி கிடைக்கிறது. அவற்றை வைத்தும் பொருத்திக் கொள்ளலாம். மாலை, ரிசப்ஷன் அலங்காரத்தில், கொண்டை விரும்பாதவர்கள், பின்னல் வேண்டும் என்பவர்கள் பிரெஞ்ச் பிளேட் போட்டு, பின்னலை பின்னி விட வேண்டும். அக்காலத்தில், மணப் பெண்ணிற்கு, பூக்கள் மூலம் ஜடை செய்வர். ஆனால், இப்போதோ, பின்னலின் மேல் ஜரிகை, முத்து, பூக்கள் மற்றும் கற்களால் செய்யப்பட்ட மோடிவ் ஆகியவைகளை கொண்டு அலங்கரிக்கலாம்.








மணப்பெண்ணின் உயரம், பருமன் ஆகிய வற்றை கணக்கிட்டு, முடி அலங்காரம் செய்ய வேண்டும். குட்டையான கழுத்துள்ள பெண்க ளுக்கு, சற்றே தூக்கியவாறு உள்ள கொண்டை யும், நீளமான கழுத்துள்ள பெண்களுக்கு, கழுத்தை மூடிய அளவுக்கு இறங்கும் கொண்டையும் போடுவது அழகாக இருக்கும்.



# என்றும் உங்களுடன்....

பலர் தங்கள் கைப்பையில் அளவுக்கு அதிகமான அழகு சாதனங்களை எப்போதும் சுமந்து கொண்டிருப்பர். இதனால், அவசரத்துக்குத் தேவையான பொருளை எடுப்பதற்குக் கூட சிரமம் ஏற்படும். இதைத் தவிர்க்க, உங்களுடன் இருக்க வேண்டிய ஐந்து அத்தியாவசிய மேக்கப் சாதனங்கள் இதோ...

முகத்திலிருக்கும் அழுக்கு, தூசி ஆகியவற்றை சுத்தம் செய்து மேக்கப் போட்டால் தான், முகம் பளிச்சிடும். இதற்கு ஈரமான வெட் கிளென்சிங் ரிசூஅவசியம். மேலும், முகத்திலுள்ள மாசுகளை மறைத்து, சீரான தோற்றத்தைத் தரும் மாய்ஸ்சுரைசர் மற்றும் சன்ஸ்கிரீன் உள்ள பவுன்டேஷனைத் தேர்ந்தெடுப்பது நல்லது. இது முகத்தை மிருதுவாக வைப்பதுடன், வெயிலின் தீய கதிர்களிலிருந்தும் சருமத்தை பாதுகாக்கும்.

**மஸ்காரா:** கண்களுக்கு அழகை கூட்டுவதோடு மட்டுமன்றி, கண்களைப் பெரிதாக தோன்ற வைக்கும் தன்மை இதற்கு உண்டு.

**லிப்ஸ்டிக்**: இது, உதடுகளுக்கு புத்துயிர் கொடுக்கும்;உதடுகளுக்கும், கன்னங்களுக்கும் நிறத்தை சேர்க்க இது ஒன்றே போதும்.

**காம்பேக்ட்:** மேக்கப்புக்கு முழு வடிவம் கொடுப்பது பவுடர். இதற்கு காம்பேக்ட்டை உபயோகிப்பதே சிறந்தது. கண்ணாடியுடன் கிடைக்கும் காம்பேக்ட்டை வாங்கினால், தனியாக கண்ணாடியை எடுத்துச் செல்லத் தேவையில்லை .

**முகம் பொலிவு பெற:** சாதாரணமாக நடப்பதைவிட, சற்று மெதுவாக நடப்பதுடன், குறைவாகவும், இனிமையாகவும் பேசுங்கள்.

தினமும் பத்து நிமிடங்கள், மகிழ்ச்சியான, மன நிறைவான விடயங்களை மனதில் அசை போடுங்கள்.

உங்களுக்காக தினமும் 30 நிமிடங்களை ஒதுக்குங்கள். அந்த முப்பது நிமிடங்களுக்குள், மற்றவர்களை நுழைய விடாதீர்கள்.

சாப்பிட்ட உடனே எழுந்து ஓடாதீர்கள்; அமர்ந்து பின், எழுந்து செல்லுங்கள்.

பஸ்களில் போகும்போதும், மற்ற நேரங்களிலும் உங்களைச் சுற்றியுள்ள மக்களின் முகங்களைப் பாருங்கள். பிறர் மேல் உள்ள அன்பை, வார்த்தைகளில் வெளிப்படுத்துவதுடன், உங்கள் கோபத்துக்கு உரிய காரணங்களைக் கண்டுகொள்ள முயலுங்கள்.

அழகான மரம், மலர் போன்ற இயற்கை காட்சிகளை ரசியுங்கள்; பிறரைப் பார்க்கும்போது புன்முறுவல் செய்யுங்கள்.





## இலகுவாக செய்யலாம்

# யோகா

'அர்த்த' என்றால் பாதி. பாதி நிலையில், பின்னால் வளைந்து செய்யும் ஆசனம்.

**செய்முறை:**

ஒரு பாய் அல்லது விரிப்பின் மீது, இரண்டு பாதங்களையும் சேர்த்து வைத்து நேராக நிற்கவும்(பேலன்ஸ் வேண்டும் என்றால் இரண்டு பாதங்களுக்கும் இடையில் சிறிது இடைவெளி விடலாம்)

இரண்டு கைகளையும் இடுப்பில் வைக்கவும். கட்டைவிரல், முதுகுப்புறமும் மற்ற நான்கு விரல்கள் முன்புறமும் இருக்க வேண்டும்.

கண்களை மூடி, கட்டைவிரல்களால் முதுகை அழுத்திப் பிடித்தபடி முடிந்த அளவு பின்னோக்கி வளையவும்.

முழங்கால்களை வளைக்கக் கூடாது. மூச்சு சாதாரணமாக இருக்கவும். அப்படியே, 10 முதல் 15 எண்ணிக்கை வரை இருக்கவும்.

பிறகு தலையை மெதுவாக உயர்த்தி, நேராகப் பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும்.

**பயன்கள்:**

முதுகு எலும்பும் தொண்டைப்பகுதியும் வலுப்பெறும். குரல் வளம் மேம்படும்.

சுவாசக் கோளாறு, ஆஸ்துமா போன்ற பிரச்சினைகள் தீர, 'அர்த்த சக்கராசனம்' சிறந்தது.





# வெங்காயக் கூட்டு

**தேவையானவை:**

மலர வேகவிட்ட பாசிப்பருப்பு - ஒரு கப்.

பொடியாக நறுக்கிய சின்ன வெங்காயம் - அரை கப்.

பொடித்த மிளகு, சீரகம் - ஒரு தேக்கரண்டி, கடுகு, கறிவேப்பிலை, நெய், உப்பு - சிறிதளவு.

**செய்முறை:**

தாச்சிச் சட்டியில் யில் நெய்யைக் காயவிட்டு, கடுகு, கறிவேப்பிலை தாளித்து, சின்ன வெங்காயம் சேர்த்து நன்றாக வதக்கவும். இதனுடன் உப்பு, மிளகு, சீரகத்தூள் சேர்த்து வேக வைத்த பாசிப்பருப்பையும் சேர்த்து, சிறிதளவு தண்ணீர் விட்டு, ஒரு கொதிவிட்டு இறக்கவும். இதை, ரொட்டி மற்றும் சாதம் ஆகியவற்றுடன் பரிமாறலாம். சூடாகத்தான் பரிமாற வேண்டும். மிளகாய்க்கு பதில் மிளகு சேர்ப்பது இதன் தனிச்சிறப்பு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிரிப்பே சிறந்த மருந்து

"ஆடுற மாட்டை ஆடிக்கறக்கணும் பாடுற மாட்டை பாடிக் கறக்கணும்" என்பார்கள் சிலரிடம் இருந்து ஒரு பொருளை பெறுவதாயின் அவர்களிடம் உள்ள பலவீனத்தைப் பயன்படுத்தி நாம் பெறவேண்டியதைப் பெற்றுவிடலாம்.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்திலை இருந்து சுன்னாகம் மீன் சந்தைக்கு தினமும் மீன்கடகம் ஏற்றும் தட்டிவான் ைறவர் (முதலாளியும் அவர்தான்) மீன் விற்கும் பெண்களையும் ஏற்றிக் கொண்டு சந்தையில் இறக்கி விட்டு வருவார். கூலி தினமும் கொடுக்க வேண்டும். ஆனால் சில பெண்கள் கூலி ஒழுங்காக கொடுப்பதில்லை. இவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்று நினைத்து யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னா கம் வரும்போது கொக்குவில் சந்தியில் தட்டி வானை நிப்பாட்டிவிட்டு முன்பக்க எஞ்சின் மூடியைத் திறந்து பார்த்து விட்டுச் சொன்னார். வான் ஓடாது கிசுகிசு பழுதாய்ப் போச்சு புதுசாய் வாங்கிப் பூட்டினால்தான் ஓடும் என்றார். அதற்கு பெண்கள் கேட்டார்கள் "கிசு கிசு" "கனகாசு முடியுமோ" எண்டு. குறைந்தது 100 ரூபா வரும் எண்டார். சந்தைக்குப் பிந்திப் போனால் மீன் விற்கேலாது - நாறிப்போகும் என்பதால் வேறு வழியில்லாது பெண்கள் ஒவ்வொருவரும்தங்களிடம் உள்ளபணத்தை சேர்த்து அவர் கையில் கொடுத்தார்கள். ைறவர் யாழ்ப்பாணம் போவதாகப் பாசாங்கு செய்து விட்டு சில மணி நேரத்தில் வந்து அவர் சொன்ன கிசுகிசுவை பூட்டுவதுபோல் மீண்டும் பாசாங்கு செய்து சுன்னாகம் போய் அவர்களை இறக்கிவிட் டார்.

மீன்கடகம் என்றதும் எனக்கு வேறு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. சன நெருக்கமான பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது ஆச்சி ஒருவர் சந்தைக்கு போவதற்கு முற்பக்க கதவால் ஏறி தனது கடகத்தை ைறவருக்கு பக்கத்தில் வைத்தார். ைறவர் (சுடுதண்ணி) கத்தினார். "எணை ஆச்சி கடகத்தை உப்பிடி வைக்காதை நான் என்ன மாதிரி கியர் போடுறது" என கத்த ஆச்சி சொன்னார் "ஏன் மோனை கோவிக்கிறாய் கடகத்துக்குள்ளை போடன் இது வெறும் கடகம் தானே" என்றார் கிளுக்கிண்டினாலும் சிரிக்காத ைறவர் சிரித்தேவிட்டார்.

● கலாபூஷணம் மு. மாசிலாமணி.

மனச்சாட்சி செத்த நாட்டில்
மானுடமே பேயினமாய்
மாறிப்போகுமோ?

இல்லையெனில்
பாலியல் உறவுகளால்
பெண்மையை பிய்த்து தின்கின்ற
பிசாசுகளும் எப்படி பறிக்கும்
இலங்கையிலே?

ஓ.... இலங்கை மாதாவே!
உன்னை தேவர்கள் இப்போது
தீண்டுவது இல்லையோ?

உன் வயிற்றிலே பிணம்
தின்னுகின்ற
பேய்களும் பிசாசுகளும் அல்லவா
பிறப்பெடுத்து,
வெறி பிடித்து திரிகிறது
போதி மரத்தின் கீழே
போதிதர்மர் ஞானம்
போதிக்கும் நாட்டிலே
நீதியின் கீழே இலங்கை....
இந்த நீசர்களைப் பெற்றதற்காக!

● கி.கிருஸ்ணமீரா. மந்திகை.



# நீதியின் கீழே இலங்கை

## ரசமா, விஷமா?

பிரிட்மென் என்ற வெளி நாட்டுப் பக்தர் ஒரு குவளை ஆரஞ்சுப் பழ ரசத்தைப் பகவான் ரமண மகரிஷிக்குக் கொடுத்தார். "எல்லோருக்கும் இல்லையா?" என்று பகவான் கேட்டார்.

"சுவாமி உங்கள் உடல் நலம் கெட்டு வருவதால் உங்களுக்காக மட்டும் கொண்டு வந்தேன்" என்றார் பிரிட்மென். அந்தப் பழ ரசத்தை பகவான் கையால் கூடத் தொடவில்லை. "எல்லோருக்கும் இல்லாத போது எனக்கு மட்டும்தான் என்றால் அது ரசம் அல்ல. விஷம்" என்றார் பகவான்.

## எது பக்தி?

ரமணாச்சிரமத்தில் பக்தர் ஒருவர் ரமணருக்கு நூறு நமஸ்காரங்கள் சாஷ்டாங்கமாகச் செய்ய ஆரம்பித்தார். சற்று நேரம் புன்னகையுடன் பார்த்து விட்டு "இந்த சர்க்கஸ் வேலையெல்லாம் எதற்கு? மௌனமாயிருந்து பக்தியைக் காண்பிப்பதே நல்லது" என்றார் மகரிஷி.

சா. ரமேஸ்குமார்,
மருதனார்மடம்.

# தமிழ் பேசுவோமா?

● ஞானாம்பிகா

தமிழ்ப் பரம்பரை என்று கூறும் தமிழர் நாடு. ஊர் மாற்றம் காரணமாகத் தமிழ் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் யாழ்ப்பாணத் தமிழரோ தமிழ் விளங்காமல் இருக்கிறார்கள் என்றால் ஆச்சரியமாயில்லையா? ஒரு சமயம் யாழ்ப்பாணத்துப் "பச்சைத் தமிழன்" (?) அதாவது "ஒறிஜினல்" தமிழன், கொழும்புக் கடை ஒன்றில் - 'இடியப்பப் பார்சல்" ஒன்று கட்டித் தரும்படி கேட்டாராம். கட்டிக் கொடுக்கப்பட்டது. வீட்டுக்குச் சென்றவர், பசியுடன் இடியப்பப் பார்சலைத் திறந்தார் சாப்பிட.

ஐயகோ? வெறும் இடியப்பமே காணப்பட்டது? கறி..சம்பல் எதுவுமில்லை. எப்படியிருக்கும்? கடைக்காரனில் பிழையில்லை யாழ்ப்பாணத் தமிழனில்தான் பிழை. . இடியப்பம் மட்டும்தானே கேட்டார். கறி சம்பல் எதுவும் கேட்கவில்லையே? தமிழ் இன்னும் படிக்கத்தான் வேண்டும். எதையும் கேட்டு வாங்குங்கள்.

இன்னோர் சமயம். பொகவந்தலாவையில் இருந்து கொழும்பு பிரயாணம். நண்பகல் வெய்யில் தண்ணீர் விடாய் - நாக்கு வறண்டது. மாமியார் தனது மருமகளிடம் கூறினார் சோடா வாங்கும் படி. வாகனம் தரித்து நின்றபோது மருமகள் சோடா வாங்கி வந்து மாமியாரிடம் நீட்டினாள். மாமியாரோ பேயைப் பார்த்ததுபோல் சோடாவைப் பார்த்தாள். காரணம், பிளேன் சோடா? இனிப்புச் சோடா வரும் குடிக்கலாம் என்றிருந்தாள் ஆவலுடன் எப்படியிருக்கும்?' வேறு வழியில்லை - மாமியார் குடித்துவிட்டு. மருமகளுக்கும் கொடுத்தாள். மிறின்டா -செவுண் அப்-ஒறேஞ்பார்லி-நெக்ரோ. ஐஸ்கிறீம், சோடா என்று பல பெயரில் சோடா உண்டு. பெயர் சொல்லிக் கேட்க வேண்டும். கலர் என்றாவது கேட்க வேண்டும். சோடா என்று கேட்டால் பிளேன் சோடா தான் கிடைக்கும். அதுவும் இந்தியாவிலென்றால் தமிழ் அவர்களிடம் படிக்கவேண்டும் - ஏன் ஆங்கிலமும் தான்! அவர்களின் உச்சரிப்பு மிக வித்தியாசமாயிருக்கும்.

என்னை மதிக்கவில்லையா? என்பர் - என்னைத் தெரியவில்லையா? இதுவும் தமிழ்தான்! மதிக்கவில்லையா? என்பது - ஒருவரை மதித்து நடத்தலையும் சுட்டும், இது தமிழ்?

CM

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி...?

02.03.2014 முதல்
08.03.2014 வரை



## மேடம்

பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். அயலில் உள்ளவர்களின் நட்பு, உதவி கிடைத்து மனதில் பெருமிதம் கொள்வீர்கள். இயன்றளவு சமூகப் பணியில் நாட்டம் ஏற்படும். நீண்ட கால பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். இல்லறத் துணையின் கவனக்குறைவான பேச்சு, செயலினால் மனக்கஷ்டம் ஏற்படலாம். சகிப்புத்தன்மையால் குடும்பத்தில் ஒற்றுமை உருவாகும்.



## இடபம்

புதிதாக ஆரம்பிக்கும் நற்செயல்கள் ஒருமுகத்தன்மையின் பலனாக முழு அளவில் நிறைவேறும். கடந்த நாள்களில் விலகிச் சென்ற நண்பர், உறவினர் உங்களின் நல்ல குணம் உணர்ந்து நட்பு பாராட்டுவர். எதிரியால் துன்பம் வராத சுமுக வாழ்வு முறை உருவாகும். இல்லறத்துணை உங்களின் கருத்துக்களை மதித்து செயற்பட்டு, குடும்ப நலம் பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து, தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.



## மிதுனம்

பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றி முன்னர் பெற வேண்டிய நன்மைகளை எளிதாகப் பெறுவீர்கள். இதனால் சிலர் உங்களை புகழ்ந்து பேசி சுயலாபம் பெறவும், சிரமங்களை உருவாக்கவும் முயற்சி செய்வர். கவனம் தேவை. பூர்வீக சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். இல்லறத் துணை குடும்பத்தில் அன்பும், அமைதியும் நிலைத்திட பொறுமையுடன் பணிகளை மேற்கொள்வார். மாணவர்கள் அக்கறையுடன் படித்து கல்வியில் முன்னேற்றம் காண்பர்.



## கடகம்

தன்னிடம் பழகுபவர்களின் மன உணர்வு மதித்து பேசுவதால் மட்டுமே நட்பு, நற்பெயரைப் பாதுகாக்கலாம். முக்கியமான செயல் ஒன்று இனிதாக நிறைவேறும். சிலர் பயன்பாட்டு வசதி, கூடுதல் அளவில் பெற வீடுமாற்றம் செய்ய நேரிடலாம். வேலைவாய்ப்பு திருப்திகரமான வகையில் கிடைக்கும். எதிரியின் பொறாமை குணத்தால் சில சிரமங்களை அனுபவிக்க நேரிடலாம். அரசு தொடர்பான சலுகை பெறுவதில், தாமதம் உருவாகலாம்.



## சிங்கம்

முக்கியமான செயல் நிறைவேறி ஆதாய பணவரவை பெற்றுத்தரும். அயல் வீட்டார் கூடுதல் அன்பு, பாராட்டு பெறுவீர்கள். பொறாமை குணம் உள்ளவர் பார்வையில் தெரியும்படி அதிக அளவு பணம் செலவு செய்ய வேண்டாம். இல்லறத்துணையின் அதிருப்தி பேச்சை பொறுமையுடன் ஏற்றுக்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிய தேக்க நிலையைத் தாமதமின்றி சரிசெய்வது உரியபலன் பெற உதவும். பணியாளர்கள் எளியமுயற்சியால் சலுகைப்பயன் பெறலாம்.



## கன்னி

சிலரது பரிகாசம் நிறைந்த பேச்சால் மனவருத்தம் கொள்வீர்கள். சொந்தப் பணியில் ஆர்வம் கொள்வதால் சிரமங்களைத் தவிர்க்கலாம். உடன்பிறந்தவரின் தகுதிக்கேற்ற பணியை தந்து நிறைவேற்றுவீர்கள். விவகாரங்களில் சுமுகத் தீர்வு பெற முக்கியஸ்தர் உதவுவார். இல்லறத்துணையின் அன்பான பேச்சு, மனதில் உற்சாகம் தரும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், அதிக உழைப்பு என்கிற நடைமுறை சிறப்பான பலனைத்தரும்.



## துலாம்

மனதில் இருந்த குழப்பமான எண்ணங்கள் விலகி நம்பிக்கை, புத்துணர்வு பெறுவீர்கள். எதிர்மனப்பாங்கு உள்ளவரிடம் பற்றி நல் அபிப்பிராயம் ஏற்படும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்கள், உங்களுக்குத் தேவையான உதவி வழங்குவர். தொழில், வியாபாரம் செழிக்க இயன்ற அளவில் அபிவிருத்திப் பணிபுரிவீர்கள். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். மாணவர்கள் அதிக முயற்சியினால் திருப்திகர தேர்ச்சி பெறுவர்.



## விருச்சிகம்

நண்பர் சொல்லும் சிறந்த ஆலோசனையைப் பின்பற்றுவதால் சிரமமான செயலிலும், வியத்தகு நன்மை கிடைக்கும். எதிர்ப்பாளரால் உருவாகின்ற தொந்தரவு பலமிழந்து போகும். தொழிலில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். புதியவர்களின் ஆதரவினால் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு மற்றும் சலுகை கிடைக்கும். மாணவர்கள் உடல்நலம் பேணுவதில் உரிய கவனம் வேண்டும்.



## தனுசு

வசீகர பேச்சுக்களால் நண்பர், உறவினர்களின் சிரம சூழ்நிலை விலக ஆலோசனை சொல்வீர்கள். அறிமுகமான பெண் ஒருவர் சில நன்மை உங்களுக்கு கிடைக்க காரணமாகச் செயற்படுவார். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். மாணவர்களின் படிப்பில் திருப்திகரமான நிலை இருக்கும்.



## மகரம்

உறவினர், நண்பர்களுக்கு தகுதிக்கு மீறிய அளவில் பணப்பொறுப்பு ஏற்கக்கூடாது. சொத்து பராமரிப்பில் நம்பகமானவரை பணியமர்த்துவது சிரமத்தைத் தவிர்க்க உதவும். எதிர்மனப்பாங்கு உள்ளவரிடம் தேவையற்ற வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். மாணவர்கள் சாகசம் நிறைந்த விளையாட்டுக்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.



## கும்பம்

எளிய முயற்சியால் செயல்களை திறம்பட நிறைவேற்றுவீர்கள். பணவரவு அதிகம் பெற உருவாகிற வாய்ப்புக்களை தவறாமல் பயன்படுத்துவீர்கள். தொழில், வியாபார நிலைவரங்களுக்கு ஏற்ப சிலமாற்றம் பின்பற்றுவீர்கள். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். மாணவர்கள், நண்பரின் உதவியால் படிப்பில் முன்னேற்றம் அடைவர்.



## மீனம்

நடைமுறை வாழ்வில் குடும்ப நலனுக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். இதனால் பிறரது அதிருப்தி [illegible] வகையில் செயற்பட வேண்டும். உஷ்ணம் தொடர்பான பிணி அணுகாதிருக்க கூடுதல் கவனம் வேண்டும். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணத்தை பெருமைப்படுத்துவார். தொழில், வியாபாரத்தில், புதியவர்களின் வருகையால் சந்தையில் போட்டி அதிகரிக்கும். பணியாளர்கள், இடமாற்றம் எதிர்கொள்கிற நிலை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் எங்கே செல்வது?



பிருந்தா

உலகின் சரிபாதி இனமான பெண்கள் சந்தித்துவரும் கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. உலகம் முழுவதுமே பெண்கள் மீதான பாலியல் அத்துமீறல்களும் வன்கொடுமைகளும் அதிகரித்திருப்பதாகச் சர்வதேச ஆய்வுகள் அதிர்ச்சி தெரிவித்துள்ளன. ஸ்போர்ட் ரிச் லிஸ்ட் ஆய்வறிக்கை, உலகில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகம் இடம்பெறும் நாடுகள் எனப் பத்து நாடுகளைப் பட்டியலிட்டுள்ளது.

முதலிடம் எந்த நாட்டுக்குத் தெரியுமா? பெண்ணுரிமையிலும் பெண் சுதந்திரத்திலும் முற்போக்கான எண்ணம் கொண்டது எனப் பலர் நினைக்கும் அமெரிக்காவில்தான் உலக அளவில் அதிக பாலியல் வன்முறைகள் நடக்கிறதாம். ஆனால், அதில் 16 சதவீதமான புகார்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன என்பது இன்னுமொரு அதிர்ச்சியான தகவலாகும். பெரும்பாலும் 14 வயதுக்குட்பட்ட பெண்களே அதிகப் பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.

ராணுவத்தில் பணிபுரியும் பெண்களும் விதிவிலக்கல்ல. அவர்களும் பாலியல் அத்துமீறல்களைச் சந்திக்க வேண்டி இருக்கிறது.

மக்கள்தொகையில் மட்டுமல்ல, பெண்கள் மீது நிகழும் பாலியல் வன்முறைகளிலும் இந்தியாவுக்கே உலக அளவில் இரண்டாம் இடம். வளர்ந்துவரும் நாடான இந்தியாவின் தேசியப் பிரச்சினையாகவே இது விஸ்வரூபம் எடுத்துவிட்டது. நாட்டின் தலைநகரமான புதுடெல்லியில் தான் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அதிக அளவில் நடக்கின்றன.

இத்தாலிக்கும் தென் அமெரிக்காவும் அடுத்தடுத்த இடங்கள். குழுவாகச் சேர்ந்து ஒரு பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவது உலகம் முழுவதுமே அதிகரித்துள்ளது என்பது ஆண்களின் வக்கிர மனதையே உணர்த்துகிறது. தான் சீரழித்த பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதன் மூலம் தண்டனையில் இருந்து தப்பித்துவிடலாம் என்ற கட்டப்பஞ்சாயத்துதான், இத்தாலியில் கடந்த நூற்றாண்டுவரை நடைமுறையில் இருந்தது. ஆனால், தற்போது அதுபோன்ற கட்டுப்பெட்டித்தனம் ஏதும் இல்லையென்றாலும், அங்கிருக்கும் பெண்கள் பாதிப்புக்குள்ளாவது குறையவே இல்லை. இத்தாலியில் ஒரு பெண்ணுக்கு அவள் கணவன் அல்லது காதலனால்தான் அதிக அளவில் பாலியல் துன்புறுத்தல் நடைபெறுகிறது.

## குழந்தைகளும் விதிவிலக்கல்ல

தென் அமெரிக்காவில் ஒரு வருடத்திற்குக் குறைந்தது 5 லட்சம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகிறார்கள். ஸ்வீடனில் ஒரு லட்சம் பேர் வசிக்கிற குடியிருப்புப் பகுதியில் தினமும் குறைந்தது 50 பெண்களாவது பாலியல் வன்முறைக்கு ஆளாகிறார்கள்.

பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான சட்டங்கள் மிகக் கடுமையாக இருந்தாலும் பிரான்ஸ் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 25 ஆயிரம் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுகின்றனவாம். ஜேர்மனியில் இதுவரை கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் பெண் குழந்தைகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு இறந்திருக்கிறார்கள்.

## பெண்களா? உடல்களா?

இவை எல்லாம் வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல, படித்துவிட்டுக் கடந்து செல்வதற்கு. ஒவ்வொரு சாவும் , ஒவ்வொரு அத்துமீறலும், ஒவ்வொரு வன்முறையும் பெண்ணினத்தின் மீதான ஆண்களின் ஆணவப் போக்கையே காட்டுகிறது. பரந்து விரிந்த இந்த உலகத்தில் ஒரு பெண்ணுக்கு எங்குமே பாதுகாப்பு இல்லையா?

பெண்களின் உடையணியும் பாங்குதான் இதுபோன்ற பாலியல் வன்முறைகளுக்குக் காரணம் என்பது கேட்டுக்கேட்டுப் புளித்துப் போன ஒரு வசனம். பள்ளிச் சிறுமிகளும், பச்சிளம் குழந்தைகளும்கூடச் சீரழிக்கப்படுகிறார்களே. இவர்கள் அணிந்திருக்கும் ஆடை, ஆண்களின் வக்கிரத்தைத் தூண்டும் அளவுக்கு ஆபாசமானதா?

## தீர்வு என்ன?

அடக்கமாக இருக்க வேண்டும். தலை முதல் கால்வரை உடையணிய வேண்டும். ஆறு மணிக்கு மேல் வீட்டைவிட்டு வெளியே போகக் கூடாது - இது போன்ற கட்டுப்பாடுகள்தான் பெண்களைக் காக்கும் கேடயமா? வெளியுலகம்தான் பெண்களை வதைக்கிறது என்று வீட்டுக்குள்ளேயே சிறைபட்டுக் கிடந்தாலும் குடும்ப அமைப்பு பாதுகாப்பானதாக இல்லை என்பதுதான் வேதனையின் உச்சம்.

வீட்டுக்குள் இருக்கும் உறவுகளாலேயே பாதிக்கப்பட்ட பெண்களைப் பற்றி யாராவது கவலைப்படுகிறோமா? குடும்பக் கௌரவம் என்கிற சொல்லால் அழித்தொழிக்கப்படுகிற பெண்களின் வாழ்வுக்குத் தீர்வு என்ன? வீடு, பள்ளி, கல்லூரி, அலுவலகம், பொது இடம் என்று எங்குப் பார்த்தாலும் பெண்களை உருக்குலைக்கும் ஆபத்துகள் எப்போதும் தயார் நிலையிலேயே இருக்கின்றன.

ஆண்கள் மனதில் காலங்காலமாக ஊறிக்கிடக்கும் ஆணாதிக்கமும், பெண்ணை ஒரு போகப் பொருளாக நினைப்பதும், ஆணுக்கு அடிமைத் தொழில் செய்வதற்கே பிறப்பெடுத்தவள் பெண் என்கின்ற கோளாறான கற்பிதங்களுமே பெண்ணுக்கு எதிரான பாலியல் வன்முறைகளின் தோற்றுவாய். முறைப்படுத்தப் படாத சட்டங்களும் இதுபோன்ற கொடுமைகள் அதிகரிக்கக் காரணம். கடுமையான சட்டங்கள் இருந்தும் அவற்றைச் செயல் படுத்துவதில் ஏற்படும் கால தாமதமே போதும், குற்றவாளிகள் அடுத்த தவறைச் செய் வதற்கு. கருப்பை உட்பட எந்த பாதுகாப்பு இல்லாத நிலையில் தான் பெண்கள் தங்கள் வாழ் நாளைக் கழிக்க வேண்டியுள்ளது. இதற்கு என்ன தீர்வு, நீங்களே சொல்லுங்கள் தோழிகளே

# சமூகமும் பெண்களும்



அகல்யா

இன்றைய கால கட்டங்களில் பெண்களுக்கு விடுதலை என்று குரலெழுப்புவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டு செல்கிறதே தவிர எதற்கு எதிலிருந்து விடுதலை என்பது மக்கள் மத்தியில் சரியாக எடுத்துக் கூறப்படவில்லை. நாம் வாழும் இந்தச் சமூகம் அநீதியானது என்பதை நாம் ஏற்றுக் கொண்டு அந்த அநீதிகளினை ஆராய்ந்து அதை ஒழிப்பதன் மூலம் தான் நாம் விடுதலை அடைய முடியும். இவ் அநீதிகள் எவையும் எம் மீது பொறிக்கப்பட்டவையல்ல வரலாற்று ரீதியாக ஏற்பட்ட பொருளாதார கலாசார அரசியல் சமூக மாற்றங்களின் விளைவே. பெண்கள் ஆண்களினை போன்று கல்வி பயில்கிறார்கள் வேலை செய்கிறார்கள் இதை விட என்ன வேண்டும்? என்ன விடுதலை வேண்டும்? என்று கூறுபவர்களும் உண்டு. எமது சமூக அமைப்பில் குடும்பம் முக்கிய பங்கு வகிக்கின்றது இக் குடும்பங்களில் நிலவும் பாகுபாடுகளும் பிற்போக்குதனமான கருத்துக்களுமே ஒரு பெண் தன்னிச்சையாக நம்பிக்கையோடு செயற்படுவதை தடுக்கின்றது. பெண்ணானவள் பிறந்தது முதல் இறப்பு வரை தந்தை அண்ணன் கணவன் என்று யாரையாவது சார்ந்து வாழும் நிலைக்கு தள்ளப்படுகிறாள். இதனால் பெண் தனித்து வாழும் தன்மையை இழந்து கொள்கிறாள். எமது சமூகத்தில் பெண்களாக பிறப்பதே ஒரு சாபக்கேடாக நோக்கப்படுகிறது. சாதாரண விளையாட்டு பொருட்களில் கூட பாகுபாடு காட்டப்படுகிறது ஆண் பிள்ளைகளுக்கு துப்பாக்கி கார் போன்ற பொருட்களினையும் பெண் பிள்ளைகளுக்கு பொம்மை சட்டி பானை போன்ற பொருட்களினை; வாங்கி கொடுக்கிறார்கள். ஆண் என்பவன் எதைச் சொன்னாலும் பெண் என்பவள் எதிர்த்து கதைக்காமல் அதற்கு கீழ் படிந்து வாழ்ந்தால் தான் அவள் ஒரு நல்ல பெண் என எமது சமூகம் நோக்குகின்றது. அப் பெண் அவர்கள் கூறுவதற்கு எதிர்த்து கதைத்தால் அவளை சரியில்லா பெண்ணாக எமது சமூகம் நோக்குகின்றது. காதல் செய்யும் உரிமை ஆண் பெண் இருவருக்குமே காணப்படுகின்றது ஆனால் குடும்பங்கள் பல இவ் உரிமையை பெண்ணுக்கு கொடுக்க மறுக்கின்றது. பெண்களின் திறமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு தளமாகவே இன்று அதிகமான [illegible] கின்றது. இன் [illegible] முறை பெண்கள் தொழிலுக்கு செல்வதை கட்டாயப்படுத்தி இருக்கின்ற போதும் ஊதியம் பெறும் தொழிலை கவனிப்பதோடு ஊதியம் பெறாத வீட்டு தொழிலையும் அவளே சுமக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. மற்றும் பெண்ணின் வாழ்க்கையானது கணவன் இறப்பதுடனே முடிகிறது. விவாகரத்து ,மறுமணம் என்பன சட்டரீதியாக கொடுக்கப் பட்ட போதும் சமூக ரீதியாக ஏற்றுக் கொள்வது அரிதாகவே காணப்படுகின்றது. ஆண் என்ன பிழை செய்தாலும் அவனை ஏற்று பெண்ணானவள் வாழவேண்டும் என எமது சமூகம் எதிர்பார்க்கிறது அவ்வாறு அவள் வாழாவிடின் அவள் மீது தேவையில்லா குற்றங்களை சமூகம் சுமத்துகின்றது. இவ்வாறு எமது சமூகத்திலுள்ள பல பெண்கள் பல்வேறுபட்ட ஒடுக்கு முறைகளுக்குள் தள்ளப்படுகிறார்கள். எனவே இவ் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக கிளர்ந்து நாம் எமது உரிமைகளினை பெற்று யாரையும் சார்ந்து வாழாது சுயமாக சிந்தித்து எமக்குள் ஒரு தன்னம்பிக்கையினை வளர்த்து நாம் ஓர் முழுமையான விடுதலை அடைவதன் மூலம் தான் [illegible] விடுதலையைப் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பே சிறந்த மருந்து



கோழி மேச்சாலும் கோறண மேந்திலை மேய்க்க வேணும் என்று யாழ்ப்பாணத்தில் ஒரு பேச்சு வழக்கு இருக்கிறது. இதில் அர்த்தம் இருக்கிறது போல்தான் தெரிகிறது. அரச சேவையில் உள்ள சுதந்திரம் தனியார் சேவையில் இல்லை. அதுவும் அரச வெளிக்கள உத்தியோகத்தர்கள் சுதந்திரப் பறவைகளாகத் திரிவர். இவர்களுக்கு மாதாந்த பிரயாணப் படியும் வழங்கப்படும். இவ்வளவு இருந்தும் சில ஊழியர்கள் இவற்றை மதியாது வேலையை புறம் தள்ளி விட்டு வீட்டுக்குச் சென்று விடுவர். வேலை நாளில் லீவு இல்லாது (French Leave இல்) வீட்டுக்குச் சென்ற வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவரை அவரது மேல் அதிகாரி கண்டு விட்டார். இதை அறிந்து கொண்ட உத்தியோகத்தர் பலமாக யோசித்து விட்டு அடுத்த நாள் தனது மேல் அதிகாரிக்கு ஒரு தந்தி அடித்தார் "Please Grant Leave Yesterday" என்று.



*கலாபூஷணம் மு.மாசிலாமணி.*

# Google பின்வாங்கிய சேவைகள்

தற்போது உலகின் மொத்த இணையத்தையே தனது பிடிக்குள் வைத்திருப்பது யார் என்றால் அது கூகுள் தான். இது யாவருமறிந்ததே. கூகுள் நிறுவனம் எப்போதும் தன் வாடிக்கையாளர்களுக்குப் பல புதிய வசதிகளை, அடிக்கடி, பெரும்பாலும் இலவசமாகத் தந்து கொண்டிருக்கும். ஆனால் அதே கூகுள் நிறுவனம்தான் வழங்கி வந்த பல வசதிகளுக்கு மூடுவிழாக்களை எந்த வித ஆரவாரமும் இன்றி நடத்துகிறது என்றால் அது உங்களுக்கு வியப்பினைத் தரும். 2013 ஆம் ஆண்டில் இவ்வாறு நிறுத்தப்பட்ட, மூடப்பட்ட வசதிகள் குறித்துப் பார்க்கலாம்.

### கூகுள் ரீடர்

சென்ற ஜூலை மாதம் நிறுத்தப்பட்ட இந்த சேவை குறித்துப் பலர் தங்கள் ஆச்சரியத்தைத் தெரிவித்துள்ளனர். இந்த சேவை, சென்ற 2005 ஆம் ஆண்டு முதல், கூகுள் வாடிக்கையாளர்களுக்குக் கிடைத்து வந்தது. இதனைப் பயன்படுத்தியவர்கள், பெரிய அளவில் இல்லை என்றாலும், அது தொடர்ந்து குறைந்து கொண்டே வந்தது. இருப்பினும், இதனை மிக விரும்பிய சிலர், இணையத்தில் இது தொடர வேண்டும் என மனுவெல்லாம் கொடுத்துப் பார்த்தனர். ஆனால், கூகுள் தனக்கெனக் கொண்டிருந்த அளவு கோலின் அடிப்படையில் இந்த சேவையினை நிறுத்தியது. இந்த வசதிக்கு இணையான இன் னொரு வசதியை கூகுள் அல்லது வேறு யாரும் தரவில்லை.

### ஐகூகுள்

இந்த தனி நபர் ஹோம் பேஜ் தரும் இணைய தளம், 2005 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்தது. இது கடந்த நவம்பர் 1 முதல் நிறுத்தப்பட்டது. இது கைவிடப்படும் செய்தி, ஜூலை 2012 ஆம் ஆண்டே அறிவிக்கப்பட்டது. குரோம் மற்றும் ஆண்ட்ராய்ட் போன்ற சிஸ்டங்களில் இயங்கும் புதிய வகை அப்ளி கேஷன்கள் வந்த பின்னர், ஐகூகுள் டூலினை காலம் கடந்த பழைய பெருங் காய டப்பா என்று கூகுள் கருதியதே இதற்குக் காரணம்.

### லேட்டிட்யூட்

அண்ட்ராய்ட் சிஸ்டத்தில் இயங்கும் கூகுள் மேப் அப்ளிகேஷனுடன் இணைந்து செயல்படும் டூலாக இது வெளியானது. ஐ.ஓ.எஸ். சிஸ்டம் இயங்கிய சாதனங்களிலும் இது கிடைத்தது. மேப்பில் ஓர் இடத்தை அடையாளம் காண, அதன் அட்சரேகை (Latitude) கொடுத்துப் பார்க்கும் வசதியினை இந்த டூல் தந்தது. ஆனால், இந்த வசதி பின்னர் வந்த புதிய மேப்களிலிருந்து எடுக்கப்பட்டது.

### சொந்த ஆய்வுக்கு 20 சதவீத நேரம்

கூகுள் நிறுவனத்தில் ஊழியர்கள் பணிபுரியும் விதம் பற்றிக் கூறுகையில், அவர்கள் தங்கள் சொந்த ஆய்வுப் பணியினை, வாரத்தில் 20 சதவீத நேரம் ஒதுக்கி மேற்கொள்ளலாம் என்ற சுதந்திரம் தரப்படுவதனைப் பெருமையாகக் கூறுவார்கள். ஆனால் தற்போது கூகுள் இதனை நிறுத்திவிட்டது. பலர் இதனை மிக மோசமான நடவடிக்கை என்றும், அதனால், சுதந்திரமான ஆய்வு கூகுள் நிறுவனத்தில் அற்றுப் போய்விடும் என்றும் கூக்குரலிட்டனர். ஆனால், தன் ஊழியர் மற்றும் பணிக் கலாச்சாரக் கட்டமைப்பில் மேற் கொண்டுள்ள மாற்றத்தில் இதுவும் ஒன்று என கூகுள் இந்த நிறுத்தத்தினை மேற்கொண்டது.

### பில்டிங் மேக்கர்

கூகுள் எர்த் மற்றும் கூகுள் மேப் ஆகிய அப்ளிகேஷன் புரோகிராம்களில், முப்பரிமாண மாடல்களை உருவாக்க இந்த டூல் பயன்படுத்தப்பட்டது. இதனைக் கடந்த ஜூன் 1 முதல் விலக்கிக் கொண்டது கூகுள். இருப்பினும் ஏற்கனவே, இதனைக் கொண்டு முப்பரிமாண படங்களை உருவாக்கியவர்கள், இதன் கிடங்கிலிருந்து அவற்றைப் பெற்று, பயன்படுத்திப் பார்க்கலாம் என்று சிறிது கருணை காட்டியது கூகிள்.

### பிளாக்பெரிக்கான கூகுள் வாய்ஸ்

ஏற்கனவே பிளாக் பெரி கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில், தான் அளித்த இந்த டூலை, கூகுள் நிறுத்திக் கொண்டது. இந்த அப்ளி கேஷனுக்கான தன் சப்போர்ட்டினை தரப்போவதில்லை என கூகுள் அறி வித்துள்ளது. இதனைப் பயன்படுத்திய பிளாக்பெரி வாடிக்கையாளர்களை, கூகுள், எச்.டி. எம்.எல். 5 பயன்படுத்துமாறு கூறிவிட்டது. இவ்வாறு தனது சேவைகளை இடை நடுவில் கைவிட்டாலும் இடையிடையே புதிய புதிய இலவசங்களைக் கொடுத்து தனது வாடிக்கையாளர்களின் பாராட்டைப் பெற்றுவருகின்றது கூகுள்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 306

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | 6 |
| 7 | | | | | 8 | | |
| 9 | | | 10 | 11 | | | |
| | | 12 | | | | 13 | 14 |
| | 15 | | | | 16 | | |
| 17 | | | | 18 | | | |
| 19 | | | 20 | | | 21 | |
| 22 | | | | | 23 | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. நித்தியம்
5. வேகம்
7. வெட்டு
8. கிருபை
9. மறைவில் தீட்டுவது
10. தவறு செய்ய மனதைத் தூண்டுவது
12. நெருப்பு
13. சாப்பிடு
15. ஏழு நாள்கள்
16. ஒதுக்கப்பட்டவர்களை இந்தியாவில் இப்படி அழைப்பர்
17. மரியாதை
18. சரஸ்வதி இதற்குரியவள்
19. புள்ளடி
20. பலரகம்
22. நிழல்
23. திக்கு

### மேலிருந்து கீழ்

1. திறனோடும் வீரத்தோடும் புரியப்படும் செயல்
2. சிற்பி பயன்படுத்தும் ஆயுதம்
3. வாழ்
4. காட்சிக்கு வருதல்
5. ஒரு வகைக் காட்டு விலங்கு
6. உயிருள்ள, உயிரற்ற என்பதை வேறுபடுத்த இது இரண்டு வகைப்படும்.
8. சேர்
11. உணவை அரைக்கும் உடல் உறுப்பு
12. கை
14. மன எண்ணம்
15. குரங்கு
16. தலையெழுத்து
17. சிலப்பதிகாரத்தில் முக்கிய பெண் பாத்திரம்
18. தூக்கத்தில் காணுவது
20. நாங்கள்
21. உடல் இயக்கத்துக்கு அவசியமானது

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 304 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பதிபக்தி (5) சாவி (7) திட்டி (8) சைகை (10) கடுப்பு (12) யமன் (13) பதினாறு (14) அறிய (15) நிதி (17) உறவு (18) தலைப்பு (20) தவி (21) விடை (22) பின் (23) விடுதலை (24) வலிமை.

**மேலிருந்து கீழ்**

(1) பதிகம் (2) திட்டு (3) படிப்பறிவு (4) திசை (6) வியன்னா (9) கையறு நிலை (11) புதிய (14) அறவிடு (16) திப்பிலி (17) உதவி (18) தடை (19) புன்மை (21) விலை

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன் களே போட்டிக்கு ஏற்கப் படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல.306**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (12.03.2014) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.306இல் வெற்றி பெறுவோர்களது விபரம் 16.03.2014 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 304 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
எஸ்.வசீகரன்,
இல.375, கொரவபத்தான வீதி,
இறம்பைக்குளம், வவுனியா.

**2 ஆம் பரிசு**
சி.ஜெயராஜா,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

**3 ஆம் பரிசு**
செல்வி தே.சர்மிலா,
மாப்பாணவூரி,
காரைநகர்.

**4 ஆம் பரிசு**
சி.நளினி,
இல.184, பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

**5 ஆம் பரிசு**
இரா.ஶ்ரீதரன்,
துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம்,
மாங்குளம், முல்லைத்தீவு.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி அ.சச்சிதானந்தன்
இல.289, மூன்றாம் ஒழுங்கை,
திருநாவற்குளம், வவுனியா.


திருமதி சங்கீதா பிரதீபன்
யா/நவாலி மகா வித்தியாலயம், நவா

சி.பானுராஜா,
கோணாவில், கிளிநொச்சி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற் பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. கிருஷ்ணா



# பெருமை பேசினால் ஆபத்து

கடலில் சென்று கொண்டிருந்த கப்பல் ஒன்று கவிழ்ந்தது. அதில், பயணம் செய்த குரங்கு ஒன்று தண்ணீரில் தத்தளித்தப்படி, உயிருக் காகப் போராடியது. அங்கே வந்த டொல்பின் ஒன்று குரங்கின் நிலையைப் பார்த்தது.
குரங்கே! என் முதுகில் அமர்ந்துகொள். உன்னைப் பாதுகாப்பான இடத்தில் கொண்டு போய் விடுகிறேன் என்றது. குரங்கும் அதன் முதுகில் ஏறி அமர்ந்தது.
டொல்பின் நீந்தத் தொடங்கியது. நீண்ட நேரம் நீந்தியதால் அது களைப்பு அடைந்தது. அப்போது அருகில் இருந்த தீவு ஒன்று அதன் கண்ணில் பட்டது.
மனிதர்களோ, விலங்குகளோ இல்லாத தீவு அது. சிறிது நேரம் அங்கே ஓய்வு எடுப்போம். பிறகு குரங்கைச் சுமந்து சென்று மனிதர்கள் உள்ள இடத்தில் விடுவோம் என்று டொல்பின் நினைத்தது. மெல்ல நீந்திய டொல்பின் அந்தத் தீவின் கரையை அடைந்தது.
தீவைப் பார்த்தது குரங்கு.
மகிழ்ச்சியாகக் கத்தியபடி தீவுக்குள் ஓடத் தொடங்கியது. குரங்கே! எங்கே ஓடுகிறாய்? என்று கேட்டது டொல்பின்.
தன்னைப் பற்றி டொல்பின் பெருமையாக நினைக்க வேண்டும் என்று நினைத்தது குரங்கு.
டொல்பினே! இளவரசனான நானும், இந்தத் தீவின் இளவரசனும் நெருங்கிய நண்பர் கள். நான் பலமுறை இங்கே வந்திருக் கிறேன். எனக்கு இங்கே வயிறு நிறைய விருந்து தான், என்று கதை அளந்தது. நீ இள வரசன் அல்ல, இன்று முதல் இந்தத் தீவின் அரசனே நீதான், என்றது டொல்பின்.
நான் இந்தத் தீவின் அரசனா? எதனால் அப்படிச் சொல்கிறாய்? என்று மகிழ்ச்சியுடன் கேட்டது குரங்கு. தீவுக்குள் செல். நீ அரச னானது உனக்கே தெரியும், என்ற டொல்பின் தண்ணீருக்குள் மூழ்கி மறைந்தது.
குதித்தபடி தீவுக்குள் சென்றது குரங்கு. அங்கே மனிதர்களோ, விலங்குகளோ இல்லை என்பதை அறிந்தது.
பெருமைக்காகப் பொய் பேசி இந்தத் தீவில் சிக்கிக் கொண்டேனே... இங்கிருந்து வெளியே செல்ல வழி இல்லையே. நாம் பொய் பேசி யதற்கு இந்தத் தண்டனை தேவைதான் என்று குரங்கு அழுது புலம்பியது.



அ.ஆதித்தன், தரம்-2
யாழ்ப்பாணக் கல்லூரி



இ.தேனமுதன்,
மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம்.



ஜ.ரிஷிவர்மன், தரம்-1பி
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்




வி.அனோசன், தரம்-4
மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்



இ.மகிழமுதன்,
உரும்பிராய் செல்லப்பா முன்பள்ளி

# உண்ணிக் கொக்கு





இது கொக்கு இனத்தைச் சேர்ந்தது. மிதமான வெப்ப சீதோஷ்ண நிலை உள்ள இடங்களில் வாழும் பறவை. ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் அதிகம் காணப்படும்.
அடர்ந்த வெண்மையான இறகுகளைக் கொண்டது. முழுவதும் வெள்ளை நிறத் தில் இருந்தாலும் ஆங்காங்கே பழுப்பு ஒரெஞ் வண்ணமும் காணப்படும். அலகு ஒரெஞ் வண்ணத்திலிருக்கும்.
பெரும்பாலும் நீர் நிலைகளில் வசித் தாலும், சமவெளிகளிலும் அதிகம் காணப் படும். மாடுகள் மற்றும் பிற கால்நடை களின் மேல் அடிக்கடி அமர்ந்திருப்ப தைப் பார்த்திருப்பீர்கள். கால்நடை களின் மேலுள்ள உண்ணிகள் மற்றும் அவற்றால் விரட்டப்படும் பூச்சிகளை விரும்பிச் சாப்பிடும்.
சிறகை விரித்தால் 88 முதல் 96 செ.மீ. வரை இருக்கும், 46 முதல் 56 செ.மீ. நீளமும் 270 முதல் 512 கிராம் எடையும் கொண்டிருக்கும்.
வழக்கமான கொக்கைப்போல அல் லாமல் மிகச் சிறிய கழுத்தைக் கொண் டிருக்கும். சற்றே கூன் விழுந்தாற் போன்ற உடல்வாகும் கொண்டது.
மிகக் கூர்மையான கண்களைக் கொண் டது. இதனால் பைனாகுலர் பார்வை கொண்ட பறவை என்றும் இதைக் கூறுவார்கள்

ர. அபிசன்

# தேனீக்களின் மொழி



தேனீக்கள், தேன் இருக்கும் இடத்தை எப்படிக் கண்டு பிடிக் கின்றன என்பது சுவாரஸ்யமானது. தேன் இருக்கும் திசையை அறிந்து கொள்ளும் தேனீ, அதை நடன வடிவத்தில் பிற தேனீகளுக்கு அறிவிக்கும். ஓர் இடத்தில் வட்டமாக ஆடி னால், தேன் 100 அடி தொலை வில் உள்ளதாக அர்த்தம். தேனீக்களின் இந்த சங்கேத மொழியைக் கண்ட றிந்தவர் கார்ல் வான் ஃபிரிச் (Karl van frisch). இவர் 1973 இல் நோபல் பரிசு பெற்றவர்.



கி. நிரோஷா
வ/விபுலாநந்தாக் கல்லூரி,
வவுனியா.

# அறிந்து கொள்வோமா?

- 46 நாடுகளின் தேசியக் கொடிகளில் நட்சத்திரம் இடம்பெற்றுள்ளது.
- 9 கொடிகளில் வளர்பிறைச் சின்னம் இடம்பெற் றுள்ளது.
- கொசுக்கள், ஈ போன்றவை தனது உடலின் மீது உட் கார்ந்ததும் யானை தன் தோலைச் சுருக்கிக் கொள்ளும். அப்போது அவை தோலின் மடிப்பு களில் சிக்கி இறந்து விடுகின்றன.
- உலகிலேயே மிக நீளமானதும், பழமையானது மான கால்வாய் சீனாவில் உள்ள கிராண்ட் கால்வாய் ஆகும். இது 1,608 கி.மீ. நீளம் கொண்டது.
- கடல்வாழ் விலங்கினங்களில் ஒக்டோபஸ் மிகவும் தைரியம் வாய்ந்தது. மிகப் பெரிய திமிங்கிலத் தைக்கூட ஒக்டோபஸ் எதிர்க்கும்.

யோ. ஆகாஷ்

## விடை தெரியுமா ? 252

### உங்களுக்கும் பரிசுகள்

1. வாழை மரத்தின் தாயகம் எது?
2. ஒரு தலைமுறை என்பது எத்தனை ஆண்டுகள்?
3. சிரிப்பூட்டும் வாயு எது?
4. பெண்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சியளிக்கும் நாடு எது?
5. உலகில் முதன் முதலில் முத்திரைகளைக் கண்டு பிடித்த நாடு எது?

சிறுவர் கதிருக்கான ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**விடைகள் 250**

1. 1956
2. தேசவளமை
3. பெங்குயின், கிவி, தீக்கோழி
4. [illegible]
5. [illegible]

## விடை தெரியுமா?

தெரிந்தால் 08.03.2014 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**வெற்றி பெற்றவர் விவரம் (250)**

♥ கி.ஜனார்த்தனன், தரம்-4 எவ், யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
♥ ஜ.ரிஷிவர்மன், தரம்-2பி, யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# இராவணன் ஏமாந்த கதை

நாம் என்னதான் படித்தவர்களாக இருந்தாலும் சில நேரங்களில் ஏமாந்து விடுகிறோம். நம்மை ஏமாற்றுபவர்கள் பல தந்திரங்களைக் கையாள்கிறார்கள். எப்படியோ பேசி நம்மை ஏமாற்றிவிடுகிறார்கள். சமயோசிதமாகப் பேசி பிறரை நம்ப வைத்து ஏமாற்றுவது ஒரு சாகசக் கலை தான். அப்படிப்பட்டவர்களின் கவர்ச்சிப் பேச்சில் நாம் ஏமாந்துவிடக் கூடாது. "நண்பர்களே, பெரியோர்களே ! உங்களுக்கெல்லாம் ஒரு விடயம் தெரியுமா? நாம் உபயோகிக்கும் உப்பு இன்னும் கொஞ்ச நாள்களில் கிடைக்காது. உணவுக்கு வரும் நெருக்கடி உப்புக்கும் வந்துவிட்டது. நீங்கள் செய்தித் தாள்களே படிப்பதில்லை என்று நினைக்கிறேன். கடல்நீர் நாளுக்கு நாள் வற்றிக்கொண்டே வருகிறது. இதை நான் கூறவில்லை, விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் உப்புக்கு மிகுந்த நெருக்கடி வரும். மழைகாலம் வேறு வருகிறது. நீங்கள் புத்திசாலி களாக இருந்தால் உப்பு மூட்டைகளை வாங்கி சேமித்து வைத்துக் கொள்ளுங்கள்." - ஓர் ஊரில் அரசியல்வாதி ஒருவர் இவ்வாறு பேசினார். அவர் ஓர் உப்பு வியாபாரி என்றும் அதிகப்படியான தன் உப்பை விற்க இந்தத் தந்திரத்தைக் கையாள்கிறார் என்றும் அந்த அப்பாவி மக்களுக்குத் தெரியவில்லை. கடல்நீர் வற்றிவிடுமா என்று அவர்கள் யோசிக்கவில்லை. விளைவு? மறுநாள் மக்கள் கூட்டங்கூட்டமாக வந்து உப்பு மூட்டைகளை வாங்கிப் பங்கு பிரித்துக் கொண்டனர். அரசியல்வாதி ஒருவ ரின் சாதுர்யப் பேச்சு அவ்வூர் மக்களையே ஏமாற்றிவிட்டது. இனி விநாயகப் பெரு மான் தன் பேச்சுத் சாதுர்யத்தால் எவ்வாறு இராவணனை ஏமாற்றினார் என்று காண்போம். ஒரு சமயம் சிவபெருமானின் ஆத்மலிங்கம் வேண்டி இராவணன் இமயமலையில் கடுந்தவம் புரிந்தான். சிவன் இராவணனின் தவத்தை மெச்சி, "உனக்கு என்ன வேண்டும், கேள்" - என்று கேட்க, அவன், "ஆத்ம லிங்கம் வேண்டும்" - என்று கேட்டான். சிவபெருமான் ஒரு நிபந்தனையுடன் தம் ஆத்மலிங்கத்தை அவனுக்குக் கொடுத்து விட்டார். என்ன நிபந்தனை என்கிறீர்களா? இலங்கை செல்லும் வரை அந்த ஆத்மலிங்கத்தைக் கீழே வைக்கக்கூடாது. அப்படி வைத்துவிட்டால் அந்த இடத்திலேயே அந்த ஆத்மலிங்கம் வேரூன்றிவிடும். பின்னர் அதை எடுக்க முடியாது. ஆத்மலிங்கத்தின் மகிமை என்ன? ஆத்மலிங்கம் யார் கையில் இருக்கிறதோ அவரை மனிதர்களும், தேவர்களும் கூட வெல்ல முடியாது. 'இப்படி ஏமாந்துவிட்டாரே சிவபெருமான் !' என்று அனைவரும் கவலை கொண்டனர். சிவபெருமான் தம் பக்தர்களிடம் ஏமாறுவது இது முதல் முறை அல்ல. இதற்கு முன் பல தடவைகள் ஏமாந்து இருக்கிறார். ஒரு சமயம் கயிலையில் கணவன் - மனைவி யாய் இராவணனுக்குக் காட்சியளித்த சிவபெருமான், "இராவணா ! உனக்கு என்ன வேண்டும், கேள்" - என்க , அவன் இதுதான் சமயம், இதை நழுவவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது என்று நினைத்து, "உம் மனைவியாகிய இந்த உமாதேவி எனக்கு வேண்டும்" என்று கேட்டுவிட்டான். பல காலமாகவே பார்வதியின் மேல் அவனுக்கு ஒரு கண். என்ன செய்யப் போகிறார் சிவபெருமான் என்று அவன் யோசித்துக் கொண்டிருந்த வேளையில் சிவனார் சிறிதும் யோசிக்காமல், " இந்தா பிடி, என் மனைவி" - என்று உமையைத் தூக்கி இராவணனிடம் கொடுத்துவிட்டார். மெத்த மகிழ்ந்த இராவணன், தேவியைத் தன் தோளில் சுமந்துகொண்டு நடந்தான். சிவபெருமான் செய்த இந்த முட்டாள்த்தனமான காரியத்தைக் கண்டு மனம் நொந்த கிருஷ்ணபகவான், பார்வதியை எப்படியும் இராவணனிடமிருந்து மீட்டுவிட ஓர் அந்தணன் வேடம் பூண்டு அவன்முன் தோன்றி, "இராவணா ! இது என்ன கொடுமை. மிகவும் பராக்கிரமசாலியான நீ, ஒரு பெண்ணை உன் தோளில் சுமந்து செல்லலாமா? இது உலகிற்குத் தெரிந்தால் மக்கள் உன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?" இராவணன் சிரித்தான். பின், "ஓ அந்தணரே ! இவள் சாதாரண பெண் இல்லை" என்றான்.
"தேவலோகக் கன்னியோ?"
"அதுவும் தவறு. ஈசனின் மனைவி உமை !" கைகொட்டி சிரியோ, சிரியென்று சிரித்தார் அந்த அந்தணராகிய கிருஷ்ணன்.
"ஏன் இப்படி இடியென சிரிக்கிறீர்?" "உன் அறியாமைக்கு சிரிக்காமல் அழவா முடியும்? எவனாவது தன் மனைவியைத் தானம் செய்ததை இதுவரை கேள்விப் பட்டிருக்கிறாயா? சிவன் பித்தன் மட்டுமல்லன், ஓர் எத்தன். உன்னைச் சரியாக ஏமாற்றிவிட்டான்." - என்று கூறி மறுபடியும் சிரித்தார் கிருஷ்ணன். இராவணனுக்கு அந்த அந்தணன் சொன்னது சரியாகப்பட்டது. சிறிதும் யோசிக்காமல் தான் சுமந்துவந்த உமை யைக் கீழே இறக்கிவிட்டுத் தோளைத் துடைத்தவாறே நடையைக் கட்டினான். இங்கு கிருஷ்ண பகவானின் சம யோசிதப் பேச்சு உமையைக் காப்பாற் றியது. இனி ஆத்மலிங்கத்தின் கதைக்கு வருவோம். ஏற்கெனவே இராவணன் தேவர்களையும், மனிதர்களையும் ஆட் டிப் படைத்துக் கொண்டிருந்தான். இந்த நிலையில் ஆத்மலிங்கம் வேறு கிடைத்து விட்டால் கேட்கவும் வேண்டுமா? தேவர்கள் அதிபுத்திசாலியான விநாயகரிடம் சென்று, "உங்கள் தந்தை யோசிக்காமல் செய்த இச்செயலால் உலகமே நாசமாகப் போகி றது. நீர்தான் அந்த ஆத்மலிங் கத்தை இராவணனி டமிருந்து கவர வேண்டும்" என்று வேண் டிக் கொண்டனர். கணபதி யும் இதற்குச்சம்மதித்து,சுமார்பன்னிரண்டு வயது நிரம்பிய அந்தணச் சிறுவனாக வேடமிட்டு இராவணனைப் பின் தொடர்ந்தார். ஆத்மலிங்கத்தைச் சுமந்து வந்த இராவணனுக்கு கோகர்ணம் என்ற இடத்தில் வரும்போது சிறுநீர் கழிக்க வேண்டுமென்ற உந்துதல் ஏற்பட்டது. ஆத்மலிங்



கத்தைக் கையில் வைத்துக் கொண்டு இப்படியொரு அசுத்தமான செயலில் ஈடுபடலாமா? யோசித்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரு சிறுவன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. அவனைக் கைதட்டிக் கூப்பிட்டான். "தம்பி, இந்த லிங்கத்தைச் சிறிது நேரம் கையில் வைத்துக்கொள். விரைவில் வந்துவிடுகிறேன். !" "உங்கள் பெயரென்ன?" "இராவணன்." "இராவணரே ! நான் மூன்று முறை உங்களைக் கூப்பிடுவதற்குள் வந்துவிட வேண்டும். அப்படி வராவிட்டால் இந்த லிங்கத்தைத் தரையில் வைத்துவிட்டுச் சென்றுவிடுவேன். சம்மதமா?" விநாயக ரின் கபடு அறியாத இராவணன், 'சம்ம தம்' சொல்லி விட்டு மறைவிடம் சென்றான். கொஞ்ச நேரம் கழித்து பையன் ஒரு முறை கூப்பிடுவான், மேலும் சிறிது நேரம் கழித்து இரண்டாம் முறையாகக் கூப்பிடுவான், அடுத்து அவன் மூன்றாம் முறையாகக் கூப்பிடுவதற்குள் ஓடி வந்து விட வேண்டுமென்று நினைத்தான். இராவணன் சிறுநீர் கழிக்க உட்கார்ந்த உடனேயே விநாயகர், "இராவணா, இராவணா, இராவணா" என்று மூன்று முறை கூறிவிட்டு, லிங்கத்தைக் கீழே வைத்துவிட்டு ஓடிவிட்டார். பாதியி லேயே பதறியடித்துக் கொண்டு ஓடிவந்த இராவணன் கீழே வைக்கப்பட்ட ஆத்மலிங்கத்தை அசைத்து எடுக்க முற்பட்டான். முடியவில்லை. அது வேரூன்றிவிட்டது. குழந்தைகளே ! நமது சமயோசிதப் பேச்சு விநாயகரைப் போல, கிருஷ்ணரைப் போல பிறருக்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். அந்த அரசியல் உப்பு வியாபாரி போல் பிறருக்குத் தீமை விளைவிப்பதாக இருக்கக்கூடாது. இதைத்தான் வள்ளுவரும் கூட பிறர்க்கு நன்மை பயப்பதாயின் பொய்யும் கூறலாம் என்கிறார்.
' பொய் மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்' என்பது வள்ளுவர் வாக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பெண்களுக்கு கைகொடுக்கும் தொழில்வாய்ப்பு





பெண்களுக்கான வாழ்வாதார தொழில் முயற்சிகளில் கடந்த 25 வருடகாலமாக ஈடுபட்டு வரும் செல்வி பொன்னம்பலம் ஜமுனாதேவியுடன் ஒரு நேர்காணல்.

■ நேர்கண்டவர்: சோபனா

போர் அனர்த்தங்களால் தொடர்ச்சியாகப் பெண்கள் பாதிக்கப் பட்ட நிலையை எதிர் கொண் டனர். அவற்றில் இருந்து மீள்வ தற்கான தொழில் வாய்ப்புக்கள் அல்லது அதற்கான சந்தர்ப்பங்கள் பெண்களுக் குக் கிடைக்கவில்லை. கணவரது உழைப் பிலோ அல்லது குடும்பத்தில் வேறு நபர்களது உழைப்பிலோ தான் தங்கி வாழ வேண்டிய நிலை இருந்தது. அதேசம யம், அவற்றிலிருந்து மீள முடி யாத நிலையில் இருந்த இந்தப் பெண் களுக்கும், வேலையற்று இருந்த பெண்க ளுக்கும் இந் தத் தொழில் வாய்ப்பு கை கொடுத்துள்ளது.

தேவையற்று பொழுதைப்போக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கின்ற பெண்களை இணைத்து, அவர்களுடைய் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தக் கூடியதாகவும், நேரத்தை வீண்விரயம் செய்யாமல் உள்ளூர் மூலப் பொருள்களை பயன்ப டுத்தி தொழில் வாய்ப்பைப் பெறக்கூடியதுமான வாய்ப்பும் பெண்களுக்குக் கிடைத்துள்ளது.

### பனை சார் உற்பத்திப் பொருள்களால் பெண்களுக்கு வேலை வாய்ப்பு

பனை சார் உற்பத்திப் பொருள்களின் நிறுவனம் 2013ஆம்ஆண்டுதொடக்கிவைக் கப்பட்டது. இதன் ஊடாக 72 உற்பத்தியாளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். இந்த உற்பத்தியாளர்களே பங்குதாரர்களாகவும் உள்ளனர். உற்பத்தியாளர்கள் அனைவருமே பெண்கள் ஆவர். பங்குதாரர்களும் உற்பத்தியாளர்களும் இவர்கள் தான்.

இவர்கள் ஒவ்வொரு பிரதேசத்திலும் இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் சண்டிலிப்பாய், சாவக்கச்சேரி, மட்டுவில், பருத்தித்துறை, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, நாரந்தனை, வேலணை, புங் குடுதீவு ஆகிய இடங்களிலும் இவர்களுக்கான உற்பத்தி நிலையங்கள் உள்ளன.

இதில் இவர்கள் கூட்டாகச் சேர்ந்து அந்தந்த இடத்தில் 10 பேர் வீதம் பயிற்சி பெற்று பொருள்களைத் தயாரிக்கும் அளவுக்கும், பனம்குருத்தில் இருந்து உற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதை ஆரம்பத்தில் யூ.என்.டி.பி நிறுவனம் தான் உருவாக்கியது. அவர்கள் தான் அதற்கான பயிற்சியை வழங் கினர். தேசிய வடிவமைப்புச் சபையின் ஊடாக அந்தப் பயிற்சிகள் வழங்கப்பட் டன.

ஆனால் பயிற்சிக்கான திட்டங்களுக்கும் யூ.என்.டி.பி நிறுவனம் உதவி செய்தது. தேசிய வடிவமைப்பு சபைக்கு நிதி ஒதுக்கீடு செய்து பயிற்சிகளை வழங்குவதற்கும், கிராம ரீதியாகத் தங்க வைத்து பயிற்சிகளைக் கொடுப்பதற்கும் நிதி அனுசரணை வழங்கியுள்ளது.

இதனூடாகவே பெண்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்றக்கூடியதாக உள்ளது. அத்துடன் பயிற்றப்பட்டவர்களாகவும் பல பெண்கள் மாறி இருக்கிறார்கள்.

### சுய தொழிலுக்கு தகுந்த உள்ளூர் வளம்

யாழ்.மாவட்டத்தில் பனையைப் பொறுத்தவரையில் இது தாராளமாகக் கிடைக்கக் கூடிய ஒரு வளம். இது தட்டுப்பாடு இல்லா மல் கிடைக்கக் கூடியதொரு மூலப்பொருளுமா கும். அத்துடன் இலங்கைத் தொழிலுக்குப் பெரிய அளவில் முதலீடு தேவை இல்லை. நிச்சயமாகப் பெண்கள் வாழ்வாதார ரீதியாக சொந்தக்காலில் நின்று குடும்பங்களை காப்பாற்றக்கூடியதாகவும் வலுவாக உழைக்கக்கூடியதாகவும் இந்தப் பனை வளம் கிடைத்துள்ளது. இதனூடாக கணிசமான முன்னேற்றத்தையும் பெண்கள் அடைந்திருக்கிறார்கள்.

### உள்ளூர் உற்பத்திகளுக்கு நுகர்வோர் ஆர்வம்

உள்ளூர் உற்பத்திகளுக்கு நுகர்வோர் கூடுதல் ஆர்வம் காட்டுகிறார்கள். எமது பொருள்களை தேடிக்கேட்டு வரும் அளவுக்கு நிலைமை உள்ளது. இதைவிட பெண்களால் உற்பத்திசெய்யப் படும் பொருள்கள் சிறந்த கை வண்ணங்களுடன் இருப்பதாலும் அவற்றை வாங்க நுகர்வோர் ஆர்வம் காட்டுகிறார்கள். அதேநேரம் உற்பத்தியாளர்களும் தொடர்ச்சியாகப் பயன டைந்து வருகிறார்கள். இதில் ஈடுபடுபவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். அதே நேரம் உற்பத்திப் பொருள்களுக்கான கோரல்களும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.



இதனால் அவர்களுக்கு கூடிய வருமானம் கிடைக்கிறது. ஆரம்பத்தில் அவர்கள் வீடுகளில் பாய், பெட்டி, கடகம், நீத்துப்பெட்டி என்பவற்றையே தயாரித்தனர். ஆனால் தற்போது அதிலிருந்து சற்று வித்தியாசமான அளவுக்கு சர்வதேச தரத்துக்கு ஏற்ற மாதிரி வெளிநாடுகளில் இருப்பவர்களும் தென்னிலங்கைப் பகுதியில் இருப்பவர்களும் வாங்கக் கூடியதாகவும், பொருள்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன. சந்தைக்கூடை, குப்பைப்பெட்டி, சாப்பாட்டு மூடி, பூக்கூடை, பொருள்கள் வைக்கும் தட்டு, பழக்கூடை போன்ற பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

கிராமிய ரீதியாக இந்தப் பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன. வெளியிடங்களுக்கும் இந்த உற்பத்தியாளர்கள் சென்று வந்துள்ளனர். கண்காட்சிகளில் பங்குபற்றியிருக்கிறார்கள். அண்மையில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை ஒட்டி இடம்பெற்ற கண்காட்சியில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா வரையான வருமானம் கிடைத்தது. இந்தியாவில் டில்லி யில் நடைபெற்ற கண்காட்சியிலும் யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சியிலும் பங்கு பற்றியிருக்கின்றோம். எங்களது உற்பத்திகளுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் இல்லை. தென்னிலங்கையில் இருந்து வரும் பிளாஸ்ரிக் பொருள்களது தேவையை குறைத்துக் கொள்வதே எமது நோக்கமாவுள்ளது. அதனால் நுகர்வோர் மத்தியிலும் நல்ல கிராக்கி உண்டு. பனையோலை பழுதானால் பசளையாகப் பயன்படுத்தலாம். அந்த வகையில் வெளிநாட்டவர்களும் அதை விரும்பு கிறார்கள்.

### குடும்பத்துக்குக் கை கொடுக்கும் தொழில் வாய்ப்பு

குடும்பத்தில் ஒருவர் உழைத்து வாழ்தல் என்ற நிலைமைமாறி குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லோருமே சேர்ந்து உழைத்தாக வேண்டும் என்ற கட்டாயத்துக்கு ஒவ் வொரு குடும்பத்தவரும் தள்ளப்பட்டிருக் கிறார்கள்.

கணவனை இழந்த பெண்கள் இதில் ஆர்வம் காட்டுகிறார்கள். வறுமைக்கோட்டின் கீழ் இருக்கக் கூடிய பெண்களைத்தான் அதிகளவில் இப்போ உள்வாங்க வேண்டிய நிலை. இதனால் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கிராம ரீதியாக பின்தங்கிய நிலையில் வாழும் பெண்கள் நிச்சயமாக உள்ளூர் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொண்டு பயன் பெறலாம். அவர்கள் சொந்தக்காலில் நிற்கக் கூடியதாக அவர்களை வளர்க்க வேண்டும் என்பதே எமது முக்கிய நோக்கமாகும். தனியார் நிறுவனங்கள் அதற்கு முன்வர வேண்டும். ஆனால் நாங்கள் தயாராக இருக்கிறோம். அந்த வகையில் உள்ளூர் மூலப்பொருள் களைப் பயன்படுத்தி பெண்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவ எப்போதும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் பொருளாதாரப் பாதிப்பு நிறைய உள்ளது. இதனால் பெண்கள் ஏதோ ஒரு வழியில் தாங்களும் உழைக்க வேண்டும் என்ற விருப்பத்தைக் கொண்டிருக் கிறார்கள். அதற்குரிய சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.


### தொழில் வாய்ப்பால் பெண்களுக்கான பாதிப்பு

தொழில் வாய்ப்பினால் பெண்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று சொல்லமுடியாது அவர்கள் தமது வீட்டுக்கு என உழைக்கிறார்கள். உளவியல் ரீதியான பாதிப்புக்களும் இல்லை. உளவியல் ரீதியான பாதிப்பு இருந்தாலும் கூட, இப்படியான ஒரு வேலையில் இருந்தால் அவர்களுடைய புலன் வேலை மீது செலுத் தப்படும் போது நிச்சயமாக நாளடைவில் உளவியல் பாதிப்பு இல்லாமல் போகும். உளவியல் பற்றிச் சிந்தித்துக் கொண்டு வெறுமனே வீட்டில் வேலை இல்லாமல் இருந்தால், கஷ்டத்தை நினைத்துக் கொண்டு, பிள்ளைகளின் பிரச்சினைகளை நினைத்துக் கொண்டு, கணவருடைய வருமானம் போதாது என்று நினைக்கும் போதுதான், தாக்கம் கூடுதலாக வரும். அதனை வெளிக்கொண்டு வருவதற்கு இப்படியான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். இதனால் பெண்கள் மத்தியில் மனரீதியான மாற்றங்களைக் கொண்டுவர முடியும். ஆண்களிடம் இருந்து எதிர்ப்பு வராது. ஒரு சில குடும்பத்தில் அவ்விதம் இருந்தாலும் வருமானம் வீட்டைத்திருப்திப்படுத்தக்கூடியதாக இருந்தால், எந்த ஆணும் அதனை விரும்ப மாட்டார்கள் என்று கூற முடியாது. மேலும் மன ரீதியான பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும். சரியான எண்ணமும் சரியான சிந்தனை யும் ஒன்றாக இருந்தால், பணம் தேடுவது பெரிய வேலை இல்லை. அப்படி இருந்தால் நிச்சயமாக ஒருவழி இருக்கும்.

CWK

---

## சிரிக்க சிந்திக்க சிலவரிகள்




பிரபல பத்திரிகையில் மரண அறிவித்தல் பகுதியில் ஓர் அறிவித்தல் வந்தது. கைதடியைச் சேர்ந்த மார்க்கண்டு சின்னத்தம்பி (உறங்கு நிலை ஆசிரியர்) காலமானார். இவர் சின்னம்மாவின் அன்புக்கணவரும்- என தொடர்ந்தது. அடுத்த நாள் பிழை திருத்தம் எனும் தலைப்புடன் ஒரு செய்தியும் வந்தது. அதில் நேற்று வெளியான மரண அறிவித்தல் பகுதியில் மார்க்கண்டு சின்னத்தம்பி அவர்களின் மரண அறிவித்தலில் ஓய்வுநிலை ஆசிரியர் என குறிப் பிடுவதற்குப் பதிலாக உறங்குநிலை ஆசிரியர் என தவறுதலாக அச்சிட்டு வெளிவந்தது பற்றி வருந்துகிறோம் என. இதை வாசித்த காலஞ்சென்ற மா.சின்னத்தம்பி ஆசிரியரின் பழைய மாணவன் ஒருவர் குறித்த பத்திரிகை ஆசிரியருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தார்:-

அன்பு மிக்க பத்திரிகை ஆசிரியருக்கு, நீங்கள் முதலில் குறிப்பிட்டது போல் உறங்குநிலை ஆசிரியர் என்பதில் தவறு ஏதுமில்லை. நான் அவரிடம் படிக்கும் போது வகுப்பில் பாடம் நடத்தாது அநேகமாக உறங்குநிலையிலே இருப்பார். எனவே நீங்கள் முதலில் குறிப்பிட்டது தான் சரியானது. நீங்கள் வருந்த வேண்டியதில்லை. அன்னாரிடம் கற்றதால் நான் இப்போது "உறங்காநிலை" உத்தியோகம் பார்க்கிறேன்.

*இப்படிக்கு*
*நையிற் வாச்சர் நல்லையா*

*கலாபூஷணம்*
*மு.மாசிலாமணி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கிடையேயும் தங்களைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலுடனும் தாங்கள் கொண்டுள்ள உறவுகளினால் உருவான செல்வங்களைச் சார்ந்தது இந்த வாழ்க்கை.

# வறுமை ஒழிப்பு

■ வெ. ஸ்ரீராம்

வறுமையை ஒழிப்போம் என்ற தேர்தல் வாக்குறுதியை முன்வைக்காத அரசியல் கட்சிகள் எதுவுமே எந்த நாட்டிலும் இல்லை. அதைத் தொடர்ந்து வறுமைக்கோட்டின் எல்லையை நிர்ணயிக்கும் பணியும், அதுகுறித்த சர்ச்சைகளும் எழுகின்றன. மக்கள் தொகையில் வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களின் விகிதம், வறுமையிலிருந்து மீட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை போன்ற புள்ளிவிவரங்கள் வருடாந்தம் அறிவிக்கப்படுகின்றன. போர் முடிந்த பின்னர் இலங்கை அபிவிருத்தி அடைந்து வருகின்றது என்று காட்டுவதற்கு இத்தகைய அறிக்கைகள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

எளிமை, இல்லாமை, ஏழ்மை, வறுமை போன்ற சொற்களின் படிநிலையைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியவில்லை.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது, வறுமை எளிமையைப் பின்தொடரும்போது என்ற தலைப்பில், ஈரான் நாட்டின் முன்னாள் அமைச்சரும் பல ஆண்டுகளாக (1957-72) ஐக்கிய நாடுகள் சபையின் வெவ்வேறு அங்கங்களில் முக்கியமான பதவிகளை வகித்தவருமான மஜீத் ரானெமா பிரெஞ்சு மொழியில் எழுதியுள்ள புத்தகம் ஆழமானதும் சுவாரஸ்யமானதுமான பல பார்வைகளை அளிக்கிறது. 2003 இல் வெளியான இந்தப் புத்தகம், உலக அளவில் பெரும் கவனத்துக்குள்ளானதுடன் வேறு பல மொழிகளிலும் வெளிவந்திருக்கிறது.

ஓய்வு பெற்றபின், 20 ஆண்டுகளுக்கு மேலாக, உலகில் ஏழ்மை என்ற பிரச்சினை குறித்து ஆய்வுகள் செய்துவரும் இவர், கலிஃபோர்னியாவின் பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியராகவும் பணிபுரிந்துள்ளார்.

வறுமையும் இல்லாமையும் பரவலாகப் பெருகி வருவது உண்மையிலேயே ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சமூக அவலம். அதுவும், குறிப்பாக அதைத் தவிர்க்க முடிந்த சமூகங்களிலும் இப்படி வறுமையும் இல்லாமையும் பெருகிவருவது எல்லாவற்றிலும் மிக மோசம் என்கிறார் ரானெமா.

### ஏழ்மையின் மூன்று கோணங்கள்

அசையும் சொத்து, அசையாச் சொத்து, நுகர்பொருள்கள் என்பவற்றை மேலும் மேலும் உற்பத்தி செய்து தள்ளும் நடவடிக்கைகளினால் இந்த அவலத்தைப் போக்கிவிட முடியாது. ஏனென்றால், இதே நடவடிக்கைகள்தான் இன்னொருபுறம் வறுமையை அதிகரிக்கச் செய்கின்றன. ஆகவே, இந்த நிலையின் ஆழமான பன்முகக் காரணங்களைப் புரிந்துகொள்வதுதான் இன்றைய அக்கறையாக இருக்க வேண்டும்.

ஏழ்மை நிலையைப் பல கோணங்களிலிருந்தும் பார்க்கும் இவர், மூன்று விதமான ஏழ்மைகளைப் பற்றிப் பேசுகிறார்.

சுயமாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஏழ்மை, ஒற்றுமையாகக் கூடி வாழ்பவர்களின் ஏழ்மை, நவீன ஏழ்மை.என்பவையே அவை

சுயமாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஏழ்மை என்பது அடிப்படையில் எளிமையான வாழ்க்கை. ஏழ்மை என்பது ஓர் எதிர்மறையான நிலை; குறைகளும் இல்லாமையும் நிறைந்தது. இதை விரும்பித் தேர்ந்தெடுப்பதென்பது விநோதமாக, முரண்பாடாகக் கூடத் தோன்றலாம். ஆனால், எளிமை, சிக்கனம், பிறரிடம் மரியாதை என்ற ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் அமைந்த சுதந்திரமான, தெளிவான வாழ்க்கை நிலையாக, ஏழ்மை பண்டைய கலாசாரங்கள் எல்லாவற்றிலும் இருந்தது. இந்த வாழ்க்கை நிலைதான் பல பண்பாட்டாளர்களையும் உருவாக்கியிருக்கிறது.

ஒற்றுமையாகக் கூடி வாழ்பவர்களின் ஏழ்மை என்பது உலகைப் பற்றிய மத, ஆன்மிக ரீதியினாலான பார்வையைச் சேர்ந்தது. ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கிடையேயும் தங்களைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலுடனும் தாங்கள் கொண்டுள்ள உறவுகளினால் உருவான செல்வங்களைச் சார்ந்தது இந்த வாழ்க்கை.

இந்தச் செல்வங்களை அவர்கள் பகிர்ந்துகொள்வார்கள். தேவைக்கு மேல் எதையும் விரும்பாத அவர்களுடைய உலகத்தில் பற்றாக்குறைக்கு இடமிருக்காது. தங்களால் உற்பத்தி செய்ய முடிந்தவற்றை வைத்துக் கொண்டுதான் அவர்களுடைய தேவையும் நிர்ணயிக்கப்படுகிறது.

நவீன ஏழ்மை என்பது, பௌதிகச் சொத்துகள் மட்டுமே செல்வத்தின் ஊற்றுக்கண் என்று கருதி, மனிதர்களின் முயற்சிகள் எல்லாம் அதை நோக்கியே இருக்கக்கூடிய சமூகம் உருவாக்கும் ஏழ்மை. இந்தச் சமூகம் புதிது புதிதாகத் தயாரிக்கும் தேவைகளை எல்லோரும், சில சமயம் கணிசமான பண வசதி உள்ளவர்களும்கூட, அடைய முடியாமல் போய்விடுகிறது. சமூக, பண்பாட்டு உறவுகளை எல்லாம் தன்னுடைய சுயநலத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் பொருளாதார மேலாதிக்கத்தின் நேரடி விளைவுதான் இந்த ஏழ்மை. இந்தச் சமூகம் ஆசை காட்டுபவற்றில் மயங்கிவிழும் ஏழைகள் இரண்டு விதமான தேவைகளுக்கு ஆசைப்படுகிறார்கள். ஒன்று, ஏற்கெனவே தங்களுடைய முன்னோர்கள் காலத்திலிருந்தே இருக்கும் தேவைகள். மற்றொன்று, நுகர்வோர் பொருளாதாரம் செயற்கையாக, உருவாக்கி முன்வைக்கும் தேவைகள். இந்த வறுமை உடலைச் சீர்குலைப்பதுடன் மனதையும் களங்கப்படுத்துகிறது என்பது ரானெமாவின் கருத்து.

### பண்டைய வறுமையும் இன்றைய வறுமையும்

சிறு வயதிலிருந்தே வெவ்வேறு பொருளாதாரப் பின்னணியிலிருந்து வந்த மக்களுடன் பேசிப் பழகி, அவர்கள் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்ததால் நியாயமான, அர்த்தமுள்ள கேள்விகளைக் கேட்கக் கற்றுக்கொண்டதாகச் சொல்கிறார் ரானெமா. தவிர, தனக்கு அருகிலும் தொலைவிலும் இருந்த முன்னோர்களைத் தேடிப்போகும் புனிதப் பயணங்களை அவர் மேற்கொண்டிருக்கிறார்.

காலத்தில் பின்னோக்கிச் சென்று வரலாற்று ரீதியாகத் தகவல்களைச் சேகரித்ததில், பண்டைய காலத்தில் வறுமை என்று குறிப்பிடப்பட்டதற்கும் இன்றைய வறுமைக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் இருப்பதாகச் சொல்கிறார். தொழில் நிமித்தமாக உலகம் முழுவதும் பயணம் செய்தபோது நிறைய குறிப்புகள் எடுத்து வைத்திருக்கிறார். வட கனடாவின் செவ்விந்தியர்கள், கொல்கத்தாவின் நடைபாதைவாசிகள் இவர்களிடையே தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றித் தமது புத்தகத்தில் விரிவாக எழுதியிருக்கிறார்.

2008இல், ழான் ரோபெர் என்பவருடன் இணைந்து இவர் எழுதியுள்ள ஏழைகளின் சக்தி என்ற புத்தகம் ஏழ்மையை இன்னும் விரிவாக ஆய்வுசெய்கிறது. புள்ளிவிவரங்கள் மூலம் மட்டுமே வறுமையை வரையறுப்பது என்பது யதார்த்த நிலையைப் பிரதிபலிக்காது. சமூகவியலின், தத்துவச் சிந்தனையின் கூறுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு வறுமையைப் பற்றிய மதிப்பீடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்கிறார்கள் ரோபேடும் ரானெமாவும்.

### இருவேறு வறுமைகள்

ஒரு மனிதனின் வாழ்க்கையில் அவனுக்கு இயற்கையாக ஏற்கெனவே இருக்கும் வறுமை நிலை வேறு, வெளியுலகம் ஆசை காட்டுவதால் உண்டாகும் வறுமை வேறு. அவனுடைய உள் உலகுக்கும் வெளி உலகுக்கும் இடையேயுள்ள உறவுகளின் அடிப்படையில்தான் ஏழ்மையின் வரலாறே உருவாகிறது. ஆனால், உண்மையில் தனிமனிதன் ஒருவனின் உள் உலகம்தான் அவன் உணரும் ஏழ்மையையோ செல்வத்தையோ நிர்ணயிக்கிறது.

அவசியம் எது, மிகை எது என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அவனுடைய உள் உலகம். தேவையையும் குறையையும் அதுதான் வரையறுக்கிறது.

ஏழ்மை என்று கருதப்படும் தளங்கள் இந்த உலகில்தான் கட்டுமானம் செய்யப்படுகின்றன என்று சொல்லும் ரானெமா, இந்தத் தளங்கள் நொறுங்கும்போது, வெளியுலகிலிருந்து மனிதனைத் தாக்கும் இன்னல்களையும் சோதனைகளையும் தடுக்கும் கேடயங்களை அவனுடைய உள் உலகம், உள்மனம் இழந்துவிடுகிறது. பொருளாதார வசதியின்மை அல்லது வருமானமின்மை குறிப்பிடும் ஏழ்மையுடன் இந்த அவலமான நிலையை ஒப்பிட்டுக் குழப்பம் அடையக் கூடாது. இவை இரண்டும் ஒன்றல்ல என்கிறார்.

*(கட்டுரையாளர் பிரெஞ்சு-தமிழ் மொழிபெயர்ப்பாளர். இருமுறை செவாலியே விருது பெற்றவர்.)*

**ஒரு மனிதனின் வாழ்க்கையில் அவனுக்கு இயற்கையாக ஏற்கெனவே இருக்கும் வறுமை நிலை வேறு, வெளியுலகம் ஆசை காட்டுவதால் உண்டாகும் வறுமை வேறு. அவனுடைய உள் உலகுக்கும் வெளி உலகுக்கும் இடையேயுள்ள உறவுகளின் அடிப்படையில்தான் ஏழ்மையின் வரலாறே உருவாகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கொந்தளிக்கிது தமிழகம்

அதிரன்

தமிழகத்தின் மூன்று இடங்களில் நிறுவப் பட்டிருந்த இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் உருவச் சிலைகள் கடந்த புதன்கிழமை இரவு இனந் தெரியாதோரால் அடித்து நொருக் கப்பட்டுள்ளன.

ராஜீவ் கொலைக் குற்றவாளி களை விடுதலை செய்வதில் மத்திய அரசுக்கும் தமிழக அர சுக்கும் இடையே எழுந்துள்ள முறுகல் நிலையின் பின்னணி யில் இந்தச் சம்பவம் இடம்பெற் றிருக்கிறது.

உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு அமை வாக ராஜீவ் கொலைக் குற்ற வாளிகளை விடுதலை செய்வ தாக தமிழக அரசு சட்ட சபை யில் மேற்கொண்ட தீர்மானம் இந்திய மத்திய அரசை வெறுப் பேற்றியிருக்கிறது. தமிழக அரசின் இந்த அறிவிப்புக்கு எதிராக உடனடியாகவே நீதி மன்றத்தைநாடிராஜீவ்கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்வதற்கு இடைக்காலத் தடை பெற்றிருக்கிறது மத்திய அரசு. இதனால் தமிழக அர சுக்கும் மத்திய அரசுக்கும் இடையிலான முறுகல் நிலை வலுவடைந்திருக்கிறது. தமிழக அரசின் இந்த முடிவை காங்கி ரஸ் கட்சியினர் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். அதி லும் குறிப்பாக தமிழகத்தி லுள்ள காங்கிரஸ் உறுப்பினர் களான ஞானதேசிகன், ஜி.கே. வாசன், சுதர்சன நாச்சியப்பன் ஆகியோர் தமிழக அரசு மீது கடுமையாக வசைபாடி வரு கின்றனர். அத்துடன் இந்திய மத்திய இணையமைச்சரான நாராயணசாமி, ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசை கடுமையாக விமர் சித்து கருத்துக்களை வெளி யிட்டுவருகிறார். ராஜீவ்கொலைக் குற்றவாளிகள் விடயத்தில் தமிழக அரசு எடுத்த தீர்மானம் முழு இந்தியாவுக்குமே துரோ தகத்தனம் என்று அவர்கள் கருத்து வெளியிட்டு வருகின்ற னர்.

இந்நிலையில் ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் விடயத்தை தமி ழக அரசு சட்டரீதியான முறை யில் அணுகும் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இதனால் தமிழகத்தில் ஒரு கொந்தளிப்பான நிலை ஏற் பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி யினர் மாத்திரம் ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை விடுவிக்கக் கூடாது என்று போராட்டம் நடத்தி வருகின்றனர். ஏனைய கட்சியினரும் தமிழின உணர் வாளர்களும் ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று குரல் எழுப்பி வருவதுடன் போராட் டங்களிலும் குதித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தின் உச்சக் கட்டமாக தமிழகத்தில் உள்ள ராஜீவ்காந்தியின் சிலைகள் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. சென்னையில் புளியந்தோப்பு, வேப்பேரி, புரசைவாக்கம் ஆகிய பகுதிகளில் இருந்த ராஜீவ் காந் தியின் சிலைகளை கடந்த புதன் கிழமை தொடக்கம் இனந் தெரி யாதோர் அடித்து நொருக்கி யுள்ள னர். புரசைவாக்கத்தில் இருந்த ராஜீவ் காந்தியின் சிலையின் தலை உடைக்கப்பட்டு அருகில் இருந்த கழிவு நீர் வாய்க்காலுக்குள் போடப் பட்டிருந்தது. இந்த சிலை உடைப்பு விவகாரம் தொடர்பான செய்தி பரவியதும் கடந்த வியாழக்கிழமை காலையில் காங்கிரஸ் கட்சியினர் பல இடங்களிலும் வீதி மறியலில் ஈடுபட்டனர். சிலை உடைக்கப்பட்ட இடத்தில் திரண்டிருந்த வட சென்னை மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராஜபுரம் மனோ, மத்திய சென்னை மாவட்ட காங்கிரஸ் தலைவர் ரங்க பாளையம் உட்பட 100 இற்கும் மேற் பட்டவர்களை தமிழகப் பொலிஸார் கைது செய்தனர். இதனையடுத்து தமிழகத்தின் பல இடங்களிலும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இது ஒருபுறம் இருக்க சென்னை ராஜபேட்டையில் உள்ள காங்கிரஸ் கட்சியின் தலைமையகம் அமைந் துள்ள சத்தியமூர்த்திபவன் அருகே நாம் தமிழர் கட்சியினர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் சோனியா காந்தியின் உருவப் பொம்மையையும் எரித்தனர். இத னால் அங்கு காங்கிரஸ் ஆதரவா ளர்களுக்கு நாம் தமிழர் கட்சியின ருக்குமிடையில் மோதல் வெடித் தது. கையில் அகப்பட்டவர்களைக் கொண்டு இரு தரப்பினரும் மோதிக் கொண்டனர். மோதலைக் கட்டுப் படுத்துவதற்காக தமிழக பொலிஸார் கடும் முயற்சிகளை மேற்கொண் டனர். இதில் பலர் காயமடைந்தனர். அத்துடன் கடந்த வியாழக்கிழமை அதிகாலை சென்னை பேரூரில் அமைந்துள்ள நாம் தமிழர் கட்சி யின் அலுவலகம் மீது இனந் தெரியாதோர் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் நாம் தமிழர் கட்சி ஆதர வாளர்கள் ஒன்று திரண்டு மத்திய அரசுக்கு எதிராக போராட்டங்களை மேற்கொண்டனர்.

அதேநேரத்தில் தமிழகத்தின் பல இடங்களிலும் காங்கிரஸ் ஆதர வாளர்கள் ஒன்று திரண்டு ராஜீவ் சிலை உடைத்தவர்களை கைது செய்யக் கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இவ்வாறு ஆர்ப்பாட் டம் நடத்தியவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இந்த மோதல் சம்பவங்களால் தமிழகத்தில் பெரும் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் விட யத்தால் எழுந்த இந்தப் பதற்ற நிலை இன்னும் குறைந்தபாடாக இல்லை. ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றே தமிழக மக்களில் பெரும்பாலா னவர்கள் விரும்புகின்றனர்.

ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் மீதான தண்டனை குறைக்கப்பட வேண்டும்- அவர்கள் விடுவிக்கப் பட வேண்டும் என்ற உணர்வை தமிழகத்தில் ஒரு அலையாக எழுந் திருக்கிறது. தமிழக அரசியல் கட்சி களில் பெரும்பாலானது ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் விடுவிக் கப்பட வேண்டும் என்பதையே விரும்புகின்றன. இந்த விடயத்தில் கலைஞர் கருணாநிதி தலைமை யிலான தி.மு.கவுக்கும் இரண்டு கருத்து இல்லை. கொலைக் குற்ற வாளிகளை விடுதலை செய்யும் தீர்மானத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்ட போது அதனை முதலில் வரவேற்றவர் கலைஞர் கருணாநிதிதான். இவ்வா றானதொரு நிலைமை ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் விடு தலை விடயம் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பான சூழ்நிலை தோற்று வித்திருக்கிறது. ஆயினும் இந்த விடயங்கள் குறித்து சற்றேனும் கிறுங்காத தமிழக முதல்வர் ஜெய லலிதா தனது அதிரடி நடவடிக் கையை தொடர்கிறார்.







தனித் தமிழீழம் அமைவற்கு இலங் கையிலும் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் பகுதிகளிலும் பொது வாக் கெடுப்பு நடத்தப்படும் என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதிரடி அறிவிப்பு ஒன்றை அவர் வெளி யிட்டார். தமிழக முதல்வரைப் பொறுத்தமட்டில் தமிழக மக்களின் ஆதரவை தேர்தலில் பெற்றுவிட வேண்டும் என்ற அரசியல் ஆர்வ மும், காங்கிரஸ் கட்சியின் செல்வாக் கையும் தி.மு.க. தலைவர் கருணா நிதியின் செல்வாக்கையும் தூள் தூளாக்க வேண்டும் என்ற துடிப் புமே அவரிடம் முனைப்புப் பெற்றி ருக்கிறது. இதனால் தேர்தல் காலத் தில் பல அதிரடி அறிவிப்புக்களை தீர்மானங்களையும் மேற்கொள்வ தற்கு அவர் சற்றேனும் தயங்குவ தில்லை. ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்வதாக ஜெயலலிதா விடுத்த அறிவிப்பு தமிழகத்தில் தி.மு.க. வுக்கு உள்ள சொற்ப ஆதர வையும் இல்லாமல் செய்துவி டுமோ என்று தி.மு.க. அஞ்சுகி றது. தமிழக முதல்வரின் நோக் கமும் அதுதான். இதனால் தமி ழகத்தை ஒரு கொந்தளிப்பான நிலைக்குள் வைத்திருந்தாலே அது சாத்தியமாகும் என்பது கடந்த கால வரலாறு.

இப்போது தேர்தல் காலத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி யிருக்கும் விடயமாக இந்த ராஜீவ் காந்தி கொலைக் குற்ற வாளிகள் விடுதலை தீர்மானம் மாறியிருக்கிறது. இதனால் தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே உருவாகி யுள்ள மோதல் நிலை எதிர்காலத் தில் எந்த வடிவத்தில் உருவெடுக் கப் போகிறது என்பதே அரசியல் அவதானிகளின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. ஜெயலலிதாவின் இந்த அறிவிப்புக்கள் அவர் மீதான ஆதரவு அலையை மேலும் வலுவடையச் செய்து வருகின் றன என்பதையும் வெளிப்படை யான உண்மை. இதற்கு மத்திய அரசும் தி.மு.க.வும் எப்படி ஈடுகொடுக்கப் போகின்றன என்பது போகத் போகத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித படுகொலையும் 12 ஆயிரம் தோட்டாக்களும்



■ வீகேளம்

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் பின்னரான நிலைமை, இலங்கைப் பிரச்சினையை சர்வதேச அரங்குக்கு எடுத்துச் சென்றது. சிறுபான்மை இனமாக உள்ள தமிழர்களை இலங்கை அரசு அடக்கி ஒடுக்கி வருவது மட்டுமன்றி, அவர்கள் மீது மனித குலத்திற்கு எதிரான உரிமை மீறல்களையும் மேற்கொண்டது என்பதே இதற்கான காரணம்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நீண்ட காலமாக நடத்தப்படும் அடக்கு முறையுடன் கூடிய ஆட்சி, அவர்களைச் சொந்த இடங்களில் நிம்மதியாக வாழ விட மாமல் அச்சுறுத்தலை ஏற்படுத்தி நிலைகுலையச் செய்துள்ளது.

70களில் இருந்து தமிழர்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து சென்றமைக்கான வரலாறுகளே உள்ளன. காலப் போக்கில் அதன் செயற்பாடுகளும் பாதிப்புதிறனும் அதிகரித்தன.

விடுதலைப் புலிகளின் எழுச்சிக்குப் பின்னர் வடக்கு - கிழக்கு பகுதிகளில் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் மட்டுமே மக்கள் ஓரளவுக்கேனும் சுதந்திரமாக வாழ முடிந்தது.

எனினும் அந்த நிலை தொடர்ந்து நீடிக்கவில்லை. புலி களின் எழுச்சி அபரிமிதமாக அதி கரிக்க இலங்கை அரசு பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது. குறிப்பாகப் புலிகளின் மரபியல் ரீதியான போரியல் திறன் சிங்கள தேசத்தை திணறடித்தது. இலங்கை அரசுக்கு மட்டுமன்றி இந்தியா அமெரிக்க போன்ற நாடுகளையும், திரும்பிப் பார்க்கவைக்கும்அளவுக்கு விடுதலைப் புலிகள் தமது போரிடும் தந்திரங்களை வளர்த்துக் கொண்டனர்.

இதனைக் கருத்தில் கொண்ட இலங்கை அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையை அறிவித்து உலக நாடுகளிலும் அதனை நடை முறைப்படுத்த வழி செய் தது. அல்குவைதா செப்டெம்பர் 11இல் அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீது நடத்திய தாக்குதலின் பின்னரான சர்வதேச நிலைமைகள், இலங்கை அரசுக் குச் சாதமாக இருந்ததன் காரணத்தால், தான் நினைத்தவற்றை அதனால் அரங்கேற்ற முடிந்தது.

விடுதலைப் புலிகள் சர்வதேச அளவில் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டமைத்து வருகின்றனர் என உலக நாடுகளுக்கு பரப்புரை செய்த இலங்கை அரசு அதில் வெற்றி கண்டது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என இலங்கை அரசு விடு தலைப் புலிகளுக்கு எதிராக இறுதிக் கட்டப் போரை தொடுக்க உலக நாடுகளின் உதவியை நாடியது. அவையும் அரசின் பரப்புரையை ஏற்று அதற்கு உதவி செய்ய ஆரம்பித்தன.

சர்வதேச நாடுகளின் உதவி யோடு இலங்கை அரசு வடக்கு - கிழக்கு பகுதிகளில் கண்மூடித்தனமான போரை ஆரம்பித்தது. மனித குல உரிமைகளுக்கு மதிப்பளிக்காமல் காட்டுமிராண்டித்தனமாகப் போரை நடத்தி அதில் வெற்றியையும் பெற்றது.

அந்தப் போருக்கு சகல நாடுகளும் உதவிகளை வழங்கின. புலிகளை அடக்கி ஒடுக்க வேண்டும் என்பதில் அப்போது சகல நாடுகளும் ஒற் றுமையாக ஒரே கருத்தியலைக் கொண்டிருந்தன. இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட இலங்கை அரசு, புலிகளை ஒடுக்கு கின்றோம் என்ற பெயரால் அப்பாவித் தமிழ் மக்கள் மீது ஈவுஇரக்கமற்ற ஒரு முழுப் போரை நடத்தி பல ஆயிரக் கணக்கான மக்களைக் கொன்றொழித்தது. இந்தப் போரில் 40 ஆயிரத்துக்கும் 70 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான தமிழர்கள் உயிரிழந்தார்கள் என்று ஐ.நா. மதிப்பிட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவே விடுதலைப்புலிகள் போராடினர். மிகச் சிறிய சமூகம் ஒன்று மிகப் பெரிய சமூகம் ஒன்றை எதிர்த்து, வெளியிலிருந்து எந்த நாட்டின் உதவியும்பெறாமல் போராடும் போது அது தனது முழு மூர்க் கத்தனத்தையும் மோசமான போராட்டப் பொறிமுறைகளையும் பயன்படுத்துவது தவிர்க்க முடியா தது. அதனையே விடுதலைப் புலிகளும் செய்தனர். ஆனால் 21ஆம் நூற்றாண்டில் அவை ஏற்றுக் கொள்ளப்பட்ட போர் முறைகள் இல்லை என்று பலம்வாய்ந்த நாடுகள் அறிவித்தன.

இன்று அதே நாடுகள்தான் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு நடத்திய போர் முறைகளும் போரில் அரசு நடந்துகொண்ட முறைகளும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கன அல்ல என்று கூறுகின்றன. இதுவே தமிழர்களின் பிரச்சினைகள் சர்வதேச மட்டத்தில் இன்று பேசுபொருளாக்கப்படுவதற்கான காரணமாக அமைந்திருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு எதிராக அரசு புரிந்த வன்கொடுமைகள் இன்று சர்வதேச அளவில் பேசப்படுகின்றன. தமிழ் மக்களுக்கு நீதி வேண்டுமென உலக நாடுகள் குரல் கொடுக்கின்றன.

இராணுவத்தினரால் உயிருடன் பிடிக் கப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களை கேட்டுக் கேள்வி இன்றி சுட்டுக்கொல்லும் காணொலி ஆதாரங்களை சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. தவிர போர் உத்திகளுக்கு முரணான சர்வதேச அளவில் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டு பாவனைகள் குறித்தும் சர்ச்சைகள் ஏற்பட்டுள் ளன.

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளை இலக்கு வைத்து பொஸ்பரஸ் குண்டுகள் வீசப்பட்டன என்பதற்கான சந்தேகங்களும் அதை உறுதிப்படுத்தும் வகையிலான ஆதாரங்களும் கிடைக்கப் பெற்றுள்ளதாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

இவ்வாறான குற்றஞ்சாட்டுக்களை இலங்கை அரசு தொடர்ச்சியாக மறுத்து வருகிறது. குற்றவாளிகள் உடனடியாக, முதல் கேள்விகளிலேயே குற்றத்தை ஒப்புக் கொள்வதில்லை. என்பது இலங்கை அரசின் அறிவிப்பின் மூலம் நிரூபிக்கப்படுகிறது. சந்தேகநபர்களிடம் கேள்விக்கு மேலதிகமாக தண்டனைகள் வழங்குவதன் மூலமே உண்மைகளை கண்டறிய முடியும்.

அண்மையில் மாத்தறை மாவட்டத் தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டமொன்றில் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர ஒரு கருத்தை முன் வைத்தார்.

அதாவது இலங்கையில் போருக்குப் பின்னரான முன்னேற்றம் குறித்தும் பயங்கரவாதத்தை அழித்து ஜனநாயகத்தை நிலை நாட்டியமை குறித்தும் சர்வதேச தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இலங்கை அரசின் மீது தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்களையே சுமத்தி வருகின்றனர். இதை ஏற்றுக் கொள்ள முடியாது. போரின்போது கைது செய்யபட்ட 12 ஆயிரம் புலிகளை புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்திருக்கிறோம். நாங்கள் குற்றம் இழைத்தவர்கள் என்றால் இவர்களுக்கு எதற்காகப் புனர்வாழ்வு அளிக்க வேண்டும்? கோடி ரூபாகளை செலவழிக்க வேண்டும்? தொழில் பயிற்சிகளை வழங்க வேண்டும்? இவற்றுக்குப் பதிலாக 12 ஆயிரம் தோட்டக்கள் மட்டுமே எமக்குச் செலவாகி இருக்கும், இதிலிருந்தே அரசு எந்த போர்க் குற்றத்தையும் செய்யவில்லை என்பது தெரிகிறது என்ற சாரப்பட அமைச்சரின் உரை அமைந்திருந்தது.

இராணுவத்தினரின் சீருடை தரித்த ஆயுததாரிகள், கைதான தமிழர்களின் கைகளைப் பின்புறமாகக் கட்டி நிர்வாணமாக்கி வெட்ட வெளியில் துப்பாக்கிகளால் சுடும் காட்சிகள் 'சனல் 4' தொலைக்காட்சி மூலம் வெளிவந்த நிலையில், அமைச்சரின் மேற்குறித்த கருத்து, தமிழர்களைச் சுட்டுக்கொல்லும் எண்ணம் மிகச் சிறிய விடயம் என்ற விதத்திலேயே அரசின் உயர் மட்டத்தில் இருந்திருக்கிறது என்பதையே பிரதி பலிக்கிறது. 12 ஆயிரம் பேரைச் சுட்டுக் கொல்வதற்கு 12ஆயிரம் தோட்டாக்கள் போதும் என்ற கருத்து அவர்களைப் பிடித்து நிறுத்தி வைத்துச் சுடுவதற்கு மட்டுமே யானது என்பது கண்கூடு. ஆக, பிடித்தவர்களைச் சுட்டுக்கொல்வது மிகச் சாதாரணமானது என்கிற எண்ணம் இப்போதும் அவர்களுக்கு இருக்கிறது என்பதன் வெளிப்பாடே அமைச்சரின் கூற்று.



அமைச்சரின் கருத்துப்படி பார்த்தால், படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் காணால்போனவர் களுக்கும் இந்தக் கதிதான் நேர்ந்தி ருக்குமோ என்று தமிழர்கள் அச்சப்பட வேண்டி யிருக்கிறது. அமைச்சரின் கருத்து இத்தகைய பயத்தையும் பீதியையுமே ஏற்படுத்துகிறது.

உண்மையில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கே முதலில் புனர்வாழ்வு அளிக்க வேண்டும்.

தமிழ் மக்க ளும் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை அந்த முகாம்களில் வைத்து அவர் களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

வன்னியில் இடம்பெற்ற போர்க் கொடூரங்கள் தொடர்பிலான காணொலிகளை காண்பிக்க வேண்டும். அதன் மூலமே அவர்களை மனிதர்களாக மாற்ற முடியும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உக்ரேன் நிலைமை தொடர்ந்து ஊசலாட்டம்

ரெங்கன்

உக்ரேன் நாட்டின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதில் வெவ்வேறு வித மான கருத்துக்கள் ராஜதந்திர வட்டாரங்களில் அடிபடுகின்றன. ரஷ்ய ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கு அந்த நாட்டின் புதிய தலைவர்கள் மேற்கொண்டும் போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கும் என்று கருதப்படுகின்றது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து இடம்பெற்று வந்த வீதிப் போராட்டங்களையடுத்து உக்ரேன் நாடாளுமன்றம் அந்நாட்டின் அதிபர் விக்டோர் யானுகோவிச்சை பதவியிலிருந்து இறக்குவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது. அதே சமயம் இதுவரை சிறையில் வைக்கப்பட்டிருந்த எதிர்த்தரப்பு தலைவர்களில் ஒருவரும் முன்னாள் உக்ரேனிய பிரதமருமான யூலியா ரிமோஷெங்கோ விடுதலை செய்யப்பட்டார்.

அதிபர் யானுகோவிச் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. ஆனால் தலைநகரை விட்டு அதிபர் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிகிறது. போராட்டக்காரர்கள் சதிப் புரட்சியொன்றை நடத்தியிருக்கிறார்கள் என்று ஓர் அறிக்கையில் அவர் கண்டித்திருக்கிறார்.

ரஷ்ய சார்புத் தலைவரான அவர் புரட்சியாளர்களிடமிருந்து ரஷ்யாவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. வீதிப் போராட்டங்களின்போது 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. யானுகோவிச்சிற்கு அதிக ஆதரவு உள்ள கிழக்குப் பகுதி நகரமான டொனெட்ஸ்ஸில் அவரது வீட்டுக்குச் செல்லும் பாதைகளில் காவல் பலப்படுத்தப்பட்டிருப்பதாக நகரவாசிகள் கூறினார்கள். அந்த வீட்டில் அவர் தங்கியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

காவலில் இருந்த முன்னாள் பிரதமர் ரிமோஷெங்கோ தாம் சிகிச்சை பெற்று வந்த மருத்துவமனையில் இருந்து வெளியில் வந்தபோது அவரது ஆதரவாளர்கள் ஆரவாரம் செய்து வரவேற்றார்கள். ரிமொஷெங்கோ நிகழ்த்திய உணர்ச்சி மிக்க உரையொன்றில் போராட்டக்காரர்களை வீரர்கள் என்று புகழ்ந்துரைத்தார்.

### நேட்டோ நாடுகள் ஆலோசனை

ரஷ்ய பிடியிலிருந்து உக்ரேன் விலகிச் செல்ல முயன்று கொண்டிருக்கும் நிலையில் அந்நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்புவதற்கு எவ்வாறு உதவலாம் என்பது குறித்து மேற்குநாடுகள் ஆலோசித்து வருகின்றன.

அதேசமயம் உக்ரேனில் இடைக்கால அரசு ஒன்றை நிலைநாட்டுவதிலும் தடைகள் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. பெரும் பொருளாதார நெருக்கடியொன்றில் இருந்து தப்புவதற்கு 35 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தந்துதவுமாறு புதிய தலைவர்கள் மேற்கு நாடுகளைக் கேட்டிருக்கிறார்கள். இதற்கிடையில் தலைமறைவாகியிருக்கும் முன்னாள் அதிபரைக் கைது செய்வதற்கான பிடியாணை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவரது ஆதிக்கத்திலிருந்து அரசு முழுமையாக வீழ்ச்சியுற்றுள்ள நிலையில் பெரும் அளவில் மக்களை கொலை செய்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் பக்கமாகச் சரிந்து கொண்டிருந்த யானுகோவிச் ஐரோப்பிய யூனியனுடன் செய்து கொள்ளப்படவிருந்த உடன்பாட்டை மறுதலித்ததைத் தொடர்ந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின. 4 கோடி 60 லட்சம் மக்களைக் கொண்ட உக்ரேன் நாடு ஸ்திரம் பெறவும், ஜனநாயகத்தை நோக்கி வலுவுடன் முன்னேறவும் அங்கு இடைக்கால அரசு ஒன்று அமைவது அவசரத் தேவையாகக் கருதப்படுகின்றது. அதிபர் தேர்தலுக்கு ஏற்கனவே மே 25 ஆம் திகதி நாள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதிபர் பதவி இறக்கமும் நாட்டில் பதற்ற நிலையும் தோன்றியிருப்பது நிச்சயமற்ற ஒரு தன்மையை உருவாக்கியுள்ளது. அத்தோடு எதிர்பார்க்கப்பட்ட வகையில் புதிய பிரதமர் நியமனம், அமைச்சரவை பதவி ஏற்பு என்பன தாமதமடைந்துள்ளன.

உக்ரேனில் ஏற்பட்ட திடீர்த் திருப்பங்கள், ரஷ்ய சார்பு அதிபர் பதவி நீக்கம் முதலியவற்றால் ஆத்திரமடைந்திருந்த ரஷ்ய அரசும் தலைவர்களும் இப்போது ஒருவித அமைதியைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

## இடைக்கால அரசு பதவி ஏற்பில் தாமதம்

என்றாலும் உக்ரேனில் மேற்கு சார்பு அரசு ஒன்று உருவாவது ரஷ்ய புட்டின் ஆட்சியாளர்களுக்கு சம்மதமில்லை.

இதற்கிடையில் பதவி நீக்கப்பட்ட அதிபரின் சார்பில் ராணுவ நடவடிக்கையொன்றை மேற்கொள்வது பற்றி மொஸ்கோவில் ஆலோசிக்கப்படுவதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.

கடைசியாக கிடைத்த செய்திகளின்படி ஐரோப்பிய யூனியன் சிரேஷ்ட அதிகாரிகளும், அமெரிக்க ராஜதந்திரிகளும் உக்ரேன் தலைநகரில் புதிய தலைவர்களுடன் ஆலோசனைகளில் ஈடுபட்டிருப்பது தெரிய வந்துள்ளது. ஐரோப்பிய யூனியனைப் பொறுத்தவரை உக்ரேனுக்கு நிபந்தனைகளுடனான உதவிகளை வழங்குவதற்குதான் தயாராக இருப்பதாக ஏற்கெனவே அறிவித்துள்ளது.

### பிரிவினைக்கு வித்திடப்படலாம்

நாடாளுமன்றம் அதிபரைப் பதவியிலிருந்து நீக்கியிருந்த போதிலும், உக்ரேனின் கிழக்குப் பிரதேசம் ரஷ்ய சார்பு நிலையில் இருப்பதால் அங்கு பிரிவினைப் போராட்டங்கள் வெடிக்கலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது.

உக்ரேன் நிலைமைகளை ஆராய்வதற்காக அமெரிக்கா அதன் பிரதி ராஜாங்க செயலர் வில்லியம் போன்ஸ் என்பவரை ஏற்கெனவே தலைநகர் கீவுக்கு அனுப்பியிருக்கிறது. பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலர் வில்லியம் ஹேக் வொஷிங்டனில் அமெரிக்க ராஜாங்க வெளியுறவுச் செயலர் ஜோன் கெரி மற்றும் சர்வதேச செலாவணி நிதிய அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்தியுள்ளார். சர்வதேச செலாவணி நிதியம் உக்ரேனுக்கு உதவி வழங்கத் தயாராய் இருந்தாலும் அங்கு பொருளாதார அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும் என்று அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

உக்ரேனில் அதிபர் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு மார்ச் 30 ஆம் திகதி வரை வேட்பாளர்கள் மனுக்களைத் தாக்கல் செய்யலாம் என்று உக்ரேன் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஆரம்பத்தில் ரஷ்ய ஆதரவு கிழக்கில் கார்கில் பகுதி ஆளுநர் தமது வேட்பாளர் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

போராட்டத் தலைவர் ஆர்சனிஸ் யாட் செனியுக், ஐரோப்பிய சார்பு முன்னாள் வெளியுறவு பொருளியல் அமைச்சர் யூனியா ரிமொஷென் கோ, விடுதலையான மற்றும் 2004 ஒரேஞ் புரட்சி வீரர் பீட்ரோ புரொஷெங்கோ, முன்னாள் குத்துச் சண்டை வீரர் லிடாலி கிளிட்ஸ்ச்கோ முதலியவர்கள் அதிபர் பதவி போட்டிக்கு நிற்கக் கூடியவர்கள் என்று கருதப்படுகின்றது. இடைக்கால பிரதமராக நியமிக்கப்படலாம் என்று கருதப்படும் ரி மொஷெங்கோ தாம் அதிபர் பதவிக்கு போட்டியிடப் போவதில்லையென்று அறிவித்திருந்த போதிலும் அப் பதவிக்கான வேட்பாளர்களில் வெற்றி வாய்ப்புள்ள ஒருவராக அவர் கருதப்படுகின்றார்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர் இந்த மாதம் ஜேர்மனிக்கு சிகிச்சைக்காகச் செல்லவிருக்கிறார்.

ஆரம்பத்தில் கடும் தொனியில் பேசிவந்த ரஷ்ய தலைவர்கள், இப்போது தமது குரலை மென்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உக்ரேனின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற எமது கொள்கை நிலைப்பாட்டை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் லாவ்ரோவ் மொஸ்கோவில் வைத்து நிருபர்களிடம் கூறியுள்ளார். உக்ரேன் ஐரோப்பிய குடும்பத்தில் பங்காளியாக இருப்பதை நாங்கள் கவனத்தில் கொள்கிறோம். உக்ரேனை ஒரு தெரிவுக்கு நெருக்குவதானது அபாயகரம். எதிர் விளைவுக்கு வழி கோலுவதாய் இருக்கும் என்றார் அவர். எதிர்காலத்தில் தலையிடாமல் இருக்கும் கொள்கையை ஆதரிக்கின்றோம் என்று ஐரோப்பிய யூனியன் வெளியுறவுக் கொள்கை அதிகாரி திருமதி கெதரின் ஆஷ்டோன் கூறினார்.

### சிரியா தொடர்பான தீர்மானம் பாதுகாப்புச் சபையில் ஏகமனதாக நிறைவேற்றம்

சிரியா தொடர்பான தீர்மானம் ஒன்று ஐ.நா. பாதுகாப்பு சபையில் ஒரு மனதாக நிறைவேறியிருப்பது சர்வதேச மட்டத்தில் ஆச்சரியத்தை விளைவித்துள்ளது. ஏற்கெனவே இரண்டு முக்கிய தீர்மானங்களை ரஷ்யாவும் சீனாவும் தமது இரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி நிராகரித்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேறியிருப்பது சிரியாவின் ஆட்சியாளர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக அமையக் கூடும் என்று ராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

அண்மையில் ஜெனிவாவில் ஆரம்பமான சிரியாவில் அமைதியைத் தோற்றுவிப்பதற்கான பேச்சு வார்த்தைகள் தீர்மானம் எதுவும் எட்டப்படாமலே முடிவடைந்திருப்பது, வல்லரசு நாடுகளை மட்டுமல்ல, இந்த மாநாட்டை ஏற்பாடு செய்த ஐ.நாவையும், அதற்கு ஆதரவு வழங்கிய ரஷ்யாவையும் கூட கவலையில் ஆழ்த்தியுள்ளது. பொதுவில் பேச்சு வார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தமைக்கு சிரிய ஆட்சியாளர்கள் தான் காரணம் என்று கருதப்படுகின்றது. அலெப்போ நகரம் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்படும் என்றும் அங்கு உதவிப் பொருள்கள் சென்றடைவதற்கு அனுமதிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜெனிவாவில் பேச்சுக்கள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலும் கூட அலெப்போ நகரின் மீதும், வேறு இடங்களிலும் தாக்குதகள் நடைபெற்றுள்ளன. அது மட்டுமல்ல உதவிப் பொருள்கள் அங்குள்ள பொது மக்களுக்காக கொண்டு செல்லப்படுகையிலேயே வாகன அணிகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த நிலைமையில் அமைதிப் பேச்சுக்களும் முடிவடைந்தன. இப்பொழுது மீண்டும் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு ஐ.நா.செயலாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் சிரியாவுக்கு குறிப்பாக அலெப்போ நகருக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைய உதவி புரிவது தொடர்பான தீர்மானம் பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானம் எத்தரப்பையும் கட்டுப்படுத்தமாட்டாது என்ற போதிலும் பாதுகாப்புச் சபையில் ஏகமனதாக நிறைவேறியிருப்பதே பெரும் முன்னேற்றம் என்று கருதப்படுகின்றது என்றாலும் இந்தத் தீர்மானம் வினைத்திறன் மிக்கதாக அமையுமா என்பதில் ராஜதந்திரிகள் சந்தேகம் தெரிவிக்கின்றார்கள்.

சிரியாவின் நெருங்கிய ஆதரவாளர்களான ரஷ்யாவும் சீனாவும் கூட இந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்துள்ளமை சிரிய ஆட்சியாளர்களுக்கு ஒரு நெருக்குதலாக அமையக் கூடும்.

2011 மார்ச் மாதம் ஆரம்பமான சிரிய உள்நாட்டு கலவரத்தையடுத்து அந்த நாட்டிலுள்ள மக்களின் பெரும் பகுதியினர் உடனடியாக உதவிப் பொருள்கள் தமக்கு வந்து சேரவேண்டும் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள்.

ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தின்படி மனிதாபிமான உதவிகள் நாட்டுக்குள் வந்து சேர்வதற்கு அனுமதிக்க முடியும். ஆனால் அது நாட்டின் இறைமையை அவமதிப்பதாக இருக்கலாகாது என்று சிரிய அரசு அறிவித்துள்ளது.

இதற்கிடையில் சிரியாவில் போராடிக் கொண்டிருக்கும் எதிர்த்தரப்புப் படைகளுக்கு விமான எதிர்ப்பு மற்றும் தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை வழங்கி அங்கு சமாந்தர நிலையை ஏற்படுத்துவது குறித்து சவூதி அரேபியா பாகிஸ்தானுடன் பேச்சுக்கள் நடத்தி வருவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

சிரிய ஆட்சியாளர்கள் தொடர்ந்து பதவியிலிருப்பதற்காக சிறிதும் விட்டுக் கொடுக்காமல் இருந்து வருவது உலக நாடுகள் அனைத்தையும் வெறுப்புடன் நோக்கச் செய்துள்ளது. அதன் பிரதிபலிப்புத்தான் நேச நாடுகளான ரஷ்யா, சீன நாடுகளையும் சிரியா தொடர்பான தீர்மானத்தை பாதுகாப்புச் சபையில் ஆதரிக்கச் செய்துள்ளது.

தீர்மானத்தை ஆஸ்திரேலியாவுடன் சேர்ந்து ஜோர்தான் மற்றும் லக்ஸம்பேர்க் ஆகியவை தயாரித்திருந்தன. அதற்கு அமெரிக்க, பிரிட்டன் மற்றும் பிரான்சின் ஆதரவும் இருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜொலித்தார் ஹோக்லி ஆரம்பமே அசத்தல்தான்

**அணித்தலைவர் நெருக்கடி எதையும் தனது தலையில் ஏற்றிக் கொள்ளாத கோஹ்லி வழக்க மான தனது பாணி யில் ஓட்டம் குவிக்க ஆரம்பித்தார்.**



இந்திய அணி நீண்ட இடைவெளிக் குப் பின் ஒருநாள் ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளது. அணித் தலைவர் பொறுப்பைச் சுமையாகக் கருதாமல் சதம் அடித்து வழக்கம் போல அணியை வெற்றி பெறச் செய்தார் விராட் கோஹ்லி. இவருடன் ரஹானே 73 ஓட்டங்கள் அடித்துக் கைகொடுக்க இந்திய அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

அந்நிய மண்ணில் சாதிக்கத் தவறிய டோனி தலைமையிலான இந்திய அணி, தற்போது ஆசியத் துணைக் கண்டத்தில் விராட் கோஹ்லி தலைமையில் புத்துணர்ச்சியுடன் புதிய பாதையில் அடியெடுத்து வைத்துள்ளது.

ஆசியக் கிண்ணத்தின் 2ஆவது ஒருநாள் ஆட்டம் பதுல்லாவில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதில், 5 முறை சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணியும், பங்களா தேஷ் அணியும் மோதின. நாணயச் சுழற்சி யில் வென்ற இந்திய அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. பங்களாதேஷ் அணியின் ஷம்சுர் ரஹ்மான் 7 ஓட்டங்களில் ஆட்டமிழந் தார். ஆனால் மற்றொரு தொடக்க வீரர் அன முல் ஹேக் ஆட்டத்தைத் தனது கையில் எடுத் துக் கொண்டார். இவருடன் சிறிது நேரம் ஒத்து ழைத்த மோமினுல் ஹேக் 23 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது அஸ்வின் பந்தில் இலக்கைப் பறிகொடுத்தார்.

பின் 3ஆவது இலக்குக்கு அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹிம் மற்றும் அனமுல் ஜோடி சேர்ந் தனர். இவர்கள் இந்திய பந்துவீச்சை நாலா புறமும் சிதறவிட்டனர். 3ஆவது இலக்குக்கு இந்த ஜோடி 133 ஓட்டங்கள் குவித்தது. அசத்த லாக ஆடிய முஷ்ஃபிகுர் ரஹிம் சதம் அடித் தார். இது ஒருநாள் அரங்கில் அவர் அடித்த 2ஆவது சதமாகும். ஆசியக் கிண்ணத்தில் 2008ஆம் ஆண்டு அலோக் கபாலி இந்தியா வுக்கு எதிராகச் சதம் அடித்திருந்தார். அதன் பின் தற்போதுதான் பங்களாதேஷ் வீரர் ஒருவர் இந்தியாவுக்கு எதிராக சதம் அடித்துள்ளார்.

அணித்தலைவருடன் ஒத்துழைத்து ஆடிய அனமுல் அரைசதம் அடித்தார். இவர் 106 பந்துகளை சந்தித்து 77 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழந்தார். அணிக்கு கௌரவமான இலக்கை ஈட்டித் தந்த முஷ்பிகுர் 117 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது முகமது சமி பந்தில் இலக்கைப் பறிகொடுத்தார். கடைசிக் கட்டத்தில் 12 பந்துகளில் ஜியார் ரஹ்மான் 18 ஓட்டங்கள் அடித்தார். இதனால் பங்களாதேஷ் 50 பந்துப் பரிமாற்றங்களில் முடிவில் 7 இலக்கு இழப்புக்கு 279 ஓட்டங்கள் எடுத்தது.

இந்திய அணி சார்பில் முகமது ஷமி 4 இலக்கு களை வீழ்த்தினார்.

வழக்கம்போல இந்திய அணியின் பந்து வீச்சு மோசமாகவே இருந்தது. வருண் ஆரோன் 7.5 பந்துப்பரிமாற்றங்களில் 74 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்தார். இதன் மூலம் பங்களாதே ஷுக்கு எதிரான ஆட்டத்தில் அதிக ஓட்டங்கள் விட்டுக் கொடுத்த இரண்டாவது வீரர் என்ற மோசமான பெயரைப் பெற்றார். இதற்கு முன் ஐக்கிய அரபு அமீரக அணியின் குரன் கான் 78 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்துள்ளார்.

பின்னர் களமிறங்கிய இந்திய அணிக்கு தொடக்க வீரர்கள் ரோஹித் சர்மாவும், ஷிகர் தவனும் மந்தமான தொடக்கம் அளித்தனர்.

ஷிகர் தவன் 28 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது அப்துர் ரசாக் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேறினார். இவர் 44 பந்துகளைச் சந்தித்து இந்த ஓட்டங்களை அடித்திருந்தார். ரோஹித் சர்மா 21 ஓட்டங்களில் வெளியேறினார். இருவ ரும் 10 பந்துப்பரிமாற்றங்களுக்கு மேலாக இலக்கு விழாமல் பார்த்துக் கொண்டனரே தவிர ஓட்டம் குவிக்க முயற்சிக்கவில்லை. இதனால் அடுத்துக் களமிறங்கிய விராட் கோஹ்லி மற்றும் ரஹானேவின் மீது பொறுப்பு கூடியது.

அணித்தலைவர் நெருக்கடி எதையும் தன் சிரத்தில் ஏற்றிக் கொள்ளாத கோஹ்லி வழக்க மான பாணியில் ஓட்டம் குவிக்க ஆரம்பித் தார். அவருக்கு ரஹானேயும் ஒத்துழைத்தார். நீண்ட இடைவெளிக்குப் பின் இந்திய அணிக்கு வெற்றி கிடைக்க இருப்பதைக் கருத்தில் கொண்டு இருவரும் தவறேதும் நிகழாமல் பார்த்துக் கொண்டனர். அதேசமயம் தவறான பந்துகளை பவுண்டரிக்கு விரட்டி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தவும் தவறவில்லை. அசத்தலாக ஆடிய விராட் கோஹ்லி சதம் அடித்தார். இது ஒருநாள் அரங்கில் கோஹ்லி அடித்த 19ஆவது சதமாகும். மறுமுனையில் ரஹானே அரைச்சதம் அடித்து நடைபோட்டார். இந்த ஜோடி அணியின் வெற்றிக்குச் சிறப்பான அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.

ஆட்டத்தின் 46ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ருபெல் ஹுசைன் வீசிய பந்தில் ஏமாந்த விராட் கோஹ்லி ஸ்ரம்பைப் பறிகொடுத்தார். 122 பந்துகளை சந்தித்த கோஹ்லி 16 நான்குகள் 2 ஆறுகள் உதவியுடன் 136 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவருடன் இணைந்து ஒத்து ழைத்த ரஹானே 73 ஓட்டங்களில் ஆட்டமி ழந்தார். இவர் 83 பந்துகளைச் சந்தித்து 1 ஆறு 7 நன்குகள் அடித்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்திய அணி 49 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 4 இலக்குகளை மட்டுமே இழந்து 280 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பொறுப்புடன் செயற்பட்ட கோஹ்லி பலரது பாராட்டையும் பெற்றார்.

எதிர்வரும் ஆட்டங்களில் அவரின் தலைமை யில் இந்திய அணி சாதிக்குமா என்பதே இப்போ தைய எதிர்பார்ப்பு.

## ஹர்பஜனுக்கு வாய்ப்பு கிடைக்காதது ஏன்?



டோனியின் ஆதரவாளர்கள் தவிர்த்து மற்றவர்கள் மீதும் தேர்வுக்குழுவி னர் கவனம் செலுத்தினால் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிக்கலாம் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி கூறுகிறார்.

இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது: டெஸ்ட், ஒருநாள் போட்டி என இரு அணிகளிலுமே ஹர்பஜன் சிங் மீண்டும் இடம்பிடிக்கலாம் என நினைக்கி றேன். இந்தியாவின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஹர்பஜன் சிங்கும் ஒருவர். தலைவர் டோனியின் விருப்பத்தின் பேரிலேயே வீரர்கள் தேர்வு செய்யப்படுவதால் ஹர்பஜன் சிங்குக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை.

டோனியின் ஆதரவாளர்கள் சூழ்ந்திருப்பதால் தேர்வுக்குழுவினரும் ஹர்பஜன் சிங்கைப் பற்றிச் சிந்திப்பதில்லை என்றார். ஆசியக் கிண்ணம் மற்றும் 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் ஹர்பஜன் சிங், பிரக்யான் ஓஜாவுக்குப் பதிலாக இந்திய அணியில் அமித் மிஸ்ராவை சேர்த்திருப்பது ஏற்கக்கூடிய தல்ல என்று குறிப்பிட்ட கங்குலி, மிஸ்ரா சராசரியான சுழற் பந்து வீச்சாளர்தான். அவர் தனது கையிலிருந்து பந்தை வெளி விடும்போது அது மெதுவாகவே செல்கிறது. அதனால் துடுப்பாட்டவீரர்கள் எளிதாகக் கணித்து அடித்துவிடுகிறார்கள். அவரால் எதிரணியின் துடுப்பாட்ட வீரர்களைக் கட்டுப்படுத்துவது கடினம். நாக்பூரில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியாவின் ஷேன் வொட்சன், மிஸ்ராவின் பந்துவீச்சை எப்படி வெளுத்து வாங்கினார் என்பதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மிஸ்ராவின் களத்தடுப்பும் சொல் லிக்கொள்ளும்படியில்லை. அவர் ஆசியக் கிண்ண்ணப் போட்டியில் தாக்கத்தை ஏற்படுத்துவார் என எவராலும் உறுதிகூற முடியாது. ஏனெனில் ஆசிய கோப்பையில் விளையாடும் அனைத்து அணிகளுக்குமே சுழற்பந்து வீச்சை எப்படி எதிர்கொள்வது என்பது தெரியும். அப்படியிருக்கையில் ஹர்பஜன், ஓஜாவுக்கு வாய்ப்பு கொடுக்காமல் மிஸ்ராவுக்கு எப்படி வாய்ப்பு கொடுத்தார்கள் என்பது தெரியவில்லை. அது ஆச்சரியமளிப்பதாக உள்ளது என்று கூறுகிறார் கங்குலி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லுங்கள் கொண்டாடுங்கள்

உதயன் சூரியகாந்தி தரும் பரிசு மழையில் நனையுங்கள்

**7,500/=** பெறுமதியான பரிசுக் கூப்பன் 1

Green Grass

Kiruba Learners Driving School

வழங்கும் 4,500/= பெறுமதியான பரிசுக் கூப்பன் 3

யாழ்ப்பாணம். லலிதா ஜுவலரி

அபி (pvt) ltd. பேபி மாட்ஸ்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
55, சுன்னாகம்

கோகில்ஸ் பேபி நீட்ஸ்
65, பிரதான வீதி, நெல்லியடி

NORTHERN PC HOUSE
303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Creative Desk
உடுவில் வீதி, மானிப்பாய்.

பெஷன் ஹவுஸ்
யாழ்ப்பாணம்.

வழங்கும் 500/= பெறுமதியான பரிசுக் கூப்பன் 16

மின்சார நிலைய வீதி, யாழ்.
Rasi Collections
வழங்கும் 1,000/= பெறுமதியான பரிசுக் கூப்பன் 10

பொதிகை மல்ரி சென்ரர்
புதுக்குடியிருப்பு

அறிவொளி புத்தகசாலை
முல்லைத்தீவு

அருண் ரெக்ஸ்
நெல்லியடி

தாயன்பு புத்தகசாலை
புதுக்குடியிருப்பு

வழங்கும் 200/= பெறுமதியான பரிசுக் கூப்பன் 20

இங்குள்ள பரிசுக் கூப்பனை வெட்டி நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
அல்லது ஏ9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி (சென்.திரேசா பெண்கள் பாடசாலை அருகில்) அல்லது 104, மேல்மாடி, பஸ் நிலையம், வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன் மாவட்ட அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளுக்கு நேரடியா இடுங்கள்

வாரம் 56 பரிசுகள்

சென்றவார வெற்றியாளர் விவரம் நேற்றைய உதயனில்

வெற்றி நிச்சயம்

ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை 6 மணிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் போட்டியாளர் விவரம் பரிசுக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

வெற்றிபெறுவோர் விவரம் சனிக்கிழமை உதயன் பத்திரிகையில் முழுமையாக வெளிவரும்.

வெற்றியாளர்களுக்கான பரிசுக் கூப்பன்கள் அடுத்தவாரம் புதன்கிழமை உதயன் தலைமை அலுவலகம் அல்லது மாவட்ட அலுவலகங்களில் வைத்து வழங்கப்படும்.

உதயன் பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினர் போட்டிகளில் பங்குபற்ற முடியாது.

கிருபா லேணர்ஸ் வழங்கும் 4500 ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் பெறுவதற்கான பரிசுக் கூப்பன் (கைமாறத் தகாதது).

கிறீன்கிறாஸ் வழங்கும் 7,500/= பெறுமதியான பரிசுக் கூப்பன் மூலம் கிறீன் கிறாஸ் விடுதி அறையில் ஒருநாள் தங்கமுடியும்.(உணவு, ஏனையவை தவிர்த்து)

முழுப்பெயர்: ..................................

பிறந்த திகதி: ..................................

தெளிவான முகவரி: ..................................

தொ.பே. இல: ..................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org